தேவியின் கண்மணி

# முகில் தினகரன்

22-09-2021
ரூ.20



# இனிக்கும் நினைவுகள்!



பெண்மணி
எஸ்.பர்வின்பானு
செப்டம்பர் - 2021
நீ இரவு... நான் விண்மீன்!
-முழு நாவல்
ஆன்மிகம்:
நல்லருள் தரும் நாமம்!
சின்னத்திரை:
நல்லவர்களுடன் பழகப் பிடிக்கும்!
-கேப்ரெலா
கோவில்:
திருமணத்தடைநீக்கும் புளியறை சதாசிவமூர்த்தி விஸ்கேஸ்வரர்!
இசை:
நாட்டியம், சங்கீதத்தில் மூன்று தலைமுறை!
-ஜெயஸ்ரீ நாயர்
சுற்றுலா:
இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் கோல்காப்பூர்!
சுவையான மூலிகை வகை தொக்குகள்!
ரூ.1000/- பரிசு அறிவுத்திறன் போட்டி
விலை ரூ.28/-



**ஜெ**யலலிதா வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவான 'தலைவி' படத்தில் நடித்துள்ள கங்கனா ரனாவத், சென்னையில் உள்ள ஜெயலலிதா சமாதிக்கு விசிட் அடித்து ஹைப் கிளப்பினார். எந்த விசயமானாலும் ஓபன் வாய்ஸ் கொடுக்கும் கங்கனா, ஓ.டி.டி. ரிலீஸ், இன்ஸ்டாகிராம் பிரச்சனைகள் குறித்து சூடாக பேசியுள்ளார். அவருடன் அழகிய சிட் சாட்.

# என்கிட்ட இல்லாத எதை அரசியல் தரும்?

## —கங்கனா ரனாவத்

## இன்ஸ்டாகிராமில் என்னதான் பிரச்சனை?

என்னோட 'தலைவி' படத்தோட லிங்க்கை புரொபைலில் சேர்க்க முடியல. பட புரமோஷனுக்காக என்னுடைய பெயரில் தலைவி'ன்னு சேர்க்க ட்ரை பண்ணேன், ஆனா என் சோஷியல் மீடியா பக்கத்தை எடிட் பண்ண முடியல.

இன்ஸ்டா புரொபைல் நான் பல வருஷமா பயன்படுத்திட்டு இருக்கேன். என்னோடது வெரிபைடு அக்கவுண்ட். என்னுடைய பக்கத்தில் நான் எந்த லிங்க் ஷேர் பண்ணாலும் அதுக்கு பெர்மிஷன் வாங்கணுமா?

இந்தியாவில் இருக்குற அந்த நிறுவனத்திடம் இது



பத்தி கேட்டா, அவங்களோட இன்டர்நேஷனல் பாஸ் கிட்ட பெர்மிஷன் வாங்கணும்'னு சொல்றாங்க. ஏதோ, வெள்ளைக்காரன் கிட்ட இன்னும் அடிமைப்பட்டு கிடக்குற மாதிரி ஒரு உணர்வு எழுது. கிழக்கிந்திய கம்பெனி போல இன்ஸ்டா நிறுவனம் நடந்துக்குறதை முதல்ல மாத்திக்கணும்.

இந்த மாதிரி மோசமான அணுகுமுறையை ஒருபோதும் ஏத்துக்க முடியாது.

## போன மாசம் ஹேக்கிங் நடந்ததா சொல்லி இருந்தீங்களே?

ஆமா, என்னைக் குறி வச்சு மிகப்பெரிய இன்டர்நேஷனல் சதி நடக்குறதா நினைக்குறேன். சீனாவில் இருந்து யாரோ ஒருத்தர் என்னோட சோஷியல் மீடியா அக்கவுண்ட்டை ஹேக் பண்ணி, நான் தலிபான் பிரச்சனை பத்தி போட்ட ட்வீட்டை மாயமா மறைய வச்சிட்டாங்க.

## சமீபத்தில் ஒரு பிரஸ் மீட்டில் பத்திரிக்கையாளருடன் கடும் வாக்குவாதம் நடந்ததே?

ஆரோக்கியமான விமர்சனங்களை நான் வரவேற்கிறேன். ஆனா சுற்றுச் சூழல், தியாகிகள், மிருகவதை

மாதிரியான சென்சிட்டிவான விஷயங்களில்... நான் என்னோட தரப்பு நியாயத்தை சொன்னேன்.

**அரசியல் ஆசையில் தான் தேசத்தை பத்தி நீங்க கருத்து சொல்றதா பேச்சு இருக்கே?**

என்னால இதை புரிஞ்சிக்க முடியல. நான் ஏன் அரசியல்வாதியா மாறனும். நாட்டுப் பற்றுக்கும் அதுக்கும் சம்மந்தம் இல்லையே. நான் தேசத்திற்காக பேசுற விஷயத்தை வச்சு அரசியல் ஆதாயம் தேட நினைக்குறதா வதந்திகள் இருக்கலாம்.

சினிமா எனக்கு மிகப்பெரிய தளத்தை கொடுத்திருக்கு. ஆனால் என் நெற்றியில் அரசியல் கட்சியின் முத்திரையை குத்தப் பார்க்குறாங்க. ஒரு அரசியல் கட்சியில் நான் சேர்ந்தால் அவங்க சொல்றதைதான் என்னால பொது வெளியில் பேச முடியும். கட்சிக் கட்டுப்பாட்டை மீறி என்னால செயல்பட முடியாது, என்னோட தனிப்பட்ட கருத்தை சொல்ல அங்க இடமில்ல.

ஆனா, தேசிய அளவில் அதிக சம்பளம் வாங்கும் ஒரு நடிகை நான். ஒரு பிரஸ் கான்பிரன்ஸ் வச்சா,



என்னை சுத்தி 30 கேமரா இருக்கும். ஒரே நேரத்தில் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் என் பேட்டி போய் சேரும். என்கிட்ட இப்போ இல்லாத எதை அரசியலோ, அரசியல் கட்சியோ எனக்கு கொடுத்திடப் போகுது. அது தான் என்னை விமர்சிக்குறவங்க கிட்ட நான் கேட்குற கேள்வியா இருக்கும்.

**ஒரு இயக்குனராகவும் சாதிச்சிருக்கீங்க... அதைப் பற்றி?**

15 வருஷமா சினிமாவில் பல ஏற்ற இறக்கங்களை பார்த்திருக்கேன். 'குயின்' படத்துக்கு முன்னாடி



என்னோட ஆக்டிங் கெரியர் முடிஞ்சதுன்னு நினைச்சேன். அப்போ தான் ஒரு இயக்குனர் ஆகணும்'னு முடிவு பண்ணேன். ஒரு ஷார்ட் பிலிம் டைரக்ட் பண்ணிட்டு கலிபோர்னியா போனேன். அதுக்குப் பிறகு தான் கேமரா லென்ஸ் வழியா என்னுடைய படங்களை பார்க்க ஆரம்பிச்சேன். ஒரு படக்குழுவை எப்படி வழிநடத்திப் போகணும்'ங்கிற அறிவு எனக்கு இருக்குன்னு உணர்ந்தேன். அப்படி தான் டைரக்ஷன் ஆசை எனக்குள்ள நுழைஞ்சது.

**தலைவி ஓ.டி.டி. ரிலீஸ் என்னாச்சு?**

கடினமான சூழலில் தலைவி படத்தை தியேட்டரில் ரிலீஸ் செய்ய முடிவு செஞ்சிருக்கோம். 2 வார இடைவெளியில் இந்தியிலும், நான்கு வார இடைவெளியிலும் தமிழிலும் படம் ஓ.டி.டி.யில் வெளியாகுறதா பிளான். ஆனால் பல மல்டிபிளக்ஸ் தியேட்டர்களில் படத்தை ரிலீஸ் பண்ண விடாம தடுத்தாங்க. படத்தில் போட்ட முதலீட்டை திரும்ப சம்பாதிக்க வேண்டியது தயாரிப்பாளர்களோட அடிப்படை உரிமை. கொரோனா மாதிரியான

சூழலில் திரையரங்குகள் முழுமையாக செயல்படாத போது பட ரிலீசை தடுப்பது நியாயமில்லாத செயல். ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியா இருந்தால் தான் சினிமா தியேட்டர்களும் தப்பிப் பிழைக்கும்.

**தென்னிந்திய படங்களில் நடிக்க ஆர்வம் காட்டுறீங்களே?**

இந்தி திரையுலகம் இப்போ முன்பை விட வேகமா முன்னேறிட்டு இருக்கு. அதே சமயம், தென்னிந்திய படங்களான பாகுபலி, ரோபோ படங்களும் பாலிவுட் பாக்ஸ் ஆபீஸில் ஹிட் அடிச்சிருக்கு. கிரியேட்டிவிட்டி எல்லா துறையிலும் இருக்கு. பாலிவுட்டில் மட்டும் தேங்கிடாம பல மொழிப் படங்களில் நடிக்குறதும், திறமையான கலைஞர்கள் கூட வொர்க் பண்றதும் ஸ்பெஷல் தான்.

**உங்க எதிர்கால திட்டம் என்ன?**

என் வாழ்க்கையில் ஒரு காலகட்டத்துக்குப் பிறகு, நான் நடிச்ச படங்களுக்கும், என் வாழ்வியலுக்கும் ஏதாச்சும் தொடர்பு இருக்கணும்'னு நினைக்கிறேன்.



பொழுதுபோக்கை மட்டும் மையமா வச்சு எடுக்கப்பட்ட கதையில் நடிக்குறதுக்கு நான் விரும்பல. தேசிய பற்று, பெண்களின் எழுச்சி, உளவியல் ரீதியாக நம்மை பலப்படுத்தும் கதைகளில் நடிக்க விரும்புறேன்.
( நாட்டு நிலவரம் புரியாம எதையாச்சும் பேசி சர்ச்சையை கிளப்புறாங்களே தவிர, நடிப்பு விஷயத்தில் அம்மணி ரொம்ப ஷார்ப் என்ற மைண்ட் வாய்ஸ் உடன் விடை பெற்றோம்)

**-தவா.**




# லாபம்

விவசாயிகளை கார்ப்பரேட் கம்பெனிகள் சுரண்டிப் பிழைப்பதை இன்னும் விரிவாக பேசி பாடம் எடுக்கிறது லாபம்.

பெருவயல் கிராமத்திற்கு 6 வருடம் கழித்து திரும்ப வருகிறார் பக்கிரி (விஜய் சேதுபதி). அவரது வருகையை அறிந்த ஊர் மக்கள் திருவிழா போல கொண்டாடுகிறார்கள். ஆனால் அந்த ஊர் தொழிலதிபர்கள் கடுப்பாகி பக்கிரியை கொல்ல ஆட்களை அனுப்புகிறார்கள். ஆனால் அதையும் மீறி ஊருக்குள் என்ட்ரி கொடுக்கும் பக்கிரி, விவசாயி சங்கத் தலைவர் வணங்காமுடியை எதிர்த்து போட்டியிட்டு புதிய தலைவராகிறார்.

தலைவரான உடனே கரும்பு விவசாயிகள் பிரச்னையை தீர்த்து வைக்கும் பக்கிரி, சாதி பிரச்சனையால் பிரிந்து கிடக்கும் மக்களை ஒன்றிணைத்து கூட்டுப் பண்ணைத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறார். ஆனால் கூட்டுப் பண்ணைத் திட்டத்துக்கு நிலத்தை கொடுக்க ஊர் மக்கள் தயக்கம் காட்ட, கலைக்குழு நடத்தும் கிளாராவை (ஸ்ருதி ஹாசன்) மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த (?) கூட்டி வருகிறார் பக்கிரி. ஆனால் புரோகிராம் செய்ய வந்த கிளாரா, பக்கிரி குணம் பிடித்துப் போய் அவருடனே இருந்து விடுகிறார்(?).

பல முதலாளிகள் போலி பத்திரம் மூலம் வளைத்துப் போட்ட தரிசு நிலங்களின் மூலப் பத்திரம், செப்புப் பட்டங்களை மீட்டு, விவசாயிகளுக்கே உரிய நிலத்தை திரும்ப கிடைக்க வழி வகை செய்கிறார் பக்கிரி.

இந்நேரத்தில் கூட்டுப் பண்ணை திட்டத்தில் மக்களை சேர விடாமல் குடைச்சல் கொடுக்கும் வணங்காமுடி, மக்கள் விளைவித்த பொருளுக்கு உரிய விலை கிடைக்க விடாமல் கார்ப்பரேட் புத்தியைக் காட்டுகிறான்.

ஆனால் எதிர்ப்புகளையும் மீறி பக்கிரி, கூட்டுப் பண்ணை திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டி, உலக வர்த்தகத்தையே அலற விட்டு (?) பெருமுதலாளிகளை கதற விட்டு, தான் நினைத்ததை சாதித்துக் காட்டி மீடியாவில் பேமஸ் ஆகி விடுகிறார்.

ஆனால் பக்கிரியை பழிவாங்க, ஊர்க்காரர்களின் நில ஆவணங்கள் இருக்கும் லாக்கரை களவாடி விட்டு, அந்த பழியை பக்கிரி மீதே போட்டு விடுகிறார் வணங்காமுடி. ஊர் மக்களின் கோபத்திற்கு ஆளான பக்கிரி, தன் நண்பர்களுடன் தலைமறைவாகி விட, பெருவயலில் ஊர் மக்களின் நிலங்களை அபகரித்து பயோ-டீசல் பேக்டரி கட்ட பிளான் செய்கிறான் வணங்காமுடி. பக்கிரி தன் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்து விவசாயிகளின் நிலங்களை

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| விஜய்சேதுபதி | ● | ● | ◐ | ○ | ○ |
| ஸ்ருதிஹாசன் | ● | ● | ○ | ○ | ○ |
| கதை | ● | ● | ● | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ○ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ◐ | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ○ | ○ | ○ |
| இசை | ● | ● | ○ | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ☆ | ☆ | ☆ |

காப்பாற்றினாரா? என்பதை பிரசார நெடியுடன் சொல்கிறது மீதிக்கதை.

விவசாய சங்கத் தலைவராக வரும் விஜய் சேதுபதிக்கு நடிப்பதை விட பேசிக் கொண்டே இருப்பதற்குத் தான் ஸ்கோப் ஜாஸ்தி.

நீண்ட இடைவெளிக்கு பிறகு ரீ-என்ட்ரி கொடுத்த ஸ்ருதி ஹாசன் நடிப்பு ஓகே என்றாலும் அது படத்திற்கு எந்த விதத்திலும் உதவவில்லை. பில்டப் கொடுக்கும் வழக்கமான வில்லனாக ஜெகபதிபாபு. அவரின் ஆசை நாயகியாக தன்ஷிகா சில காட்சிகளில் வந்து போகிறார்.

விஜய் சேதுபதியின் நண்பர்களாக கலையரசன், டேனியல், ரமேஷ் திலக், நிதிஷ் வீரா உள்ளிட்டோரும், ஜெகபதிபாபுவுக்கு சலாம் போடும் தொழிலதிபர்களாக வின்சென்ட் அசோகன்,

சண்முகராஜன், சுந்தர் எல்லோரும் கொடுத்த வேலையை செய்திருக்கிறார்கள்.

இமான் பின்னணி இசை லேசான ஆறுதல், பழைய பாடல்களின் ரீமேக் தவிர மற்ற பாடல்கள் மனதில் ஒட்டவில்லை.

டல்லடிக்கும் ராம்ஜியின் ஒளிப்பதிவும், எந்த திருப்பமும் இல்லாமல் செல்லும் காட்சியமைப்பில் கணேஷ், அகமது இருவரின் எடிட்டிங்கும் இன்னும் சிறப்பாக இருந்திருக்கலாம்.

மறைந்த இயக்குனர் எஸ்.பி.ஜனநாதன், மார்க்சிய சித்தாந்தங்களை தொகுத்து அதன் ஆழக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பதும், கோடியில் கொழிக்கும் கார்ப்பரேட்டுகளின் வியாபார யுக்தியை விரிவாக பேசியிருந்தாலும் பேச வந்த கருத்துக்கள் பிரசார நெடியில் இருப்பது சலிப்பை ஏற்படுத்துகிறது.

பருத்தி விற்பனையில் அதன் முழு லாபத்தை விவசாயிகள் அனுபவித்தால் அவர்கள் வாழ்வில் செல்வம் கொழிக்கும் என்பதை காட்சியமைப்பில் உணர்த்தியது போலவே ஒட்டுமொத்த படத்திலும் மேக்கிங்கில்



கவனம் செலுத்தி இருக்கலாம். திரைக்கதையில் லாஜிக் மிஸ்டேக் ஏக்கர் கணக்கிற்கு இருக்கிறது. விஜய் சேதுபதியின் பிளாஷ்பேக் காட்சிகள் அத்தனை அபத்தமாக இருக்கிறது.

தவறு செய்யாத பக்கிரி நீதிமன்றத்தை நாடாமல் நக்சலைட் போல எதற்கு தன் குழுவினருடன் வனவாசம் நடத்தி ஓடி ஒளிய வேண்டும்?

தன்னை டிராக் செய்யாமல் இருக்க தந்தி கம்பியை பயன்படுத்தும் பக்கிரி, அசால்டாக என்கவுண்டர் செய்ய வந்த போலீசையே சுட்டுக் கொல்வதும், மற்ற போலீஸ் போர்ஸ் அதற்கு சல்யூட் அடிப்பதும், கிளைமேக்ஸில் வணங்காமுடியை ரெண்டு துண்டாக்கி வீசுவதும் (உஷ்ஷ்ஷ்.. முடியல) பொறுமையை ரொம்பவே சோதிக்கிறது.

# கலராக்கப்படும் காய்கறிகள்... கவனம்?





**கா**ட்சிப்பொருள்
வண்ணமயமானால்
இனிமையாகலாம்.
உணவுப்பொருள் அப்படி இருந்தால்
ஒவ்வாமை தானே? அப்படிப்பட்ட
உடலியல் தீங்கு நடந்து கொண்டிருப்பது
உலகின் இயல்பாகிப்போனது
என்பது வருத்தம்தான். ஆனால்
அதுபற்றிய புரிதலின்மை இன்றி
அடுத்தடுத்து ஆபத்தை நோக்கி
பயணிக்கிறோம் என்பதுதான்
கொடுமை.



**நா**ம் உண்ணும் பதப்படுத்தப்பட்ட உணவில் எத்தகைய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனும் விபரம் அதன் அட்டையில் 'இ' எனும் எழுத்தோடு எண்களாக குறிப்பிடப்பட்டிருக்கும். அவை இ102, 104, 122, 133, 142, 151, 155 என இருந்தால் செயற்கை நிறங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் நிகழ்த்தப்பட்ட ஆய்வில் குழந்தை / சிறார் பருவத்தில் வயதுக்கு மீறிய செயல்களில் ஈடுபடுவதற்கு உணவுகளில் உள்ள செயற்கை வண்ணங்கள் முக்கிய பங்காற்றுகின்றன என அறியப்பட்டுள்ளது. டார்ட்ராஸைன், சூரிய அஸ்தமன மஞ்சள், அமராந்த் அல்லுரா சிவப்பு, குயினோலின் மஞ்சள், அடர் நீலம் மற்றும் இண்டிகோ கார்மைன் ஆகியவை பொதுவான சில செயற்கை உணவு வண்ணங்கள்.

இதில் வேதனை என்னவென்றால் இந்த எச்சரிக்கப்பட்ட வண்ணங்கள், நமது நாட்டில் தயார் செய்யப்படும் சாக்லேட்கள், பிஸ்கட்டுகள், குளிர்பானங்கள், பழரசங்கள், ஐஸ்கிரீம் வகைகள், துரித உணவகங்களில் செய்யப்படும் சில்லி புரோட்டா, சிக்கன் 65 மற்றும் கேசரி போன்றவற்றிலும் உள்ளன.


பதப்படுத்தப்பட்ட, தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களில் விஷ

**தொடக்கத்தில் ஒட்டுமுறையில் பூக்களை வண்ணமயமாக்கினர். ஒரு வண்ணப் பூவும் பலவண்ணமாகின. அதையே காய்கள், கனிகளுக்கும் பரப்பினர். மரபிலேயே மாற்று வண்ணத்தை புகுத்தியவர்கள், இப்போது அறுவடைக்கு பின்பு வர்ணமடிப்பதால் விளைபொருள் யாவும் விஷப் பொருட்களாகிவிட்டன.**

வர்ணங்களை சேர்த்து பழக்கப்பட்டவர்கள், இப்போது காய் கனிகளிலும் அவற்றை பயன்படுத்த துணிந்துவிட்டனர்.

**கா**ய்கறிகளின் இயற்கை வண்ணங்கள் அவற்றின் தன்மையை தெரிவிப்பவை. இயற்கையான காய்கறிகளில் இருப்பதும் நிறமிகளே. இயற்கையின் வண்ண உணவுகள் வாழ்வின் ஆதாரமாகவும், ஊட்டச்சத்துகளாகவும் இருக்கின்றன. இவற்றில் இருக்கும் நிறமிகள், ஆரோக்கியத்தை பேணிக்காப்பது மட்டுமல்லாமல், நோய்களை குணமாக்கும் திறன் கொண்டவை.

'கரோடினாய்டு' என்பது கொழுப்பில் கரையக்கூடிய நிறமி. ஆழ்ந்த சிவப்பு, மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறமுடைய இந்நிறமிகள் கேரட், இனிப்பு உருளைக்கிழங்கு, கீரை, தக்காளி முதலிய





காய்கறிகளிலும், பப்பாளி, தர்பூசணி, மாம்பழம், ஆரஞ்சு முதலிய பழங்களிலும் இருக்கின்றன.

சில கரோடினாய்டுகள், மனித உடலில் வைட்டமினாக மாற்றம் அடைவதன் மூலம் சிறந்த பார்வை திறனையும், உடல் வளர்ச்சியையும் தருகின்றன. கேடு உண் டாக்கும் தனி உறுப்பு காரணிகளை (ஃபிரி ரேடிக்கல்) செயலிழக்க செய்வதன் மூலம், சிறந்த எதிர் ஆக்ஸிகரணப் பொருளாகவும் (ஆண்டி ஆக்சிடண்ட்) இந்நிறமிகள் விளங்குகின்றன. இதன் மூலம், நிறமிகளுக்கு புற்று நோய் எதிர்ப்பு பண்பும் இருக்கிறது. மேலும், இந்நிறமிகளுக்கு அழற்சி எதிர்ப்பு (நான் இன்ஃபிளேமேட்டரி) பண்பும், இதய நோய் தடுப்பு தன்மையும் உள்ளாதாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

எல்லா பச்சை

தாவரங்களிலும் இருக்கின்ற நிறமி 'பச்சையம்'. புற்று நோய் எதிர்ப்பு, உடலில் இருக்கும் நச்சுக்களை நீக்குதல், இரணங்களை விரைவாக ஆற்றும் தன்மை, சீரான செரிமானம், மற்றும் தோலினை பாதுகாத்தல் போன்ற குணங்கள் பச்சையத்துக்கு உண்டு.

கருஊதா அல்லது நீல நிறமான ஆந்தோசை னின் நிறமிகள் திராட்சை, அவுரிநெல்லி உள்ளிட்ட பழங்களில் இருக்கின்றன. மிகச்சிறந்த அழற்சி எதிர்ப்பு தன்மை, நரம்பு மண்டல நோய்களை குணமாக்கும் பண்பு, எதிர் ஆக்ஸிஜனேற்ற பண்பு, கண் பார்வை திறனை அதிகரித்தல், உள்ளிட்ட பல மருத்துவ குணங்கள், இந்நிறமிகளுக்கு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

உணவில் சேர்க்கப்படும் மஞ்சளின் மஞ்சள் நிறத்திற்கு காரணம் 'குர்க்கூமின்' எனும் நிறமி. எதிர் ஆக்ஸிஜனேற்ற பண்பு கொண்ட இந்நிறமி, எதிர் நுண்ணுயிர் காரணியாக பேசில்லஸ் சப்டிலிஸ், எஷ்சரிச்சியா கோலை மற்றும் ஸ்டைஃபைலோகாக்கஸ் ஏரொஸ் முதலிய நுண்ணுயிரிகளை அழிக்கவும், ஆட்டிறைச்சி, ரொட்டி உள்ளிட்டவைகளுக்கு உணவு பதப்படுத்தியாகவும் விளங்குகிறது.

இப்படி இயற்கையாகவே நிறமிகள் காய், கனிகளில் இருக்கும்போது செயற்கையாக சேர்த்து கண்ணை கவர நினைப்பது, உயிரையே கவர வழிசெய்துவிடுகிறது.

**கா**ய்கறிகள் பச்சை பசேலென்று இருக்கவேண்டும் என்பது நம் கருத்திலேயே பதிந்துவிட்ட கலர் மனோபாவம். ஆனால், வாடி, வதங்கும்போது வண்ணம்

**ஐரோப்பிய ஒன்றியம் உணவு பாதுகாப்பு சம்பந்தமாக சிலவருடங்களுக்கு முன்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இ102, 104, 110, 122, 124, 129 ஆகிய ஆறு செயற்கை வண்ணங்கள் உணவில் பயன்படுத்தப்பட்டிருந்தால் க ண்டிப்பாக தங்களது உணவுப் பாக்கெட்டில் இந்த உணவு குழந்தைகளின் செயலிலும், சிந்தனையிலும் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என்ற எச்சரிக்கை வாசகம் அச்சிடப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

வெளிறுமே? அதை தடுத்து எவர் கிரீனாக இருப்பதற்கு இருக்கவே இருக்கிறது மலாக்கிட் பச்சை.

மலாக்கிட் பச்சை என்பது ஒரு கரிம கலவை. இது உணவுப்பொருளில் நிறமளிப்பதற்காகவும், மீன் வளர்ப்பில் நுண்ணுயிர் எதிர்ப்பியாகவும் பயன்படுத்தப்படுகிறது. 1877 ல் ஹெர்மன் ஃபிஷர் என்பவரால் சல்ப்யூரிக் அமிலத்தோடு 1: 2 என்ற மூலக்கூறு விகிதத்தில் பென்சால்டிஹைட் மற்றும் டைமெதிலானிலின் சேர்க்கையால் இது தயாரிக்கப்பட்டது.

உணவு ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, மலாக்கிட் பச்சை மிகவும் கொடிய புற்றுநோயை உண்டாக்கக்கூடியது. ஆனால், இந்தியாவில் பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், பட்டாணி, வெண்டைக்காய் மற்றும் கீரைகள் பசுமையாக இருப்பதற்காக பயன்படுத்தப் படுகிறது. இந்த கெமிக்கலின் ஆபத்தான பக்கவிளைவுகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய டிவிட்டர் பக்கத்தில் இன்றும் காணலாம்.

அதே டிவிட்டர் பக்கத்தில் உள்ள காணொளியில் நாம் சாப்பிடும் பச்சை நிற

**டீத்தூளில் கலப்படம் உள்ளதா என்பதை எளிய முறையில் கண்டறிய ஒரு கண்ணாடி டம்ளரில் முக்கால் பாகம் குளிர்ந்த நீர் எடுத்துக் கொண்டு அதில் டீத்தூளை தூவவேண்டும்.**

**டீத்தூள் நீரில் இறங்கும்போது, நீர் சிகப்பு அல்லது பழுப்பு நிறமாக மாறினால், அது கலப்படத்தூள். சுத்தமான டீத்தூள் குளிர்ந்த நீரில் சாயம் வராது. கொதித்த நீரில் மட்டுமே சாயம் வரும்.**

காய்கறிகள் மற்றும் கீரைகள் கலப்படம் உள்ளதை எப்படி சோதிக்கலாம் என்றும் விளக்கம் உள்ளது.

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடல் உணவுகளில் மலாக்கிட் பச்சை பயன்படுத்துவதைக் கண்டறிந்தது. அப்போது இருந்து தான் மீன் வளர்ப்பில் அதன் பயன்பாடு தடை செய்யப்பட்டது.

ஒன்றுக்கு தடை என்றாலும் மற்றொன்றை பயன்படுத்தியாவது 'வியாபார தர்மத்தை' நமது வணிகர்கள்







பேணுகிறார்கள். மிளகாயின் நிறத்தை முழுச்சிவப்பாக காட்ட 'சூடான் ரெட்' என்ற ரசாயனத்தை மிளகாயுடன் கலக்குகிறார்கள்.

வற்றல் பொடியில் செங்கல் பொடியை கலந்தால் நிறமாற்றம் தெரியாதல்லவா? தேயிலையில் செஞ்சாயம் கலப்பதால் தேநீர் நச்சு நீராகிவிடுகிறது.

தண்ணீர் பழம் என அழைக்கப்படும் வாட்டர் மெலான் பழத்துக்கு சிவப்பு சாயத்தை ஊசி மூலம் ஏற்றுவதாக கூறுகின்றனர்.

பச்சை பட்டாணியில் பச்சை



சாயம் சேர்க்கும் ரகசியம் கடந்த 2017ல் தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூரில் வெளிப்பட்டது. அங்குள்ள வாரச் சந்தையில் விற்பனையான பச்சைப் பட்டாணியை வீட்டுக்கு வாங்கிச்சென்றவர்கள், தண்ணீரில் ஊற வைத்தபோது, பட்டாணி சாயம்போனதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். மொத்த வியாபாரிகள் இந்த மாயாலாஜத்தை செய்வதாக விசாரணையில் தெரியவந்தது. வெறும் கற்கண்டில் சாயம் அடிக்கப்பட்டு பனங்கற்கண்டாக விற்கப் படுவதும் தெரியவந்துள்ளது. வெள்ளை முட்டையில் மஞ்சள் வண்ணம் அடிக்கப்பட்டு நாட்டு முட்டையாக்குகின்றனர்.

2020 நவம்பரில் சேலம், நாமக்கல் பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பிராய்லர் கோழி முட்டைகளுக்கு சாயம் பூசி நாட்டு கோழி முட்டைகள் என விற்பனை செய்தது தெரியவந்தது. சாயம் பூசப்பட்ட முட்டை

களை தண்ணீரில் போட்டு கண்டுபிடிக்க முடியும்.

**பொ**துவாக ஆப்பிள்களில் ஒரு இயற்கை மெழுகுப் பூச்சு இருக்கும். இது 10 நாட்களுக்கு மட்டுமே தாங்குவதால் வியாபாரிகள் ஆப்பிளை தண்ணீரில் கழுவி இயற்கை மெழுகுப் பூச்சை அகற்றிவிட்டு, பளபளப்பாக இருக்கவும், நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கவும்

**சாயம் மற்றும் ரசாயனங்களால் காய்கறி, தானியம், முட்டை யாவும் நிறம் மாறுவதோடு, தரமும் குறைகின்றன. இது தவிர வேறு சில முறையாலும் காய்க்கறியை நச்சாக்குகின்றனர். காய்கறிகளின் தன்மையை மாற்ற மட்டுமல்ல, வண்ணங்களை மாற்றவும் மரபணு மாற்ற தொழில்நுட்பம் உதவுகிறது. பல நாடுகளில் தடை செய்யப்பட்ட பல பூச்சிக்கொல்லிகள் மரபணு மாற்றம் செய்யப் பட்ட காய்கறிகளில் தெளிக்கப்படுவது வேறு ஆபத்தை அதிகரிக்கிறது.**

செயற்கையான ஒரு மெழுகுப் பூச்சை பூசுகிறார்கள்.

பீஸ் வேக்ஸ், கார்னோபா வேக்ஸ், ஷெல்லாக் வேக்ஸ் என்ற மூன்று வகையான மெழுகுகளை மட்டுமே இதுபோன்ற பூச்சுகளுக்கு பயன்படுத்த வேண்டும். அதுவும், ஓர் ஆப்பிளின் மேல் 3 மில்லி கிராம் என்ற அளவிலே பயன்படுத்த வேண்டும் என்று விதிமுறை உள்ளது. இதில் பீஸ் வேக்ஸ் என்பது தேனடையில் இருந்து கிடைக்கும் மெழுகு. கார்னோபா, ஷெல்லாக் ஆகியவை மரங்களில் இருந்து கிடைக்கும் மெழுகு.

ஆனால், நம்மூர் வியாபாரிகள் பெட்ரோலிய மூலப்பொருளில் இருந்து எடுக்கப்படும் நைட்ரேட் கலந்த செயற்கை மெழுகு திரவத்தில் போட்டு எடுக்கிறார்கள். அதோடு உள்நாட்டு ஆப்பிள்களையும் இந்த மாதிரி மெழுகில் குளிப்பாட்டி அதில் ஸ்டிக்கர் ஒட்டி, வெளிநாட்டு ஆப்பிள்கள் என்று கூறி அதிக விலைக்கு விற்கிறார்கள். மெழுகோடு நைட்ரேட் சேர்க்கப்படுவதால் பளபளப்பும் கவர்ச்சியும் கூடுகிறது. நீர்சத்து வெளியேறாமல் நீண்ட நாட்களுக்கு கெடாமல்

**மரபணு மாற்றப்படுவதாலும் ரசாயனம் தெளிக்கப்படுவதாலும் காய், கனிகளின் இயற்கை வண்ணம் திண்மையாக இருக்கலாம். அதற்காக, காய், கனிகளில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.**

**ஆப்பிள்களில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரில் 4011 என 4 இலக்கமிட்டிருந்தால், அது 4ல் தொடங்கினால் ரசாயனம் மருந்து தெளிக்கப்பட்டு பறிக்கப்பட்ட பழம். 84011 என 5 இலக்கமிட்டு, 8-ல் தொடங்கினால் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இயற்கை முறையில் வளர்க்கப்பட்டவை.**

**அதுவே, 5 இலக்கத்தில் 94131 என 9-ல் தொடங்கினால் இயற்கையில் விளைந்தது என உணரலாம். அதைப்போல, ஜிஎம்ஓ என்ற வார்த்தைகளை வைத்து மரபணு மாற்றம் குறித்து அறிந்து கொள்ளலாம்.**

இருக்கிறது.

மெழுகில் சேர்க்கப்படும் நைட்ரேட், 'நைட்ரைஸோ மார்போலின்' என்ற ரசாயனத்தை உருவாக்குகிறது. இது கேன்சர் நோய்க்கான முக்கிய காரணியாக இருக்கிறது. இப்போது ஆப்பிள் மட்டுமல்லாமல் உருளைக்கிழங்கு, செர்ரி பழம், குடைமிளகாய் போன்றவற்றிலும் மெழுகுப் பூச்சு பூசப்படுகிறது. இந்த மெழுகு நமது உணவுக் குழாயில் செரிமானம் ஆகாமல் அப்படியே படிந்து நின்றுவிடும். இந்தப் படிமம் கேன்சரை உருவாக்கிவிடும் என்கிறது மருத்துவம். மெழுகை நீரால் கழுவி துணியால் துடைத்த பின்பே இந்த காய், கனிகளை பயன்படுத்த வேண்டும்.

**கா**ய்கனிகளில் இருக்கும் இயற்கை வண்ணங்கள் உடல் நலத்துக்கு உதவுபவை. எவ்வளவுக்கெவ்வளவு இயற்கை வண்ணங்களை சேர்க்கின்றோமோ, அந்த அளவிற்கு உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். நோய் வராமல் தடுக்கலாம். செயற்கை வண்ணங்கள் பார்வைக்கு விருந்தளிக்கலாம், சில வேளை நாவுக்கு உணவளிக்கலாம். ஆனால், நோய்க்கு நம் உடலை உணவாக்கி விடும் என்பதே உண்மை.

**-பரிதிபாலன்.**

# அரசியல்ல... இது சாதாரணமப்பா

மணிப்பூர் மாநில முன்னாள் கவர்னரும் மாநிலங்களவை முன்னாள் துணைத்தலைவருமான நஜ்மா ஹெப்துல்லாவிற்கு 81 வயதாகிறது. அடுத்த ஆண்டு ஜனாதிபதியையும் துணை



ஜனாதிபதியையும் தேர்வு செய்ய தேர்தல் நடத்தப்படுகிறது. இதுவரை, துணைஜனாதிபதியாக எந்த பெண்ணும் பதவி வகித்தது இல்லை. இஸ்லாமியப் பெண்ணான நஜ்மா ஹெப்துல்லாவை துணை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது குறித்து பா.ஜ.க. மேலிடம் பரிசீலித்து வருகிறது என்று செய்தி கசிந்துள்ளது.

---

ஜம்மு- காஷ்மீரில் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சொத்து வாங்கவும் குடியேறவும் விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. ஆனால் உள்ளூர் மக்களுக்கு மட்டுமே குடியிருப்பு சான்றிதழ் அளிக்கப்படும் என்று லடாக் நிர்வாகம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் லடாக்கை பொறுத்த வரை 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டுவிட்ட போதிலும் அந்த சட்டப்பிரிவில் இடம்பெற்றுள்ள சாராம்சங்கள் இன்னும் உயிர்ப்புடனேயே உள்ளன.

---

விவசாயிகள் போராட்டம் சுமார் ஓராண்டாக நடைபெற்று வருகிறது. டெல்லிபுறநகர் பகுதியில் ஏறத்தாழ 10 மாதங்களாக முகாமிட்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, விவசாயிகள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றனர். இந்நிலையில் விவச ாயிகளுக்கு ஆதராவக பா.ஜ.க. எம்.பி. வருண் காந்தி கருத்து தெரிவித்துள்ளார். இதனால் அவர் மீது பா.ஜ.க. மேலிடத்தின் உக்கிரப் பார்வை குவிந்துள்ளது.



**-விறலேந்தல்**

# அரசியல்ல... இது சாதாரணமப்பா

சீன எல்லையை ஒட்டியுள்ள அருணாசலப்பிரதேச கிராமங்களை சேர்ந்தவர்கள் புலம் பெயர்ந்து வருகின்றனர். ஏராளமானோர் மாநிலத் தலைநகர் இட்டா நகர் பகுதியில்



குடியேறியுள்ளனர். புலம் பெயர்தலை தடுத்து நிறுத்தும் பொருட்டு, எல்லையோர தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இதன் தலைவராக சட்டப்பேரவைத் தலைவர் பசாங் டோர்ஜி சோனா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

---

மத்தியப்பிரதேச மருத்துவத் துறையில் அசாதாரண நிகழ்வு அரங்கேற்றப்பட்டுள்ளது. எம்.பி.பி.எஸ். பவுண்டேசன் கோர்சுக்கான பாடத்தில் ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெக்டேவார், பாரதிய ஜனசங்கத் தலைவர் தீனதயாள் உபாத்யாய ஆகியோரின் கோட்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இது சர்ச்சையை கிளர்ந்தெழ வைத்துள்ளது.

---

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளதாக முதல்வர் என்.ரங்கசாமி



சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார். இது நனவாகும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.


ஆனால் கருவாடு மீன் ஆனாலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து கிடைக்காது என்று அவரது எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் விமர்சித்து வருகின்றனர்.

–விறலேந்தல்

சிறு, குறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள் இந்தியாவை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அடுத்தடுத்து ஆட்சி பீடம் ஏறுபவர்கள் விவசாயிகளை வாட வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மத்திய அரசு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றியுள்ள 3 வேளாண் சட்டங்களும் விவசாயிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

# முதல்வர்களை வீழ்த்தும் மகா பஞ்சாயத்து!





**அகிலேஷ் யாதவ், மாயாவதி, முலாயம் சிங் யாதவ்**

டெல்லி புறநகர் பகுதியில் சுமார் ஓராண்டாக பஞ்சாப் மற்றும் அரியானா விவசாயிகள் பனியையும் மழையையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

அண்மையில் அரியானா மாநிலத்தில் உள்ள கர்னாலில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டது. மண்டை உடைக்கப்பட்டதால் விவசாயிகளின் தலையில் இருந்து ரத்தம் கொட்டியது. அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்து நாடு முழுவதும் போராட்டம் உக்கிரமடைந்து வருகிறது.

இந்நிலையில் இம்மாதம் 27-ம் தேதி நாடு தழுவிய அளவில் பாரத் பந்த் நடத்தப்படும் என்று விவசாயிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டத்தை மத்திய அரசு வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் சட்டத்தைக் கொண்டு வந்த அரசை வீழ்த்தும் வரை எங்களது போராட்டம் நீடிக்கும். எந்த அடக்குமுறைக்கும் நாங்கள் அடிபணிய மாட்டோம் என்று விவசாயிகள் சூளுரைத்துள்ளனர்.

விவசாயிகளால் அரசை வீழ்த்த முடியுமா? என்ற கேள்வி அர்த்தமுள்ளது தான். இதை அலட்சியப்படுத்த முடியாது. ஆம்... மகாபஞ்சாயத்துகள் உத்தரப்பிரதேசத்தில் 3 முதலமைச்சர்களை வீழ்த்தியுள்ளன என்பது வரலாறு.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நாராயண் தத் திவாரி, 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி பதவி விலகினார். இதையடுத்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வீர் பகதூர் சிங் பதவியேற்றார். விவசாயத்திற்கான மின் கட்டணத்தை திருத்தி அமைக்க வேண்டும், வேளாண் விளை பொருள்களுக்கு உரிய விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். உள்ளிட்ட 35 கோரிக்கைகளை வலியுறுத்தி

உத்தரப்பிரதேசத்தில் உள்ள முசாபர்நகரில் விவசாயிகள் மகாபஞ்சாயத்து நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து 1988-ம் ஆண்டு ஜனவரி மாதம் மீரட்டில் மகாபஞ்சாயத்து நடத்தப்பட்டது. இதையடுத்து டெல்லி போட் கிளப்பிலும் விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். இதற்கிடையே வீர் பகதூர் சிங்கிற்கு நெருக்கடி வலுத்தது. அவர் 1988-ம் ஆண்டு ஜூன் 24-ம் தேதி பதவி விலகினார். இதன் பிறகு, நாராயண் தத் திவாரி மீண்டும் முதல்வர் ஆனார்.

**1989**-ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. ஜனதா தளத்தைச் சேர்ந்த முலாயம் சிங் யாதவ் முதல்வரானார். பின்னாளில் சமாஜ்வாடி கட்சியை முலாயம் சிங் யாதவ் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதிய ஜனதா கட்சிக்கும் பகுஜன் சமாஜ் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்


மகேந்திர சிங் திகாயத்


ராகேஷ் திகாயத்

அடிப்படையில் பா.ஜ.க.வைச் சேர்ந்த ராஜ்நாத் சிங் உத்தரப்பிரதேச முதலமைச்சராக 2000-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ந் தேதி முதல் 2002-ம் ஆண்டு மார்ச் 7-ந் தேதி வரை செயல்பட்டார். பா.ஜ.க.வுக்கும் பகுஜன் சமாஜ் கட்சிக்கும் இடையே உரசல் ஏற்பட்டது. ராஜ்நாத் சிங் ஆட்சி கவிழ்ந்ததை அடுத்து, உத்தரப்பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

இதன் பிறகு 2002-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி மாயாவதி முதலமைச்சர் ஆனார். பா.ஜ.க.வுக்கும் பகுஜன் சாமாஜுக்கும் இடையிலான பனிப்போர் முற்றியது. இதற்கு 2 முக்கிய காரணங்கள் கூறப்பட்டன.

முதலாவதாக தாஜ் நெடுந்தடம் தொடர்பான ஊழல், இரண்டாவதாக விவசாயிகள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காதது. போராட்டம் நடத்திய பாரதிய கிசான் யூனியன் தலைவர் மகேந்திர சிங் திகாயத் மீது போலீசார் தடியடி நடத்தினார்கள்.

இது விவசாயிகள் இடையே

கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இப்பின்னணியில் 2003-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் தேதி முசாபர் நகரில் உள்ள ஜி.ஐ.சி. மைதானத்தில் விவசாயிகள் மாகாபஞ்சாயத்து நடத்தப்பட்டது. மாயாவதி அரசை வீழ்த்தியே தீருவோம் என்று விவசாயிகள் சூளுரைத்தனர்.



நாராயண் தத் திவாரி

இதையடுத்து நடைபெற்ற தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற சமாஜ்வாடித் தலைவர் முலாயம் சிங் யாதவ், உத்தரப்பிரதேச முதலமைச்சர் ஆனார்.

**2007**-ல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து மாயாவதி மீண்டும் முதலமைச்சர் ஆனார். அரசியல் ரீதியாக பல சோதனைகளை எதிர்கொண்ட மாயாவதியின் அணுகுமுறை முதிர்ச்சி அடைந்திருக்கும் என்று விவசாயிகள் நம்பினார்கள். ஆனால் வெகு விரைவிலேயே அவர்களது நம்பிக்கை பொய்த்து விட்டது.

தடாலடி நடவடிக்கைளை மாயாவதி மேற்கொண்டார். இந்நிலையில் முசாபர் நகரில் உள்ள ஜி.ஐ.சி. மைதானத்தில் 2008-ம் ஆண்டு ஏப்ரல் 8-ம் தேதி விவசாயிகள் மாகாபஞ்சாயத்து நடத்தினார்கள். பாரதிய கிசான் யூனியன் தலைவர் மகேந்திர சிங் திகாயத் உள்ளிட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று மகாபஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாயாவதி அரசுக்கு எதிரான போராட்டத்தை விவசாயிகள் தீவிரப்படுத்தினார்கள். 2012-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பகுஜன் சமாஜ் படுதோல்வி அடைந்தது. சமாஜ்வாடி கட்சி அமோக வெற்றி பெற்றது. சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்த அகிலேஷ் யாதவ் 2012-ம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி முதலமைச்சர் ஆனார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும் விவசாயிகளுக்கு எதிரான அணுகுமுறையில் குறிப்பிட்டு சொல்லத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதையடுத்து 2013-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி பாரதிய கிசான் யூனியனின் செய்தி தொடர்பாளர் ராகேஷ் திகாயத்,

நங்குலா மன்றாட் என்ற இடத்தில் விவசாயிகள் மகாபஞ்சாயத்தைக் கூட்டினார்.

அரசுக்கு எதிரான போராட்டத்தை விவசாயிகள் தீவிரப்படுத்தினார்கள். உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஜாட் இன மக்களின் கோபம் அகிலேஷ் யாதவ் அரசைப் பொசுக்கத் தொடங்கியது.

2017-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் சமாஜ்வாடி கட்சி படுதோல்வி அடைந்தது. பா.ஜ.க. மகத்தான வெற்றி பெற்றது. யோகி ஆதித்ய நாத் முதலமைச்சர் ஆனார். இந்நிலையில் அவர் மத நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறாரே தவிர விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில் இம்மாதம் 5-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று முசாபர் நகரில் உள்ள ஜி.ஐ.சி. மைதானத்தில் விவசாயிகள் மகாபஞ்சாயத்து நடைபெற்றது. விவசாயிகளுக்கு எதிரான அரசின் அணுகுமுறையும் செயல்பாடும் மாறியே தீர வேண்டும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த அழுத்தம் கொடுக்கும் வகையில் தான் மகாபஞ்சாயத்துக்களை நடத்தி வருகிறோம் என்று ராகேஷ் திகாயத் உறுதிபட உரைத்துள்ளார்.



வீர் பகதூர் சிங்



யோகி ஆதித்யநாத்

வீர் பகதூர் சிங், மாயாவதி, அகிலேஷ் யாதவ் என 3 முதலமைச்சர்களை விவசாயிகளின் மகாபஞ்சாயத்துக்கள் ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றியுள்ள வரலாறு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் உத்தரப்பிரதேச சட்டப்பேரவைக்கு நடத்தப்படும் தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று உழவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் 2024-ல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இதனால் தாக்கம் ஏற்பட வேண்டும் என்ற இலக்கை முன்னிறுத்தி விவசாயிகள் போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

**-கோப்பெருந்தெழி**

# ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார்



## நினைவு நாவல் போட்டி

## ரூ. 2½ லட்சம் பரிசுடன்

- என்றென்றும் வாசகர்கள், முகவர்கள் மற்றும் எழுத்தாளர்களிடம் நம்பர் 1 இடத்தைப் பிடித்து இருக்கும் கண்மணி, மீண்டும் ஒரு நாவல் போட்டியை அறிவிப்பதில் பெருமை அடைகிறது.
- புதுபுது எழுத்தாளர்களை உருவாக்கும் உத்வேகத்துடன் தன் கடைசி காலம் வரை வாழ்ந்த தேவி ஆசிரியர் ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார் நினைவாக நடத்தும் மெகா நாவல் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ள படைப்பாளர்களை வரவேற்கிறது கண்மணி.
- நிகழ்கால சமூகச் சூழலில்... கூட்டுக்குடும்பத்தின் குதூகலம், உறவுகளின் உன்னதம், பெண்மையை போற்றும், பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் விதத்தில் குடும்ப நாவல்கள், கிரைம், காதல், திகில், சரித்திரம், சஸ்பென்ஸ்... என எந்த வகை நாவல்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.
- நாவலில் 12,000-க்கு குறையாமல் வார்த்தைகள் இடம் பெற வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துகளை டைப் செய்ய வேண்டும்.

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | ஆறுதல் பரிசு |
|---|---|---|---|
| ரூ. 1 லட்சம் | ரூ. 50 ஆயிரம் | ரூ. 25 ஆயிரம் | 5 பேருக்கு தலா ரூ. 15 ஆயிரம் |

- ★ எதிலும் வெளிவராததாகவும், வேறு எந்த பத்திரிகைக்கும் அனுப்பப்படாததாகவும், சொந்த கற்பனையாகவும், புதிய படைப்பாகவும் இருக்க வேண்டும். அதற்கான உறுதிமொழி கடிதமும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ★ பரிசுக்குரிய நாவல் ஒரே தரத்தில் பல இருந்தால் பரிசுகள் பகிர்ந்து அளிக்கப்படும்.
- ★ பரிசு பெற்ற நாவல்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நாவல்களின் விபரம் கண்மணி, பெண்மணி இதழ்களில் வெளியிடப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நாவல் பிரசுரிக்கப்படும்.
- ★ தேர்வு பெறாத கதைகள் திருப்பி அனுப்பப்படாது.
- ★ குறுநாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படாது.
- ★ நாவல் தொடர்பான தொலைபேசி, கடித தொடர்புகளுக்கு நிச்சயம் அனுமதியில்லை.
- ★ நாவல் அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 11-10-2021

நாவல் அனுப்ப வேண்டிய முகவரி:

# நாவல் போட்டி

தேவியின் கண்மணி

மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, சென்னை - 600 006.

# அல்லு அர்ஜுனை முந்திய விஜய்!



இன்ஸ்டாகிராமில் யாருக்கு பாலோயர்ஸ் அதிகம் என்பதில் நடிகைகளை போலவே நடிகர்களுக்கும் போட்டி ஆரம்பித்து விட்டது. தென்னிந்தியாவைப் பொறுத்த அளவில் இன்ஸ்டாவில் அதிக பாலோயர்களை வைத்திருக்கும் நடிகராக அல்லு அர்ஜுன் இருக்கிறார்.

தற்போது விஜய தேவரகொண்டா 13 மில்லியன் பாலோயர்களை கடந்து அல்லு அர்ஜுனை ஓவர் டேக் செய்துள்ளார்.





# ராசி கண்ணாவுக்கு லவ் டார்ச்சர்!

நடிகை ராஷி கண்ணாவுக்கு 17 வயது இருக்கும் போது அவரது சீனியர் லவ் லெட்டர் கொடுத்து ரொமாண்டிக்காக புரபோஸ் செய்தாராம்.

நடிகையான பிறகு தற்போது ரசிகர்கள் முதல் தொழிலதிபர்கள் வரை பலரும் தொடர்ந்து லவ் டார்ச்சர் கொடுத்து வருகிறார்களாம். ஆனால் அவர்கள் மனம் கோணாதபடி ராஷி கண்ணா 'நோ' சொல்லி விடுவாராம்.




**ந**டிகையாக இருந்து மக்கள் தலைவியாக மாறிய ஜெயலலிதாவின் ஒரு பாதி வாழ்க்கையையும், ஆரம்ப கால அரசியல் அத்தியாயத்தையும் பேசுகிறது தலைவி.

1989-ம் ஆண்டு சட்டசபையில் ஜெயாவை தாக்கி துகிலுரிக்க முயன்ற சம்பவம் காட்சிகளாக விரிகிறது. ‘முதல்வரான பிறகே மீண்டும் சட்டசபைக்குள் நுழைவேன்’ என்று சவால் விட்டு செல்கிறார். 1960’களில் பிளாஷ்பேக் தொடங்குகிறது.

தலைவராக தமிழக மக்களால் கொண்டாடப்படும் திரைப்பட உச்ச நடிகர் எம்.ஜெ.ஆரை, நெருங்க நினைத்த நடிகையை ஒழித்துக் கட்டி பீல்டை விட்டே துரத்துகிறார் ஆர்.என்.வீரப்பன்.

இந்த நேரத்தில் துணை நடிகை சந்தியாவின் மகளான 16 வயது ஜெயா, எம்.ஜெ.ஆருக்கு ஜோடியாக நடிக்க வருகிறார். ஆரம்பத்தில் நடிப்பதில் விருப்பமில்லாமல் விளையாட்டுப் பெண்ணாக பட செட்டில் வம்பிழுக்கும் ஜெயா, போகப் போக எம்.ஜெ.ஆரின் நல்ல மனதை புரிந்து கொண்டு மனதார அவரை மதிப்பதுடன் நேசிக்கவும் தொடங்குகிறார்.

இது ஆர்.என்.வி.க்கு பிடிக்காமல் போக, திட்டம் போட்டு ஜெயாவை சின்னவரிடம் இருந்து பிரிக்கிறார். அரசியல், சினிமா என இரண்டு குதிரைகளில் சவாரி செய்யும் எம்.ஜெ.ஆர், கட்சிப் பணிகளில் தீவிரம் காட்ட, ஒரு கட்டத்தில் தாயை இழந்த ஜெயா வாழ்க்கையில் வெறுமையை உணர்கிறார்.

அரசியல் காரணங்களால் த.ம.க.வில் இருந்து வெளியேறும் எம்.ஜெ.ஆர்., தன் நண்பர் கருணாவை எதிர்த்து புதிய கட்சி தொடங்கி தீவிர அரசியலில் கவனம் செலுத்துகிறார். மறுபுறம், சினிமா வாய்ப்பு குறைந்து பீல்டில் இருந்து ஒதுங்குகிறார்

ஜெயா.

எம்.ஜெ.ஆர் முதல்வரான பிறகு ஒரு கலை இலக்கிய விழாவில் நடனமாட ஜெயாவுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. நீண்ட காலமாக பிரிந்திருந்த எம்.ஜெ.ஆர் - ஜெயா இருவரும் இந்த நிகழ்வில் சந்தித்து இணக்கமாகி விடுகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தில் இருந்த குளறுபடிகளை களைந்து மாணவர்கள் வாழ்க்கையில் விளக்கேற்றிய ஜெயாவை அரசியலில் சேர அழைப்பு விடுக்கிறார் எம்.ஜெ.ஆர். அதை ஏற்றுக் கொள்ளும் ஜெயா, வேல் திருட்டு விவகாரத்தால் மூத்த தலைவர்களே போக அஞ்சும் ஒரு தொகுதிக்கு துணிந்து சென்று எதிர்ப்புகளை தாண்டி மக்கள் ஆதரவை திரட்டுகிறார்.

ராஜ்யசபா எம்.பி. ஆகி டெல்லிக்கு சென்று ஜெயா ஆற்றிய உரையின் எதிரொலியாக காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி உண்டாகிறது. ஆனால் டெல்லி வரை ஜெயாவின் செல்வாக்கு உயர்ந்தது கண்டு மூத்த தலைவர்கள் சதி செய்து ஜெயாவை அரசியலில் இருந்து ஒதுக்கப் பார்க்கிறார்கள்.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கங்கனா | ● | ● | ● | ○ | ○ |
| அரவிந்த்சாமி | ● | ● | ◐ | ○ | ○ |
| கதை | ● | ● | ○ | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ◐ | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ● | ○ | ○ |
| இசை | ● | ● | ◐ | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ⯪ | ☆ | ☆ |

ஆனால், எம்.ஜெ.ஆர் சிகிச்சைக்காக அமெரிக்கா போகும் நேரத்தில் கூட கட்சியின் முகமாக ஜெயாவையே நாட வேண்டியதாகிறது.

எம்.ஜெ.ஆர் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி ஜானகியின் பின்புலமாக ஆர்.என்.வி. உள்ளிட்ட அனுதாபிகளும், ஜெயாவின் பின்புலத்தில் தனிக் கூட்டமும் திரள்கிறது. எனினும் உடைந்த கட்சியை ஒன்று சேர்த்து எதிர்கட்சித் தலைவியாக அமர்கிறார் ஜெயா.

தன் கட்சியினரை பொய் கேஸ் போட்டு கைது செய்வதை கண்டித்து சட்டசபையில் குரல் எழுப்பிய போது தான் சட்டசபையில் ஜெயாவுக்கு பெருத்த அவமானம் நேர்கிறது. முதல்வராவேன் என்று தான் போட்ட சபதத்தில் ஜெயா வென்றாரா? ஆண்கள் மட்டுமே கோலோச்சும்

அரசியலில் தனியொரு
பெண்ணாக நுழைந்து
ஜெயாவால் எப்படி
சாதிக்க முடிந்தது? போன்ற
கேள்விகளுக்கு பட்டும்
படாமலும் விடை சொல்கிறது
மீதிக்கதை.

ஜெயலலிதாவின்
சாயல் ஒட்டாவிட்டாலும்
அவரின் மூன்று பருவ
வாழ்க்கைக்கு ஏற்றபடி
உடல்வாகு, பாடி லேங்குவேஜ்
என உழைப்பைக்
கொட்டியிருக்கிறார் கங்கனா.
சில இடங்களில் லிப் சிங்க்
மட்டும் சற்றே நெருடுகிறது.

எம்.ஜெ.ஆராக அரவிந்த்
சாமி உருவ அமைப்பை
போலவே நடிப்பும்
அந்நியத்தனம்.

எம்.ஜெ.ஆரின்
வலதுகையாக ஆர்.என்.வி.
கேரக்டரில் சமுத்திரகனி
பொருந்தி நடித்திருக்கிறார்.

ஜெயாவின் அரசியல்
எதிரியான கருணா
கேரக்டரில் நாசர்,
குரலிலும், தோற்றத்திலும்
தேர்ந்த நடிப்பை
வெளிப்படுத்தியுள்ளார்.

ஜெயாவின் உதவியாளர்
மாதவனாக தம்பி ராமையா
கவனம் ஈர்க்கிறார். ஜானகியாக
மதுபாலா, முன்னணி
நடிகையாக ரெஜினா
ஓரிரு காட்சிகளில் வந்து



போகிறார்கள்.

ஜி.வி.பிரகாஷ் இசையில்
பின்னணி இசை படத்தின்
முதுகெலும்பாக ஒலிக்கிறது.
பாடல்கள் மனதில்
ஒட்டவில்லை.

கலை இயக்குனர்கள்
ராமகிருஷ்ணா, மோனிகா
நிகோட்ரி 1960'களில்
தொடங்கி 1990' வரையிலான
கால கட்டத்தை நம் கண்
முன்னே நிறுத்தியுள்ளனர்.
விஷால் விட்டலின்
ஒளிப்பதிவும், மதன்
கார்க்கியின் வசனங்களும் ஓகே
ரகம்.

இயக்குனர் விஜய்
இயக்கத்தில் ஜெயலலிதாவின்
வாழ்க்கை வரலாற்றை
மேலோட்டமாக
தொட்டிருப்பதால் தலைவி,
ஒரு முழுமையான பயோபிக்
பார்த்த அனுபவத்தைக்
கொடுக்கவில்லை.








மார்ஸ் கிரகத்தின் மேற்பகுதியில் இரும்பு ஆக்ஸைடின் தாக்கம் அதிகம் இருப்பதால் செந்நிறமாக காட்சியளிக்கிறது. இதனாலேயே செவ்வாய் எனப்பெயர்.

மனிதனுக்கு செவ்வாய் கிரகத்தின் மீது அதிக ஈர்ப்பு: பூமியை விட்டால், அங்கு தான் மனிதன் வாழும் வாய்ப்பு அதிகம்! என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஆக அங்கு சென்று குடியறினால் அங்கிருந்து உலோகங்களை அள்ளி, மேலும் பணக்கார நாடாக ஆகலாம் என அமெரிக்கா எண்ணுகிறது.

எங்காவது காலி இடம் இருந்தால் சைனா சும்மா இருக்குமா? ஆக மார்ஸில்




இறங்கி கண்டுபிடித்து, அதனை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டால் ஆட்களையும் குடியேற்றலாம். அங்குள்ள சுகங்களையும் அனுபவிக்கலாம் என்பது அதன் எண்ணம்!

இதற்காக அமெரிக்க நாசா நிறுவனம் ஏற்கனவே insight என்ற சுற்றித் திரியும் வாகனத்தை இறக்கி, அங்கு என்ன தான் நடக்கிறது என வேவு பார்த்தலில் இறக்கியுள்ளது.

அடுத்து zhurong (சுராங்) என்ற சுற்றித்திரியும் கருவியை, பாராசூட் மூலம் பத்திரமாக தரையில் இறக்கியுள்ளது சீனா!

இது செவ்வாய்கிரகத்தின் மற்றொரு பகுதியில் இறக்கப்பட்டுள்ளது. இதுவும் வேவு பார்க்கத்தான்.

இதனிடையே நாசா, peseverance என்ற மற்றொரு சுற்றித்திரியும் வாகனத்தை 30 மைல் கிடுகிடு பள்ளத்தில்

இறக்கியுள்ளது! இந்த பள்ளத்தில், இருந்தபடி அது கண்காணிக்கும்! ஒரு காலத்தில், நதி ஓடியதின் டெல்டா பகுதி; அது!

சமீபத்திய ஒரு கண்டு பிடிப்பின் படி மிக ஆழத்தில் ஐஸ் உறைந்திருப்பதும் அருகில் நீர் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மேல்பகுதியில் கடும் குளிர் மற்றும் குப்பை புயலால் வாழ இயலாத சூழல் உள்ளதால், அடியில் குளிர்ந்த பகுதி பள்ளங்களில் ஜீவராசிகள். ஏன் மனிதன் கூட வசிக்கக் கூடும் என சந்தேகம் உள்ளது. இப்படி சந்தேகங்கள் வர என்ன காரணம்!




★சூரியனிலிருந்து நாலாவது கோள்.

★புதனுக்கு அடுத்த இரண்டாவது சிறிய கிரகம்.

★சராசரி வெப்பம் - $48^{o}C$! குளிர்காலத்தில் $100^{o}C$, வெய்யில் காலத்தில் அதிக பட்சமாக $20^{o}C$ வெப்பம் தொடுகிறது.

★பூமியைப் போலவே இதுவும் $25^{o}C$ சாய்ந்துள்ளது.


நாசா அனுப்பிய
‘பெர்செவரன்ஸ் ரோவர்’

★ஒரு நாளைக்கு 24 மணி நேரம் 27 நிமிடங்கள்.

★ஒரு வருடம் என்பது 687 நாட்கள்.

★பூமியில், ஒரு ஜம்ப் செய்தால், எவ்வளவு உயரம் போவோமோ அதுபோல் மூன்று மடங்கு உயரம் செவ்வாயில் போவோம்.

★இங்கு உள்ள ஒலிம்பஸ் சிரகம், எவரெஸ்ட்டை விட மூன்று மடங்கு அதிக உயரம்!

★பூமியிலிருந்து செவ்வாய் செல்ல 8 மாதம் ஆகும்.

★நம் பூமி போன்றே அங்கே வட துருகம் தென் துருவம் ஐஸ் உண்டு.

தொகுப்பு:ராஜிராதா





# இனிக்கும் நினைவுகள்!

வயது அறுபத்தியேழு ஆகியும், அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து சுறுசுறுப்பாய்க் காரியங்களில் ஈடுபடும் பழக்கம், ராஜய்யனிடம் இன்னும் மாறாமலே இருந்தது. தியானம், யோகாசனம், பேப்பர் படித்தல், பச்சைத் தண்ணீர்க் குளியல், தானே பால் காய்ச்சி... தானே காபி கலந்து... தானே குடித்தல், என அவருடைய காலை நேரம் சிறிதும் பிசகின்றி சீராக ஓடும். அவ்வப்போது பழைய சினிமா பாடல்களையும் சத்தமாகவே பாடுவார்.

–முகில் தினகரன்

‘தேரு பார்க்க வந்திருக்கும்சித்திரப்பெண்ணே!…உன்னைத் திருடிக்கொண்டுபோகட்டுமாபத்தினிப்பெண்ணே!…பத்தினிப் பெண்ணே?

‘‘ஹூம்காலம்போனகடைசிலபெருசுக்குப் பாட்டைப்பாரு பக்கத்து வீட்டில்யாரோசத்தமாகவே இவரைக் கரித்துக்கொட்ட, கண்டுக்க வேமாட்டார்.

சீனியர் சிட்டிஸனாய் இருந்த போதிலும், சிக்ஸ் பேக் இளைஞர்களைவிட கட்டுமஸ்தானஉடலமைப்போடு இருப்பவர். அவர் நடக்கும் போது அவருக்கு இணையாக இளைஞர்கள் கூட நடக்க முடியாது.அவ்வளவுவேகம், அவ்வளவுதெம்பு.

ஒரு வருஷமா?…இரண்டு வருஷமா?…கிட்டத்தட்ட முப்பது வருஷங்களுக்கு மேலாச்சு, அவர் மனைவி ஜமுனா அவரை விட்டுப் பிரிந்து.

பொதுவாகவே, மனைவிஎன்பவளைஇழந்துவிட்டால்அந்தக்க ணவனுடையவாழ்க்கைவேண்டாவெறுப்பானதொருவாழ்க்கைய ாய்த்தான்இருக்கும்என்பார்கள். ஆனால், அதைசெயல்பாடுகள்மூ லம்மாற்றிக்கொண்டவர்ராஜய்யன்.

தலைப்பிரசவம்என்னும் ஜனனப் போட்டியில் எமனிடம் தோற்றுப் போய் மண்ணுலகிலிருந்து போய் விட்டாள் அவர் மனைவி ஜமுனா. அதுவும் தனியாகவா போனாள்? பெற்றெடுத்த குழந்தையையும் அல்லவா கையோடு அழைத்துக் கொண்டு போய் விட்டாள். அதையாவது அவரிடம் கொடுத்து விட்டுப் போயிருக்கலாம், ஆனால், அதை வளர்த்து ஆளாக்கும் மாபெரும் சிரமத்தை அவருக்குத் தர வேண்டாம், என்கிற நல்லெண்ணத்தில்தான் அதையும் கூட்டிக் கொண்டு போய் விட்டாளோ என்னவோ?

அவர்மனைவிசாகும்போதுஅவர்அரசுஅலுவலகத்தில்எழுத்தர்.

‘‘ஏன் சார்?..உங்களுக்கு அப்படியென்ன வயசாயிடுச்சு?….மீறிப் போனா முப்பத்தியஞ்சு…முப்பத்தியாறு வயசிருக்குமா?….ஆளும் பார்க்கிறதுக்கு சும்மா பயில்வான் கணக்கா இருக்கீங்க!…இந்தக் காலத்துல அம்பது வயசுக்கு மேலான விடோயர் கூட துணைக்கு ஆள் வேணும்!ன்னு சொல்லிக்கிட்டு பொண்டாட்டி செத்த அடுத்த மாசமே, தலைக்கு டை அடிச்சுக்கிட்டு, ரெண்டாம் தாரம் கட்டிக்கறான்!….நீங்க என்னடான்னாஇந்தச் சிறு வயசிலேயே ஞானி மாதிரி வேதாந்தம் பேசறீங்க? ஆபீஸில் சக ஊழியர்களின்

பேச்சுக்கு சரியான பதிலை தயாராக வைத்திருப்பார் ராஜய்யன்.

''நீங்க சொல்றதெல்லாம் சரிப்பா...ஒத்துக்கறேன்!...ஒருவேளை என்பொண்டாட்டிதான்மட்டும்இறந்து.அந்தக் குழந்தையை உயிரோட என்கையில கொடுத்திட்டுப் போயிருந்தா....அதுக்கொரு தாய்ப் பாசம் கிடைக்கணுமே?...என்பதற்காக கண்டிப்பா நான் ரெண்டாம் தாரம் கட்டியிருப்பேன்!...ஏன்னா..நான் ஒத்தை ஆள் அந்தக் குழந்தையை...அதுவும் பெண் குழந்தையை வளர்ப்பது ரொம்பவே சிரமம்!ன்னு எனக்கு நல்லாவே தெரியும்!...ஆனா... அந்தக் குழந்தையும் அப்பன்முகத்தைக்கூடப்பார்க்காம... அம்மா கூடவே போய்ச் சேர்ந்திடுச்சே?...இப்ப நான் மட்டும் தனியாத்தானே இருக்கேன்?...அதான் அவசியமில்லை!ன்னு விட்டுட்டேன்!''

''அது சரிங்க ராஜய்யன்?...உங்களைக் கவனிச்சுக்கறதுக்கு.... ஒரு ஆள் வேணாமா? கேள்வி பூடகமாக வந்து விழும். அந்தப் பூடகத்தின் பின் புலத்தில் ஒளிந்திருக்கும் வக்கிர விஷய ஞானத்தை ராஜய்யனும் நன்றாகவே அறிவார். ஆனாலும், பிடி கொடுக்க மாட்டார்.

''என்னைய நானே கவனிச்சிக்க மாட்டேனா?...எனக்கு ரெண்டு கையும்...ரெண்டு காலும் நல்லாத்தானே இருக்கு?...நானே சமைச்சுக்குவேன்...நானே என்னோட துணிமணிகளைத் துவைச்சுக்குவேன்!...அப்புறமென்ன?'' இரண்டு கைகளையும் விரித்துக் காட்டிச் சொல்லுவார் ராஜய்யன்.

''அடடே...நாங்க அதைச் சொல்லலை சாமி!...புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே?...உங்க கிட்ட இன்னும் இளமை மீதமிருக்கு சாமி...அந்த இளமை ராத்திரி நேரங்கள்ல உங்களைத் தொந்தரவு பண்ணுமே?...ஜோடி தேடுமே?....போதாக்குறைக்குடி.வி.யிலேயும்கண்டகண்ட படங்களைப்போட்டுதூங்கவிடாமல்பண்ணுவாங்களே? கண்ணடித்துக் கேட்பார்கள்.

அந்தக் கேள்விக்கு சிறு புன்னகையை மட்டும் அவர் பதிலாகத் தருவார். அந்தத் தொந்தரவுகளைச் சமாளிக்க பல்வேறு வழிகளில் அவர் தன்னைத் தானே பக்குவப்படுத்திக் கொண்டு வருவது அவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். ஆனாலும் பல சமயங்களில்

அவருக்குள்ளேயே அந்தக் கேள்வி எழும். எந்த வேண்டுதலுக்கு நாம இப்படித் தனி மரமா...யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் ஒரு தவவாழ்க்கையை வாழணும்?... என்று.

சில நேரங்களில் அந்தத் தனிமையின் கொடுமை அவருடைய அன்றாட நடவடிக்கைகளை அதீதமாய்ப் பாதிக்கும் போதெல்லாம் 'ஏன் நானே ஒரு அனாதைக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தால் என்ன?...அந்த உறவாவது எனக்கு இருக்கட்டுமே?....ஏதோ அதன் காரணமாய் எனக்கு இந்த வாழ்க்கை மீது ஒரு பிடிப்பு ஏற்படட்டுமே?' என்றும் தோன்றும்.

க்கும்....பொம்பளை இல்லாத வீட்டுக்கு யாரய்யா குழந்தையைத் தத்துக் கொடுப்பாங்க?..நீ குழந்தையைத் தத்துக் கேட்கப் போனா... பொண்ணு இருக்கு கட்டிக்கறியா?ன்னு கேட்பாங்க! என்ற எதிர்க் கேள்வி மனதின் இன்னொரு மூலையிலிருந்து ஒலிக்கும். உடனே அந்த எண்ணத்தைத் துடைத்தெறிந்து விடுவார். ஏனோ மனைவி அமர்ந்திருந்த மனதின் சிம்மாசனத்தில் இன்னொருத்தியை அமர வைக்க அவரால் முடியவில்லை.காதல்மனைவியல்லவா?. ஊரும்உறவும்மொத்தமாய்எதிர்த்துவந்தநேரத்திலும்கொஞ்சமும் அஞ்சாமல்அவளைக்கைபிடித்தவரல்லவா?

மணிஅடிச்சாசோறு.முடிமொளைச்சாகட்டிங்ன்னு எந்தவித சுவாரஸியமுமின்றி வாழ்ந்து கொண்டிருந்தவருக்கு வாழ்க்கையின் மீது ஒரு அற்புதப் பிடிப்பு ஏற்பட்டதே குணா என்னும் குணசேகரன் அவருடன் வந்து சேர்ந்த பிறகுதான்.

அன்புக்குஏங்கிக்கொண்டிருந்தஅந்தஆண்ஜீவனுக்கு, மொத்த அன்பையும்கொட்டிக்கொள்ளகிடைத்தவனல்லவாகுணா?

அவன், ராஜய்யனின் உயிரோடு உயிராய், ரத்தத்தோடு ரத்தமாய், ஆவியோடு ஆவியாய் கலந்து விட்டவன். குணாவை நினைக்கும் போதெல்லாம் அவர் உடம்பில் புத்துணர்ச்சி நதியோடும். புல்லாங்குழல் இசை ஒலிக்கும். தேடி வாங்கிய உறவல்லவா?... தனிமரத்தோடு ஒட்டிப் படர்ந்த கொடியல்லவா?

அப்போது, வாசலில் ஏதோவொரு வாகனம் வந்து நிற்கும் ஓசை கேட்க, பழைய நினைவுகளிலிருந்து மீண்டவர், ஈஸி சேரிலிருந்து எழுந்து கதவருகே சென்று எட்டிப் பார்த்தார்.

கூரியர் சர்வீஸ்காரன் பைக்கை ஸ்டாண்ட் போட்டுக் கொண்டிருந்தான். என்றுமில்லாத வழக்கமாய் இன்று அவன்

தலைக்குத் தொப்பி அணிந்திருந்தான்.

ராஜய்யனின் மனதிற்குள் அந்தக் கணம் ஒரு உற்சாக மின்னல் அடித்து மறைந்தது. நிச்சயம் அமெரிக்காவிலிருந்து குணாதான் கடிதம் அனுப்பியிருப்பான். உலகமே தகவல் தொழில் நுட்பத்தின் உதவியோடு கடல் கடந்து சென்றோருடன் மொபைல் போனில் உரையாடிக் கொண்டிருக்கையில் இவர்கள் இருவரும் மட்டும் இன்னும் கடித உரையாடலிலேயே வாழ்ந்து கொண்டிருந்தனர்.

''அய்யா...நல்லா இருக்கீங்களா?'' வாடிக்கையாக வரும் கூரியர்க்காரன் குசலம் விசாரித்தான்.

''ம்..ம்..நல்லா இருக்கேன்பா!...என்ன இன்னிக்கு தலைக்குத் தொப்பியெல்லாம் போட்டுக்கிட்டு சும்மா அன்பேவாபடத்துலவர்றஎம்.ஜி.ஆர்.மாதிரி வந்திருக்கே?'' சிரித்தபடி கேட்டார்.

''ஹெல்மெட் போட்டா முடி உதிருது...இந்த வயசிலேயே வழுக்கையாயிட்டா...அப்புறம் எனக்கு யாருங்கய்யா பொண்ணு குடுப்பாங்க?...அதெல்லாம் இந்த அரசாங்கத்துக்கு எங்கே தெரியுது?'' தமாஷாய்ச் சொன்னான் அவன்.

''சரி...ஹெல்மெட் இல்லேன்னு போலீஸ்காரன் நிறுத்திட்டான்னா....?''

''இதேகாரணத்தைச்சொல்லவேண்டியதுதான்...மனிதாபிமானம் உள்ளவனா இருந்தா...ஏத்துக்குவான்!...அது இல்லாதவன்தான் பைன் போடுவான்'' என்றவாறே அவன் அவருக்கான கவரை வெளியிலெடுக்க, ''அமெரிக்காவிலிருந்துதானே?'' ஆர்வமாய்க் கேட்டார் ராஜய்யன்.

''அதேதான்...அதேதான்!'' என்றபடி அவரிடம் கவரைக் கொடுத்து, கையொப்பம் பெற்றுக் கொண்டு, ''வரட்டுங்களா?'' என்று சொல்லிக் கொண்டே பறந்தது அந்த கூரியர்க்குருவி.

சந்தோஷம் ததும்பும் முகத்துடன் அதைப் பிரித்துப் படித்தார் ராஜய்யன்.

மகனின் கையெழுத்தைப் பார்க்கும் போதே மனதில் மத்தாப்பூ ஒளிர்ந்தது.

படிக்கப் படிக்க அவர் முகத்திலிருந்த சந்தோஷம் பன்மடங்கு பெருகிக் கொண்டே போனது. கடிதத்தில் இருக்கும் ஒவ்வொரு எழுத்திலும் மகனின் முகத்தைக் கண்டார்.

படித்து முடித்ததும், சின்னப் பையனைப் போல் எழுந்து நின்று குதித்தார். ''ஹேய்ய்ய்ய்ய்...என் குணா வரப் போகிறான்!... என் மகன் குணா வரப் போகிறான்!'' ஆனந்தக் கூத்தாடினார். இருக்காதா பின்னே?...கிட்டத்தட்ட ஒரு வருடமாயிற்றே அவன் முகத்தைப் பார்த்து.

கடிதத்தை முகத்துக்கருகே கொண்டு போய், அவன் வரும் தேதியை மீண்டுமொரு முறை நிதானமாய் ஊன்றிப் படித்தார்.

'ஜூலை....ஒன்பது!....அப்படின்னா...இன்னும் இருபது நாள் இருக்கு' மனதிற்குள்ளேயே கணக்குப் போட்டார்.

குணாவை உடனே பார்க்க வேண்டும், போல் ஒரு அவசர ஏக்கம் அவருக்குள் ஏற்பட, சிலிர்த்துக் கொண்டார். 'அடேங்கப்பா.... அன்புக்கு இத்தனை சக்தியா?...இந்த குணா மட்டும் என் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருந்தால்...என் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்?....கோடை விடுமுறையில் தூசு படிந்து கிடக்கும் பள்ளிக் கூட டெஸ்க் போல....பந்த் நாளில் வெறிச்சோடிக் கிடக்கும் கடைத்தெரு போல...அமானுஷ்ய அமைதியில் அல்லவா இருந்திருக்கும்?' அதை நினைக்கும் போதே மனதின் சுவரெங்கும் வெறுமை பரவியது. ரத்த பந்தங்கள் தன்னோடு ஒட்டாமல் போய் விட்ட போதிலும், வந்து ஒட்டிய இந்த பந்தம் தன் வாழ்க்கையையே வசந்தமாக்கி விட்டதை நினைத்து நினைத்து மகிழ்வார்.

மீண்டும் ஈஸி சேரில் வந்தமர்ந்த ராஜய்யனின் மனம் காலச் சக்கரத்தைப் பின்னோக்கி உருட்டி, அவர்கடந்துவந்தபாதையில், அரங்கேறியஅவலங்களை நினைத்துப் பார்த்து பிரமித்தது.

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னால்....நடந்தசம்பவங்கள் அவர் கண்முன் திரைப்படமாய் விரிந்தன..

## 2

**1996.** அப்போது ராஜய்யனுக்கு வயது நாற்பத்தியிரண்டு.காதோரம் சில வெள்ளை முடிகள் அனுமதியின்றி குடியேறியிருந்தன. அதற்கு கருப்பு பூசும் எண்ணம் அவருக்கு வரவில்லை.

அன்றுஞாயிற்றுக்கிழமை. விடுமுறைதினம்என்றாலும்குறித்த நேரத்தில்எழுந்து வழக்கமான பணிகளை வரிசைக் கிரமமாய்

முடித்துவிட்டு, வீட்டைப்பூட்டிக் கொண்டுதெருவில்இறங்கினார்.

''என்னராஜய்யன்சார்...காலங்காத்தால வெளிய கிளம்பிட்டீரு ஏதாவது முக்கியமானஜோலியா?'' எதிரில்வந்த பள்ளிக்கூட வாத்தியார்கேட்க, ''நானேஒத்தப்பனைமரம்எனக்கென்னமுக்கியமானஜோலி?...சும்மாகாத்தாடகாலாறஒருநடைநடந்திட்டுவரலாம்!னுகிளம்பினேன்!...அதுசெரிவாத்தியாருஎங்கே?''

''வேறெங்கே?...ஞாயித்துக்கிழமையானா என் சம்சாரத்துக்கு கவுச்சி சாப்பிட்டாகணும் அதான் தெருக்கோடில இருக்கறமட்டன் ஸ்டாலுக்குப் போயிட்டிருக்கேன்'' என்றான்வாத்தியார்.

''அப்பமதியம் உம்ம வீட்டுக்கு வந்தாகறி சோறு சாப்பிடலாம்!னு சொல்லுங்கோ'' என்று ராஜய்யன்சிரித்துக் கொண்டேசொல்ல,

''தாராளமாவாங்க. வந்துமூக்குப்பிடிக்கசாப்பிடுங்கயாரு வேண்டாம்!கறா?''

''நீங்கசொன்னதேமூக்குமுட்டசாப்பிட்டமாதிரிஇருக்கு நீங்ககிளம்புங்கோ'' சொல்லிவிட்டுநிதானமாய்நடந்தார்ராஜய்யன்.

காலியாய்இருந்த தெருவில்ஜாலியாய்க்கைவீசிக் கொண்டுநடந்தவரை, ''அய்யாவாங்க!... அகத்தியமுனிகைரேகை ஜோஸியத்தைப் பார்த்திட்டுப் போங்க!'' என்று கூறிஅழைப்பு விடுத்தான் மரத்தடி ஜோஸியன்.

பொதுவாகவேஜோதிடத்தின்மீது சுத்தமாகவே நம்பிக்கை இல்லாதவர் ராஜய்யன். அதற்கு ஆதாரப்பூர் வமானகாரணமும் உண்டு.

அவருக்கு பெண்பார்த்துக்கொண்டிருந்தகாலகட்டத்தில்எத்தனையோவரன்கள்வந்தன. ஆனால்எல்லாம்வந்தவேகத்தில்ஒதுக்கித்தள்ளப்பட்டன. ராஜய்யனின்தந்தைமருதமுத்துஒண்ணாம்நம்பர்ஜோதிடஅடிமை. தன்மகனுக்குவரும்எல்லாப்பெண்ஜாதகங்களையும் ஒன்றுக்குநான்குஜோதிடர்களிடம், காட்டிப்பொருத்தம்பார்ப்பார்.

எட்டுபொருத்தம்இருக்கும்ஜாதகங்களைக்கூடத்தவிர்த்தார். பத்துக்குப்பத்துபொருத்தம்இருக்கணும் என்றுகாத்திருந்தார்.

தாய்இல்லாதகாரணத்தால், தன்னுடைய கருத்தை வெளிப்படையாகச்சொல்ல முடியாமல் தவித்தார் ராஜய்யன். ஆண்டவன் புண்ணியத்தில் ஜமுனாவின்ஜாதகம்பத்துப்பொருத்தங்களோடுஅமைந்துவிட, சந்தோஷமாய்க்கல்யாணம் செய்துவைத்தார்ராஜய்யனின்தந்தை.

ஆனால், தலைப்பிரசவத்திலேயேஅந்ததர்மபத்தினிதலை சாய்த்துவிட, ஜோதிடத்தின்மீதிருந்தநம்பிக்கையைராஜய்யனும் சரிஅவருடையதந்தையும்சரிமொத்தமாய்த்தூக்கிஎறிந்தனர்.

''வாங்கசாமிஅகத்தியமுனிகைரேகைஜோஸியத்தைப்பார்த் திட்டுப்போங்கசாமி'' மீண்டும்அந்தஜோஸியக்காரன்அழைக்க, சுயநினைவிற்குவந்தார்ராஜய்யன்.

அந்தப்பாவப்பட்டமனிதனின்பொருளாதாரநிலைமைக்குவரு ந்தி, ''சரிப்பா...உன்ஆசையைஏன்கெடுப்பானேன்இந்தாபாரு'' என்றபடிஅவனுக்குஎதிரேஅமர்ந்துதன்உள்ளங்கையை நீட்டினார்ராஜய்யன்.

பலதடவைஅவர்கையைத்துடைத்துத்துடைத்துநீண்ட நேரம்பார்த்த ஜோஸியன், ''சாமிநீங்ககிளம்புங்கோ'' என்றான்.

''என்னப்பாஅகத்தியமுனிஜோஸியம்அவ்வளவுதானா?... பலன்எதுவுமேசொல்லலையே?'' கேட்டார்.

''சொல்றமாதிரியில்லை!...அதான்சொல்லலை விட்டேற்றியாய் பதில் சொன்னான்ஜோஸியன்.

''தபாருப்பாஎதுவாயிருந்தாலும் தயங்காமச் சொல்லு!... கேட்டுக்கறேன்'' என்றார்ராஜய்யன்.

மனிதன்பிறந்ததுமுதல்இறக்கும்வரை அனுபவித்து வரும் இன்பதுன்பங்கள், வாழும்சூழ்நிலைசெல்வநிலை அமையும் மனைவி பிறக்கும் குழந்தைகள் செய்யும்தொழில்சேரும்நண்பர்க ள்ஜாதகர்குணாதிசயங்கள்எல்லாமேலக்கினமுதல்பனிரெண்டுபா வங்களில்அடங்கிஇருக்கின்றன ஜோஸியர்தனக்கேஉரியபாணியில் நீட்டிமுழங்க,

''தபாருப்பா எனக்கு நிறையவேலை இருக்கு கசகசன்னு எதையெதையோ சொல்லிட்டிருக்காம என்னோட பலனைமட்டும் சொல்லு'' ராஜய்யன்ஜோஸியரைஅவசரப்படுத்தினார்.

''உங்களுக்குவிரயபாவம்இருக்கு!....இதனால்புத்திமாறாட்டம், பச்சாதாபம், மனைவியைப்பிரிதல், மக்களைஇழத்தல், உணர்விழந்துபோதல்போன்றஅவதிகளும், கொஞ்சமாய்தெய்வீக சித்திகளும்ஏற்படும் அதேராகத்தோடுஜோஸியர்சொன்னார்.

''ம்ஹூம்இப்பவும்பலன்புரியலை பளிச்சுன்னுசொல்லுய்யா'' கோபமானார்ராஜய்யன்.

''சரிங்கசாமிசரிங்கசாமி'' என்றஜோஸியர், ''அதாவதுநீங்கயார்

மேலெல்லாம்அதீதஅன்பைப்பொழியறீங்களோஅவங்களைபாதி லஇழந்திடுவீங்க!...ம்ம்கேட்கறேன்னுதப்பாநினைக்காதீங்கஉங் கம்மாமேலேநீங்கஉசுரையேவெச்சிருப்பீங்கஅவங்களத்தனைவரு ஷம்உங்ககூடஇருந்தாங்க? ஜோஸியர்கேட்டார்.

எனக்குஆறுவயசுஇருக்கும்போதேஅவங்கஇறந்திட்டாங்க

உங்கசம்சாரத்துமேலேஅளவுகடந்தஅன்புவெச்சிருப்பீங்கஅவங்கஇப்ப? சொல்லிவிட்டுராஜய்யனின்முகத்தை அச்சத்தோடு பார்த்தார் ஜோஸியர், அவதலைப் பிரசவத்திலேயே போயிட்டா என்றார் ராஜய்யன்.

''இதுதான்சாமிவிரயபாவத்தின்பலன்!...இதுவரை மட்டுமல்ல இனிமேலும் வாழ்க்கையின் கடைசிநிமிஷம் வரைக்கும் இது உங்களைப்பின் தொடரும்!... நீங்க யார் மேலெல்லாம் அன்பையும் பாசத்தையும் கொட்டறீங்களோ?... அவங்களைஇழந்து நிப்பீங்க'' சொன்ன ஜோஸியனை எரித்து விடுவது போல் ராஜய்யன் பார்க்க,

''நான்சொல்லலைசாமிஉங்கரேகைபலன்கள்சொல்லுது.''

இதற்குமேலும்அவனோடபேசினாதன்னைஇன்னும்அதிகமாய்க்கோபப்படுத்திசெமத்தியாய்அடிவாங்கிக்கொள்வான், என்பதைஉணர்ந்தராஜய்யன் விருட்டெனஎழுந்தார். ''அடப்போய்யாநீயும்உன்ஜோஸியமும்'' என்று சொல்லிவிட்டு வேகவேகமாய் நடந்தார்.

3

வழியில்நாலைந்துசிறுவர்கள் வழி தவறி வந்த குட்டி நாயைச் சூழ்ந்து கொண்டு அதைக்கல்லால் தாக்கியும்அதன் மீது குப்பை கூளங்களை வாரி இறைத்தும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே எலும்பும்தோலுமாயிருந்தஅந்தக்குட்டி, தப்பிக்கவழிதெரியாமல்அங்குமிங்கும்ஓடிஓடிவிழுந்தது.

அதைப்பார்த்துசிறுவர்கள் 'ஹேய்ய்ய்ய்' என்று கத்தியபடி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

''டேய்டேய்ஏண்டாஏண்டாஅதுஉங்களைஎன்னடாபண்ணிச்சு?...அதையேண்டாஇம்சைபண்ணறீங்க?'' ராஜய்யன்கேட்க,

சிறுவர்கள்அவர்பேச்சைக்காதில் கூடவாங்கிக்கொள்ளாமல்தங்

கள்விளையாட்டையேதொடர,

கோபம்கொண்டராஜய்யன்உச்சஸ்தாய்குரலில்கத்தி அதட்ட ஆரம்பித்தார். இப்பநீங்கெல்லாம் அதைவிட்டுட்டுப் போகப் போறீங்களா?...இல்லை நான்கல்லை எடுத்து உங்கமேலே போடட்டுமா?''

சொன்னதோடுநில்லாமல்ஒருபெரியகல்லைஎடுத்து ஆள்இல்ல ாதஇடத்தைநோக்கிவேகமாகவீசிக்காட்டினார்.

அந்தக்கல்லின்சைஸையும், அதுபோய் விழுந்த வேகத்தையும் கண்டு அரண்டு போன சிறுவர்கள், ''டேய்வாங்கடாஓடிடலாம்'' என்றுசொல்லிக் கொண்டேஆளுக்கொரு பக்கமாய் சிதறிஓடினர்.

நாய்க்குட்டியைஅவர்களிடமிருந்துகாப்பாற்றியசந்தோஷத்தில் அங்கிருந்துகிளம்பியராஜய்யனைத்தடுத்துநிறுத்தியதுஅந்தக்குட்டி நாயின்கேவல்.

ஒருசிறுகுழந்தைஅழுவதுபோல் அவரைப்பார்த்து கண்களால் கெஞ்சியது.

ஏனோஅதைஅப்படியேவிட்டு விட்டுப்போக மனசு வராதராஜய்யன், திரும்பிவந்து, அதனருகே அமர்ந்து, ''என்னடா என்னவேணும்?'' கேட்டவாறே அதன் தலையை நீ வினார்.

அதுபோன்றஒருஅன்புத்தடவலைஅனுபவித்தேயிராதஅந்தக்கு ட்டியின்கண்களில்நீர்வழிய,

''சாப்பிட்டியாடா?'' என்றுஅன்போடுகேட்டபடியேஅதன்வ யிற்றைப்பார்த்தராஜய்யன்அதுஒட்டிப்போய்க்கிடப்பதைப்பார் த்து, ''அடடேசாப்பிட்டுரொம்பநாளாயிருக்கும்போலிருக்கே?'' என்றவர்சுற்றும்முற்றும்பார்த்துவிட்டு, அதைத்தன்கையில்தூக்கி க்கொண்டுவீட்டைநோக்கித்திரும்பினார்,

காலையில்தான்காய்ச்சிவைத்திருந்த பாலில், இட்லியைக் கரைத்துஒருசிறிய அலுமினியத்தட்டில் அந்தநாய்க் குட்டிக்குவைக்க, அதுவேக.. வேகமாய்த்தின்றுமுடித்துவிட்டு, அவர்முகத்தைப்பார்த்தது.

''என்னடா?...இன்னும்வேணுமா?'' என்று கேட் டுவிட்டு, வீட்டிற்குள்சென்று இன்னொரு இட்லியைக் கரைத்துவந்துகொடுக்க, அதையும்தின்றுமுடித்துவிட்டு, அதுவரை யில்தளர்ந்துகிடந்தவாலைமெல்லஆட்டிதன்நன்றியைஉரைத்தது.

''ஓ இத்தனை நேரம்வாலை ஆட்டக்கூடத் தெம்பில்லாமலா இருந்தே?''

கொஞ்சமாய் உணவு உள்ளே போனதும், உடம்பில் கொஞ்சமாய் சத்து வர அது விளையாடத்துவங்கியது. ராஜய்யன்காலருகேவந்துலேசாய்நக்கிவிட்டு ஜங்கென்று குதித்து ஓடியது.

''பார்ரா'' என்றார்சிரித்தமுகத்துடன்.

அடுத்தமுயற்சியில்அவரதுவேட்டியின்கால்பகுதியைக்கவ்வி, விளையாட்டாய்ஆட்டியது.

பரவாயில்லையேதேறிக்கிட்டியே? என்றவர்மனத்தில் அந்தவிநாடியில்ஒருஎண்ணம்உதித்தது. ஒருதடவைசாப்பாடு போட்டதற்கேதன்நன்றியைக்காட்டஎன்னுடன்விளையாடுதே இந்தஐந்தறிவுப்பிராணிஇதைஏன்நானேவளர்க்கக்கூடாது?... இதுக்கும்எந்தஉறவும்இல்லை!...எனக்கும்எந்தஉறவும்இல்லை! ...நாங்களேஒருவர்மீதுஒருவர்அன்பைக்காட்டிக்கலாமே?

முடிவுசெய்தவர், மறுநாளேஅலுவலகத்திலிருந்துவரும்போது, ஒருசங்கிலியும், கழுத்துப்பட்டையும்வாங்கிவந்துஅதற்குமாட்டி, அதைகட்டிப்போட்டார்.

தனிமரமாய்வாழ்ந்ததனக்குத்துணையாய்வந்துசேர்ந்தஅந்த நாய்க்குட்டியைகண்போல்பராமரித்தார்.

தனக்குள்பொங்கிவழிந்துவீணாகிப்போய்க்கொண்டிருந்தஅன்பையெல்லாம்அந்தஜீவன்மேல்கொட்டினார்.

''என்னடா?...என்கூடஇருப்பதில்உனக்குசந்தோஷம்தானே?'' அவ்வப்போதுஅதனுடன்பேசுவார்.

அதுபதிலுக்குஏதோஒருசேட்டைசெய்ய, அதையே பதிலாய் எடுத்துக்கொண்டு, ''சரிடா... சரிடா....'' என்பார்.

ஒருநாள்திடீரென்று ஞானோதயம்வந்தவர்போல், ''ஆமாம்உனக்குஎன்னடாபேர்வைக்கறது?'' அதனிடமேகேட்டார்.

புரிந்தோபுரியாமலோ அது அங்கு மிங்கும் ஓடி, ஒரு கல்லின் மீது ஏறி, அங்கிருந்து தாவிக்குதித்து, இரும்பு கேட்டின் மீது பாதிவரைக்கும் ஏறி, திரும்பவும் கீழ் குதித்து அவரிடம் வந்துநிற்க, நீ சினிமாக்காமெடியன் நாகேஷ் மாதிரியே ஒரு இடத்தில் நிற்காமல் ஓடறே குதிக்கறே சேஷ்டைகள் பண்றே அதனால உனக்கு

நாகேஷ்ன்னே பேர்வெச்சிடறேன்!... என்ன பிடிச்சிருக்கா?

அதுவாலையாட்ட, அதைத்தூக்கிஅதன்காதருகேசென்று நாகேஷ்!...நாகேஷ்!...நாகேஷ்! என்றுமூன்றுமுறைகத்த,

புரிந்துகொண்டது.

காலைநேர வாக்கிங்கிற்குஅதுதான்துணை. மாலை நேர அரட்டைக்கும் அதுதான் துணை.

ஆறேமாதத்தில்ஒருமுழுநாயின்வளர்ச்சியினைப்பெற்றுவிட்ட அந்தநாகேஷ், தெருவில்பலருக்கும்நண்பனாகிப்போனது.

ராஜய்யன் அலுவலகபணிநிமித்தமாய் வெளியூர் சென்று விடநேரும்போதெல்லாம், நாகேஷுக்கு பல வீடுகளிலிருந்து சாப்பாடுவரும்.

புதுமனிதர்கள்யாராவதுதெருவிற்குள்வந்துவிட்டால், எடுத்தஎடுப்பில்கர்ணகடூரக்குரலில்குரைத்துஅவர்களைபயமுறுத்தாமல் அருகில்சென்றுமோப்பம்பிடிக்கும்.

அந்த மோப்பத்திலேயே அவர்களின் நோக்கத்தினைப் புரிந்து கொள்ளும்.

நல்லவரென்றால் விலகி நிற்கும். நயவஞ்சகரென்றால் கத்தி ஆர்ப்பாட்டம் செய்து மற்றவர்களை உஷார்படுத்திவிடும்.

## 4

**ப**த்து தினங்களுக்குப் பிறகு, ராஜய்யன் அலுவலகத்திற்கு சென்றிருந்த நேரத்தில், கம்பளி... கம்பளி என்று கூவியபடி தெருவில் கம்பளி விற்றுக் கொண்டு சென்ற ஒரு வடக்கத்தி இளைஞன், பக்கத்துவீட்டின் முன் நின்று, மாதாஜி... மாதாஜி என்று உரத்த குரலில் அழைக்க,

வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்த பெண்மணி, ''என்னப்பா... என்ன வேணும்?'' கேட்டாள்.

''கம்ளி வேண்மா மாதாஜி?'' என்று தமிழைக் கொலை செய்தான்.

''க்கும்...இங்க வெல்வெட் மெத்தை விரிச்சு வெச்சிருக்கு... அதுக்கு கம்பளி ஒண்ணுதான் குறைச்சல்?..போப்பா போப்பா!'' துரத்தினாள்அவள்.

''டீக் ஹை மாதாஜி!...கொஞ்சம் பாணி குடுங்கள் மாதாஜி''

வடக்கத்தியான் கேட்டான்.

''என்னய்யா சொல்றே?...என்ன வேணும்?'' புரியாமல் முகத்தைச் சுருக்கிக் கொண்டு கேட்டாள்.

அவன் சைகையால் தண்ணீர் வேண்டுமென்று கேட்க, ''ஓ... குடிக்கத் தண்ணி வேணுமா?'' என்றபடியே வீட்டிற்குள் திரும்பியவள், தனக்குப் பின்புறம் மிக நெருக்கத்தில் அவன் தன்னைப் பின் தொடர்ந்து வீட்டிற்குள் நுழைவதை கவனிக்கத் தவறினாள்.

குனிந்து தண்ணீர்க் குடத்திலிருந்து நீரை மொண்டவள் மிகச் சமீபத்தில் இரண்டு கால்கள் நிற்பதைக் குனிந்த வாக்கிலேயே பார்த்து விட்டு, உடனே நிமிர்ந்தாள்.

அந்த வடக்கத்தி இளைஞன், அவள் சுதாரிப்பதற்குள் அவள் வாயைப் பொத்திக் கீழே தள்ளினான்.

மிகச்சிரமப்பட்டு அவன் கையை தன் வாயிலிருந்து விலக்கியவள் ''அய்யோ...யாராவது வாங்களே...யாராவது வாங்களேன்!'' என்று அடிவயிற்றிலிருந்து கத்தினாள்.

அது மதிய வேளையானதால் தெரு மக்கள் நடமாட்டமில்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. அவளது கத்தல் வீணாக காற்றில் கரைந்து போனது.

எங்கோ போய்ச் சுற்றி விட்டு அப்போதுதான் வீட்டிற்கு வந்த நாகேஷ், தன் சுவாசத்தை ஆழமாய் இழுத்து யாரோ ஒரு மூன்றாம் மனிதனின் வாடை காற்றில் கலந்திருப்பதை தன் மோப்ப சக்தியால் உணர்ந்து, கழுத்தை நாலாப்புறமும் திருப்பித் திருப்பிப் பார்த்தது.

அப்போது பக்கத்துவீட்டிற்குள்ளிருந்து அலறல் சத்தம் வர,

சரேலென்று வீட்டிற்குள் புகுந்து, அங்கே அந்தப்பெண்ணிடம் வம்பு செய்து கொண்டிருந்த அந்த வடக்கத்தி இளைஞனைக் கண்டதும், கோபாவேசமானது. 'யார்ரா நீ...என்ன தைரியமிருந்தா என்னோட ஏரியாவுல வந்து ரகளை பண்ணுவே?...உன்னை விட்டேனா பார்!' என்று நினைத்துக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்தது.

அதைச் சற்றும் எதிர்பார்த்திராத அவன் சுதாரிப்பதற்குள் அவனது வயிற்றுப் பகுதியைக் கவ்வி இழுத்தது.

அவன் அதைக் கீழே தள்ளி விடும் எண்ணத்தில் இரண்டு கை களாலும் அதன் பிடியை விடுவிக்க முயன்றான். வெறி கொண்டு

கவ்வியிருந்த அந்த விசுவாச ஜீவன் அவ்வளவு சீக்கிரத்தில் விட்டு விடுமா?

மிகுந்த சிரமத்திற்குப் பின் அவன் அந்த நாயை தன்னிடமிருந்து பிரித்து கீழே உதறிய போது, அவன் சட்டையின் வயிற்றுப் பகுதி காணாமல் போயிருக்க, உள்ளே வயிற்றின் மத்தியில் வரிசையாய் நாயின் கடிச் சுவடுகள். ரத்தக் கோடுகள்.

அந்த நிலையிலும் அவன் தன் குறிக்கோளை அடைந்தே தீருவது என்கிற எண்ணத்தில் அந்தப்பெண்ணை ஒரு கையில் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் நாயை ஓங்கி ஓங்கி அடித்தான்.

நாலைந்து அடிகளை வாங்கிக் கொண்டநாகேஷ் அவன் அசந்திருந்த நேரத்தில் அவன் கையை லபக்கென்று கவ்வி விட, வலி தாளாமல் அலறியவன், பெண்ணை விட்டு விட்டு அந்த இன்னொரு கையால் நாயை அடித்தான்.

அவனது அடிகளை எஜமான விசுவாசத்தோடு வாங்கிக் கொண்டு, கவ்விய அவன் கையை விடாமல் திடமாய் நின்றது.

வலி அதிகமாகிக் கொண்டே போக, அந்த இடத்தை விட்டுத் தப்பித்தால் போதும், என்கிற நிலைக்கு வந்தான் அந்த வடக்கத்தியான்.

பொசுக்கென்று அவன் கையை விட்டு விட்டு, நாகேஷ் அவன் காலைக் கவ்வ முயல,

அந்த சிறிய இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு, தலை தெறிக்க வெளியே ஓடினான் அவன்.

நாயும் விடாமல் அவனைத் துரத்திக் கொண்டே ஓடியது. தெரு முனை வரை அவனைக் கொண்டு போய் விட்டு விட்டு, 'இனிமே இந்தப் பக்கம் வந்தே?...படவா...கடிச்சுக் குதறிடுவேன்!.. ஆமா!...என்ன நெனைச்சிட்டே என்னைப் பற்றி?'... என்று தனது லொள்...லொள் பாஷையில் சொல்லி விட்டு வீடு திரும்பியது.

அது வரும் வரை காத்திருந்த பக்கத்துவீட்டுப்பெண், அது வந்ததும் ஓடிப் போய் அதைக் கட்டிக் கொண்டு, ஒரு நாய் என்று கூடப் பாராமல் அதன் நெற்றியில் முத்தமாரி பொழிந்தாள். அவளையும் மீறி அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது.

அடேய் நாகேஷ்...எனக்கு ஒரு மகன் இருந்திருந்தா அவன் என்ன செஞ்சிருப்பானோ....அதை நீ செஞ்சு என்னைக்

காப்பாத்திட்டியேடா!...உனக்கு நான் ஒருநாள்கூடஒருவாய் சோறுகூடப்போட்டதில்லையேடாஆனாலும்எனக்கு விசுவாச த்தைக் காட்டிட்டியேடா!...நீ யாருடா?....எங்கேடா இருந்தே இத்தனை நாளு?...

மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய ராஜய்யனிடம்பக்கத்துவீட்டுப்பெண் நடந்ததைச் சொல்ல, மெய் சிலிர்த்துப் போனார்அவர்.

உடனே வெளியே ஓடிச் சென்று நாகேஷின்தலையை நீவிக்கொடுத்தார்.

சிரித்தபடியே வெளியே வந்த பக்கத்துவீட்டுப்பெண், தன் புடவைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த ரூபாய் நோட்டை எடுத்து ராஜய்யனிடம் நீட்டி, அய்யா... இன்னிக்குவரைக்கும்இந்தஜீவனுக்குநான்ஒருநாள் கூட சாப்பாடு போட்டதில்லைங்கய்யாஆனாலும் அதுஎனக்குவிசுவாசம்காட்டி புத்திபுகட்டிடுச்சுஅய்யா!...இந்தாங்கஅய்யாஇதைவாங்கிட்டுஎன்ச ார்புல அதுக்கு நாளைக்கு கறிவாங்கிப் போடுங்கய்யா'' என்றாள்.

அதைக்கேட்டுவாய்விட்டுச்சிரித்தராஜய்யன், ''அம்மாடி அதைநீயே உன்கையால செய்யறது தான் மாசரி'' என்றார்.

''சரிங்கஅய்யா'' என்றபடிஅவள்நாகேஷைப்பார்த்து, ''டேய் மகனேநாளைக்குஎன்வீட்டுலஉனக்குவிருந்துடா'' என்றாள்.

அதைப்புரிந்துகொண்டபாணியில்நாகேஷ்தலையாட்டியது.

## 5

அலுவலக வேலையாக அன்று மாலை வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால் மதியமே அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார் ராஜய்யன்.

கொண்டுசெல்லவேண்டியதுணிமணிகளைசூட் கேஸில்திணித்துக்கொண்டிருந்தபோது,

தெருவில் யாரோ நாலைந்து பேர் திமு...திமுவென்று ஓட, வாசலில்படுத்திருந்தநாகேஷ் ஓயாமல் குரைத்தது.

ஆரம்பத்தில் நாலைந்து பேராய் ஓடிய கூட்டம் இப்போது பத்து இருபது பேராய் மாறியிருக்க, என்னதுநிறையபேர் ஓடறாங்கபோலிருக்கே!...

தன்வேலையைபாதியில்நிறுத்துவிட்டு, வீட்டுக்கு வெளியே

வந்து நின்றார்ராஜய்யன்.நாயும்அவர்காலடியில்வந்துநின்று குரைத்தது.

ஓடிக் கொண்டிருந்த மனிதக் கூட்டம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே போக, ராஜய்யன் ஒரு நடுத்தரவயது ஆளை நிறுத்தினார். இருப்பா...இருப்பா...எதுக்கு எல்லோரும் இப்படி ஓடறீங்க?...என்னாச்சு?...எங்காச்சும் தீப்பிடிச்சிடுச்சா?'' கேட்டார்.

''அட...உங்களுக்கு விஷயமே தெரியாதா?...பக்கத்து இங்கிலீஷ் கான்வெண்டு பள்ளிக் கூடத்துல பாம் வெச்சிட்டாங்களாம்...அங்க ஒரே அல்லோல கல்லோலமாயிருக்கு!'' சொல்லி விட்டு அவன் அதே வேகத்தில் ஓடி விட,

ராஜய்யன்அங்கலாய்த்தார். 'அடப்பாவிகளா...எங்கெங்கியோ பாம்வெச்சீங்க!...கடைசிலபிஞ்சுக் குழந்தைங்க படிக்கற பள்ளிக் கூடத்தில் கூடவா குண்டு வைப்பாங்க?'

உள்ளுக்குள்கோபஅலைகள்கொந்தளிக்க, அவசரஅவசரமாய்வீ ட்டைப்பூட்டிக்கொண்டுதானும்தெருவில்இறங்கிஓடினார்.

நாகேஷும்அவர்கால்சுவட்டைப்பின்பற்றிஓடியது.

அவர்கள் அந்த ஆங்கில கான்வெண்ட் பள்ளியை அடைந்த போது அங்கு ஏற்கனவே ஏராளமாய் மக்கள் கூடியிருந்தனர். அந்த ஏரியாவே களேபரமாக இருந்தது. எங்கும் கூச்சல்...குழப்பம்.

பள்ளியினுள் இருந்த தங்கள் குழந்தைகளை பீதி முகத்து டன் பரபரப்பாய் வெளியே இழுத்துக் கொண்டு வந்தனர் சில பெற்றோர்கள். பலர் தங்கள் குழந்தைகளைக் காணாமல் அங்குமிங்கும் தேடிக் கொண்டிருந்தனர்.

அய்யோ...என் குழந்தை...என் குழந்தை ஒரு பெண்மணி கத்திக் கொண்டு பள்ளிக்குள் ஓடினாள்.

காவல்துறையின் ஒரு பகுதியினர் பெற்றோர்களுக்கு உதவிக் கொண்டிருக்க, இன்னொரு பகுதியினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, ஒரு எல்லைக்கு மேல் அனுமதிக்க மறுத்து தடுப்புக் கம்பிகளைப் போட்டு வைத்திருந்தது..

எப்படித்தான் தகவல் பரவுகிறதோ, அங்கு மீடியாக்காரர்கள் வீடியோ மற்றும் ஸ்டில் காமிராக்களுடன், செய்தி சேகரிக்கத் தயாராய்க் காத்திருந்தனர்.

மூன்றடுக்குக் கட்டிடமான அந்தப் பள்ளியின் மூன்றாவது மாடி வகுப்பிலிருந்த குழந்தைகளை, பள்ளி ஊழியர்கள் மாடிப்படி வழியே தள்ளுமுள்ளு ஏற்படாத வகையில் துரிதமாக கீழே அனுப்பிக் கொண்டிருந்தனர்.

''என்னவொரு அநியாயம்...குழந்தைகள் படிக்கற இஸ்கூலுக்குள்ளார குண்டு வெச்சிருக்கானுகளே...சண்டாளப் பாவிக!''

''நாடு நாடாவா இருக்கு?...ச்சை...எப்ப பார்த்தாலும் கொலை... கொள்ளை...குண்டு வெடிப்பு..ன்னு...இதெல்லாம் எங்கதான் போய் முடியப் போகுதோ?

வெள்ளைக்காரன் கிட்டேயிருந்து சுதந்திரம் வாங்கிட்டோம்... ஆனா இந்தக் கொள்ளைக்காரனுக கிட்டேயிருந்து இன்னும் சுதந்திரம் வாங்க முடியலை''

'' சும்மா ஏங்க டென்ஷனாகறீங்க?...எல்லாம் வெறும் புரளிங்க!...நீங்க வேணா பாருங்க...பாம் ஸ்குவாட் வந்து தேடிப் பார்த்திட்டு..பாமும் இல்லை...ஜாமும் இல்லை...எல்லாம் வெறும் புரளினு சொல்லிட்டுப் போவாங்க!...புரளி கிளப்பறதுக்குன்னே இங்க ஒரு கூட்டம் இருக்குதுங்க!

இந்த நாடும்...நாட்டு மக்களும் நாசமாய்ப் போகட்டும்!னு அன்னிக்கே சொன்னான் அதுதான் இப்ப நடந்திட்டிருக்கு! ''

''ப்ச் எதுக்கு இப்படி ஆளாளுக்கு வியாக்கியானம் பேசிட்டிருக்கீங்க?... அதான் காவல் துறையும், தீயணைப்புத் துறையும் வேலை பார்த்திட்டிருக் காங்கல்ல?...அவங்களை நிம்மதியா வேலை பார்க்கவிடுங்க'' கூட்டத்தைப்பார்த்துக்கத்தி அமைதிப்படுத்த முனைந்தார்ராஜய்யன்.

அப்போது, மின்னல்வேகத்தில்வந்திறங்கியவெடி குண்டு நிபுணர் குழு வந்தவேகத்தில் பள்ளிக்குள் ஓடியது.

வெடி குண்டுகளை மோப்பம் பிடிக்கும் காவல்துறை நாய்களை இழுத்துக் கொண்டு பாதுகாப்புக் கவச உடை அணிந்திருந்த பத்துக்கும் மேற்பட்ட ஆட்கள் பள்ளிக் கட்டிடத்திற்குள் நுழைந்தனர்.

அடுத்த பத்தாவது நிமிடத்தின் முடிவில், கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளும், ஆசிரியர்களும், பள்ளிக்கூட ஊழியர்களும் வெளியேற்றப்பட்டு விட, மனித உயிர்ச் சேதத்திற்கு வாய்ப்பில்லை

என்கிற எண்ணத்தில் நிம்மதிப் பெருமூச்சு விட்ட ராஜய்யனின் வயிற்றில் அமிலத்தை உருவாக்கியது அந்தக் காட்சி.

கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் தனியே நின்று கொண்டிருந்த ஒரு குழந்தை, அச்சம் காரணமாக அந்த இடத்தை விட்டு நகராமல், அங்கேயே நின்று கொண்டு ஓங்கிய குரலில் கேட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து கையை ஆட்டி ஆட்டி அழுது கொண்டிருந்தது.

அய்யோ...அது என் குழந்தை...என் குழந்தை!...யாராவது அதைக் காப்பாற்றுங்க! என்று எல்லோரையும் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் அந்தக் குழந்தையின் தாய்.

அப்போது வெடிகுண்டு நிபுணர் குழுவைச் சேர்ந்த ஒருத்தன் அந்த மூன்றாம் தளத்திற்கு சென்று தன் தேடல் பணியைத் தொடர,கூட்டத்தினர் அவனைப் பார்த்துக் கத்திக் கையாட்ட, தன் பணியை நிறுத்தி விட்டு அவன், கை ஜாடையில் என்ன?வென்று கேட்டான்.

குழந்தை...குழந்தை கூட்டம் ஒட்டு மொத்தமாய்க் கத்த,

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்த அவன், அங்கு அந்தக் குழந்தை அழுது கொண்டு நிற்பதைப் பார்த்ததும், டென்ஷனாகி, தன் பணியை மறந்து விட்டு அந்தக் குழந்தையை நோக்கி ஓடினான்.

மின்னல் வேகத்தில் சென்று அந்தக் குழந்தையை அப்படியே வாரியணைத்து, அதே வேகத்தில் படியிறங்கி, மெயின் கேட்டை நோக்கி பிசாசு வேகத்தில் ஓடி வந்தான்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடி வரும் அவனைப் பார்த்துக் கூட்டம் ஆரவாரக் குரல் எழுப்பியது.

அவன் மெயின் கேட்டை நெருங்க நெருங்க...ஓடிச் சென்று அவனிடமிருந்து தன் குழந்தையை வாங்கிக் கொண்ட தாய், அவனைப் பார்த்துக் கை கூப்ப, புன்சிரிப்புடன் அவன் மீண்டும் பள்ளிக் கட்டிடத்திற்குள் ஓடினான்.

ஒரு புறம் தீயணைப்புத் துறையினர் தயாராய்க் காத்திருக்க,

இன்னொரு புறம் ஆம்புலன்ஸ் வண்டிகள் தயாராய் அணிவகுத்திருக்க, மற்றொரு புறம் காவல்துறையினர் தயாராய் நின்றிருக்க, வேறொரு புறம் மீடியாக்காரர்கள் தயாராய்க்

குழுமியிருக்க,

தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் வெடிகுண்டு நிபுணர் குழுவினர் கொண்டு வரப் போகும் பதிலுக்காக பொது மக்களும் காத்திருக்க, நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது.

ஜனங்கள் பீதி அப்பிய முகத்துடன், நெஞ்சில் கையை வைத்துக் கொண்டு காத்திருந்தனர்.

ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு யுகமாய் கழிந்தது.

ராஜய்யனும் மக்கள் கூட்டத்தில் ஒருவராய் திக்திக் நெஞ்சுடன் நின்றிருந்தார்.

## 6

சரியாக இருபத்தி ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, அந்த வெடிகுண்டு நிபுணர் குழு ஒட்டு மொத்தமாய் பள்ளிக் கட்டிடத்திற்குள்ளிருந்து வெளியேறியது.

அந்த பாம் ஸ்குவாடின் சீனியர் போலிருந்த ஒரு தடித்த மனிதரைச் சுற்றி வளைத்த மீடியாக்காரர்கள், ''என்ன சார்...என்னாச்சு?...வெடிகுண்டு கிடைத்ததா?'' அவர் முகத்தின் முன்னால் பத்துக்கும் மேற்பட்ட மைக்குகள் முளைத்திருந்தன.

''நாங்க...பள்ளிக் கூடத்தில்...ஒரு இடம் விடாம எல்லா இடத்திலும்....தரோவா சர்ச் பண்ணிட்டோம்!...எங்குமே வெடிகுண்டு இல்லை! இரு கைகளையும் விரித்துக் காட்டிச் சொன்னார் அந்த வெடிகுண்டு நிபுணர் குழுத் தலைவர்.

''அப்படின்னா...இது புரளியா சார்?'' ஒரு மீடியா பெண் கேட்க,

''அநேகமா அப்படித்தான் இருக்கணும்!...யாரோ வேண்டுமென்றே இந்த விஷமத்தனத்தைச் செய்திருக்கிறார்கள்

யாராயிருக்கும்னு நீங்க நினைக்கறீங்க சார்?''

''நோ கமெண்ட்''

''சார்...நீங்க வந்து வெடிகுண்டு இல்லை!ன்னு சொல்லிட்டீங்க!...ஆனா மோப்ப நாய்களோட உள்ளார போன காவல்துறையினர் இன்னும் வெளிய வரலையே?...ஏன்?...ஒரு வேளை அவங்களுக்கு ஏதாச்சும் தடயம் கிடைச்சிருக்குமோ?''

''அதுக்கு வாய்ப்பில்லை!...ஏன்னா...நாங்க எங்க பாம் ஸ்குவாடுல ரொம்ப அட்வான்ஸ்டு டிடெக்டர்ஸ் வெச்சிருக்கோம்!...அந்த டிடெக்டர்ஸ் கண்டுபிடிக்காததையா...

இந்த நாய்கள் கண்டுபிடித்துவிடும்?''

அப்போது சொல்லி வைத்தாற் போல் காவல்துறையினர் மோப்ப நாய்களைத் திரும்ப அழைத்துக் கொண்டு பள்ளிக் கட்டிடத்திற்குள்ளிருந்து வெளியே வந்தனர்.

''பார்த்தீங்களா?...அவங்களும் வெறும் கையோடதான் திரும்பி வர்றாங்க!...ஸோ...இந்த தகவல் ஒரு புரளி!ன்னு தெளிவாயிடுச்சு!'' அந்த பாம் ஸ்குவாட் சீனியர் ஆபீஸர் சற்று கர்வமாகவே சொன்னார்.

''அப்ப...குழந்தைகளை மறுபடியும் வகுப்புகளுக்குள் அனுப்பிடலாமா சார்?'' ஒரு வம்புக்கார ரிப்போர்ட்டர் வேண்டுமென்றே கேட்க,

''நோ...நோ....அது ரிஸ்க்!...இன்னிக்கு ஒரு நாள் விட்டுட்டு நாளைக்குத்தான் குழந்தைகளை உள்ளே அனுமதிக்கணும்!'' அந்த பாம் ஸ்குவாட் சீனியர் ஆபீஸர் அவசரமாய் மறுத்தார்.

''என்ன சார்...இப்பத்தான் அவ்வளவு உறுதியா சொன்னீங்க!...அடுத்த நிமிடமே தடால்ன்னு கவுந்துட்டீங்களே?'' குறுஞ்சிரிப்போடு அந்த ரிப்போர்ட்டர் சொல்ல,

அவரை முறைத்து விட்டு, அந்த பேட்டியை அத்தோடு முடித்துக் கொண்டு, அகன்றார் பாம் ஸ்குவாட் ஆபீஸர்.

பயர் சர்வீஸ் அதிகாரியும், பாம் ஸ்குவாட் அதிகாரியும், காவல் துறை உயர் அதிகாரியுடன் கலந்து பேசி விட்டு, வெடி குண்டு பற்றி வந்த தகவல்...முழுக்க முழுக்க புரளியே! என்பதை பொது மக்களுக்கும், மீடியாக்காரர்களுக்கும் அறிவித்து விட்டு, பள்ளி நிர்வாகத்தினரை அழைத்து, பள்ளியின் மெயின் கேட்டைப் பூட்டச் சொல்லி கட்டளையிட்டனர்.

கடைசில புஸ்ஸுன்னு போயிடுச்சே! பரபரப்பை எதிர்பார்த்து வந்த ஒரு பத்திரிக்கை ரிப்போர்ட்டர் சலித்துக் கொண்டார்.

பள்ளியின் செக்யூரிட்டி மெயின் கேட்டருகே சென்று, அதன் பெரிய கேட்டை இழுத்துச் சாத்த முற்பட்ட போது,

ராஜய்யனின்நாயானநாகேஷ்வேகமாய்த்தாவி, அந்த செக்யூரிட்டியின் கால்களுக்குள் புகுந்து பள்ளிக் கூடத்திற்கு நுழைய முற்பட்டது.

''ஏய்ய்ய்...ச்சூ...சூ என்று விரட்டினான் செக்யூரிட்டி.

அவனது விரட்டலைக் காதில் வாங்கி கொள்ளாமல் பள்ளிக்

கூடத்திற்குள் அசுரத்தனமாய் ஓடியது அந்த நாய்.

தன்னுடைய நாய் அவ்வாறு ஓடுவதைக் கண்டு பதைத்துப் போன ராஜய்யன், பாய்ந்து சென்று, செக்யூரிட்டியை விலக்கிக் கொண்டு கேட்டினுள் நுழைந்து, தன் நாயைப் பின் தொடர்ந்தார்.

பாசம்அவரைவிரட்டியது.

''டேய்...நாகேஷ்!...ஓடாதடா!... ஓடாதடா!'' என்று கத்திக் கொண்டே துரத்தினார்.

திடீரென்று ஒரு நாயும், அதைப் பின் தொடர்ந்து ஒரு மனிதரும் பள்ளிக் கட்டிடத்தை நோக்கி ஓடுவதைக் கண்டு திடுக்கிட்டுப் போன காவல் துறை ஆட்கள், அவசரமாய் தாங்களும் அவர்கள் பின்னே ஓட எத்தனிக்க,

''இருங்க!...இருங்க!...எங்க ஓடறீங்க?'' காவல்துறை உயர் அதிகாரி அவர்களை நிறுத்தினார்.

''சார்...அந்த நாயும்...அந்தநபரும்...ஸ்கூலுக்குள்ளார ஓடறாங்க சார்!'' ஒரு காவலர் சொல்ல,''ஓடட்டும்...அதனாலென்ன?'' சாதாரணமாய்க் கேட்டார் அந்தக் காவல்துறை அதிகாரி.

''இல்லை சார்...உள்ளார...வெடிகுண்டு...!'' அந்த காவலர் இழுக்க,

''யோவ்...அதான் உள்ளார ஒண்ணும் இல்லை... தகவல் வெறும் புரளி!ன்னு கன்ஃபர்ம் பண்ணியாச்சில்ல?...அப்புறமென்ன பயம்?'' சிறிதும் பொறுப்பில்லாமல் பேசினார் அந்த அதிகாரி.

''ஒருவேளை பாம் இருந்திட்டா...அநியாயமா அந்தஆளோட உயிர் போயிடுமே சார்?'' அந்தக் காவலர் பள்ளிக் கட்டிடத்திற்குள் நுழைந்து விட்ட ராஜய்யனைக் கை காட்டிச் சொன்னார்.

''த பாரு மேன்!...பாம் ஸ்குவாட் ஆளுங்க சர்ச் பண்ணிப் பார்த்திட்டு ஒண்ணுமில்லைன்னு உறுதிப்படுத்திட்டாங்க!... அதே மாதிரி நம்ம டிபார்ட்மெண்ட் மோப்ப நாய்களும் எதையும் கண்டுபிடிக்கலை...ஸோ...எவ்ரி திங் நார்மல்!...அதனால...நீங்க அந்தஆளைப் பத்திக் கவலைப்பட வேண்டாம் விட்டுடுங்க!... அவரு போய் கொஞ்ச நேரம் ஸ்கூல் கிரவுண்டுல விளையாடிட்டு வரட்டும்'' என்றார் காவல் துறை உயர் அதிகாரி.

அதே நேரம்,

பள்ளிக் கட்டிடத்திற்குள் புகுந்த நாகேஷ் ஒவ்வொரு வகுப்பறையாகச் சென்று எதையோ தேட, ''நாகேஷ்நாகேஷ்...

என்னடா தேடறே?...உனக்குப் பசிக்குதுன்னா வாடா வீட்டுக்குப் போகலாம்!....வாடா!'' சொல்லியவாறே அதனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தார்ராஜய்யன்..

எல்லா வகுப்பறைக்குள்ளும் சென்று தேடி முடித்த அந்த நாய் இறுதியாய், விளையாட்டுப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் சென்று, அங்கிருந்த பொருட்களையெல்லாம் மோப்பம் பிடித்து விட்டு, கடைசியில் பழைய...இற்றுப் போன லெதர் ஷூ ஒன்றைக் கவ்விக் கொண்டு வெளியேறியது.

''டேய்...நாகேஷ்...அதை எதுக்குடா தூக்கிட்டுப் போறே?'' விடாமல் துரத்தினார்ராஜய்யன்.

அது அவர் குரலை சிறிதும் லட்சியம் செய்யாமல் ஓடியது.

அங்கிருந்து நேரே பள்ளிக்குப் பின் புறமிருந்த பெரிய... விஸ்தாரமான...விளையாட்டு மைதானத்தை நோக்கி நாய் ஓடியதைப் பார்த்த கூட்டம் ''ஹோ...'' வென்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்தது.

''அங்க பாருடா...அந்த நாய் ஒற்றை ஷூவைக் கவ்விக்கிட்டு ஓடுது!''

''வயித்துக்கு சரியா சோறு போட்டிருக்க மாட்டாங்க போலிருக்கு!''

''கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கொண்டிருந்த ராஜய்யனின்பக்கத்துவீட்டுப்பெண்ணிடம், அது உங்க வீட்டுக்குப்பக்கத்திலிருக்கறஆளோட நாய்தானே?'' என ஒருவள் கேட்டாள்.

''ஆமாம்...அதுபேருநாகேஷு...அதுதான்என்னையஒருவ டக்கத்திஆளுகிட்டயிருந்துகாப்பாத்திச்சு!...அதுஎதுக்கு அங்க போச்சு?'' திகிலோடு கேட்டாள்.

''யாருக்குத் தெரியும்?...திடீர்னு போலீஸ்காரர் கண்ணுல மண்ணைத் தூவிட்டு கேட்டுக்குள்ளார பூந்து ஸ்கூலுக்குள்ளார ஓடிடுச்சு!...அங்க போய் ஏதோ ஷூவைக் கவ்விட்டு ஓடுது?...உங்கபக்கத்துவீட்டுக்காரஆளும் வேற கூடவே ஓடிட்டிருக்கார்!''

ஓடிக்கொண்டிருந்த நாய், திடீரென்று நின்றது. தன் வாயிலிருந்த அந்த ஒற்றை ஷூவை மண்ணில் வைத்து விட்டு, ராஜய்யனை நோக்கி வந்து, உர்ர்ர்...உர்ர்ர்.. என்று கோபமாய் உறுமி அவரைத்

துரத்த முயன்றது.

அந்த உறுமல் வழக்கமான உறுமலாக இல்லாமல் ஒரு புலியின் உறுமல் போல் ஒலித்தது.

''டேய்நாகேஷ்...இப்ப நீ என் கூட வரப் போறியா இல்லையா?'' ராஜய்யனும் கோபமாகிக் கத்தினார்.

அதைக் கண்டு கொள்ளாத நாய், தன் குரலை உயர்த்தி அவரைப் பார்த்துக் குரைத்தது. அதன் குரலில் ஒரு கோபம் கலந்த கெஞ்சல் இருந்தது. அதன் கண்களில் ஒரு பரிதாபம் கலந்த வெறி இருந்தது.

தன்னுடைய செல்ல நாய்க்குட்டி தன்னைப் பார்த்துக் கோபத்துடன் குரைப்பது கண்டு குழம்பிப் போன ராஜய்யன், அதனருகே சென்று அதைத் தொட முற்பட, அது அவர் கையைக் கடிக்கும் விதத்தில் கர்ர் என்று வந்தது.

''என்ன நாகேஷ்..என்னாச்சு உனக்கு?...என்னை அடையாளம் தெரியலையா?...ஏன் என்னையே கடிக்க வர்றே?...உனக்கு வெறி பிடிச்சிருச்சா?'' சற்று பின் வாங்கி நின்று கேட்டார்.

திடீரென்று திரும்பி, மறுபடியும் அந்த ஒற்றை ஷூவை வாயில் கவ்விக் கொண்டு, மைதானத்தின் மத்தியை நோக்கி ஓடியது.

இந்த முறை ஏனோ ராஜய்யன் அதன் பின்னால் ஓடாமல் பின் தங்கியே நின்றார்.

அது எதையோ குறிப்பால் உணர்த்துகிறது என்பதை அவர் மனம் உணர்ந்து கொண்டது.

பள்ளி கேட்டுக்கு வெளியே நின்றிருந்த கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கலைய ஆரம்பித்தது.

பாம் ஸ்குவாட் ஆட்கள் கிளம்பத் தயாரான போது,

பயர் சர்வீஸ் ஆட்கள் தங்கள் வாகனத்தில் ஏறி அமர்ந்த போது,

காவல் துறையினர் கூட்டத்தைக் கலைத்து விட்டுப் புறப்பட எத்தனித்த போது,

பள்ளிக்கட்டிடத்திற்குப்பின்புறமிருந்தஅந்தமைதானத்திலிருந்து ஒலித்தது.

ட....மா.....ர் என்ற பேரோசை.

அந்த ஓசையில் பள்ளிக் கூடக் கட்டிடமே ஒரு முறை குலுங்கி நின்றது. பக்கத்து வீடுகளில் பொருட்கள் சிதறி விழுந்தன.

பக்கத்து மரங்களிலிருந்த பறவைகள் திடீரென்று கேட்ட அந்த இடியோசையால் அலறிக் கொண்டு நாலாத் திசையிலும் பறந்தோடின.

நிதானமாய் பேசிக் கொண்டே திரும்பிய மக்கள் கூட்டம் அந்த வெடிச் சத்தத்தில் திடுக்கிட்டு நின்று, திரும்பிப் பார்த்தது.

''பாம் வெடிச்சிருச்சு'' யாரோ கூவினார்கள்.

பள்ளிக்கட்டிடத்திற்குப் பின்புறம், ஒரு தென்னை மர உயரத்திற்கு ஓங்கி எழுந்திருந்த புகை மண்டலம் அவர்களைக் கலவரப்படுத்தி விட, எல்லோரும் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடினர்.

காவல் துறையினர் நிலைமையைச் சட்டென யூகித்துக் கொண்டு, பொது மக்கள் யாரும் பள்ளிக் கூட கேட்டிற்குள் நுழைந்து விடக் கூடாத வகையில் கேட்டின் முன் புறம் ஒரு அரண் அமைத்தனர்.

அடுத்த நிமிடமே ஃபயர் சர்வீஸ் ஆட்கள், பாம் ஸ்குவாட் ஆட்களை உடன் அழைத்துக் கொண்டு பின்புற மைதானத்தை நோக்கி ஓடினர்.

## 7

அவர்களைத் தொடர்ந்து, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களில் சிலர், பள்ளியின் மெயின் கேட்டைத் தாண்டி உள்ளே புக முயல, காவல் துறையினர் அவர்களைத் தடியடி நடத்தித் தடுத்தனர். மீடியாக்காரர்களை அவர்களால் ஓரளவுக்கு மேல் தடுக்க முடியாது போக, நாலைந்து பத்திரிக்கை ரிப்போர்ட்டர்களும், சில தொலைக்காட்சி ஆட்களும் காமிராவும் சகிதமுமாய் அந்த மைதானத்தை நோக்கி ஓடினர்.

இவர்களையெல்லாம் விலக்கிக் கொண்டு பேய்த்தனமாய் பள்ளிக்குள் நுழையப் போன பக்கத்துவீட்டுப்பெண்மணியை ஒரு காவலர் தடுத்து நிறுத்த,

''அடப்பாவிப் பயலே...உள்ளார போனது எங்கபக்கத்துவீட்டுக்காரஆளுடா'' என்று கத்திக் கொண்டு, அந்தக் காவலரை ஓங்கித் தள்ளி விட்டுக் கொண்டு ஓடினாள் அவள்.

அவர்கள் அனைவரும் பாம் வெடித்த இடத்தை நெருங்கியும் அதனருகில் போக இயலவில்லை. புகையும், புழுதியும் அந்த இடத்தையே புகை மண்டலமாக்கியிருக்க, எல்லோருமே சற்றுத் தள்ளி நின்று புகை அடங்கக் காத்திருந்தனர்.

சரியாக பத்து நிமிடங்களுக்குப் பிறகு, ஓரளவு அந்த இடம் தெளிவிற்கு வந்ததும், ஒவ்வொருவராய் மெல்ல மெல்ல...பாம்

வெடித்த இடத்தை நெருங்கிச் சென்று பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

அங்கே!

ராஜய்யனின் நாய்நாகேஷ்...சதைத் துணுக்குகளாய்ச் சிதறிக் கிடந்தது.

''த்சொ!...த்சொ!'' என்று பல வாய்கள் ஓசையெழுப்பி அங்கலாய்க்க, பாய்ந்து வந்து அதைப் பார்த்த பக்கத்துவீட்டுப்பெண், மனம் தாளாமல் ஓங்கிய குரலில் வாய் விட்டு அழுதாள்.

''அய்யோ...அன்னிக்குஎன்னைக்காப்பாத்தினே?... இன்னிக்குஉன்உசுரைக்குடுத்துநூத்துக்கணக்கானகுழந்தைகளை க்காப்பாத்திட்டே?''

திடீரென்று அவள் மனத்தில் ராஜய்யனின் ஞாபகம் வந்து விட, ''அய்யாஅய்யா!'' என்று கூவிக் கொண்டே நாலாப்பக்கமும் தேடினாள். ''அய்யோ...அந்தமனுஷனைவேற காணோமே?... அவருக்கு என்ன ஆச்சோ?'' அவள்மனம் தவித்தது.

அப்போதுதான் மற்றவர்களுக்கும் நாயின் பின்னால் ஓடி வந்த ராஜய்யனின் ஞாபகம் வந்தது.

''அட ஆமாம்...கூடவே ஒரு ஆளும்ஓடி வந்தாரில்ல?...அவரு எங்கே?''

''ஹும்அவருஎங்கே சிதறிக் கிடக்காரோ?''

எல்லோரும் அங்குமிங்கும் ஓடி ஓடித் தேட ஆரம்பித்தனர். அந்தப்பெண் வாய் விட்டுக் கதறியபடியே பித்துப் பிடித்தவள் போல் பரபரவென்று தேடினாள். ''அய்யா... அய்யா!''

அங்கு வியாபித்திருந்த புகை மண்டலம் முழுக்க முழுக்க அகன்ற பின், சற்றுத் தொலைவில் தனியே அமர்ந்து சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்த ராஜய்யன் அவர்களது பார்வையில் பட்டு விட, எல்லோரும் அவரை நோக்கி ஓடினர்.

அனைவரையும் முந்திக் கொண்டு ஓடிய பக்கத்துவீட்டுப்பெண், ''அய்யாநம்மநாகேஷ்செத்துப்போச்சுங்கய்யா'' கதறினாள்.

பின்னால் வந்த காவல்துறை அதிகாரி, குனிந்து ராஜய்யனிடம், ''உங்களுக்குஒண்ணும் ஆகலையே?'' கேட்டார்.

குறுக்காகத் தலையாட்டிய ராஜய்யன், ''சார்...நீங்க எல்லாரும் தேடிப் பார்த்திட்டு...இங்க வெடிகுண்டே இல்லைன்னு சொல்லிட்டுப் போயிட்டீங்க!...ஆனா என்னோட நாய் உங்களால கண்டுபிடிக்க முடியாத வெடிகுண்டைத் தான் கண்டு பிடிச்சிடுச்சு

பார்த்தீங்களா?'' என்றார் கண்களில் கண்ணீரோடு.

''உண்மைதான் சார்!...வெடி குண்டைக் கண்டு பிடிச்சதோட நில்லாம அதைக் கொண்டு போய் மைதானத்துல போட முயற்சி பண்ணிச்சு பாரு...அதுதான்சார் ரொம்ப ரொம்ப அறிவுப் பூர்வமான செயல்!...என்னால நெனைச்சுக் கூடப் பார்க்க முடியலை!'' அந்தக் காவல்துறை அதிகாரி வியந்து போய்ச் சொன்னார்.

இடையில் புகுந்த வேறொரு காவலர், ''சார் உண்மையில் அது பாமைக் கொண்டு போய் தூரத்தில் போட்டுட்டு ஓடி வரத்தான் நெனைச்சிருக்கு!...ஆனா கொஞ்சம் டைமிங் மிஸ்ஸாகி...பாம் வெடிச்சிடுச்சு சார்!....பாவம் சார்!'' என்றார்.

''எனி வே...நம்ம கிட்ட இருக்கற நல்ல பயிற்சி பெற்ற நாய்களால செய்ய முடியாத ஒரு பெரிய சாதனையை இந்த வீட்டு நாய் செஞ்சிருக்கு!...இந்த நாயை வளர்த்த இவருக்கு நிச்சயம் ஒரு அவார்டுக்கு நான் ஏற்பாடு பண்றேன்!'' அந்த உயர் அதிகாரி சொல்ல,

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவராய் எழுந்த ராஜய்யன், தன் நாய் சிதறிக் கிடக்கும் இடத்தைத் திரும்பிக் கூடப் பார்க்காமல், வேறு திசையில் நடந்தார். தள்ளாட்டமாய் நடந்து செல்லும் அவரை எல்லோரும் பரிதாபமாய்ப் பார்க்க, அந்தப்பக்கத்துவீட்டுப்பெண்மட்டும் அவரிடம் வந்து, ''அய்யா உங்களோட நாகேஷ் எப்படிக் கிடக்குதுன்னு பார்க்கலையா?'' கேட்டாள்.

''வேண்டாம்மா...வேண்டவே வேண்டாம்!...அதைப் பார்த்தா என் மனசு தாங்காதும்மா!... ஓடியாடித் திரிஞ்சிட்டிருந்த நாகேஷ்தான் என்னோட மனசுல பதிஞ்சிருக்கு!...அது அப்படியே இருக்கட்டும்!..இதைப் பார்த்தா அந்த நினைவுகள் அழிஞ்சு இந்தச் சிதறல்கள் மனசு பூராவும் ஒட்டிக்கும்...அப்புறம் வாழ்க்கை முழுவதும் நான் இந்த ரத்தக்களரியைத்தான் நினைச்சிட்டு வாழ வேண்டியிருக்கும்! சொல்லிக் கொண்டே நடந்தார்ராஜய்யன்.

என்றோஅந்தமரத்தடிஜோஸியன்சொன்னது அவர் காதுகளில் அட்சரம் பிசகாமல் ஒலித்தது. இது தான் சாமி விரயபாவத்தின் பலன்!... இதுவரை மட்டுமல்ல இனிமேலும் வாழ்க்கையின் கடைசி நிமிஷம் வரைக்கும் இது உங்களைப்பின் தொடரும்!... நீங்க யார் மீதெல்லாம் அன்பையும் பாசத்தையும் கொட்டறீங்களோ?... அவங்களை இழந்துநிப்பீங்க

'அடப்பாவமே?....அதுக்காகஒருநாய்மீதுகூடநான்பாசம்வைக்கக்கூடாதா?'

நாகேஷின்பிரிவு அடுத்து வந்த ஆறு மாதங்கள் அவரை முடக்கிப்போட்டுவிட, நடைப்பிணமாய்திரிந்தார். எங்கும்எதிலும் ஆர்வமில்லாமல் சலிப்போடுஇருந்தார்.

## 8

''ராஜய்யன் சார்...உங்களுக்கு போன் வந்திருக்கு!'' ப்யூன் முருகன் வந்து சொல்ல,

'எனக்கா?...ஆபீஸ் போனிலா?...வாய்ப்பே இல்லையே?...ஆபீஸ் போனுக்கு யார் கால் பண்ணியிருப்பா?' யோசனையுடன் ரிசப்ஷனுக்கு சென்று அங்கு கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த ரிஸீவரை எடுத்துப் பேசினார். ''ஹலோ...ராஜய்யன் பேசறேன்...யார் பேசறது?''

மறுமுனையில் ''ஹலோ''என்று சொல்லி விட்டு பக...பகவெனச் சிரித்தார் அவருடைய நண்பர் சிவஞானம். சாதாரணமாகவே அவர் பேச்சில் வார்த்தைகளை விட சிரிப்புத்தான் அதிகமிருக்கும். அந்தச் சிரிப்பு எதிராளியின் கவலைகளைக் கூட மாற்றி விடும் கள்ளமற்ற சிரிப்பு.

''என்ன சிவா...?...இந்த நேரத்துல...?...அதுவும் ஆபீஸ் போனுக்கு?'' ராஜய்யன் கேட்டார்.

''யோவ்...நான் எதுக்குக் கூப்பிடுவேன்?...என் நண்பனோட எதிர்காலத்தை மனதில் வைத்து ஒண்ணே ஒண்ணுதான் கேட்பேன்!... எத்தனை நாளைக்குத்தான் இப்படி தனிமைத் துறவியாவே காலத்தைக் கழிக்கப் போறே?...வயது ஏறிக்கிட்டே போகுது...சீக்கிரமே ஒரு நல்ல முடிவை எடு!..இல்லேன்னா...மறு கல்யாணத்துக்கான வாய்ப்பு கை நழுவிப் போயிடும்!...இதுக்கு மேலேயும் காலம் கடத்தாதே!...காற்றுள்ள போதே தூற்றிக் கொள் ராசான்னு இதுவரை நூறு முறைக்கும் மேல் கேட்டுட்டேன்!... இன்னும் சரியான பதில் வரலை....அதனாலதான் கூப்பிட்டேன்...

வழக்கமான பல்லவியை மறக்காமல் பாடினார் சிவஞானம். அது நண்பன் மீதுள்ள அக்கறையின் வெளிப்பாடு என்பது ராஜய்யனுக்கும் தெரியும்.

''ஸ்ஸ்ஸ்...'' என்று சலித்துக் கொண்ட ராஜய்யன், ''அட என்னப்பா?...இதுக்குத்தான் போன் பண்ணுனியா?'' கோபமாய்க்

கேட்டார்.

''அதுக்காக மட்டும் இல்லை!..உன்னை ஊருக்கு வரச் சொல்லிக் கூப்பிடத்தான் போன் பண்ணினேன்!...ஊர்ப் பக்கம் வந்து ரொம்ப நாளாச்சே...ஒரு நடை வந்து போறது?''... கேட்டார் சிவஞானம்.

''ஏன்?...என்ன விசேஷம் ஊர்ல?...திருவிழாவா?...இல்லை கிடா வெட்டா?...இல்லைஉன்பொண்டாட்டிக்குவளைகாப்பா?'' வேண்டுமென்றே கேட்டார் ராஜய்யன்.

''ஓஹோ...ஏதாவது விசேஷம்ன்னாத்தான் வருவியா?...எங்களையெல்லாம் பார்க்க வர மாட்டியா?... நீயெல்லாம் ஒரு நண்பனாய்யா?....நட்புன்னா என்ன?ன்னு தெரியுமாய்யா உனக்கு?...'' கோபமாய்க் கேட்டார் சிவஞானம். அந்தக் கோபத்தில் காட்டத்தை விட, அன்புதான் அதிகமிருந்தது. சினத்தில் வந்த வார்த்தைகள் சீனி தடவிக் கொண்டு வந்து விழுந்தன.

''சரி....சரி....வர்றேன்...வர்றேன்!...ஆனா...எப்ப?ன்னு இப்ப...உடனே சொல்ல முடியாது!...அதை...அப்புறமா...நானே உனக்குக் கால் பண்ணிச் சொல்றேன்'' கறாராய்ச் சொன்னார் ராஜய்யன்.

''ஆஹா..அருமை...அருமை!....இந்த வாக்குறுதியை தண்ணீரில் எழுதி வைக்கலாமா?...இல்லை...கடற்கரை மணலில் எழுதி வைக்கலாமா?'' கிண்டலாய்க் கேட்டார் சிவஞானம்.

''நோ...நோ...இந்த தடவை நான் சொல்றது உறுதியான பதில்!... ஏன்னா...எனக்கே கொஞ்சம் வெளிய எங்காச்சும் போயிட்டு வந்தா நல்ல இருக்கும்னு தோணுது!'' என்றார் ராஜய்யன்.

''கேட்கவே சந்தோஷமாயிருக்கு!...உன் போன் காலுக்காக நான் வெயிட் பண்ணிட்டிருப்பேன்!...ஓ.கே...பை..பை!'' என்று சொல்லி விட்டு சிவஞானம் இணைப்பைத் துண்டித்ததும், முகத்தில் புன்னகையோடு தன் இருக்கைக்கு வந்தார் ராஜய்யன்.

''என்ன சார்?...போன் பேசிட்டு சிரிச்ச முகத்தோட வர்றீங்க?... ஏதாச்சும் நல்ல விஷயமா?'' பக்கத்து சீட் மோகன் கேட்க,

அவன் பூடகமாக எதைக் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட ராஜய்யன், விசேஷமெல்லாம் ஒண்ணுமில்லைப்பா!... என் ப்ரெண்ட் சிவஞானம்... ஊருக்கு வந்து ரொம்ப நாளாச்சே...ஒரு தரம் வரலாமில்ல?ன்னு கோரிக்கை வைக்கறான்!...அவ்வளவுதான் சொல்லி விட்டு பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து

முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''அடடே...சிவஞானம்!ன்னா...நம்ம ஆபீஸ்ல கொஞ்ச நாள் வேலை பார்த்தாரே?...அந்த சிவஞானமா?...சொந்த ஊர் கூட திருச்சி பக்கத்துல ஏதோ ஒரு கிராமம்...?'' மோகன் சொல்ல,

''அதே சிவஞானம்தான்!..ஆனா அப்ப அவர் திருச்சில இருந்தார்...இப்ப அவர் இருக்கறது கோவில்பட்டி போற வழில... திருமலையாம்பட்டி...ங்கற ஊர்ல'' கண்ணாடியைக் கழற்றி துடைத்தார் ராஜய்யன்.

''சார்...நானும் அவர் சொல்றதையேதான் சொல்றேன்!... எப்பப்பாரு...ஆபீஸ் வேலை...ஆடிட் வேலை...ன்னு இதையே கட்டிட்டு அழறீங்களே?...அதுவுமில்லாமஅந்தநாய்ச ாவிற்குப்பின்னாடிநீங்கபழையமாதிரியேஇல்லை!...பேசாமஒரு வாரம்...பத்து நாள் லீவு போட்டுட்டு எங்காவது ஜாலியா போயிட்டு வாங்க சார்!...உங்களுக்குத்தான் லீவு நிறைய இருக்குதே?...மனசு க்கும் கொஞ்சம் இதமாயிருக்கும்!'' ராஜய்யன் மீதுள்ள தனிப்பட்ட அக்கறையில் அந்த மோகன் கூற,

பதில் பேசாது மௌனம் சாதித்த ராஜய்யன், ''ம்ம்ம்..அதுவும் சரிதான்!...இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு என் டேபிள்ல அர்ஜெண்ட் வேலை எதுவுமில்லை!...இந்தச் சமயத்துலதான் லீவும் போட முடியும்!'' என்றார்.

''போட முடியும்...என்ன?...போடறீங்க!...போயிட்டு வர்றீங்க!''... அன்பான அதிகாரத்தை அழகாய்க் காட்டினான் மோகன்.

அந்த அலுவலக ஊழியர்கள் மத்தியில் போட்டி பொறாமை என்பது சுத்தமாய் இல்லாதது வரலாற்று ஆச்சரியம். வியப்பான விஞ்ஞானம். ஒரு முறை உடல் நிலை காரணமாய், பொருளாதார இழப்பைக் கூடப் பொருட்படுத்தாமல், ரிட்டையர்ட் ஆவதற்கு இரண்டு வருடம் முன்னதாகவே தன் வேலையை ராஜினாமா செய்யத் துணிந்தார் ஒரு ஊழியர். ஆனால் சக ஊழியர்கள், அவருக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படாமல் காப்பதற்க்காக, அவரைத் தடுத்து, அவர் செய்ய வேண்டிய வேலைகளை தாங்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு, அந்த இரண்டு வருடங்கள் அவரை வெறுமனே ஆபீஸில் உட்கார வைத்து, சர்வீஸ் முடிந்த பிறகே அனுப்பி வைத்தனர்.

''சரிப்பா...இப்பவே என்னோட லீவ் லெட்டரை எழுதி

மேனேஜர் கிட்டே குடுத்திடறேன்!...முடிஞ்சா இன்னிக்கு நைட் பஸ்ஸிலேயே கிளம்பிடறேன்!...போதுமா?'' ராஜய்யன் பயந்தவர் போல் பாவ்லா செய்ய, ''வெரி குட்'' என்றான் மோகன்.

## 9

அன்று மாலை சற்று முன்னதாகவே வீடு திரும்பிய ராஜய்யன், ஒரு லெதர் பேக்கில் தன்னுடைய துணிமணிகளை அடைத்துக் கொண்டு, இரவு பஸ்ஸைப் பிடிக்கக் கிளம்பினார்.

தன் வீடு இருக்கும் தெருவின் முனையிலிருந்த அந்த ஆட்டோ ஸ்டாண்டை அடைந்தவர், ''என்ன ரத்னவேலு...சவாரி வர்றியா?'' கேட்டார்.

''இதென்ன சார் கேள்வி?...உங்களுக்கு வராம வேற யாருக்கு போகப் போறேன்?'' சொல்லியவாறே ஆட்டோவை ஸ்டார்ட் செய்தான் அந்த ரத்னவேலு.

வண்டியில் ஏறி அமர்ந்த ராஜய்யன், ''சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட் போப்பா'' என்றார்.

போகும் வழியில் ஆட்டோக்காரன் கேட்டான், ''என்ன சார்... திடீர்னு ஊருக்குக் கிளம்பிட்டீங்க?...ஏதாவது விசேஷமா?''

''அடப்பாவிகளா?...எல்லோரும் சொல்லி வெச்ச மாதிரி ஒரே கேள்வியைக் கேட்கறீங்களே?...ஒரு மனுஷன் ஊருக்குப் போனா...ஏதாவது விசேஷமாய்த்தான் இருக்கணுமா?...சும்மா ஜாலி ட்ரிப்பா இருக்கக் கூடாதா?'' கேட்டே விட்டார் ராஜய்யன்.

''ஹி...ஹி...நீங்க ஆபீஸ் விட்டா வீடு...வீட்டை விட்டா ஆபீஸ்னு இருக்கற மனுஷன் ஆச்சே?...அதான்...கேட்டேன்!... அதுவுமில்லாம நீங்க ரெண்டாம் கல்யாணத்துக்கு பொண்ணு பார்த்திட்டிருக்கறதா கேள்விப்பட்டேன்...அதான்...கேட்டேன்!'' வழிந்தான் ஆட்டோக்காரன்.

''அடப்பாவிகளா...யாரப்பா சொன்னாங்க அப்படி?...எனக்கு ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கும் எண்ணமே இல்லை!...சும்மா அவங்களே ஆளாளுக்கு சொல்லிக்கறாங்க...அவ்வளவுதான்!'' வருத்தமாய்ச் சொன்னார் ராஜய்யன்.

பஸ் ஸ்டாண்டில் கோவில்பட்டி செல்லும் பஸ் தயாராய் நிற்க, ஓடிப் போய் ஏறிக் கொண்டார் ராஜய்யன். பரவாயில்லை வந்த உடனே பஸ் கிடைச்சிடுச்சு!

பயணிகளைக் கவர அந்த பஸ் கண்டக்டர் அதிக சத்தத்தில் பாடலை ஒலிக்கப் பண்ணியிருந்தான்.

''ராக்கம்மா கையைத் தட்டு...புது ராகத்தில் மெட்டுக் கட்டு

கொஞ்சம் கொஞ்சமாய் கூட்டம் சேர, அடுத்த இருபதாவது நிமிடம் பஸ் கிளம்பி, மெதுவாய் ஊர்ந்து ஓடி வந்து ஏறும் ஒன்றிரண்டு பயணிகளையும் அள்ளி உள்ளே போட்டுக் கொண்டது.

பொதுவாகவே பஸ் பிரயாணத்தின் போது உறங்காதவர் ராஜய்யன். அதிலும் இரவு நேர பஸ் பயணத்தில் சுத்தமாய் உறங்க மாட்டார். பேருந்தின் ஜன்னலைக் கொஞ்சமாய் திறந்து வைத்துக் கொண்டு இரவு நேர அமைதியில் ஆழ்ந்து கிடக்கும் ஊர்களை வேடிக்கை பார்த்தபடியே பிரயாணிப்பார்.

என்னதான்உறக்கத்தைநாம்இழுத்துப்பிடித்துநிறுத்தினாலும், ஒருகட்டத்தில்அதுநம்மையும்மீறிநம்மீது ஏறிப்படுத்துக் கொள்ளுமே?.

ராஜய்யன்மீதும்ஏறிப்படுத்துக்கொண்டு, ஒருகனவையும் அவருக்குப்பரிசாய் அளித்தது உறக்கம்.

த பாருய்யா வெட்கப்பட வேண்டிய நானே சாதாரணமா நிக்கறேன் நீ ஏன்யா.. அந்தப்பக்கம் திரும்பி நின்னுட்டிருக்கே? வெள்ளை வேஷ்டியைநெஞ்சுவரைகட்டிக்கொண்டுநின்றஅந்தப் பெண்சொல்ல, அம்மாடி ஆத்தோட அடிச்சிட்டுப் போக இருந்த உன்னைய காப்பாத்தணும்!னு நெனச்சேன் காப்பாத்திட்டேன் உன் மானத்தைக்காப் பாத்தறதுக்காக நான் கட்டியிருந்த வேஷ்டியையும் குடுத்திட்டேன்!... அவ்வளவுதான் என்வேலை. நான் கிளம்பறேன். நீயும்பத்திரமா வீடு போய்ச்சேரு ''சொல்லிவிட்டு விடுவிடுவென்றுநடந்தார்ராஜய்யன்.

தாவிவந்துஅவர்எதிரேநின்றஅந்தப்பெண், இப்படியேநான்வீட்டுக்குப்போனாஎன்னைப்பெத்தவங்க இதுயாரோடவேட்டி?ன்னுகேட்பாங்க!...அது மட்டுமாவேற என்னென்ன மோநினைப்பாங்க!... அதனாலஅதனால

''அதனால?''

''நீயும்என்கூடஎன்வீட்டுவரைக்கும்வந்துவிபரத்தைச் சொல்லிஎன்னைக்கண்ணாலங்கட்டிக்கோ'' என்றாள்அந்தப்பெண்.

''என்னது?... கண்ணாலங்கட்டிக்கறதா?...அதுக்குவேற ஆளைப்பாரு'' வேகவேகமாய்நடந்தார்ராஜய்யன்.

அவர்முதுகிற்குப்பின்னால்அந்தப்பெண்கத்திக்கொண்டிருந்தாள், நீமட்டும்என்னைக்கண்ணாலங்கட்டிக்கலேன்னாநான்மறுபடியும்ஆத்துக்குள்ளாரகுதிச்சுதற்கொலைபண்ணிக்குவேன்''

அதைச்சிறிதும்சட்டைசெய்யாமல்தன்போக்கில்நடந்துகொண்டிருந்தராஜய்யன், தொபீர் என்றசத்தம்கேட்க, திரும்பிப்பார்த்தார்.

சொன்னது போலவே அந்தப்பெண் ஆற்றில்குதித்திருந்தாள்.

'அடக்கடவுளே' என்றுகத்தியவாறேஆற்றைநோக்கிஓடி, அதேவேகத்தில்உள்ளேகுதித்துஅப்பெண்ணைத்தேடினார்.

அவள்எங்குமேதென்படவில்லை.

''ஒருவேளைதண்ணீஇழுத்திட்டுப்போயிட்டுதோ?'' மீண்டும்மீண்டும்நீருக்குள்முக்குளித்துத்தேடினார்.

அவள்கிடைக்கவேஇல்லை.

குற்றஉணர்ச்சிமேலிட, ''அடப்பாவமேஅநியாயமாஅவளைத் தற்கொலைபண்ணிக்கவெச்சிட்டோமே?''

தண்ணீருக்குமேலேதலையைநீட்டிக்கொண்டுநாலாப்புறமும் சுழன்றுசுழன்று ''ஏய்பொண்ணூ!...ஏய்பொண்ணூ'' கத்தினார்.

பஸ்ஸின் க்ரீச்சென்றபிரேக்சத்தத்தில்கண்விழித்தராஜய்யன், மலங்கமலங்க விழித்தார். 'எல்லாம்கனவா?'. தன்னைத்தானேகேட்டுக்கொண்டார்.

## 10

மறுநாள் அதிகாலையில், கோவில்பட்டி பேருந்து நிலையத்திற்குள் அந்த பஸ் நுழைந்து நிற்க நிதானமாய் இறங்கினார் ராஜய்யன்.

சற்றுத் தள்ளியிருந்த டீக்கடை வாசலில் நின்றிருந்த அந்தச் சிறுவன், ''சார்...வாங்க சார்...டீ...காபி... சாப்பிடலாம் வாங்க சார்'' அங்கிருந்தே அழைத்தான்.

ராஜய்யனுக்கும் அப்போதைக்கு அது தேவைப்பட்டதால், அந்த டீக்கடையை நோக்கி நடந்தார்.

டீ ஆர்டர் செய்து அந்தச் சிறுவனிடம், ''தம்பி... திருமலையாம்பட்டி போறதுக்கு எந்தப் பக்கம் நிற்கணும்?'' கேட்டார்.

''சார்...திருமலையாம்பட்டி போற பஸ்...டவுன் பஸ் சார்!... அது இந்த பஸ் ஸ்டாண்டுக்குள்ளார வராது!...அதனால...நீங்க பஸ்

ஸ்டாண்டுக்கு வெளிய போய்...லெப்ட் சைடுல நில்லுங்க சார்!.... இன்னும் பதினஞ்சு நிமிஷத்துல ஒரு பஸ் வரும்'' என்றான் அவன்.

அவசர அவசரமாய் டீயைக் குடித்து விட்டு, பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே சென்றார் ராஜய்யன்.

அவரைக் காத்திருக்க வைக்காமல் உடனே வந்தது திருமலையாம்பட்டி பஸ்.

ஓடிப் போய் ஏறிக் கொண்டார்.

பஸ்ஸினுள் கால்கள் கட்டப்பட்ட ஆட்டுக் குட்டிகளும், சேவல்களும் அமைதியாய் உட்கார்ந்திருந்தன.

அன்று முகூர்த்த நாள் என்பதால், வெள்ளை வேட்டி சட்டையில் சில ஆண்களும், பட்டுச் சேலையில் ஒன்றிரண்டு பெண்களும் உட்கார்ந்திருந்தனர்.

கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா?....கலையெல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா?...சொல்லெல்லாம் தூய தமிழ் சொல்லாகுமா?

இந்த பஸ்ஸில் பழைய பாடல் இதமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. நிச்சயம் இந்த பஸ் கண்டக்டர் அம்பது வயசுக்காரனாய்த்தான் இருக்கணும் என நினைத்துக் கொண்டார்.

ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த ராஜய்யனுக்கு அந்த அனுபவம் மிகவும் உற்சாகத்தையளித்தது. கண்ணில் காணும் காட்சியெல்லாம் இயற்கையின் எழில் ஓவியமாய்த் தெரிய நெகிழ்ந்து போனார். 'ஆஹா...இன்னும் இந்த நாட்டில்...கிராமங்கள் உயிரோடுதான் இருக்கின்றன'

முக்கால் மணி நேரப் பயணத்திற்குப் பின்,

''சார்....திருமலையாம்பட்டி இறங்குங்க''

கத்திய கண்டக்டரைப் பார்த்து சிநேகமாய்ப் புன்னகைத்தபடி பஸ்ஸிலிருந்து இறங்கினார் ராஜய்யன்.

பெரிய ஆலமரத்தடியில் இரண்டு பெட்டிக்கடை. ஒரு கூல் டிரிங்ஸ் கடை. சதா கொர...கொரவென எதையோ பாடிக் கொண்டிருக்கும் சாப்பாட்டு மெஸ். அதன் வாசலில் ஒரு பீடா கடை.

கீழிறங்கிய ராஜய்யன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, நிதானமாய் நடந்து, அந்த சர்பத் கடையை நெருங்கி, ''பச்சை நாயகியம்மன் கோயில் தெருவுக்கு எப்படிப் போகணும்?'' கேட்டார்.

காதில் பீடி செருகியிருந்த அந்த கடைக்காரன் பதில் சொல்ல வாயைத் திறக்கும் முன், ''அங்க யாரு வீட்டுக்குப் போகணும் சாரு?'' பக்கத்தில் நின்று கொண்டிருந்த இன்னொரு முண்டாசுக்காரன் கேட்டான்.

''சிவஞானம்ன்னு!...நம்ம நண்பர் ஒருத்தர்''

''ஓ...நம்ம சிவா அய்யா வீட்டுக்கு வந்த விருந்தாளியா நீங்க?..அப்ப என் கூடவே வாங்க!...என்ர வண்டி அங்கதான் போயிட்டிருக்கு'' என்றான் அவன், தலையிலிருந்த முண்டாசை அவிழ்த்துக் கட்டியவாறே.

''என்ன வண்டி?'' யோசித்தவாறே ராஜய்யன் சுற்றும் முற்றும் பார்க்க, ''அதோ...அங்க நிக்குது பாருங்க...கூண்டு போட்ட வண்டி...அதுதான் நம்ம பிளசர் காரு'' என்றான் பெரிய சிரிப்புடன்.

வண்டிப் பயண அனுபவத்தைச் சுகிக்க ஆசைப்பட்ட ராஜய்யன், ''ம்...போகலாமே'' என்றார்.

அவனுடன் அந்த கூண்டு போட்ட ஒற்றை மாட்டு வண்டியில் பயணித்த போது ஏற்பட்ட சுகானுபவம் ராஜய்யனை சிலிர்க்க வைத்தது.

இரு புறமும் பச்சைப் பசேலென்று பட்டு விரித்தாற் போல் வயல்கள், அதன் வரப்புகளில் அச்சமின்றித் திரியும் அழகு மயில்கள், வயல்களைத் தாண்டி தூரத்தில் தெரியும் கோயில் கோபுரம், அவ்வப் போது காற்றில் மிதந்து வரும் கோயில் மணியோசை, மண் பாதையில் வண்டிச் சக்கரங்கள் கிளப்பிச் செல்லும் புழுதிப்படலம், எதிரே நடந்து செல்லும் கள்ளங் கபடமற்ற கூலிக்காரப் பெண்கள்.

ஆஹா இந்த ரம்மியங்கள் கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் நகரத்தில் கிடைக்குமா?...பேசாமல் அங்க இருக்கற சொத்தையெல்லாம் வித்திட்டு...இந்த கிராமத்தில் வந்து ஒரு சின்ன ஓட்டு வீட்டை வாங்கி அதில் குடி இருக்கலாம் போலிருக்கே?

''என்ன வண்டிக்காரரே...வெகு வேகமாய்ப் போறாப்பல இருக்கு?'' வெற்றிலை வாய் கூலிக்காரியொருத்தி கிண்டலாய்க் கேட்டாள். அவள் மார்புச் சேலை அளவுக்கதிகமாய் விலகியிருந்தது. அவள் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை.

ஹோ...ஹோ. என்று வினோதமாய்ச் சமிக்ஞை கொடுத்து, மாட்டின் வேகத்தை மட்டுப்படுத்திய முண்டாசுக்காரன், ஏதோ சொல்ல வாயெடுக்க, அதற்குள் முந்திக் கொண்ட இன்னொருத்தி,

ஆமாம்டி...ராத்திரி பூராவும் வெளியூர் சந்தைல இருந்திட்டு... இப்பத்தானே வீடு திரும்பறாரு...காஞ்ச மாடு கம்புல பூந்த மாதிரி...சீக்கிரம் போய் பொண்டாட்டி கூட மல்லுக்கட்ட வேண்டாமா?...அதுக்குத்தான் வேகமா போறாரு...என்ர கொழுந்தனாரு!...பாவம் இன்னிக்கு அந்தப் பொம்பளை படாத பாடு படப் போவுது! என்றாள்.

அதைக் கேட்டு மொத்தப் பெண்களும் கல...கலவென்று சிரிக்க,

சற்றும் கோபம் கொள்ளாத அந்த வண்டிக்காரன், அடியேய் ஆந்தைக் கூட்டங்களா!...என் பொண்டாட்டி நேத்திக்கே ஒலக்கைக்கு அந்தப்பக்கம் உட்கார்ந்திட்டா...அதனால...உங்கள்ல யாராவது ஒரு சிறுக்கி என் கூட வாங்களேன் மல்லுக்கட்ட, என்று தமாஷாய்ச் சொன்னான்.

''அட அழுக்கு முண்டாசு!...நீ மட்டும் தாலி கட்டத் தயார்ன்னு சொல்லு!... மல்லுக்கட்ட நாங்க எல்லோருமே தயார்ன்னு சொல்லுறோம்'' என்றாள் வெற்றிலைக்காரி.

''அடி அடுப்படித் துணிகளா...உங்க அத்தனை பேருக்கும் தாலி கட்டுனா...நான் அடுத்த நாளே காவி கட்டிக்கணும்!டி'' என்றபடி அவன் மாட்டை உசுப்ப, அது தாவிக் கொண்டு பறந்தது.

ராஜய்யனுக்கு பெரும் வியப்பாயிருந்தது.

எவ்வளவு யதார்த்தம்?...கொஞ்சம் கூட விகல்பமில்லாமல் எப்படி இவர்களால் பேச முடியுது?...பழக முடியுது?... இதுவே சிட்டியாய் இருந்தால் இன்னேரம் வெட்டு குத்து அல்ல நடந்திருக்கும்?...அது பெரிய வழக்காகி...கோர்ட்டு வரை அல்லவா போய் நிற்கும்?

வண்டி ஊருக்குள் நுழைந்து அந்த சிறிய சந்தினுள் புகுந்து, முன்புறம் பெரிய திண்ணையுடனிருந்த பழங்கால வீட்டின் முன் நின்றது.

திண்ணை தரை மட்டத்திலிருந்து சுத்தமாய் நாலு அடி இருந்தது. அதன் ஒரு கோடியில் ஆட்டுக் குட்டிகள் படுத்துக் கிடக்க, அருகிலேயே ஒரு கிழவியும் படுத்திருந்தாள்.

திண்ணையில் அமர்ந்திருந்த பெரியவர் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார்.

வண்டியிலிருந்து குதித்திறங்கிய வண்டிக்காரன் அவரருகில் சென்று, ''அய்யா கும்பிடறேனுங்க அய்யா!...நம்மூட்டுக்கு

ஒரம்பரை வந்திருக்காங்க!...நாந்தான் வண்டில இட்டாந்தேன்!...'' என்று தன் விசுவாசத்தை மொத்தமாய்க் காட்டினான்.

''அப்படியா?...சந்தோஷம்'' என்ற பெரியவர், வண்டியிலிருந்து இறங்கி வந்த ராஜய்யனை நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பார்க்க, அவர் சிந்தனை விரல்கள் மூளைக்குள் குடைந்து ராஜய்யனை அடையாளம் தெரிந்து கொள்ள முயன்றன. ஆனால் அந்த முயற்சி அவருக்கு தோல்வியையே தந்தது. 'இந்த மூஞ்சி ஞாபகத்துக்கே வர மாட்டேங்குதே?'

அவரை அதற்கு மேலும் சிரமப்படுத்த விரும்பாத ராஜய்யன், ''அய்யா வணக்கம்!...நான் ராஜய்யன்!''...கோயமுத்தூர்ல நம்ம சிவஞானத்தோட.....சிநேகிதன்

மேற் கொண்டு அவரைப் பேச விடாமல் தடுத்த பெரியவர், ''அடடே...நீங்கதான் ராஜய்யனா?...வாங்க!... வாங்க!...உங்களைப் பத்தி சிவா ரொம்பவே சொல்லியிருக்கான்! வாயெல்லாம் பல்லாக உள்ளே அழைத்தார்.

''அய்யா...அப்ப நான் கெளம்பட்டுங்களா?'' வண்டிக்காரன் தலையைச் சொறிய,

''அது செரி...வந்திட்டு சும்மா போறேங்கறே?...நாளைக்கு பெரியவர் வீட்டுக்குப் போனேன்...ஒரு வாய்க் காபித் தண்ணி கூடக் குடுக்கலேன்னு சொல்றதுக்கா?...இரு...காபித் தண்ணி வரும் குடிச்சிட்டுப் போ'' என்றார் பெரியவர்.

''இல்லைங்கய்யா...வர்றப்பத்தான் டீக்கடைல நின்னு டீ ஒரு கிளாஸ் ஊத்திட்டு வந்தேன்!...இதோ சார் கூடப் பார்த்தாரு!''... என்ற வண்டிக்காரன் ராஜய்யனைப் பார்த்து, ''ஆமாம்தானே சாரு?'' கேட்டான்.

ராஜய்யன் பதில் சொல்லும் முன்,

''அப்ப...இந்தா இதையாவது வெச்சுக்க'' என்ற பெரியவர் இடுப்புப் பகுதியில் சுருட்டி வைத்திருந்த பணக்கற்றையை எடுத்து அதிலிருந்து ஒரு நோட்டை உருவி, அவனிடம் நீட்டினார்.

ஹி...ஹி..என்று அசடு வழியச் சிரித்தவாறே அதை வாங்கிக் கொண்டு நகர்ந்தான் வண்டிக்காரன். போகும் போது மறக்காம ராஜய்யனைப் பார்த்து, ''வர்றேன் சாமி'' என்று சொல்லி விட்டுச் சென்றான்.

11

''வண்டிக்காரன் சென்றதும், வெளியவே நிக்கறீங்களே தம்பி...உள்ளார வாங்க'' என்று சொல்லிய பெரியவர் முன்னே நடக்க, அவரைத் தொடர்ந்து வீட்டிற்குள் நுழைந்தார் ராஜய்யன்.

'அடேங்கப்பா....இவ்வளவு பெரிய வீடா...' விழிகளை விரித்துக் கொண்டு வியப்பாய்ப் பார்த்தார். இந்த மாதிரி வீடுகளை அவர் சினிமாக்களில் மட்டுமே பார்த்திருந்தார்.

''என்ன தம்பி...அசந்து போய் நின்னுட்டீங்க?...இந்த மாதிரி வீட்டையெல்லாம் நீங்க பட்டணத்துல பார்த்திருக்கவே முடியாது!... இதை தொட்டிக் கட்டு வீடுன்னு சொல்லுவாங்க!...என் பாட்டனார் காலத்து வீடு, சுவரெல்லாம் இன்னும் இரும்பாட்டாம் இருக்கு தெரியுங்களா?... ஒரு ஆணி அடிக்கறதுக்குள்ளார கை கழண்டு கீழே விழுந்திடும்!...'' அவர் பேச்சில் பெருமிதம் தெரிந்தது.

''உண்மைதாங்க!...அந்தக் காலத்துக் கட்டிடங்க நிற்கிற அளவுக்கு இந்தக் காலக் கட்டிடங்கள் நிற்குதா?...எல்லாத்திலேயும் கலப்படம்!...'' என்ற ராஜய்யன், ''ஆமாம்...சிவஞானம் வீட்டுல இல்லை போலிருக்கே?'' பார்வையை நாலாப்புறமும் சுழல விட்டபடி கேட்டார்.

''பக்கத்துல ரைஸ் மில்லு வரைக்கும் போயிருக்கான்பா... இப்ப வந்திடுவான்'' என்ற பெரியவர், வீட்டின் உட்புறம் திரும்பி, ''ஆயா....ஏ...ஆயா?'' என்று கத்தினார்.

அறுபது, அறுபத்திரெண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி சமையல்கட்டிலிருந்து எட்டிப் பார்த்தாள். ''என்ன அப்பூ?...என்ன வேணும்?'' கணீர்க் குரலில் வந்து விழுந்தது கேள்வி.

''தம்பிக்கு ஒரு டம்ளர் காப்பித் தண்ணி கொண்டு வா ஆயா!'' என்று கத்தலாய்ச் சொன்ன பெரியவர், ராஜய்யன் பக்கம் திரும்பி, ''தம்பி...சுக்குக் காபி சாப்பிடுவீங்களா?'' கேட்டார்.

''சாப்பிடலாமே?''

''அப்ப....சுக்குக்காப்பி போட்டுரு ஆயா'' என்று பெரியவர் சொல்லும் போது, வியர்த்து விறுவிறுக்க வந்தார் சிவஞானம்.

வாசல் பக்கம் செருப்பைக் கழற்றி விடும் போதே, ராஜய்யனைப் பார்த்து விட்டு, ''அடடே...வாருமய்யா....வாரும்!....வாரும்!...

இப்பத்தான் எங்க ஊருக்கு வழி தெரிஞ்சுதோ?'' கேட்டவாறே உள்ளே வந்தார்.

''அது செரி...நான் வந்து அரை மணி நேரத்துக்கும் மேலாச்சு....அய்யாவுக்கு இப்பத்தான் வந்து வரவேற்க நேரம் கிடைச்சுதோ?'' பதிலுக்கு தமாஷாய்க் கேட்டார் ராஜய்யன்.

''இல்லை ஓய்...ரைஸ் மில்லுல ஏகப்பட்ட வேலை!....அப்புறம் கோயமுத்தூர்ல என்ன விசேஷம்?...உம்ம ஆபீஸெல்லாம் எப்படி போயிட்டிருக்கு?...இன்னும் அந்த முசுடு மேனேஜர்தான் இருக்கானா?...இல்லை வேற மேனேஜர் வந்தாச்சா? ''

''அது செரி...மூணு மேனேஜர் மாறியாச்சு''

குசல விசாரிப்பில் துவங்கி, பள்ளிக் காலத்தில் நடந்து, வாலிப காலத்தை அசை போட்டுக் கொண்டிருந்த போது, ஆயா சுக்குக் காப்பியுடன் வந்தாள்.

நிதானமாய் ஊதி ஊதிப் பருகியபடியே பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு இடையில் புகுந்த பெரியவர், கோயமுத்தூர்த் தம்பி...பழைய நினைவுகளைப் பேச ஆரம்பிச்சா அது மதன காமராசன் கதை மாதிரி போய்க்கிட்டே யிருக்கும்!... அதனால...மொதல்ல எந்திரிச்சுப் போய்க் குளிச்சிட்டு... சாப்பிடுங்க!...அப்புறம் வந்து பேசுங்க என்றார் சிவஞானத்தின் தந்தை.

''அதுவும் சரிதான்'' என்றபடியே எழுந்த சிவஞானம், ஆமாம்... சாருக்கு என்ன?...பாத்ரூம் குளியலா..இல்லை...படித்துறைக் குளியலா?'' கேட்க,

''க்கும்...என்னைய மாதிரி நகரவாசிகளுக்கு படித்துறைக் குளியலெல்லாம் கனவில் மட்டும்தான்'' என்றார் ராஜய்யன்.

''அப்பக் கிளம்பு...ஆத்துக்குப் போய்...அந்தக் குறையையும் நிவர்த்தி பண்ணிடலாம்'' என்றார் சிவஞானம்.

ராஜய்யனும் மகிழ்ச்சியோடு எழுந்தார்.

''கொஞ்சம் இருங்கப்பா....ரெண்டு பேருக்கும் வேட்டியும்... துண்டும் கொண்டாந்து தர்றேன்'' சொல்லி விட்டு வீட்டிற்குள் சென்ற சிவஞானத்தின் தந்தை, இரண்டே நிமிடத்தில் வேட்டி துண்டோடு வந்தார்.

இருவரும் தெருவில் இறங்கி நடக்க, எதிரே வந்த ஒரு தொந்தி மனிதர், ''ஆரு தம்பி?...பட்டணத்து ஆள் மாதிரித் தெரியுது?''

கேட்டார்.

''ஆமாம் செட்டியாரே...நம்ம சிநேகிதர்...கோயமுத்தூர் ஆளு'' என்றார் சிவஞானம்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
நாமார்க்குங் குடியல்லாத் தன்மையான்
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியினையே குறுகினோமே

வழியிலிருந்த கோவிலில் யாரோ ஒரு ஆன்மீகப் பெரியவர் ஆறாம் திருமுறையை ஓதிக் கொண்டிருந்தார்.

காற்றில் மிதந்து வந்து காதில் விழுந்த அந்த ஆன்மிக சுகத்தை அனுபவித்தார் ராஜய்யன்.

ஆற்றங்கரை.

காலை நேரச் சூரிய ஒளி நீர்ப்பரப்பில் வெள்ளித் தகடாய் பிரதிபலித்தது.

கரையோரத்தில், துணி துவைப்பதற்காக அங்குள்ள மக்களால் பயன்படுத்தப்படும் கற்கள், கரைக்கு வந்து படுத்திருக்கும் முதலைகள், தலையைத் தூக்கிப் பார்த்துக் கொண்டிருப்பது போல் மேலே தூக்கிக் கொண்டிருந்தன.

ஒன்றிரண்டு கற்கள் மட்டும் அந்த நேரத்திலும் மடேர்...மடேர் என்று அடி வாங்கிக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளியிருந்த மணற் பரப்பில் இளைஞர்கள் சிலம்பம் கற்றுக் கொண்டிருந்தனர்.

ஒரு பெரியவர் சூரியனை வணங்கியபடி தண்ணீருக்குள் முங்கி முங்கி எழுந்து கொண்டிருந்தார். அவர் வாய் ஏதோவொரு சமஸ்க்ருத மந்திரத்தை விடாமல் உச்சரித்துக் கொண்டிருந்தது.

மலைத்துப் போய் நின்றிருந்த ராஜய்யனைத் தொட்டு உசுப்பினார் சிவஞானம். ''என்ன சாமி?...மலைச்சு நின்னுட்டீரு?....''

இந்த மாதிரிக் காட்சிகளைப் பார்த்திட்டிருந்தாலே போதும் போலிருக்கு என்றார் ராஜய்யன்.

சும்மா பார்வையால் மட்டும் ரசிச்சா போதுமா?.... தண்ணிக்குள்ளார இறங்கிப் பாரும்!...இன்னும் உற்சாகம்

பொங்கும் என்றார் சிவஞானம்.

''கண்டிப்பா'' என்றபடியே தன் உடைகளைக் களைந்து படிக்கட்டின்மீது வைத்து விட்டு, இடுப்பு வேட்டியோடு தண்ணீரில் இறங்கத் தயாரானார் ராஜய்யன். முதலில் சிவஞானம் இறங்கி, தண்ணீர் வெது வெதுப்பாய்த்தான் இருக்கு என்றார்.

அடுத்ததாய் ராஜய்யன் இறங்கினார்.

நீரின் இதமான சூடு மேனியை மென்மையாய் வருடியது. கழுத்து வரை மூழ்கியபடி நின்று, சூரிய ஒளியை அண்ணாந்து பார்த்து ரசித்தார் ராஜய்யன். கால்களுக்கு அடியில் குறுகுறுப்புக் காட்டும் மீன்களுக்காய் சிரித்தார். அவரது நினைவுகள் பின்னோக்கிப் பறந்தது, திருமணமான புதிதில் அவரும் அவர் மனைவியும் ராமேஸ்வரம் கடலில் இதே போன்றதொரு காலை நேரத்தில் குளித்து மகிழ்ந்த காட்சியை, மனதில் முகப்பில் கொண்டு வந்து நிறுத்த, ராஜய்யனுக்கு இதயம் வலித்தது.

எத்தனைதான் ஆதர்ஷ தம்பதியர்களாய் இருந்தாலும், ஆண்டாண்டு காலம் அன்னியோன்யமாக வாழ்ந்தாலும், ஏதோவொரு கால கட்டத்தில் கணவனை மனைவியோ, அல்லது, மனைவியைக் கணவனோ...மரணத்தின் காரணமாய்ப் பிரிந்துதானே ஆக வேண்டும்?

இயற்கையின் நியதியைப் புரிந்திருந்தும் மனசு வேதனிப்பதை மாற்ற முடியவில்லை ராஜய்யனால்.

நீண்ட நேரம் நீரின் சுகமான தழுவலிலேயே கிறங்கிக் கிடந்த ராஜய்யனின் முகத்தில் தண்ணீரை விசிறியடித்தார் சிவஞானம். ''என்ன ஓய்?...தண்ணீரை விட்டு வெளிய போறதா அபிப்ராயமே இல்லையா?'' சிரிப்போடு வந்தது கேள்வி.

''ம்...போகலாம்...போகலாம்...''

இருவரும் நீருக்கு வெளியே வந்து தலை துவட்டிக் கொண்டே நடந்த போதுதான், ராஜய்யனின் காதுகளில் அந்தக் குரல் ஒலித்தது.

## 12

''**கொ**லுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சுதா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு''

திரும்பிப் பார்த்தார் ராஜய்யன்.

கரையோரமிருந்த அந்த பெரிய மரத்தின் வேர்த்திண்டில் அமர்ந்தபடி தண்ணீரைப் பார்த்து, உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்த அந்தச் சிறுவனுக்கு ஆறு வயதிருக்கும்.

மேலே சட்டை எதுவுமில்லை. இடுப்பில் கோவணம் மட்டும். ஒட்டிய வயிறு. மிரண்ட விழிகளில் நிரந்தர சோகம்.

''என்ன சிவஞானம்?..யார் அந்தப் பையன்?'' ராஜய்யன் கேட்டார்.

''அவனா?....'' என்ற சிவஞானம், தன் வலது கை ஆட்காட்டி விரலால் நெற்றிப் பொட்டில் வட்டமாய்க் குறியிட்டுக் காட்டினார்.

ராஜய்யன் புரியாமல் பார்க்க,

''மனநிலை பாதிக்கப்பட்டவன்!....'' என்று சத்தமாய்ச் சொன்ன சிவஞானம், சட்டென்று குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''கிறுக்குப் பயல்'' என்றார்.

''த்சொ....த்சொ...'' என்று அங்கலாய்த்த ராஜய்யன், ''இந்தச் சின்ன வயசுல...புத்தி சுவாதீனமா?'' என்றபடியே அவன் மேல் பரிதாபப் பார்வையை வீசிய போதுதான், அது நிகழ்ந்தது.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சு தா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு''

திரும்பவும் அதே வார்த்தைகளைச் சொன்ன சிறுவன், திடீரென்று உரக்கக் கத்தியபடி தண்ணீருக்குள் சரேலெனப் பாய்ந்தான்.

அதிர்ந்து போனார் ராஜய்யன்.

''அட....இவனோட தெனமும் இதே ரோதனையாப் போச்சுப்பா'' என்று சொல்லியவாறே அவனை நோக்கிப் பதட்டமாய் ஓடினார் சிவஞானம். ஆனால், அவர் அவனை நெருங்கும் முன்பே, அங்கு துணி துவைத்துக் கொண்டிருந்த இருவர் ஆற்றுக்குள் சரேலென்று பாய்ந்து, அவன் முடியைப் பற்றி, மேலே இழுத்து வந்தனர்.

மலங்க மலங்க விழித்தபடி மணலில் அமர்ந்து ஆற்று நீரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனை, ஆளாளுக்கு சகட்டு மேனிக்குத் திட்டித் தீர்த்தனர்.

''எத்தனை நாளைக்குத்தான் இவனை கண் கொத்திப் பாம்பாட்டம் கவனிச்சிட்டிருக்கறது?....ஒரு நாளைக்கு இல்லாட்டி ஒரு நாளைக்கு... அப்படியே போய்த் தொலையட்டும் சனியன்னு எல்லோருமே விட்டுத் தொலைச்சிடணும்!'' காப்பாற்றிக் கரை சேர்த்த இருவரில் ஒருவன் கோபமாய்க் கத்தினான்.

''இவனோட அப்பன்காரன் என்னடா?ன்னா அங்க சாராயக்கடையே கதி ன்னு கெடக்கறான்!...இந்தப் பயல் என்னடான்னா...இங்க ஆத்தங்கரையே கதி! ன்னு கெடக்கறான்!... நிச்சயம் ஒரு நாள் ஏதாச்சுமொரு விபரீதம் நடக்கத்தான் போகுது'' என்றான் இன்னொருத்தன்.

''முழிக்கறதைப் பாரு?....ஆடு திருடின கள்ளனாட்டமா தலையைப் பாரு...பனங்கொட்டையைச் சூப்பின மாதிரி''

சிறிது நேரத்தில் அவர்களனைவரும் கலைந்து போய் விட, அந்தச் சிறுவன் மட்டும் சோகமாய் ஆற்று நீரையே பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

வீட்டிற்குத் திரும்பிய பின்னரும் ராஜய்யனின் மனசு ஆற்றங்கரையில் நடந்தவைகளையே நினைத்துக் கொண்டிருந்தது.

''என்ன ஓய்?...முகம் வாட்டமாயிருக்கு?'' சிவஞானம் கேட்டார்.

''ஒண்ணுமில்லை...அந்தப் பையன் ஞாபகம்'' என்றார் ராஜய்யன்.

''போச்சுடா?...அதை நீர் இன்னும் மறக்கலையா? ''

''என்னமோ தெரியலை!...என்னால அவனை மறக்கவே முடியலை!...ப்ச்...அந்தச் சின்ன இதயத்துக்குள் எத்தனை பெரிய வேதனையோ?''....பாவம் கரகரத்த குரலில் ராஜய்யன் சொல்ல,

''உண்மைதான்!..'' அவனுக்கு ஏற்பட்ட வேதனை...அந்த வயசுக்குப் பெரிய வேதனைதான்!...'' என்றார் சிவஞானம்.

''அப்படியென்ன நேர்ந்தது...மனநிலை பாதிக்கப்படும் அளவுக்கு?''

சில நிமிடங்கள் அமைதியாய் அந்தப் பழைய சம்பவங்களை கோர்வையாய் மனதிற்குள் கொண்டு வந்த சிவஞானம், மெல்ல ஆரம்பித்தார். ''ம்ம்ம்...ஒரு..ஒன்றரை வருஷத்துக்கு முன்னாடி.... அதே ஆற்றங்க்கரைல....''

## 13

இருள் விலகாத அதிகாலை நேரம்.

ஆள் நடமாட்டமில்லாத ஆற்றங்கரை அமைதியாய்ப் படுத்திருந்தது. வேகம் குறைவாயிருந்த போதிலும் லேசான சலசலப்புச்

சத்தத்துடன் நதி ஓடிக் கொண்டிருந்தது. அவ்வப்போது தண்ணீருக்கு மேலே வந்து டைவ் அடித்துச் சென்றன சில குறும்புக்கார மீன் குஞ்சுகள்.

பொழுது விடிந்த பிறகு வந்தால், அங்கு கூட்டம் அதிகமாகி விடுவதுடன், துணிகளை அடித்துத் துவைப்பதற்கான கல்லும் கிடைக்காது. காத்திருந்துதான் வேலையை முடிக்க வேண்டி வரும். அதுவுமில்லாமல் அந்த நேரங்களில் சில விடலைப்பயல்கள், துணி துவைக்கும் பெண்களின் அங்க அழகுகளையும், கெண்டைக்கால் வெளுப்பையும் பார்த்து ரசிப்பதற்காகவே வந்து கூடியிருப்பர். இந்த மாதிரியான பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டு அதிகாலையிலேயே துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து விடுவாள் காவேரி.

கிராமத்து அழகி. கிறங்க வைக்கும் சுந்தரி. ஒப்பனைகளால் மாசு படாத உண்மை வதனம்

அவளுக்குக் காவலாய் அவளது ஐந்து வயது தம்பி குணாவும் வந்து உட்கார்ந்திருப்பான்.

அன்றும் அப்படித்தான் அரைகுறைத்தூக்கத்தோடு வந்திருந்தவன், தான் வழக்கமாய் அமரும் கரையோர மரத்தின் வேர்த்திண்டில் அமர்ந்து, அக்காவுடன் கதை பேசிக் கொண்டிருந்தான்.

''அக்கா...இன்னேரத்துக்கெல்லாம் பேய் வராதில்ல?'' மிரட்சியுடன் சுற்றும் முற்றும் பார்த்தவாறே கேட்டான்.

''அடப் போடா!...இன்னேரத்துக்கும் வராது...எந்நேரத்துக்கும் வராது!...நீ கொஞ்சம் பேசாம இரு போதும்'' தம்பியைக் கடிந்து கொண்டாள்.

''சரிக்கா'' அமைதியானான்.

ஆனாலும் அவன் பார்வை இருட்டில் எதையோ தேடிக் கொண்டேயிருந்தது.

மூன்று நிமிடங்களுக்குப் பிறகு, ''அக்கா....அக்கா'' இழுத்தான்.

''என்னடா?....மறுபடியும் அக்கா..அக்கா...ன்னு இழுக்கறே?'' கோபமாய்க் கேட்டாள்.

வந்து...பேய் வந்திச்சுன்னா....தண்ணிக்குள்ளார இருக்கற மீனெல்லாம் என்ன பண்ணும்?'' அப்பாவியாய்க் கேட்டான் சிறுவன்.

துவைப்பதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்து முறை

த்தவள், ''ம்ம்ம்...பக்கத்துல இருக்கற மரத்து மேலே போயி உட்கார்ந்துக்கும்'' என்றாள் காவேரி.

அதை அப்படியே நம்பிய சிறுவன், ''அப்படியா?'' என்று கேட்டவாறே அண்ணாந்து மரக்கிளைகளைப் பார்த்தான்.

கிழக்கு கொஞ்சம் கொஞ்சமாய் வெளுக்கத் துவங்க, ஒன்றிரண்டு மனிதர்கள் கண்ணில் பட ஆரம்பித்தனர்.

''என்னக்கா...இன்னுமா துவைச்சு முடியலை....சீக்கிரம் வாக்கா!'' வேர்த் திண்டில் அமர்ந்திருந்தவன் சிணுங்க ஆரம்பித்தான்.

''இருடா....இன்னும் பத்தே நிமிஷத்துல முடிச்சிடுவேன்'' என்றபடி வேக வேகமாய்த் துணிகளைத் துவைக்கலானாள்.

சொன்னது போலவே, அடுத்த பத்தாவது நிமிடம் வேலையை முடித்து விட்டுக் கரையேறிய காவேரியைப் பார்த்து, கல...கலவென்று சிரித்தான் குணா.

''ஏண்டா சிரிக்கறே?'' எரிச்சலோடு கேட்டாள் காவேரி.

''உன் காலைப் பாரு'' என்றான் குணா.

''என்ன?'' என்று கேட்டவாறே குனிந்து தன் கால்களைப் பார்த்தாள் காவேரி. ஒரு காலில் மட்டும் கொலுசு இருந்தது. இன்னொரு கால் வெறுமையாயிருந்தது.

''அய்யய்யோ...ஒரு கால் கொலுசு கழண்டு தண்ணியோட போயிடுச்சு போலிருக்கே?'' கைகளை உதறிக் கொண்டு பதறினாள்.

அவள் செய்கையைப் பார்த்து கை கொட்டிச் சிரித்தான் குணா.

அவனை முறைத்துப் பார்த்த காவேரி, தான் துணி துவைத்துக் கொண்டிருந்த இடத்தை நோக்கி ஓடினாள்.

அந்த இடத்தை அடைந்ததும், சற்றும் யோசிக்காமல் அப்படியே தண்ணீரில் அமர்ந்து, இரு கைகளாலும் நீரை அளைந்து அளைந்து தேடினாள்.

''ம்ஹூம்,'' அது தட்டுபடவேயில்லை.

அழுகையே வந்து விட்டது அவளுக்கு. இருக்காதா பின்னே?... ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய் என்று குருவி சேர்ப்பது போல் சேர்த்து வாங்கிய கொலுசாயிற்றே?

''என்னக்கா கொலுசு கெடைச்சுதா?'' மரத்தடியில் நின்று கொண்டு கத்தலாய்க் கேட்டான் குணா.

''ச்சூ...சும்மாயிருடா!...இவன் வேற?'' தன் கோபத்தை அவன்

மீது காட்டினாள் காவேரி.

''நல்லாத் தேடுக்கா''

அவன் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், நீருக்குள் சற்று தூரம் நடந்து, ஆழமான பகுதியை அடைந்து, மூச்சடக்கி... தண்ணீருக்குள் முங்கித் தேடினாள்.

சில வினாடிகளிலேயே மேலெழும்பி வந்து, வேக வேகமாய் மூச்சு விட்டாள். 'எங்க போயிருக்கும்?...ஒருவேளை... தண்ணீல அடிச்சிட்டுப் போயிருக்குமோ?...சரி...அப்படியே போயிருந்தாலும் எவ்வளவு தூரம் போயிருக்க முடியும்?'

தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, இன்னும் கொஞ்சம் தூரம் தள்ளிப் போய் முங்கினாள்.

அங்கும் பிரயோஜனமில்லாது போக, 'இதுக்கு மேலே போனா ஆழம் ரொம்பவே அதிகம்!...அதுவுமில்லாம கீழே பாறைச் சுழல்களும்....பாசிகளும்...எக்கச்சக்கமாய் இருக்கும்!..என்ன பண்ணலாம்? யோசித்தாள்.

பேசாம...போனால் போகுது!ன்னு விட்டுடலாமா?'

அதற்கும் மனசு வராமல், கடவுளை வேண்டிக் கொண்டு, ஆழப்பகுதியை நோக்கி முன்னேறினாள். ''சாமி...சாமி...இந்த தடவை கண்டிப்பா கொலுசு கெடைச்சிடணும்''

''அக்கா...அங்க போகாதே....ஆழம் ஜாஸ்தி'' குணா கத்தினான்.

அதைச் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாமல், கொலுசு ஒன்றையே மனதில் நினைத்துக் கொண்டு, ஆழப்பகுதியில் முங்கினாள்.

விழிகளைப் பெரிதாய் விரித்துக் கொண்டு மேலே வரப் போகும் அக்காவிற்காக காத்திருந்தான் குணா.

சரேலென்று மேலே வந்தாள் காவேரி. ஆனால், வெறும் கையுடன்.

''என்னக்கா...கெடைக்கலேன்னா...விட்டுட்டு வந்திடு... ஆழத்துக்குப் போகாதே'' திகிலோடு சொன்னான் குணா.

அவனை அமைதியாய் இருக்கச் சொல்லி கையைக் காட்டி விட்டு மறுபடியும் முங்கினாள் காவேரி.

இந்த முறை அவள் வெளியே வர நீண்ட நேரம் பிடித்தது. அப்படியும் வெறும் கையுடன்தான் வந்தாள்.

இறுதி முயற்சியாய் மீண்டுமொரு முறை முங்கியவள்....

ஐந்து நிமிடம், பத்து நிமிடம், இருபது நிமிடம், அரை

மணி நேரமாகியும் வெளியில் வராமல் போக, வேர்த் திண்டில் அமர்ந்திருந்த குணா முகம் மாறினான். அவன் கண்களில் பீதி படர ஆரம்பித்தது.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சுதா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு ''

சன்னக் குரலில் சொல்லத் துவங்கியவன், கீறல் விழுந்த ரிக்கார்டு போல் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

பொழுது நன்றாகவே விடிந்து விட்டதால், மக்கள் நடமாட்டம் அதிகரித்திருந்தது.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சு தா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு ''

துணி துவைக்க வந்திருந்த கூட்டம் இவனை வினோதமாகப் பார்த்தது. 'என்னாச்சு இவனுக்கு?...தண்ணியைப் பார்த்து எதையோ கேட்டுக்கிட்டிருக்கானே?' முதுகில் அழுக்கு மூட்டையைச் சுமந்தபடியே வந்த ஒருத்தன் குணாவின் அருகில் வந்து, அவன் தோளைத் தொட்டுக் கேட்டான். ''என்னப்பா?... என்ன பண்ணிட்டிருக்கே இங்க உட்கார்ந்து?''

''அக்கா....அக்கா....உள்ளார...கொலுசு...'' என்று ஆற்று நீரைக் காட்டியபடி வாய்க் குழறலோடு சொன்னான் குணா.

துவைத்து முடித்து கரையில் வைக்கப்பட்டிருந்த துணிகளையும், அவன் பேசிய விதத்தையும் வைத்து ஓரளவுக்கு யூகித்து விட்ட அந்த அழுக்கு மூட்டைக்காரன், தன் முதுகிலிருந்த மூட்டையை அப்படியே கீழே சாய்த்து விட்டு, துணைக்கு இருவரையும் அழைத்துக் கொண்டு நீரில் பாய்ந்தான்.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சு தா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு ''

மதியம் வரை தேடியும் காவேரியின் உடல் கிடைக்கவில்லை. ''என்ன எழவுடா இது?...இந்தப் பயல் உண்மையைத்தான் சொல்றானா?...இல்லை சும்மா வெளையாட்டுக் காட்டறானா?'' சலித்துக் கொண்ட ஒருத்தன்,

''இந்தாப்பா தம்பி....நெஜமா உன்ர அக்கா உள்ளார மூழ்கிடுச்சா?'' கேட்டான்.

மேலும், கீழும் தலையாட்டினான் குணா.

''எந்த இடத்துல மூழ்கிச்சு?''

குணா அந்த இடத்தைக் கை காட்டினான். ''அடக்கெரகமே...

அந்த இடத்துலதான் பாறைச்சுழல் இருக்கில்ல?...அங்க எதுக்கு உன்ர அக்கா போனா?''

''கொலுசு...கொலுசு'' என்றான் குணா.

''இவனென்னமோ கிறுக்கன் மாதிரி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிட்டிருக்கான்!...எதுக்கும் இவங்க வீட்டு வரைக்கும் ஒரு ஆள் போய்ப் பார்த்திட்டு வந்திடறது நல்லது!''

''அதுவும் சரிதான்'' சொல்லியவாறே ஒருத்தன் ஓடினான்.

போனவன் பத்தே நிமிடத்தில் திரும்பி வந்தான். அவன் கூடவே காவேரியின் தந்தை மாரியும் ஒப்பாரி வைத்தபடியே ஓடி வந்தான்.

''அய்யய்யோ...என் ராசாத்தி!...என் கண்ணு!....என்னைய விட்டுட்டுப் போயிட்டியாடி?....பெத்தவளைப் பார்க்கணும்... பெத்தவளைப் பார்க்கணும்ன்னு சொல்லிட்டேயிருந்தே கடைசில பெத்தவளைப் பார்க்க....அவ இருக்கற இடத்துக்கே போயிட்டியாடி?''

ஏழெட்டுப் பேர் மறுபடியும் ஆற்றுக்குள் குதித்துத் தேட ஆரம்பித்தனர்.

இதற்குள் தகவல் ஊருக்குள் பரவி விட, ஜனங்கள் வந்து குவிந்தனர்.

அங்கு என்ன நடக்கின்றது?...என்பதே புரியாமல் வேர்த் திண்டில் அமர்ந்து மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தான் குணா.

மாரியோ மண்ணில் விழுந்து புரண்டான்.

தகவல் தெரிந்ததும் ஊர்ப் பெரியவர் உடனே வந்து சேர்ந்தார். ''என்னப்பா மாரி?...என்னதான் நடந்தது?...துணி துவைக்க வந்த பொண்ணு எப்படி நீருக்குள்ளார மூழ்கிச்சு?''

''அய்யா...இந்த குணா சொல்றதை வெச்சுப் பார்க்கும் போது.... துணி துவைக்கையில் கொலுசு தண்ணில மூழ்கியிருக்கணும்.... அதை எடுக்க தண்ணிக்குள்ளார காவேரி முங்கியிருக்கணும்!... உள்ளாரதான் பாசி அடை...அடையாய் இருக்கே?...போய்ச் சிக்கியிருப்பா'' என்றான் ஒருத்தன்.

பொழுது சாய்ந்தும் காவேரியின் உடல் கிடைக்காது போக, தேடிக் கொண்டிருந்தவர்கள் அலுத்துப் போயினர்.

இதுக்கு மேலே உள்ளார போனா நமக்குச் சிக்கலாயிடும்... அதனால நாளைக்குக் காத்தால வந்து தேடுவோம்'' என்றான்

ஒருத்தன்.

''அநேகமா காலைல காவேரியோட உடல் அதுவா மேலே வந்திடும்!னு நெனைக்கறேன்'' என்றான் இன்னொருத்தன்.

நேரம் ஆக, ஆக அங்கு கூடியிருந்தவர்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து விட, மாரியும், குணாவும் மட்டுமே மிஞ்சினர்.

இருட்டிலும் சலசலத்துக் கொண்டோடியது ஆற்று நீர்.

அந்த ஆற்றங்கரையிலேயே தந்தையும் மகனும் விடிய விடிய அமர்ந்து, காவேரியின் பிணம் மேலே வருமா? என்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

வானத்தில் அரை நிலா அனாதையாய் ஊர்ந்து கொண்டிருந்தது.

காற்றில் ஜில்லிப்பு ஏறிக் கொண்டேயிருந்தது.

முழுசாய் மூன்று தினங்கள் தேடியும் காவேரியின் உடல் கிடைக்காததால், ஊர்ப் பெரியவரின் அறிவுரைப்படி, அவள் பிணம் இல்லாமலேயே ஈமக் காரியங்களைச் செய்து முடித்தான் மாரி.

## 14

குணாவின் கதையைக் கேட்கும் போதே விழியோரம் ஈரம் வாங்கினார் ராஜய்யன். ''அப்புறம்?''

''அப்புறமென்ன?....பொண்ணு போய்ச் சேர்ந்த சோகம் தாங்காம அவ அப்பன் மாரி....சாராயக்கடையே கதி!ன்னு அங்கேயே விழுந்து கெடக்க ஆரம்பிச்சான்!....இந்தப் பயலோ...தண்ணிக்குள்ளார கொலுசு தேடப் போன அக்கா எப்படியும் வருவா!...ங்கற குருட்டு நம்பிக்கைல...தெனம் தெனம் வந்து, அந்த மரத்தடி வேர்த்திண்டில் உட்கார்ந்து ஆத்துத் தண்ணியப் பார்த்துப் பேசிட்டேயிருக்கான்!....அப்பப்ப... தொபீர்ன்னு தண்ணிக்குள்ளார குதிச்சு பெரிய களேபரம் பண்ணிடறான்! ''என்ற சிவஞானம், ராஜய்யனின் கண்களைப் பார்த்து விட்டு'', என்ன ஓய்?...உம்ம கண்ணுல கண்ணீர்?...அழறீரா? ''வியப்பாகிக் கேட்டார்.

கண்களைத் துடைத்துக் கொண்ட ராஜய்யன்'', பாதிக்கப்பட்ட ஒரு மனசுக்குத்தான்பா....இன்னொரு மனசோட வேதனை புரியும்!...இத்தனை நாள் என் அளவுக்கு சோகப்பட்டவர்கள்

இந்த உலகத்துல யாருமே இருக்க மாட்டாங்க!ன்னு நெனச்சி ட்டிருந்தேன்!...இப்பத்தான்...இந்த குணாவைப் பார்த்த பிறகுதான்...என்னோட சோகமெல்லாம் வெகு சாதாரணம்!ன்னு தோணுது!....ஆறு வயசுல தாயை இழந்து....சகோதரியை இழந்து....மனநிலையும் ''பாதிக்கப்பட்டு...குடிகார அப்பன் கைல சிக்கி....ச்சே...'' உணர்ச்சி பொங்கப் பேசினார்.

''என்னது ?...விட்டா அந்தப் பையனை சுவீகாரம் எடுத்துக்குவீர் போலிருக்கே ?'' சிரித்தபடி சொன்னார் சிவஞானம்.

வறட்சியாய்ச் சிரித்து அந்த வாயாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்த ராஜய்யன், அன்றிரவு முழுவதும் அந்த குணாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். அவனுக்கு ஏதாவது செய்தே தீர வேண்டும்!, என்கிற உத்வேகம் அவருக்குள் விரிவடையத் துவங்கி, கடைசியில் அந்த முடிவைத் தேர்ந்தெடுத்தார் ராஜய்யன்.

'சிவஞானம் சொன்னது போல், அவனைச் சுவீகாரம் செய்து கொண்டால் என்ன?....ஆனால், அதற்கு அவனைப் பெற்றவன் சம்மதிக்கணுமே?...குடிகாரப் பயல் முரண்டு பண்ணுவானே? சரி, ஒரு முயற்சிதான் பண்ணிப் பார்ப்போமே?'

மறுநாள், காலை ஐந்தரை மணிக்கே கண் விழித்து விட்ட ராஜய்யன், உறங்கிக் கொண்டிருந்த சிவஞானத்தைத் தொட்டு உசுப்பினார்.

சட்டெனக் கண் விழித்து அதே வேகத்தில் எழுந்து அமர்ந்த சிவஞானம், ''என்ன சாமி...இவ்வளவு சீக்கிரத்துல எழுந்திட்டீரு?....'' கண்களைக் கசக்கியபடி கேட்க,

''ஆத்துக்குப் போவோமா?'' ராஜய்யன் கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டதும் முகம் மலர்ந்து போன சிவஞானம், ''பார்த்தீரா ஓய்?...எங்க ஊர் ஆற்றங்கரையோட மகிமையை?.... ஒரே நாள்ல உம்மை எப்படி வசப்படுத்திட்டுது பார்த்தீரா?''

இருவரும் ஆற்றங்கரைக்குக் கிளம்பினர்.

போகும் வழியில் மெல்ல ஆரம்பித்தார் ராஜய்யன், ''சிவஞானம்...நேற்றைக்கு நீர் சொன்ன ஒரு விஷயத்தை...ராத்திரி பூராவும் நல்லா யோசிச்சுப் பார்த்தேன்!...அதுவும் சரிதான்!னு தோணிச்சு''

''என்ன விஷயத்தை ஓய்?''

''ம்...அந்த குணாவை சுவீகாரம் எடுப்பது பற்றிச் சொன்னீரே?''

ராஜய்யன் ஞாபகமூட்டினார்.

''ஆமாம்..சொன்னேன்!...அதுக்கென்ன இப்போ?''

''நான் முடிவு பண்ணிட்டேன்!...நீர் சொன்ன மாதிரி அந்த குணாவை சுவீகாரம் எடுத்துக்கலாம்!னு முடிவு பண்ணிட்டேன்''

''சாமி...நான் ஏதோ வாய் வார்த்தைக்குச் சொன்னேன்...அதை இவ்வளவு சீரியஸாய் எடுத்து...யோசிச்சிருக்கீரா?'' சிவஞானம் ஆச்சரியமாய்க் கேட்டார்.

''பின்னே?...எனக்கும் யாரும் கிடையாது...தனிமரம்!... அந்தப் பயலுக்கும் சரியான ஆதரவு கிடையாது!...அதான்... எனக்கு அவன்....அவனுக்கு நான்னு வாழலாம்!னு முடிவு பண்ணிட்டேன்!...ஏதோ அப்படியாவது எனக்கு வாழ்க்கைல ஒரு பிடிப்பு வரட்டுமே?'' என்ற ராஜய்யன், ''மண்ணில் பூத்த மலரை மணமுள்ளவரை சுவாசிக்கணும்!...அதே மாதிரி மனதில் பூத்த சிலரை உயிர் உள்ளவரை நேசிக்கணும்!... நான் இந்த குணாவை நேசிக்கப் போறேன்!'' சிரித்தபடி சொன்னார்.

அவர் சொல்வதில் இருந்த யதார்த்த உண்மையைப் புரிந்து கொண்ட சிவஞானம், நண்பரைப் பெருமிதத்துடன் பார்த்தார். ''ஓய்...உம்மை நெனச்சு நான் ரொம்ப பெருமைப்படறேன் ஓய்!.... இத்தனை நாளு நாங்க எல்லாரும் அவனைப் பார்த்திருக்கோம்! ....பரிதாபப்பட்டிருக்கோம்!...ஆனா யாருக்குமே....அவனைத் தத்தெடுத்து வளர்க்கணும்!ங்கற எண்ணமே தோணலை!...உமக்கு மட்டும் எப்படியய்யா?...

''அதான் நேத்திக்கே சொன்னேனே?.... பாதிக்கப்பட்ட ஒரு மனசுக்குத்தான்...இன்னொரு மனசோட வேதனை புரியும்னு... அதேதான்'' என்றார் ராஜய்யன்.

சில நிமிடங்கள் ராஜய்யன் முகத்தையே கூர்ந்து பார்த்த சிவஞானம், ''கவலைப்படாதீர் ஓய்!...எங்கப்பாவுக்கு இந்த ஊர்ல நல்ல செல்வாக்கிருக்கு!...அவர் மூலமா நாம முயற்சி பண்ணினா....நிச்சயமா அந்தப் பையனை நீர் உம்மோட கூட்டிட்டுப் போகலாம்!...அவங்கப்பனைக் கூப்பிட்டு ஊர்ப் பஞ்சாயத்துல வெச்சுப் பேசி....ஒரு தொகையைக் குடுத்திட்டாப் போதும்...காரியம் முடிஞ்சிடும்!...'' என்றார்.

ராஜய்யன் முகத்தில் பிரகாசம் பரவியது.

சிவஞானத்தின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''தயவு செய்து எப்படியாவது ஏற்பாடு பண்ணு சாமி!...அப்படி முடிச்சுக்

கொடுத்தீர்ன்னா....இந்த குணாவை என் உயிரைக் கொடுத்தாவது இந்த நாடே வியக்கற அளவுக்குப் பெரிய ஆளாக்கிக் காட்டுவேன்''! மனதின் உறுதி ராஜய்யனின் கண்களில் தெரிந்தது.

அன்று, ஆற்றங்கரையில் குணாவைக் கண்டதும், தன்னிச்சையாக ஓடிச் சென்று, அவன் தலையை வருடிக் கொடுத்தார் ராஜய்யன். அந்த வருடலில் தாய்ப்பாசம் தெரிந்திருக்கும் போலும், குணா ஒரு வித நெகிழ்ச்சியுடன் தலையைத் தூக்கிப் பார்த்தான்.

அந்தக் கண்களில் பாசத் தேடல்.

அன்பிற்கான அலைச்சல்.

ஆறுதல் வேண்டிய அவஸ்தை.

மெலிதாய்ச் சிரித்து, அவனை உச்சி முகர்ந்து முத்தமிட்டார் ராஜய்யன்.

பிறந்த நாளிலிருந்து இன்று வரை அனுபவித்தேயிராத அந்த சுகத்தில் சிலிர்த்துப் போய் நின்றான் குணா. அப்போதும் அவன் கைகள் ஆற்றையே காட்டின. உதடுகள், ''அக்கா....கொலுசு'' என்றன.

அவனை மார்போடு இறுக அணைத்துக் கொண்டார் ராஜய்யன். இறந்த மனைவி ஜமுனாவின் முகமும், பிறந்து ஒரு மணி நேரம் மட்டுமே இப்பூவுலகில் வாழ்ந்து விட்டு, மறைந்த அந்தச் சிசுவின் பிஞ்சு முகமும், அவர் நினைவுத் திரையில் தோன்றி மறைந்தன.

சிரமப்பட்டு கண்ணீரை அடக்கிக் கொண்டார்.

சிவஞானம் அவர்களை நெருங்கி வந்து, ''என்ன குணா... காலங்கார்த்தாலேயே ஆத்துக்கு வந்திட்டே?'' என்று தோழமையுடன் கேட்டார்.

''அக்கா...கொலுசு'' என்று அதே பல்லவியைத் திரும்பப் பாடினான் அவன்.

''ம்..ம்...அக்கா வந்திடுவாங்க!...அது செரி...நீ இவரு கூட டவுனுக்குப் போறியா?''... நைஸாகக் கேட்டார் சிவஞானம்.

''அக்கா...அங்க...இருப்பாளா?'' வாயோரம் வழியும் எச்சிலைத் துடைத்துக் கொண்டே கேட்டான் குணா.

பதில் சொல்ல முடியாமல் சிவஞானம் திணற, இடையில் புகுந்து சமாளித்தார் ராஜய்யன். ''ம்ம்...இருக்காங்க!...அக்கா... அம்மா...அப்பா...எல்லோரும் இருக்காங்க''

எனக்கு அக்கா மட்டும்தான் வேணும்

ம்...அவங்களும் இருக்காங்களே?

அப்ப வர்றேன்!...இப்பவே போகலாமா? எழுந்து தயாரானான்.

நீ இப்ப வீட்டுக்குப் போ!...நாங்க அப்புறமா வந்து உன்னையக் கூட்டிட்டுப் போறோம்!...என்று சொல்லி அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்த சிவஞானம், அன்றே தன் தந்தையிடம் ராஜய்யனின் எண்ணத்தைச் சொன்னார்.

வியப்புடன் தன் புருவங்களை உயர்த்திய சிவஞானத்தின் தந்தை, நாம மகிழ்ச்சியா இருந்தால்...வாழ்க்கை நல்லா இருக்கும்!... அதுவே...நம்மால் பிறரை மகிழ்ச்சியாய் வைக்க முடிந்தால்... அந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும்!னு சொல்வாங்க!... இந்தச் செயல் மூலமா...உன் சிநேகிதன் தன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டார் என்றார்.

அதே மகிழ்ச்சியுடன், ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரிடம் சென்று பேசினார்.

இது போன்றதொரு சுவீகாரக் கோரிக்கையை தன் அனுபவத்தில் சந்தித்தேயிராத பஞ்சாயத்துத் தலைவர் கண்களை மூடிக் கொண்டு யோசித்தார். பின்னர் நிதானமாய்த் திறந்தவர், ''இன்னிக்கு சாயந்திரம் பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்டி...அதுல பேசி முடிவெடுக்கலாமே?'' என்று சொல்ல,

''தாராளமாய்க் கூட்டுங்க தலைவரே....அதுதான் சரியும் கூட!... அப்படிச் செய்தால்தான் நாளைக்கு வேறெந்த பிரச்சினையும் தலை தூக்காது!...இல்லேன்னா...எவனாவது புதுசா உள்ளே நுழைஞ்சு, பட்டணத்துக்காரன் பையனைக் கடத்திக்கிட்டுப் போயிட்டான்னு பிராது குடுத்தாலும் குடுத்துடுவான்!'' என்றார் சிவஞானத்தின் தந்தை.

அன்று மாலை நடந்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் எந்த வித எதிர்ப்பும் இருக்காது, என்கிற முழு நம்பிக்கையோடிருந்த ராஜய்யனையும், சிவஞானத்தையும் அதிர வைக்கும் விதமாய் வந்து நின்றார் மாரியின் மச்சினன் கோடீஸ்வரன்.

## 15

''நாங்க என்ன பையனை வளர்க்க வக்கில்லாமலா கெடக்கோம்?...பட்டணத்துக்காரர் கைல பொசுக்குன்னு தூக்கிக் குடுக்க?...என்

தங்கச்சி பையன் ஒண்ணும் அனாதையில்லை!...தாய் மாமன் நானிருக்கேன்'' உரத்த குரலில் பேசியவன் வாயிலிருந்து சாராய வாடை வீசியது.

இப்படியொரு தடையை எதிர்பார்த்திராத ராஜய்யன், சிவஞானத்தைப் பரிதாபமாய்ப் பார்க்க,

மெல்ல அவரருகே வந்து, ''ஒண்ணும் கவலைப்படாதீர் ஓய்...எங்கப்பா...இருக்கார்...எல்லாத்தையும் கச்சிதமாய் முடிப்பார்'' என்றார்.

அவர் சொன்னது போலவே அவரது தந்தை பேசினார், ''ம்ம்ம்...இந்த கோடீஸ்வரன் சொல்லுறதும் சரிதான்!... பொண்ணு போன நாளிலிருந்து அந்தப் பயலோட அப்பன்காரன் சாராயக்கடையே கதின்னு கெடக்கறான்!...பயல் சாப்பிட்டானா?...தூங்கினானா?ன்னு கூடப் பார்க்கறதில்லை...''

''ஆமாம் சாமி...அதுதான் ஊருக்கே தெரியுமே?'' என்றார் பஞ்சாயத்து தலைவர் அவருக்கு ஒத்து ஊதும் விதமாய்.

''ம்ம்ம்...அய்யா கோடீஸ்வரரே...உன் தங்கச்சி மகள் காவேரி செத்துப் போயி....ஒன்றரை வருஷமாச்சு...இந்த ஒன்றரை வருஷத்துல...தாய் மாமனான நீரு...எத்தனை தரம் வந்து பயலைப் பார்த்திட்டுப் போனீரு?...சொல்லும்!'' சிவஞானத்தின் தந்தை கேட்க,

அரண்டு போன அந்த கோடீஸ்வரன், ''அது...வந்து...'' என்று இழுத்த கோடீஸ்வரன், ''எனக்கு என் ஜோலியே மென்னியைத் திருகுது...அதான்...வர முடியலை!...'' என்றவன், கூட்டத்தைப் பார்த்து, ''நானும் கூலிக்காரன்தானே?'' என்று சொல்லி சமாளிக்கப் பார்த்தான்.

''அதான்...அதான்...இப்படி அப்பன்காரனும் கண்டுக்காம இருந்து, மாமன்காரனும் கண்டுக்காம இருந்தா...அந்தப் பையன் என்ன செய்வான்?...அட...படிப்பு மண்ணங்கட்டியெல்லாம் கூட வேண்டாம்யா...மூணு வேளை அதோட வயித்துக்குச் சோறு போடணுமல்லவா?'' என்று மாரியைப் பார்த்து கத்தலாய்ச் சொன்னார் சிவஞானத்தின் தந்தை.

அவன் தலை குனிந்து நின்றானே தவிர பதில் பேசவில்லை.

''யோவ்...கோடீஸ்வரா...இந்த ஒன்றரை வருஷத்துல அந்தப் பையன்.....அக்காவைத் தேடிக்கிட்டு கிறுக்குப் பிடிச்ச மாதிரி பத்து தடவைக்கும் மேலே ஆத்துக்குள்ளார

குதிச்சிருக்கான்!...''அவனோட ஆத்தா செஞ்ச புண்ணியத்தாலோ என்னவோ...ஒவ்வொரு தடவையும் யாரோ ஒருத்தர் காப்பாத்திடறாங்க!...

கூட்டத்தில் ஒருத்தன், ''ஆமாம்...ஆமாம்...நானே மூணு தடவை காப்பாத்தியிருக்கேன்'' என்றான்.

''எப்பவும் நேரம் நல்லாயிருக்கும்!ன்னு சொல்ல முடியாது!... பொசுக்குன்னு ஒருநாள் யாருமில்லாத நேரத்துல...யாரும் பார்க்காத சமயத்துல தண்ணீல குதிச்சிட்டான்னா...அப்புறம் விபரீதம்தான்!... அவனோட அக்கா காவேரி கிட்டேயே போயிடுவான்!''

அது வரையில் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டு வந்த அந்தக் கோடீஸ்வரன், ''இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?'' சத்தமாய்க் கேட்க, ''ம்ம்ம்...இந்தப் பயலை மாரியை நம்பி இங்கே விட முடியாது...அதனால நீயே உன் கூட கூட்டிட்டுப் போயிடு!...முடிஞ்சா படிக்க வை!..இல்லையா உன்னைய மாதிரியே கூலி வேலை பழக்கி விடு...என்ன சொல்றே?''

சும்மாவாகிலும் குட்டையைக் குழப்பி, அதன் மூலம் பட்டணத்துக்காரரிடமிருந்து ஒரு சொற்ப தொகையையாவது வாங்கி விட வேண்டும், என்று திட்டமிட்டிருந்த கோடீஸ்வரனுக்கு பகீர் என்றானது. 'ஆஹா...நாம எதையோ நெனச்சு வந்தா....இங்க கதையே மாறுதே?...போற போக்கைப் பார்த்தா இந்தக் கிறுக்குப் பயலை நம்ம தலைல கட்டிடுவானுங்க போலிருக்கே?'

அவன் முக பாவத்திலிருந்தே அவன் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட சிவஞானத்தின் தந்தை, சரியான நேரத்தில் ராஜய்யனைப் பேச விட்டார். ''ம்...நீங்க சொல்லுங்க...இந்தப் பையனைத் தத்தெடுத்திட்டுப் போயி...என்னென்ன பண்ணப் போறீங்க?... இப்பவே இந்தப் பஞ்சாயத்துக் கூட்டத்துக்கு முன்னாடி சொல்லிடுங்க முதல் வேலையா...இவனை ஒரு நல்ல மன நல மருத்துவர் கிட்டே கூட்டிட்டுப் போய்...சிகிச்சை கொடுத்து... சராசரி மனநிலைக்கு கொண்டு வருவேன்!...உயர்தர பள்ளியில் சேர்த்து...படிக்க வைப்பேன்...என்னோட சம்பாத்தியம் முழுவதையும் இவன் படிப்பிற்கே செலவு பண்ணுவேன்!... இவனை வெளி நாட்டுக்குக் கூட அனுப்புவேன்! என்று சொல்லிக் கொண்டிருந்த போதே, வேகமாய் வந்து ராஜய்யனின் கால்களில் விழுந்து கதறினான் மாரி,

''அய்யா....தெய்வமே!....நான் திடீர்னு செத்துப் போயிட்டா... என் மகன் அனாதையா தவிப்பானே?ன்னு கவலைப் பட்டுக்கிட்டிருந்தேன்!...அந்தக் கவலையைப் போக்கும் தெய்வமா நீங்க வந்திருக்கீங்க அய்யா'' என்றவன் விருட்டென்று எழுந்தான்.

கூட்டத்திற்கு நேர் எதிரில் வந்து நின்று,. இந்தப் பஞ்சாயத்துக்கு முன்னாடி சுய நினைவோட சொல்றேன்.... என் மகனை இவருக்கு தத்துக் கொடுக்க நான் மனப்பூர்வமா சம்மதிக்கறேன்!

பட...படவென்று கை தட்டினார் சிவஞானத்தின் தந்தை.

கோடீஸ்வரன் திடீரென்று காணாமல் போனான்.

''பட்டணத்துக்காரத் தம்பி...முறைப்படியா பேப்பர்ல எழுதி...மாரிகிட்ட கையெழுத்தெல்லாம் வாங்கித் தர்றோம்!...நீங்க பையனைக் கூட்டிட்டுப் போங்க!...அவனுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் குடுங்க'' என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

தனிமரமாய் சிவஞானத்தின் கிராமத்திற்குச் சென்றவர் ஒரு உறவுக் கன்றோடு திரும்பி வந்தார்.

கிராமத்தை மட்டுமே பார்த்துப் பழகியிருந்த குணா நகரத்தின் ஒவ்வொரு அசைவிற்கும் வியப்புக் காட்டினான்.

காலிங் பெல் சத்தத்திற்கு மிரண்டான்.

குக்கர் விசிலுக்குப் பீதியடைந்தான்.

ஏரோப்ளேன் ஓசைக்கு பயந்து நடுங்கினான்.

சில வேளைகளில் அவனைப் பார்க்கச் சிரிப்பாகவும், பல வேளைகளில் அவனைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது ராஜய்யனுக்கு.

வந்தவுடன் முதல் வேலையாக நகரத்திலேயே கைராசியான மனநல மருத்துவரிடம் அப்பாயிண்ட்மெண்ட் பெற்றுக் கொண்டு, குணாவை அழைத்துச் சென்று நிறுத்தினார் ராஜய்யன்.

அந்தப் பிஞ்சு மனம் பாதிப்பிற்குள்ளான கதையை அந்த மனநல மருத்துவரிடம் தெளிவாய் விவரித்தார்.

''முழுவதையும் பொறுமையாய்க் கேட்டு முடித்த டாக்டர், இது ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லை!...ரொம்ப ஈஸியா க்யூர் பண்ணிடலாம்'' என்ற டாக்டர், அவனை முழுவதுமாய்ப் பரிசோதித்து விட்டு, ''டோண்ட் வொர்ரிமிஸ்டர் ராஜய்யன்!... இது இடையில் ஏற்பட்ட பாதிப்புதான் என்பதினால்...கண்டிப்பா

குணப்படுத்திட சான்ஸ் இருக்கு!...பட்...இட் வில் டேக் லாங் டைம்'' என்றார்.

''நோ ப்ராப்ளம் டாக்டர்!....எத்தனை மாசமானாலும் சரி... எத்தனை வருஷமானாலும் சரி!...என்னோட குணா நார்மலுக்குத் திரும்பணும்!...இவனோட எதிர்காலத்தைப் பத்தி ஒரு பெரிய கனவே கண்டுக்கிட்டிருக்கேன் நான்'' என்றார் ராஜய்யன்.

பதில் பேசாமல் புன்னகைத்தார் டாக்டர்.

மூன்று மாத சிகிச்சையில் குணா முக்கால் பங்கு தேறியிருந்தான். எப்போதாவது ஒரு முறை திடீரென்று பழைய நினைவுகளின் தாக்கத்தில், ''அக்கா...கொலுசு'' என்று மெல்லிய குரலில் தனக்குள் சொல்லிக் கொள்வானே தவிர மற்றபடி, எல்லாச் சிறுவர்களையும் போலத்தான் இருந்தான்.

ஒரு நாள், ''மிஸ்டர் ராஜய்யன்!...நம்ம குணாவுக்கு இதுவரையில் குடுத்த ட்ரீட்மெண்டே போதும்!ன்னு நினைக்கறேன்!...நீங்க அவனை இங்கிருந்து டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிட்டுப் போகலாம்!...பத்து நாளைக்கு ஒரு தடவை....இங்க வந்து காட்டிடுங்க!...அப்புறம் இன்னொரு விஷயம்!....அந்தப் பழைய சங்கதிகளைக் கிளறுகிற மாதிரி எந்த விஷயத்தையும் அவன் கிட்டப் பேச வேண்டாம்!...அவன் மனசிலிருந்து அந்தப் பழைய நினைவுகள் மொத்தமாய்க் கரைந்து போய் இப்பத்தான் அவன் மனசு ஓரளவுக்குத் தெளிவாகியிருக்கு!...ஸோ...அதையெல்லாம் அவாய்ட் பண்ணிடுங்க'' என்று டாக்டர் சொல்ல,

''சரிங்க டாக்டர்!...நான் பார்த்துக்கறேன்'' என்று சாதாரணமாகராஜய்யன்சொல்ல,

''மிஸ்டர்ராஜய்யன்அந்தவிஷயத்துலநீங்கரொம்பஜாக்கிரதையாய்இருக்கணும்!...மனிதனுடையஆழ்மனம்ஒருகருத்தைஏற்றுக்கொண்டவுடன்துரிதமாகஅதைச்செயல்படுத்ததுவங்கிவிடும் அந்தக்கருத்தைநடைமுறைப்படுத்துவதற்குஅதுதன்னோடவலிமைமிக்கஅனைத்துபலங்களையும்ஒன்றுதிரட்டிபயன்படுத்தும் நாம்ஆழ்மனத்தைஎதிர்மறையாகப்பயன்படுத்தினால்அதுபிரச்சினையைத்தான்கொண்டுவரும்''

''ஓ.கே.டாக்டர்''

குணாவைஅழைத்துக்கொண்டு அந்தமனநலமருத்துவமனையை விட்டு வெளியேறும் முன், மீண்டுமொரு முறை டாக்டரின் அறைக்

குச் சென்று, ''டாக்டர்...ஒரு முக்கியமான விஷயத்தை கேட்க மறந்திட்டேன்'' என்றார் ராஜய்யன்.

''சொல்லுங்க மிஸ்டர் ராஜய்யன்''

''வந்து....நான் குணாவை ஸ்கூல் சேர்த்து விடலாம்!ன்னு இருக்கேன்!...அவன் இப்ப இருக்கற நிலைல...அவனைப் படிக்க வைக்கறது...சரியா?....தப்பா?...ன்னு குழப்பமாயிருக்கு டாக்டர்''

''இதுல குழப்பத்துக்கு இடமேயில்லை மிஸ்டர் ராஜய்யன்!... நீங்க தாராளமா அவனை ஸ்கூல்ல சேர்க்கலாம்!...இன்னும் சொல்லப் போனா...கல்விதான் அவனுக்கு நல்ல மருந்து!ன்னு கூடச் சொல்லலாம்!..அவனுடைய முழு கவனமும் கல்வியின் பக்கம் திரும்பும் போது...பழைய தாக்கங்கள் அவனை மறுபடியும் பாதிக்க சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும்!...''

சந்தோஷமாய் வெளியேறினார் ராஜய்யன்.

டாக்டரின் வார்த்தைகள் நூற்றுக்கு நூறு உண்மையென்பதை குணாவைப் பள்ளியில் சேர்த்த பிறகுதான் ராஜய்யன் உணர்ந்து கொண்டார்.

ஆம்!

படிப்பு வாசனையே இல்லாத அந்தக் கிராமத்துக் குழந்தை மற்ற மாணவர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, வகுப்பில் முதல் மாணவனாகத் தேறிய போது வியப்பின் உச்சிக்கே போனார் ராஜய்யன்.

அவரது உள்ளத்தில் அறையப்பட்ட அந்த வியப்புக் குறியை மென்மேலும் பெரிதாக்கிக் கொண்டேயிருந்தான் குணா.

படிப்பு....

படிப்பு....

படிப்பு....

இதைத் தவிர வேறொன்றையும் அவன் உள்ளம் நினைத்துப் பார்க்கவில்லை.

அவன் படிப்புத் திறமையையும், ஆர்வத்தையும் கண்டு மகிழ்ந்த ராஜய்யன் தன் சம்பாத்தியம் முழுவதையும் அவன் படிப்புக்காகவே இறைத்தார். அவனுக்கு எந்த விதத்திலும், எந்தக் குறையும் ஏற்பட்டு விடக் கூடாது, என்பதில் படு தீவிரமாயிருந்தார்.

பள்ளி இறுதித் தேர்வில் மாவட்டத்திலேயே முதல் மாணவனாகத் தேறியவனுக்கு மருத்துவப் படிப்பிற்கான வாய்ப்பு தானாகவே

வலிய வந்தது.

நடப்பதெல்லாம் கனவா?...இல்லை நிஜமா?...என்று புரியாத நிலையில், ஆற்றங்கரையில் கோவணத்துடன் உட்கார்ந்திட்டிருந்த பயல்...இன்னிக்கு மெடிக்கல் ஸ்டூடண்டா? தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

அவர் தன் வியப்பிலிருந்து மீள்வதற்குள் ஆண்டுகள் ஓடி, சாதனை மதிப்பெண்களுடன் எம்.பி.பி.எஸ்.படிப்பையும் முடித்து விட்டு, மருத்துவக் கல்லூரியிலிருந்து வெளியே வந்தான் குணா.

தன் காலில் விழுந்து வணங்கிய குணாவைத் தொட்டுத் தூக்கிய ராஜய்யனின் கண்களில் குற்றாலம்.

''என்ன டாடி?..அழறீங்களா?'' நெகிழ்ச்சியோடு கேட்டான் டாக்டர் குணா.

''இல்லைப்பா...இது அழுகையில்லப்பா!...ஆனந்தக் கண்ணீர்'' என்றார் ராஜய்யன் தழுதழுக்கும் குரலில்.

''ஆஹா..இதுக்கே ஆனந்தக் கண்ணீர் விடறீங்கன்னா.... இன்னொரு விஷயத்தையும் சொன்னா ஓன்னு வாய் விட்டே அழுதிடுவீங்க போலிருக்கே?'' என்றான் குணா சிரிப்போடு.

''என்னப்பா சொல்றே?''

''யெஸ் டாடி!...எம்.எஸ்.படிப்பிற்காக கவர்ன்மெண்ட் இந்தியாவில் ஏழு பேரை செலக்ட் பண்ணி அமெரிக்கா அனுப்பப் போகுது!...அந்த ஏழு பேர்ல உங்க மகன் குணாவும் ஒருத்தன்!.... ஹண்ட்ரட் பர்ஸண்ட் கவர்மெண்ட் ஸ்காலர்ஷிப்!'' என்றான் குணா உற்சாகத் துள்ளலோடு.

ராஜய்யனால் தரையிலேயே நிற்க முடியவில்லை.

'ஆண்டவா!....வாழ்க்கையின் முதல் பாதியில் இவனுக்கு சோகத்தை மட்டுமே ஒட்டு மொத்தமாக் குடுத்தே!...அதுக்கு மாற்றா....இப்ப இரண்டாம் பாதில ஒட்டு மொத்தமா சந்தோஷத்தை மட்டுமே அள்ளிக் கொடுக்கலாம்!னு முடிவு பண்ணிட்டியா ஆண்டவா?' என்று மேலே பார்த்துக் கேட்ட ராஜய்யனைப் பார்த்துச் சிரித்தான் குணா.

''டாடி....யார் கிட்டே பேசிட்டிருக்கீங்க?''

''ம்...ம்...கடவுள் கிட்டே!....காட் ஈஸ் கிரேட் மை ஸன்'' என்றார் ராஜய்யன்.

''நோ....நோ....நான் ஒத்துக்க மாட்டேன்!....என்னைப்

பொறுத்த வரையில்...என் டாடி அந்தக் கடவுளை விட கிரேட்!... ஏன்னா...வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியிலும் என் கூட இருந்து, உன்னால் முடியும் என்று கூறி...என்னை உயரத்தில் ஏற்றி விட்ட ஏணி...அந்த கடவுளல்ல...என் டாடி'' என்றான் குணா.

''சரி...எப்போ அமெரிக்கா கிளம்பப் போறே?'' ராஜய்யன் கேட்டார்.

''ம்ம்ம்...'' என்று மனதிற்குள் கணக்குப் போட்ட குணா, சரியா... இன்னும் ஒரு மாசமிருக்கு....அதாவது நெக்ஸ்ட் மன்த் பத்தாம் தேதி

''இன்னும் ஒரு மாதம்தான், அதற்குப் பிறகு இந்த மகனைப் பிரிய வேண்டும், என்கிற சோகம் ஒரு புறம் இருந்தாலும், அவன் அமெரிக்காவிலிருந்து பெரிய டாக்டராகத் திரும்பி வருவான், என்கிற எண்ணம் அவரை சந்தோஷப்படுத்தியது.

அன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, ஒரு நல்ல புதன் கிழமையன்று, குணாவை சென்னை விமான நிலையம் வரை சென்று வழியனுப்பி வைத்து விட்டு வந்த ராஜய்யன், மீண்டும் தனிமைத் தவம் புரிய ஆரம்பித்தார்.

பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டே நாட்களை நகர்த்தினார். அவ்வப்போது கூரியர்க்காரன் கொண்டு வந்து தரும் தபால் அவரது உயிரைப் புதுப்பித்துக் கொண்டிருந்தது.

## 16

தலையை வேகமாக உதறி பழைய நினைவுகளிலிருந்து மீண்டு வந்த ராஜய்யன், கூரியர்க்காரன் கொடுத்து விட்டுச் சென்ற கடிதம் கையிலிருந்து நழுவி விழ, குனிந்து எடுத்தார்.

தரையில் காரை பெயர்ந்திருந்த இடம் அவரைப் பார்த்துச் சிரித்தது.

பயல் வருவதற்குள் வீட்டைக் கொஞ்சம் சரி செய்து விடணும்!... அமெரிக்க ரிட்டர்ன் டாக்டர் வீடு இப்படியிருந்தா எனக்குத்தானே கேவலம்?....போறாததற்கு இந்தத் தரகர் வேற ஏகப்பட்ட பெரிய இடத்துப் பொண்ணுக ஜாதகத்தைக் கையில் வெச்சுக்கிட்டு, சின்னய்யா எப்ப வர்றார்?....சின்னய்யா எப்ப வர்றார்?ன்னு அரிச்செடுக்கறான்!...பையன் கிட்டே பேசி ஒரு நல்ல முடிவா எடுக்கணும்!

பையன் வந்ததும்... இது செய்ய வேண்டும், அது செய்ய வேண்டும் என்கிற யோசனையிலேயே இருபது நாட்களை ஓட்டினார்.

அந்த நாளும் வந்தது.

அவன் அமெரிக்கா செல்லும் போது சென்னை வரை சென்று வழியனுப்பி வைத்த ராஜய்யனால் உடல் நிலை காரணமாக இப்போது அவனை வரவேற்க சென்னைப் போக இயலவில்லை. அவருக்குள் அது ஒரு மிகப் பெரிய வருத்தமாயிருந்த போதும், குணா அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் வந்து சேர்ந்தான்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது.

குணா இறங்கினான்.

பள...பளக்கும் கோட் சூட்டில், வெளிநாட்டுக்காரனைப் போன்ற ஒரு பொன்னிறத்தில், உயரமாய், மிடுக்கோடு வீட்டினுள் நுழைந்தவன்,

கூடத்திலிருந்து வேக வேகமாய் வந்த ராஜய்யனைப் பார்த்ததும், ''ஹாய் டாட்?...ஹவ் ஆர் யூ?'' நுனி நாக்கு ஆங்கிலத்தில் விசாரித்தான்.

''நான் நல்லாயிருக்கேன்பா!....என்னப்பா நீ இப்படி இளைச்சிட்டே?...'' குணாவை மேலிருந்து கீழ் வரை பார்த்து விட்டு, வருத்தத்துடன் கேட்டார்.

''நோ...நோ....நான் அப்படியேதான் இருக்கேன்!...ரொம்ப நாள் பார்க்காததினால் உங்க கண்ணுக்கு அப்படித் தெரியுது!'' என்ற குணா டிரைவர் பக்கம் திரும்பி, ''டிரைவர்...டிக்கில இருக்கற பெட்டிகளையெல்லாம் எடுத்து...இப்படி வெளியிலேயே வெச்சிட்டுப் போங்க!...நான் எடுத்து உள்ளே வெச்சுக்கறேன்'' என்றான்.

வீட்டிற்குள் வந்ததும், ''என்ன டாட்?....உங்களுக்கு உடம்பு இப்ப எப்படியிருக்கு?...கிட்டினஸ் குறைஞ்சிருக்கா?...நான் லெட்டர்ல எழுதியிருந்த மாதிரி மெடிசின்ஸ் அப்ளை பண்றீங்கல்ல?'' கேள்விகளை அடுக்கினான் குணா.

மெலிதாய்ப் புன்னகைத்த ராஜய்யன், ''இனி எல்லாம் சரியாயிடும்பா!...நீ வந்திட்டியில்ல?...இனி எந்த வியாதியும் என்னை நெருங்காது!...நீ என் கூட இருக்கும் போது...எனக்கு ஒரு தனி தெம்பே வந்திடுது என்றார்.

அதைக் கேட்டதும் முகம் மாறிய குணா, ''ஸாரி டாட்!.... என்னால் தொடர்ந்து உங்க கூட இருக்க முடியாது போலிருக்கு''

குண்டைத் தூக்கிப் போட்டான்.

அதிர்ந்து போனார் ராஜய்யன்.

''என்னப்பா?...என்ன சொல்றே?'' அவர் குரல் தழுதழுத்தது.

''யெஸ் டாட்!...எனக்கு டெல்லி மிலிடரி ஹாஸ்பிடல்ல சீப் சர்ஜனா போஸ்டிங் ஆயிருக்கு!...ஒரு மாசத்துல நான் அந்த வேலைல ஜாய்ன் பண்ணணும்!''... சந்தோஷமான அந்த விஷயத்தை அவன் வருத்தமாய்ச் சொன்னான்.

மௌனக் கண்ணீர் வடித்தார் ராஜய்யன்.

நெகிழ்ந்து போனான் குணா.

''டாட்?...வாட் ஈஸ் திஸ்?...அழறீங்களா?'' என்று கேட்ட குணா, சில வினாடிகள் யோசித்து விட்டு, ''ஓ.கே...டாட்!...நீங்க இவ்வளவு தூரம் அப்செட் ஆகும் போது...அந்த வேலையை நான் ஏத்துக்கப் போறதில்லை!....ரிஜக்ட் பண்ணிடப் போறேன்!... எனக்கு என்னோட டாடிதான் முக்கியம்...'' என்றான்.

''அய்யய்யோ...அப்படிச் சொல்லாதப்பா!...எவ்வளவு பெரிய பதவி அது?...நீ வாழ்க்கைல ரொம்ப ரொம்ப உயரத்துக்குப் போகணும்!ன்னுதானே நான் கனவு கண்டுட்டிருக்கேன்?'' என்றார் ராஜய்யன்.

''பட்...நீங்க ரொம்ப பீல் பண்றீங்களே?''

''அது...வந்து....அது இருக்கத்தான்பா செய்யும்?....அதுக்காக நீ அந்த வேலையை உதறி விட வேண்டாம்!...சரி...எப்ப ஜாயின் பண்ணப் போறே?....ஒரு மாசம் கழிச்சுத்தானே?....இந்த ஒரு மாசம் என் கூட இருப்பியில்ல?'' பரிதாபமாய்க் கேட்டார்.

''ஷ்யூர்...ஷ்யூர்'' என்றவனை உச்சி முகர்ந்து நெற்றியில் முத்தமிட்டார்.

சின்ன வயசு குணா ஒரு விநாடி அவர் மனசுக்குள் வந்து போனான்.

''டாட்...ஒன் மினிட்'' என்று சொல்லி விட்டு அறைக்குள் சென்று விட்டுத் திரும்பிய குணாவின் கையில் ஒரு சிறிய அட்டைப் பெட்டி, ''இந்தாங்க...இது உங்களுக்கு'' சொல்லியவாறே நீட்டினான்.

''என்னப்பா இது?'' வாங்கினார்.

''திறந்து பாருங்க!''

கவனமாய் அந்த அட்டைப் பெட்டியைத் திறந்தார் ராஜய்யன். உள்ளே, பளபளப்பாய் ஒரு மொபைல் போன். ''அட... எனக்கெதுக்கப்பா...இதெல்லாம்?''

''அது செரி..நான் டெல்லி போன பிறகு...நீங்க என் கூட பேசணுமில்ல?...அதுக்குத்தான் என்றான் குணா.''

''இத்தனை வருஷமா அமெரிக்காவிலிருந்து கடிதம் மூலமாய்த்தானே பேசிக்கிட்டோம்...இப்பவும் அதே மாதிரி பண்ணிட வேண்டியதுதானே?''

''ஹய்யோ...டாட்!...இன்னும் பழைய மாதிரியே இருக்கீங்களே?...புதுசா வந்திருக்கற டெக்னாலஜியை எல்லாம் உபயோகப்படுத்திப் பழகிக்கணும் டாட்''

''என்னமோப்பா....எனக்கு இதிலெல்லாம் பேசத் தெரியாது'' அந்த மொபைல் போனைத் திருப்பித் திருப்பிப் பார்த்தபடியே ராஜய்யன் சொல்ல,

''நான் சொல்லித் தர்றேன் டாட்'' என்று சொல்லி விட்டு அப்போதே பாடத்தை ஆரம்பித்தான் குணா.

★★★★

கழுகுக்கு மூக்கு வியர்ப்பது போல், அமெரிக்காவிலிருந்து குணா வந்து விட்ட விபரத்தை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு, மறு நாளே வந்து நின்றார் கல்யாணத் தரகர் கண்ணுசாமி.

''என்ன ஓய் நீர்?....பையன் வந்ததும் தகவல் தரச் சொல்லியிருந்தேனே?...விட்டுட்டீரே?'' என்று வந்ததும் வராததுமாய் ராஜய்யனை பிலு...பிலுவென்று பிடித்துக் கொண்டார்.

''அது செரி...பையன் நேத்திக்குக் காலைலதான் ஓய் வந்திருக்கான்!...இன்னும் பயணக் களைப்பு தீர ஓய்வு கூட எடுக்கலை'' சமாளித்தார் ராஜய்யன்.

''விமானத்துல வந்தவருக்கு என்ன ஓய் பயணக் களைப்பு?'' என்றபடி கக்கத்திலிருந்த மஞ்சள் பையைத் திறந்து அதிலிருந்து, ஓரங்களில் மஞ்சள் தடவப்பட்ட ஒரு ஜாதகக் குறிப்பையும், ஒரு புகைப் படத்தையும் வெளியிலெடுத்தார் தரகர்.

''நம்ம தம்பிக்கென்றே இந்த ஜாதகத்தை வெச்சிருந்தேன்...பொண்ணும் பார்க்க மகாலட்சுமியாட்டம் இருக்கு...பெரிய வசதியானஇடமும்வேற...''என்றதரகர்அந்தஜாதககுறிப்பைராஜய்யன் கையிலும், புகைப்படத்தை குணாவின் கையிலும் கொடுத்தார். போட்டோவிலிருந்த பெண்ணைப் பார்த்த குணா மயங்கி விழாத குறைதான். ''வாவ்...வாட் எ சார்மிங் கேர்ள்?'' மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் முக பாவத்திலிருந்தே அவன் மனதைப் படித்து விட்ட ராஜய்யன், ''என்னப்பா...ஜாதகமே பார்க்க வேண்டியதில்லை போலிருக்கு?'' தமாஷாய்க் கேட்டார்.

''யெஸ் டாட்!...'' என்று தன்னையுமறியாமல் சொன்னவன், சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு, ''இல்லை டாட்... மொதல்ல ஜாதகத்தைப் பாருங்க டாட்'' என்றான் அசடு வழிய,

''யோவ்...தரகு...நம்ம குணாவுக்கு பொண்ணைப் பிடிச்சுப் போச்சு போலத்தான் தெரியுது...இனி தாமதிக்கறதுல அர்த்தமில்லை!....அதனால ஜாதகத்தைத் தூக்கிக்கிட்டு ஜோதிடர் கிட்டப் போக வேண்டாம்...மனசுக்குப் பிடிச்ச பிறகு ஜாதகமென்ன?...ஜோதிடமென்ன?'' என்றார் ராஜய்யன்.

மனதிற்குள் தான் நினைத்ததை அப்படியே சொல்லும் தந்தையை பிரமிப்புடன் நோக்கினான் குணா.

''ஹி...ஹி..ஹி...நான் அப்பவே சொன்னேன் அல்லவா?....இது நம்ம பையனுக்குன்னே உண்டான ஜாதகம்'' தரகர் வாயெல்லாம் பல்லாகச் சொன்னார்.

''சரி...சரி....கதை பேசினது போதும்...மொதல்ல பொண்ணைப் பற்றிய விபரங்களைச் சொல்லும் ஓய்!... எந்த ஊரு?...என்ன பேரு?'' அவசரப்படுத்தினார் ராஜய்யன்.

''இதே ஊர்தான்!... ஹோட்டல் அஜந்தா தெரியுமில்ல?...த்ரீ ஸ்டார் ஹோட்டல்?'' தரகர் சன்னக் குரலில் கேட்க,

''ம்ம்...நல்லாவே தெரியுமே?''

''அந்த ஹோட்டல் ஓனரோட ஒரே மகள்!...பெரிய இடம்!... கிராமத்துல தோட்டம்...தொரவு, நெலம்...நீச்சுன்னு ஏகப்பட்ட சொத்து!...எல்லாத்துக்கும் இந்த ஒரே பொண்ணுதான் வாரிசு!...'' கூடுதல் சிரிப்போடு சொன்னார் தரகர்.

''படிப்பு?'' இடையில் புகுந்து கேட்டான் குணா.

''பி.எஸ்.ஸி....கம்ப்யூட்டர் சயின்ஸ் முடிச்சிருக்கு''

குணாவின் முகத்தில் திருப்தி தெரிந்தது.

''அப்ப நல்ல நாளா பாருங்க தரகு....போயி பொண்ணைப் பார்த்திட்டு வந்திடுவோம்!...என்னப்பா குணா...என்ன சொல்றே...?...ஓ.கே.தானே?''

அவன் வெட்கத்துடன் புன்னகைத்தான்.

17

ஒரு நல்ல நாளில் பெண் பார்க்கும் வைபவம் இனிதே நடந்தேறியது.

பங்களா முழுதும் பணக்கார மனிதர்கள் பிதுங்கினார்கள். தெருவை அடைத்துக் கொண்டு கார்கள் நின்றிருந்தன.

சௌம்யா என்ற அந்தப் பளிங்குச் சிலை குணாவின் எதிரில் வந்து நின்ற போது, மின்னலடித்தது போலிருந்தது அவனுக்கு.

அமெரிக்கவீதிகளில்ஆயிரக்கணக்கில்வெள்ளைதேவதைகளைப் பார்த்திருக்கிறான், பேசியிருக்கிறான், பழகியிருக்கிறான். ஆனால், அவர்கள் யாரிடமும் இல்லாத ஏதோவொன்று இந்த இந்திய மங்கையிடம் இருப்பது கண்டு வியந்து போனான்.

'சௌம்யா...சௌம்யா'

அவள் பெயரை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தான். இனம் புரியாத புத்துணர்ச்சி ரத்த நாளங்களில் பூ பூக்கச் செய்தது. கல்யாணத் தேதியை ரொம்பத் தள்ளிக் குறிச்சிடுவாங்களோ? ஏக்கம் தடவிய பயம் அவனுள் பரவியது.

பெண் அறைக்குள் திரும்பிச் சென்றதும், அந்த ஹாலில் ஏனோ வெறுமை அப்பிக் கொண்டது.

ம்...இப்படி ஆளாளுக்கு அமைதியா உட்கார்ந்திட்டிருந்தா எப்படி?'' தரகர் ஆரம்பித்து வைக்க,

மீண்டும் கலகலப்பு ஆக்கிரமித்தது.

பெண்ணின் தாயார் தன் கணவரிடம் ரகசியமாய் ஏதோ சொல்ல, அவர் புன்னகைத்துக் கொண்டே இன்னொருவரிடம் ரகசியம் பேசினார்.

ஒரு பெண்மணி திடீரென்று எழுந்து மணப்பெண்ணின் அறைக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்து, எதையோ சன்னக் குரலில் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ராஜ்யன் குணாவின் பக்கம் திரும்பி'', என்ன குணா?...ஓ.கே. வா? கண்ணால் கேட்டார்.

அவனும், ஓ.கே. என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டிச் சொன்னான்.

பெண்ணின் தந்தை திடீரென்று உரத்த குரலில் பேச ஆரம்பித்தார்.

''எங்க குடும்பத்தில் எல்லோருக்கும் மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கு!...மாப்பிள்ளைப் பையனும்...அவரோட தகப்பனாரும் தங்களோட அபிப்ராயத்தைச் சொன்னா மேற் கொண்டு பேசி முடிச்சிடலாம்''

அதைக் கேட்டு ''ஹா...ஹா...ஹா...'' வென்று சிரித்த ராஜய்யன், ''இங்கேயும் அதே கதைதான்!...எனக்கும்...என் பையனுக்கும் பெண்ணையும்...மரியாதையான இந்தக் குடும்பத்தையும் ரொம்பவே பிடிச்சிருக்கு!...அதனால...தாராளமா மேற் கொண்டு பேசலாம்'' என்றார்.

ராஜய்யன் சொல்லி முடித்ததும் அந்த ஹாலிலிருந்த எல்லோர் முகத்திலும் சந்தோஷம் அப்பிக் கொண்டது.

''டாட்...டாட்'' தந்தையை சன்னக் குரலில் அழைத்தான் குணா.

''என்னப்பா?''

''வந்து...நான் பொண்ணு கூடத் தனியா பேசணும்'' குழலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டான்.

''என்ன ஓய்?...மாப்பிள்ளை... பொண்ணு கூடத் தனியா பேசணும்ங்கறாரா?'' தரகர் கண்டே பிடித்து விட்டார்.

''அது...வந்து...'' ராஜய்யன் தயங்க,

''இதிலென்ன தயக்கம் வேண்டியிருக்கு?...உள்ளூர் மாப்பிள்ளைகளே இந்தக் கோரிக்கை வைக்கும் போது...அமெரிக்க மாப்பிள்ளை கேட்பதில் என்ன தப்பு?'' என்ற பெண்ணின் தந்தை, தன் மனைவி பக்கம் திரும்பி, ''அம்மாடி...மாப்பிள்ளையை சௌம்யா ரூமுக்குக் கூட்டிட்டுப் போ!'' என்றார்.

சௌம்யாவின் அறை.

ஜன்னலோரம், குணாவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்த சௌம்யாவின் அருகில் வந்து நின்ற குணா, ''உட்கார்ந்து பேசலாமே? என்றான்.

''ம்..'' என்றபடி சோபாவைக் கை காட்டினாள் அவள்.

குணா உட்கார்ந்ததும், எதிர் சோபாவில் அமர்ந்தவள், அவனை நேருக்கு நேர் பார்க்காமல் தரையையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''ஹலோ...மேடம்!...மாப்பிள்ளை முகத்தைப் பார்க்காமல் இப்படித் தரையையே பார்த்திட்டிருந்தா எப்படி?...முகத்தைப் பார்த்தால்தானே ஓ.கேவா?...இல்லை ரிஜெக்டா?ன்னு

முடிவெடுக்க முடியும்?'' என்றான் குணா.

''அதெல்லாம் நீங்க ஹால்ல உட்கார்ந்திட்டிருக்கும் போதே இந்த ஜன்னல் வழியா...நல்லா பார்த்தாச்சு...பார்த்து முடிவையும் சொல்லியாச்சு'' படக்கென்று சொன்னாள் செளம்யா.

''இஸிட்?...என்ன முடிவு சொன்னீங்க?'' தலையை ஸ்டைலாகச் சாய்த்துக் கொண்டு கேட்டான் குணா.

''ம்ம்ம்...கல்யாணத்துக்கு தேதி குறிக்கச் சொல்லிட்டேன்'' என்றாள் செளம்யா வெட்கத்தோடு.

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அவளைப் பார்த்த குணா, ''சரி...முடிவு என்ன சொன்னீங்க?'' அவள் வாயிலிருந்து பிடிச்சிருக்கு என்ற வார்த்தையைக் கேட்க வேண்டுமென்கிற ஆவலில், வேண்டுமென்றே கேட்டான்.

அவன் குறும்பைப் புரிந்து கொண்ட செளம்யா, ''பி...டி....ச்.... சி....ரு....க்....கு'' என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லி விட்டு, ''நான் சொல்லி விட்டேன்....நீங்க சொல்லலையே?'' திருப்பிக் கேட்டாள்.

''நான்...பிடிச்சிருக்கு....ன்னு சொல்ல மாட்டேன்!...ஏன்னா?'' என்று சொல்லி விட்டு நிறுத்தினான்.

லேசான அதிர்வுடன் செளம்யா அவன் முகத்தைப் பார்க்க,

''அதாவது வெறுமனே பிடிச்சிருக்குன்னு நான் கண்டிப்பா சொல்ல மாட்டேன்!...வேணும்ன்னா...இப்படிச் சொல்லலாம்...''

''எப்படி?'' கரகரத்த குரலில் கேட்டாள் செளம்யா.

''ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொல்லலாம்'' என்று அவன் சொன்னதும் அவள் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் ஒளிர,

அவனைக் கையெடுத்துக் கும்பிட்டு ''நன்றி'' என்றாள்.

''நோ...நன்றியெல்லாம் சொல்லக் கூடாது'' என்று குணா சொன்ன போது, அறைக்கு வெளியே யாரோ தொண்டையைச் செருமும் ஓசை கேட்க, தனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது என்பதை உணர்ந்து, ''ஓ.கே....மீண்டும் சந்திப்போம்'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தான்.

வரும் போது அவன் முகத்தில் தெரிந்த உற்சாகப் புன்னகையைப் படித்து விட்ட தரகர், ''பேஷாப் போச்சு!...இனி நாள் குறிச்சிட வேண்டியதுதான்!'' மகிழ்ச்சியில் கூவினார்.

''பெண் வீட்டுக்காரர்களின் குடும்ப ஜோதிடர் அப்போதே பஞ்சாங்கத்தை எடுத்து ஆற அமர மேய்ந்து விட்டு, ஆவணி இருபத்தியொண்ணு அமோகமா இருக்கு!...அன்னிக்கே பேஷா வெச்சிடலாம்!'' என்றார் தன் பூணூலை ஒதுக்கி விட்டபடி.

''ஆ...வ...ணி.. இருபத்தியொண்ணுன்னா...இன்னும் எத்தனை நாளிருக்கு?'' கேட்டவாறே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த காலண்டரைப் பார்த்தார் பெண்ணின் தந்தையார். ம்ம்ம்...இன்னும் முழுசா ஒரு மாசமிருக்கு!...பிரமாதமா ஜமாய்ச்சிடலாம்'' என்றார்.

''பிள்ளையாண்டானோட தோப்பனார் என்ன சொல்றார்?... அவரோட சௌகரியத்தையும் கேட்டுக்கோங்க'' என்றார் ஜோதிடர் சற்றுப் பெரிய குரலில்.

''எங்களுக்கென்ன?...நாங்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க... நீங்க எப்ப வெச்சாலும் எங்களுக்கு ஓ.கே...தான்'' ராஜய்யன் பெருமிதத்துடன் சொன்னார்.

அந்த ஆவணி இருபத்தியொண்ணு என்ற சுபயோக சுபதினம் குறிக்கப் பட்ட போது, சுவரில் எங்கோ ஒரு மூலையிலிருந்து பல்லியொன்று 'ச்ச்ச்...ச்ச்ச்' என்று ஒலியெழுப்பியது.

அந்த ஒலியின் அர்த்தம் அந்தப் பல்லிக்கு மட்டுமே தெரியும்.

## 18

ஈஸி சேரில் சாய்ந்தபடி கல்யாண ஏற்பாடுகளைப் பற்றிய யோசனையில் மூழ்கியிருந்தார் ராஜய்யன். அவர் அருகில் ஒரு பேப்பரும், பேனாவும் தரையில் வைக்கப்பட்டிருந்தன.

வாசலில் நிழலுருவம் தெரிய, கண்களுக்கு மேல் உள்ளங்கையால் குடை பிடித்து, கூர்ந்து பார்த்தார்.

குணாதான். குனிந்து ஷூ லேஸை அவிழ்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன டாட்?...ரிலாக்ஸா உட்கார்ந்திட்டீங்க?''....கேட்டுக் கொண்டே உள் அறைக்குள் நுழையப் போனவன், அவர் அருகிலிருந்த அந்தப் பேப்பரையும் பேனாவையும் பார்த்து விட்டு, ''வாவ்...டாடி...கவிதை எழுதப் போறீங்களா?'' கேட்டான்.

''க்கும்...அது ஒண்ணுதான் குறைச்சல்!...கல்யாணத்துக்கு என்னென்ன ஏற்பாடுகள் நம்ம சைடுல செய்யணும்கறதை பேப்பரில் குறிச்சிட்டிருக்கேன்!...இப்பெல்லாம் மறதி அதிகமாயிடுச்சுப்பா...

அதான்'' என்ற ராஜய்யன், ''குணா...ஒரு நிமிஷம் என் பக்கத்துல வந்து உட்காரு....உன் கிட்ட ஒரு விஷயம் பேசணும்'' என்றார்.

அவன் நின்று, திரும்பி, அவர் அருகில் வந்தான். ''என்ன டாட்?...ஏதாவது முக்கிய விஷயமா?''

''மொதல்ல அந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்காரு''

அவன் உட்கார்ந்ததும், ''குணா...பொண்ணோட அப்பாவும்...அம்மாவும் கொஞ்சம் முந்தி வந்திட்டுப் போனாங்கப்பா'' மெல்ல ஆரம்பித்தார்.

''ஓ...என்ன விஷயம்?'' புருவங்களை நெரித்துக் கொண்டு கேட்டான் குணா.

''வந்து...நாளைக்கு அவங்க பொண்ணுக்கு...துணிமணி எடுக்கப் போறாங்களாம்''

''சரி...தாராளமாய்ப் போயிட்டு வரட்டும்!...அதுக்கென்ன?'' சாதாரணமாய்ச் சொன்னான் குணா.

''இல்லைப்பா...நீயும் அப்ப கூட இருக்கணும்!ன்னு அந்தப் பொண்ணு ஆசைப்படுதாம்'' புன்னகையோடு சொன்னார் ராஜய்யன்.

''வாட்?...நானா?....நோசான்ஸ்!''என்றவன்தந்தையின்முகத்தை நேருக்கு நேர் பார்த்து, ''என்ன டாட்?...எனக்கென்ன டாட் தெரியும் லேடீஸ் டிரஸ் பற்றி?...அதுவுமில்லாமல்....கல்யாணத்துக்கு முன்னாடி இப்படியெல்லாம் போறது?...நல்லாயிருக்கா?'' கேட்டான்.

ஆனால், அடி மனதில் செளமியாவுடன் தனியாகச் செல்ல வேண்டுமென்ற ஆசை இருக்கவே செய்தது.

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்த ராஜய்யன், ''அடேய்...அடேய்...நீ அப்பநாய்க்கன்பட்டியிலிருந்து வந்த அரிசி வியாபாரியல்ல....அமெரிக்காவுல படிச்சிட்டு வந்த டாக்டர்...கொஞ்சம் மாடர்னா இருடா'' என்றார் முன் நெற்றியில் லேசாய் அடித்துக் கொண்டு.

''எது?...எது டாட் மாடர்ன்?...நம்ம கலாச்சாரத்தை நாமே குழி தோண்டிப் புதைக்கறதுக்குப் பேரு மாடர்னா?....நோ டாட்!...உங்களுக்கு ஒண்ணு தெரியுமா?...ஃபாரின்ல எல்லாம் இப்ப நம்ம கலாச்சாரத்தை அப்ரிஸியேட் பண்ணிட்டு...அவங்களும் மாறிட்டு இருக்காங்க!...''

''ஓ...அப்படியா?'' விழிகளை விரித்துக் கொண்டு கேட்டார் ராஜய்யன்.

''பின்னே?...இப்ப அமெரிக்காவுல பாய் ப்ரெண்ட், டேட்டிங், அவுட்டிங், எக்ஸெட்ரா...எக்ஸெட்ரா எல்லாம் குறைஞ்சிட்டு வருது!....ஆனா இங்கே?....அந்த அளவுக்கு ஏறிக்கிட்டுப் போகுது!...ஒருத்தனுக்கு ஒருத்தி என்கிற பாலிஸியை அவங்க எய்ட்ஸ்க்குப் பின்னாடி நல்லாவே புரிஞ்சுக்கிட்டாங்க!'' அவன் வார்த்தைகளில் நிஜமான வருத்தம் தெரிய,

புல்லரித்துப் போனார் ராஜய்யன்.

சில நிமிடங்களுக்கு அவரால் எதுவுமே பேச முடியவில்லை. பிறகு மெல்ல ஆரம்பித்தார். ''இல்லைப்பா....அது... வந்து...உங்களுக்குத்தான் நிச்சயதார்த்தமே முடிஞ்சிடுச்சில்ல?... அதுவுமில்லாம நீங்க ரெண்டு பேரும் என்ன திருட்டுத்தனமாவா போறீங்க?...பெரியவங்க பர்மிஷனோடதானே போறீங்க?''

நீண்ட நேரம் பாவ்லாவாய் மறுத்துப் பேசிய குணா, கடைசியில், ''ஓ.கே....டாட்!...உங்களுக்காக போறேன்!'' 'வெடுக்'கென்று சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் உள் மனம் அவனைப் பார்த்துக் கெக்கலித்தது. 'அடேய்.. அடேய்...உண்மையிலேயே நீ அவருக்காகத்தான் போறியா?... உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு!...உனக்கும் அவளைப் பார்க்கணும்...பேசணும்...என்கிற ஆசை இருக்குதானே?..'

சத்தமில்லாமல் வெட்கப்பட்டான் குணா.

''ம்ம்ம்..குணா....அப்புறம் இன்னொரு விஷயம்!...'' ராஜய்யன் மறுபடியும் அவனை நிறுத்த,

''என்ன டாட்?...திரும்பத் திரும்ப கூப்பிட்டுக்கிட்டே இருக்கீங்க?'' சலிப்போடு கேட்டான்.

''என்னோட பால்ய சிநேகிதன் சிவஞானத்தை உனக்கு ஞாபகமிருக்கா?...ஏற்கனவே அவரைப் பற்றி நிறைய தடவை உன் கிட்டே சொல்லியிருக்கேன்''

''யெஸ்...யெஸ்...ஞாபகமிருக்கு!...ஆமாம்...இப்ப என்ன திடீர்னு அவரைப் பற்றிச் சொல்றீங்க?'' கேட்டான்.

''பாவம்...பக்கவாதம் வந்து படுத்த படுக்கையாய்க் கிடக்கறாராம்'' வருத்தத்தோடு சொன்னார் ராஜய்யன்.

''இஸிட்?...ஓ...காட்?'' அங்கலாய்த்தான் குணா.

அவரைப் பார்க்க திருச்சி வரைக்கும் போகணும்!...போகும் போது கையோட உன் கல்யாண இன்விடேஷனையும் எடுத்திட்டுப் போயிட்டா...அதையும் கொடுத்திட்டு வந்திடலாம் என்றார் ராஜய்யன்.

''வெரி குட்!...நல்ல ஐடியா..தாராளமாய்ப் போயிட்டு வரலாம்!'' என்றான் குணா, தன்னையும் சேர்த்துக் கொண்டு.

''என்னது? போயிட்டு வரலாமா?...அப்ப...அப்ப...நீயும் என் கூட வர்றியா?'' நம்ப முடியாமல் கேட்டார் ராஜய்யன்.

''யெஸ் டாட்!...எனக்கும் ஆசையாயிருக்கு!...நான் இந்தியாவோட கிராமங்களைப் பார்த்ததில்லை...ஐ வாண்ட் டு என்ஜாய் வில்லேஜ் அட்மாஸ்பியர்!...ப்ளீஸ் வேண்டாம்!னு சொல்லிடாதீங்க டாட்'' கெஞ்சலாய்ச் சொன்னான்.

''நான் ஏன் வேண்டாம்னு சொல்றேன்?...என் கூட நீ வர்றேன்னு சொன்னது எனக்கு இரட்டிப்பு சந்தோஷம்...ஆனா?'' என்று அவர் இழுக்க,

''ஆனா?....வாட் ஆனா?''

''வந்து....நாளைக்கு அந்தப் பொண்ணு உன்னைய கூப்பிட்டிருக்கு...நீ என் கூட வர்றேங்கறியே?...அதைத்தான் யோசிக்கறேன்''

''ஸோ வாட்?...நாளைக்கு ஒரு நாள் அந்தப் பொண்ணு கூட ஸ்பெண்ட் பண்றேன்!...நாளை மறு நாள் நாம திருச்சி கிளம்பலாம்'' கேஷுவலாய்ச் சொன்னான் குணா.

''ம்ம்ம்...அந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு வேண்டிய டிரஸ் மெட்டீரியல்ஸ் வாங்கணும்!னுதான் உன்னைக் கூப்பிட்டிருக்கு... சாதாரணமா லேடீஸ் டிரஸ் பர்ச்சேஸ் பண்ணப் போனா...ஒரு நாள்ள பண்ணிடுவாங்க...இந்தப் பொண்ணு மேரேஜ் பர்ச்சேஸ் பண்ணக் கூப்பிடுது...அது...ஒரு நாள்ல முடியுமா?ன்னு எனக்கு சந்தேகமாயிருக்கு'' ராஜய்யன் இழுக்க,

''டாட்...அவங்க எடுத்தாலும் சரி...எடுக்கா விட்டாலும் சரி!... ஒரு நாள்தான் அவங்களுக்கு கால் ஷீட்...'' சொல்லி விட்டுச் சிரித்தான் குணா.

ராஜய்யனும் சேர்ந்து சிரித்தார்.

மறுநாள் மாலை, ஆறு மணியிருக்கும்.

நகரின் அந்தப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் மொட்டை

மாடியில் இருந்த சிறிய ரெஸ்டாரெண்டில் குணாவும், சௌம்யாவும் அமர்ந்திருந்தனர்.

''என்ன டியர்?..முகம் ரொம்ப டல்லாயிருக்கு?....ஆர் யூ பீல் டயர்ட்?'' சௌம்யா கொஞ்சலாய்க் கேட்க,

''தென்?...மதியத்திலிருந்து கடை கடையாய் ஏறி இறங்கி...டிரில் வாங்கிட்டியே?''... சலிப்பாகச் சொன்னான் குணா.

''ஓ...ஸாரி...ஸாரி!'' என்றவள், ''ம்ம்ம்...இப்ப நீங்க ப்ரெஷ்ஷாகணும்....அவ்வளவுதானே?...இதோ...'' சட்டென்று அவன் கையை எடுத்து ஒரு இச்கொடுத்தாள்.

ஒரு விநாடியில் சொர்க்கத்தை எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தான் குணா.

''இப்ப...எப்படியிருக்கு?....புத்துணர்ச்சி வந்ததா?'' கண்ணடித்துக் கேட்டாள் சௌம்யா.

''ம்ம்ம்... புல்லா வரலை?...ஜஸ்ட் ஒரு பிப்டி பர்ஸண்ட் தான் வந்திச்சு'' என்றான் குணா.

''வொய்?'' தலையைச் சாய்த்துக் கொண்டு கேட்டாள் சௌம்யா.

''பின்னே?...எதை...எங்கே செய்யணுமோ?.. அதை...அங்கேதான் செய்யணும்!...இப்ப...கண்ணுக்கு போட வேண்டிய மையை உதட்டுக்கும்...உதட்டுக்குப் போட வேண்டிய லிப்ஸ்டிக்கை கண்ணுக்கும் போடுவியா?'' கேட்டான்.

''புரியலையே?'' இரு கையையும் உதறிச் சொன்னாள்.

''இப்பக் கைல குடுத்தியே ஒரு இச்...அதைக் குடுக்க வேண்டிய இடம் கையல்ல....''

''அப்புறம்?''

''லிப்ஸ் ஆர் மேட் பார் லிப் லாக்'' என்றான் குணா.

''யூ...நாட்டி!'' செல்லமாய் அவன் தலையில் தட்டி விட்டு, ''ஜஸ்ட் ஒன் மந்த் வெய்ட் பண்ணுங்க சார்...எல்லாத்தையும் சரி பண்ணிடறேன்'' என்றாள் சௌம்யா.

''ஹோ....காட்!..இன்னும் ஒரு மாசமா?...முப்பது நாளா?...ஹய்யோ...'' பெருமூச்சு விட்டபடி சொன்னான் குணா.

''குணா..நாளைக்கு நாம் அவுட்டிங் போகலாமா?'' ஆசையோடு கேட்டாள் சௌம்யா.

''நோ டியர்!...நாளைக்கு நானும் பாதரும் திருச்சி வரைக்கும் போறோம்!..''

அவள் முகம் வாடிப் போனது.

''ஸாரி சௌம்யா!....இது தவிர்க்க முடியாத டிரிப்'' வருத்தமாய்ச் சொன்னான் குணா.

''இட்ஸ் ஓ.கே!'' சுரத்தேயில்லாமல் சொன்னவளைத் தின்று விடுபவன் போல் பார்த்தான் குணா.

''அப்படிப் பார்க்காதே குணா''

''ஏன்?...என் வருங்கால மனைவியை...நான் பார்ப்பேன்!... அதை யாரும் தடை போட முடியாது'' என்றான் குணா.

''நீ பார்த்திட்டுப் போயிடுவே...நானில்ல கஷ்டப்படணும்?''

''என்ன கஷ்டம்?''

''ராத்திரித் தூக்கம் கெட்டுப் போகுதுடா ராஸ்கல்'' வெட்கத்தோடு சொன்னாள்.

''ம்ம்ம்...சௌம்யா...பொண்ணு பார்க்க வந்த அன்னிக்கே கேட்கணும்!னு நெனச்சேன்...டென்ஷன்ல மறந்திட்டேன்... உன்னோட மொபைல் நெம்பர் குடு''

அவள் சொல்ல, அதைத் தன் மொபைலில் பதித்துக் கொண்டவன், அவளுக்கு ஒரு கால் செய்து கட் பண்ணினான். ''அது என்னோட நெம்பர்தான் ரிஜிஸ்டர் பண்ணிக்கோ'' என்றான்.

அதற்குள் அவர்கள் ஆர்டர் செய்த ஐட்டங்கள் வந்து விட, இருவரும் வாயால் அந்த ஐட்டங்களையும், கண்களால் ஒருவரையொருவரும் தின்று தீர்த்தனர்.

## 19

இரண்டு பெரிய சூட்கேஸ்களோடு ராஜய்யனும், குணாவும் டிராவல்ஸ் டாக்ஸிக்காக காத்திருந்தனர்.

''குணா...டாக்ஸியை எத்தனை மணிக்கு வரச் சொல்லியிருந்தே?''

''ஷார்ப்பா....சிக்ஸ் தர்ட்டிக்கு இங்கே இருக்கணும்!ன்னு சொல்லியிருந்தேன்''

மணிக்கட்டை உயர்த்தி நேரத்தைப் பார்த்த ராஜய்யன், ''ஹும்...மணி ஆறே முக்காலே ஆயிடுச்சு...இன்னும் டாக்ஸியைக் காணோம்'' என்றார்.

''அதான் தெரியலை!...'' யோசித்தவாறே வாசலுக்கு வந்து

நின்று பார்த்தான் குணா.

''கால் பண்ணிக் கேட்டுப் பாரு'' என்று ராஜய்யன் சொல்ல, ''க்கும்...இதுவரைக்கும் மூணு தடவை கூப்பிட்டுட்டேன்... எடுக்கலை''

அப்போது, டி.வி.எஸ்-50-ல் வந்திறங்கிய ஒருத்தன், ''சார்...இங்க டாக்டர் குணா?'' கேட்டான்.

''நான்தான்...என்ன விஷயம்?'' என்றவாறே அவனருகே போனான் குணா.

''சார்...நான் ராம்ஸ்ரீ டிராவல்ஸிலிருந்து வர்றேன்....டாக்ஸி கேட்டிருந்தீங்களாம்''

''ஆமாம்பா....ஆறரை மணிக்கு இங்கிருக்கணும்!னு சொல்லியிருந்தேன்...இன்னும் டாக்ஸி வந்த பாட்டைக் காணோம்!...போன் பண்ணினா போனையும் எடுக்கலை'' எரிச்சலுடன் சொன்னான் குணா.

''சார்...ஒரு சின்னப் பிரச்சினை ஆயிடுச்சு!...நாங்க ஆறு மணிக்கே உங்களுக்கு வண்டி அனுப்பிட்டோம்...ஆனா வர்ற வழில வண்டி பயர் ஆயிடுச்சு'' நடுங்கும் குரலில் சொன்னான் அவன்.

''வாட்?...பயர் ஆயிடுச்சா?....என்னப்பா சொல்றே?'' அதிர்ச்சியுடன் கேட்டான் குணா.

''ரோட்ல வந்திட்டிருந்த டாக்ஸி...திடீர்னு தானாகவே முன் பகுதியில் தீப்பிடிச்சு எரிய ஆரம்பிச்சிடுச்சு சார்!...அனேகமா எலக்ட்ரிக் சர்க்யூட்ல ஏதாச்சும் கோளாறு ஆகியிருக்கணும்!னு நெனைக்கறேன் சார்''

''சரி...வேற என்ன ஏற்பாடு பண்ணியிருக்கீங்க?''

''சார்...உங்களுக்கு வேற வண்டி இன்னும் பத்து நிமிஷத்துல இங்கே வந்திடும் சார்!...அதான் சொல்லிட்டுப் போகலாம்!னு வந்தேன்'' என்று சொல்லி விட்டு அவன் புறப்பட,

''சரி...சரி...சீக்கிரம் வந்திட்டா சரி!....'' என்றபடியே வீட்டிற்குள் வந்த குணாவிடம் ராஜய்யன் விசாரித்தார். வரும் வழியில் டாக்ஸி தீப்பிடித்த விஷயத்தை தந்தையிடம் சாதாரணமாய்ச் சொன்னான் குணா.

ஆனால், அதைக் கேட்டதும் ராஜய்யனின் முகம் மாறியது. அவர் விழிகளில் ஒரு வித அச்சம் படர்ந்தது.

''ஏன் டாட்?...ஏன் திடீர்னு ஒரு மாதிரி ஆயிட்டீங்க?''... கண்களைச் சுருக்கிக் கொண்டு கேட்டான் குணா.

''இல்லைப்பா...எனக்கென்னமோ இது ஒரு அபசகுனமாய்ப் படுதுப்பா'' தன் மன அச்சத்தை மகனிடம் சொன்னார் ராஜய்யன்.

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தான் குணா.

''என்ன டாட்?...அன்னிக்கொரு நாள்...நான் ஏதோ சொன்ன போது.. நீ அப்பநாய்க்கன்பட்டியிலிருந்து வந்த அரிசி வியாபாரியல்லன்னு சொன்னீங்க!...ஆனா இன்னிக்கு நீங்க...மொண்டிபாளையத்திலிருந்து வந்த முட்டை வியாபாரி மாதிரியில்ல பேசறீங்க? ''

''இல்லை குணா!...எனக்கு ஏனோ மனசுக்குள்ளார ஒரு மாதிரி நெருடலாயிருக்கு'' நெஞ்சில் கையை வைத்து தேய்த்தவாறே சொன்னார் ராஜய்யன்.

''நோ டாட்!...இப்படி சின்னச் சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசா கற்பனை பண்ணிட்டிருந்தா...அது உங்க ஹெல்த்தை த்தான் பாதிக்கும்!...நடப்பதெல்லாம் நன்மைக்கே!ன்னு எல்லாத்தையும் ஈஸியா எடுத்திட்டீங்கன்னா...வாழ்க்கையே சந்தோஷமாயிருக்கும்!'' என்றவன் அவர் தோளைப் பற்றி நடத்திச் சென்றான்.

ஹார்ன் சப்தத்தோடு டாக்ஸி வந்து நிற்க, அந்த ரெண்டு சூட்கேஸையும் எடுத்து டிக்கில போட்டுடுப்பா என்றான் குணா.

இருவரும் டாக்ஸியில் ஏறிக் கொண்டதும், அது ரதம் போல் நகரத் துவங்கியது.

டிராபிக் குறைந்த சாலையில் டாக்ஸி எண்பதில் சீறிக் கொண்டிருந்தது. குணா லேசாய்க் கண்ணயர்ந்தான். கண்ணுக்குள் விரிந்த ஒரு அவசரக் கனவில் சௌம்யாவுடன் டூயட் பாடினான், கடற்கரையில் ஓடினான், குதிரை சவாரி செய்தான், மழையில் ஜோடியாய் நனைந்தான்.

ராஜய்யன் மட்டும் தூக்கம் பிடிக்காமல், வேகமாய்க் கடந்து செல்லும் மரங்களையும், தந்திக் கம்பங்களையும் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தார். இனம் புரியாத ஒரு இறுக்கம் அவர் நெஞ்சில் பாரமாய் அழுத்திக் கொண்டிருந்தது.

அப்போது,சீராகச் சென்று கொண்டிருந்த கார் திடீரென்று தாறுமாறாக ஓட ஆரம்பிக்க,

''ஏய்...ஏய்...என்னாச்சு?...என்னாச்சு?'' ராஜய்யன் அடித் தொண்டையில் கத்தினார்.

திடுக்கிட்டு விழித்த குணா, எதுவும் புரியாமல் விழிக்க,

டாக்ஸியின் வேகத்தைக் குறைக்கவும், அதைத் தன் கண்ட்ரோலுக்குள் கொண்டு வர படாத பாடுபட்டார் டிரைவர். ஒரு பெரிய போராட்டத்திற்குப் பின், வேகத்தை மட்டுப்படுத்தி, சாலையோர மரத்தடியில் நிதானமாய் நிறுத்தி என்ஜினை ஆப் செய்தான் டிரைவர்.

அவன் முகத்தில் பீதி டன் கணக்கில் அப்பியிருந்தது.

''என்ன டிரைவர் என்ன பிரச்சினை? நடுங்கும் குரலில் கேட்டார் ராஜய்யன்.

ப்ரெண்ட் வீல் பஞ்சர் ஆகியிருக்கும் போலிருக்கு சார்.... அதான்...கண்ட்ரோல் போயிடுச்சு என்றபடி கீழே இறங்கி, காருக்கு முன்னால் சென்று குனிந்து பார்த்து விட்டு, ப்ச்...அதேதான் என்றான்.

காரை விட்டு வெளியே வந்த குணா, தானும் குனிந்து பார்த்து விட்டு, ''ஓ...காட்!...ஏம்பா...வண்டியை எடுத்திட்டு வரும் போது அதோட கண்டிஷன்ஸ் பார்க்க மாட்டீங்களா?'' கோபமானான்.

''சார்...நாலு டயருமே புதுசு சார்....ரோட்டுல ஆணி கீணி இருந்து குத்தியிருக்கும் சார்'' என்றான் டிரைவர்.

மெல்ல இறங்கி வந்த ராஜய்யன், ''என்ன குணா?...என்ன பண்றது?'' கேட்க,

''கவலைப்படாதீங்க சார்....ஸ்டெப்னி ரெடியாயிருக்கு...பத்தே நிமிஷத்துல மாத்திடறேன்'' என்ற டிரைவர் மள....மளவென்று அதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தான்.

''குணா...கொஞ்சம் அப்படி வர்றியா?'' என்று சொல்லி குணாவை சற்றுத் தள்ளி அழைத்துச் சென்ற ராஜய்யன், ''குணா...மறுபடியும் ஒரு அபசகுனம்'' என்று தயக்கமாய்ச் சொல்ல, ''ஹய்யோ...டாட்!....கார்ல டயர் பஞ்சராகறதும்.... ஸ்டெப்னி மாத்தறதும்...சாதாரண நிகழ்வுகள்!...இதைப் போய் அபசகுனம்...அதுஇதுன்னு ஏன் டாட் அனாவசியமா உங்களை நீங்களே பதட்டமாக்கிக்கறீங்க?'' கேஷுவலாய்ச் சொன்னான் குணா.

''இல்லை குணா....அப்படி ஒரேயடியா அதையெல்லாம்

ஒதுக்கிட முடியாது!...'' இயற்கை சில சமயம் நமக்கு சில அறிகுறிகளைக் காட்டும்!.... என்ற ராஜய்யன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''எனக்கு பயமாயிருக்கு குணா என்றார்.''

''பயமா?...எதுக்கு?'' ஒரு கிண்டல் புன்னகையோடு கேட்டான் குணா.

தன் அச்ச உணர்வை வார்த்தைகளாக்கி சொல்ல முடியாமல் தவித்தார் ராஜய்யன்.

அவரது தவிப்பைப் புரிந்து கொண்ட குணா, ''டாட்...நீங்க போய் காருக்குள்ளார உட்காருங்க!'' என்று சொல்லி, அவரை அங்கிருந்து நகர்த்திச் சென்று, காருக்குள் நுழைத்தான் குணா.

அடுத்த இருபதாவது நிமிடம் கார் புறப்பட்டது.

ராஜய்யன் மறுபடியும் எதையோ சொல்ல வர, அதைத் தவிர்க்கும் விதமாய், ''டிரைவர்...பாட்டுப் போடுப்பா'' என்றான் குணா.

கண்ணுக்குள் நூறு நிலவா?....இது ஒரு கனவா?...கைக்குட்டை காதல் கடிதம் எழுதிய உறவா?

கண்களை மூடி பாடலை ரசிக்க ஆரம்பித்தான் குணா.

பீதி அப்பிய கண்களுடன் ரோட்டையே வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தார் ராஜய்யன்.

அவ்வப்போது அவரது பார்வை அந்த டிரைவரையும் கண்காணித்தது. அவ்வாறு கண்காணித்ததால்தான் அவரால் அந்த விஷயத்தைக் கண்டு பிடிக்க முடிந்தது.

சாலையை வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறே, காரைச் செலுத்திய டிரைவரின் கண்கள் அடிக்கடி மூடித் திறந்தன. சில சமயங்களில் மூடிய கண்கள் நீண்ட இடைவேளைக்குப் பின்னரே திறக்க, 'ஆஹா...இவன் தூங்கறான் போலிருக்கே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர் அவனையே கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

ஆரம்பத்தில் கொஞ்சமாய்த் தூங்கி விழுந்தவன், ஒரு கட்டத்தில் கண்களை மூடியவாறே காரைச் செலுத்துவதைக் கண்ட ராஜய்யன் டென்ஷனானார். ''இந்தாப்பா டிரைவர்...என்ன பண்றே?''

மூடியிருந்த கண்களை அவசரமாய்த் திறந்தவன், ''அது... வந்து...லேசா...தூக்க கலக்கம்'' திணறினான்.

தூக்க கலக்கமா?...இந்தப் பகல் நேரத்திலா?...என்னப்பா சொல்றே? குணா கேட்க,

''சார்...ஆக்சுவலா...நான் இந்த டிராவல்ஸ்ல வேலை பார்க்கிற டிரைவரே இல்லை!...ஆக்டிங் டிரைவராய்த்தான் வந்தேன்!'' என்றான் அவன்.

''ஓ...நீ ராம்ஸ்ரீ டிராவல்ஸ் ஆள் இல்லையா? ''

''இல்லை சார்...நான் செவன் ஹில்ஸ் டிராவல்ஸ் டிரைவர்... ராம்ஸ்ரீ டிராவல்ஸ் ராமசாமி...அப்பப்ப ஆக்டிங் டிரைவர் தேவைப்பட்டா கூப்பிடுவார்...இன்னிக்கும், அவசரமா ஆக்டிங் போகணும் வான்னு கூப்பிட்டார்!...நான் எங்க டிராவல்ஸ்ல திருப்பதி டிரிப் போயிட்டு...இன்னிக்கு காலைலதான் வந்தேன்... அதனால வரமுடியாது!ன்னு சொன்னேன்...அவர் ரொம்பக் கம்பல் பண்ணி..வர வெச்சிட்டார்!...அதான்...லேசா கண்ணு சொருகுது''

''அப்படியா?...அப்படின்னா காரை லெப்டுல ஓரங்கட்டி நிறுத்து'' என்று குணா சொல்ல,

''இல்லை சார்....மூஞ்சியைக் கழுவிட்டா போதும் ஃப்ரெஷ்ஷாயிடுவேன்'' அவன் சமாளிக்கப் பார்த்தான்.

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்...நீ இங்க பின்னாடி வந்து கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடு...நான் டிரைவ் பண்றேன்'' என்றான் குணா.

''என்னப்பா...நீ கார் ஓட்டுவியா?'' அதிசயமாய்க் கேட்டார் ராஜய்யன்.

''அது செரி...நான் அமெரிக்காவிலேயே கார் ஓட்டியவன் இங்க ஓட்ட மாட்டேனா?''

''இல்லை சார்...பரவாயில்லை சார்'' அந்த டிரைவர் மிகவும் தயங்கினான்.

''ஒண்ணும் கவலைப்படாதப்பா...நான்


# கண்மணி

கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900
6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை
MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாகி
**கண்மணி**
மாலைமுரசு பில்டிங்,
246, அண்ணா சாலை,
ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006.

சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-
MURASU PUBLICATIONS
A/C NO. 6034172999
Indian Bank, Peters Road Branch
IFSC:IDIB000R047
நிர்வாகப்பிரிவு:
murasupublication@gmail.com
போன்: 044-28297225

ஒண்ணும் டிராவல்ஸ் மேனேஜர்கிட்டே சொல்ல மாட்டேன்'' சிரித்தபடியே குணா சொன்னதும், அவன் காரை சாலையின் இடது புறம் ஒதுக்கி நிறுத்தினான்.

காரை விட்டிறங்கி, டிரைவர் சீட் அருகில் வந்த குணா, ''ம்... இறங்குப்பா'' என்றான்.

அப்போதும் அந்த டிரைவர் தயங்க, ''டிரைவர் தம்பி...கொஞ்சம் நேரம் என் பையன்தான் காரை ஓட்டட்டுமே....நான் அதைப் பார்த்து ரசிக்கறேனே?'' என்றார் ராஜய்யன்.

பெரியவர் சொன்ன பிறகும் இறங்காமலிருந்தால், அவர்கள் இருவரும் தன்னைத் திட்ட ஆரம்பித்து விடுவார்கள் என்பதைப் புரிந்து கொண்ட அந்த டிரைவர் இறங்கினான்.

எதுவும் பேசாமல் பின் இருக்கைக்கு சென்று அமர்ந்தான்.

''தலையைத் திருப்பி, அப்படியே சாய்ஞ்சு கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுங்க'' என்று சொல்லியவாறே காரைக் கிளப்பினான் குணா.

மகன் கார் ஓட்டும் அழகைக் கண் குளிரப் பார்த்து ரசித்தவாறே அமர்ந்திருந்தார் ராஜய்யன்.

கோவில்பட்டி கிராமத்திற்குள் கார் நுழைந்தது முதல் குணாவின் வாயிலிருந்து, ''ஓ...ஃபெண்டாஸ்டிக்... வாவ்...சூப்பர்ப்'' என்ற வார்த்தைகள் சரமாரியாக வந்து விழுந்து கொண்டேயிருந்தன.

அந்த கிராமத்தில் காணும் ஒவ்வொரு விஷயங்களும் அவனை பெரிய வியப்பிலாழ்த்தின.

''என்ன குணா....ரொம்பவே இன்வால்வ் ஆகிட்டே போலிருக்கு? ராஜய்யன் கேட்க,

''டாட்....வில்லேஜ் ஏரியாக்கள் பியூட்டிபுல்லா இருக்கும்!னு கேள்விப்பட்டிருக்கேன்...ஆனா இவ்வளவு அற்புதமாக இருக்கும்!னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவேயில்லை!...ரியலி மார்வலஸ்''

''விட்டா...இந்த கிராமத்திலேயே செட்டிலாயிடுவே போலிருக்கே? சொல்லி விட்டுச் சிரித்தார் ராஜய்யன்.

''வொய்?...வொய் நாட்?....இப்பச் சொல்றேன்!...நான் இந்த கிராமத்தை விட்டுப் போகப் போறதில்லை!...இங்கே நிரந்தரமா செட்டில் ஆகப் போறேன்!'' சற்றும் யோசிக்காமல் பேசினான் குணா.

''க்கும்...நடக்கற மாதிரி ஏதாவது சொல்லுப்பா'' என்றார் ராஜய்யன் முன் நெற்றியில் அடித்துக் கொண்டு.

''இது நடக்கும் டாட்!...!..நான் இந்த கிராமத்தில்தான் இனிமேல் இருக்கப் போறேன்என்வாழ்க்கைஇனிஇங்கேதான்!'' என்று மறுபடியும் குணா ஆணித்தரமாய்ச் சொல்ல,

குழப்பமானார் ராஜய்யன்.

அவர் மனதுக்குள் ஏற்கனவே லேசாய் உருவாகியிருந்த அச்சம் இப்போது விஸ்வரூபமெடுக்க ஆரம்பித்தது.

'என்ன சொல்றான் இந்த குணா?'

## 20

சிவஞானத்தின் வீட்டு முன் அவர்களது கார் வந்து நின்ற போது, அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து பல தலைகள் எட்டிப் பார்த்தன. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் கூட்டம் காரை நோக்கி ஓடி வர ஆரம்பித்தது.

காரிலிருந்து இறங்கி வேக வேகமாக வீட்டினுள் சென்ற ராஜய்யனைத் தொடர்ந்து குணாவும் அதே வேகத்தில் நடந்தான்.

யாரோ வீட்டிற்குள் நுழைவதை சமையல் அறையிலிருந்தே கவனித்து விட்ட சிவஞானத்தின் மனைவி தமிழ்ச்செல்வி, அவசர அவசரமாய் கூடத்திற்கு வந்தாள்.

அவர்களைப் பார்த்ததும், ''வாங்க...வாங்க'' புன்னகை முகத்துடன் வரவேற்றாள்.

''என்னம்மா எப்படியிருக்கே?...ஆமாம் எங்கே சிவஞானம்?'' கண்களால் தேடியவாறே ராஜய்யன் கேட்டார்.

அவள், கூடத்தின் இடப் புறமிருந்த அந்த அறையைக் காட்ட,

சற்றுத் தாழ்வான கதவு கொண்ட அந்த அறைக்குள் குனிந்தபடி நுழைந்தனர் ராஜய்யனும், குணாவும்.

இருள் அந்த அறைக்குள் சோகமாய் அமர்ந்திருந்தது.

மூலையிலிருந்த கட்டிலில் நோய்ப்பட்ட சிங்கம் போல் படுத்துக் கிடந்தார் சிவஞானம்.

நரைத்த தாடி மற்றும் நடுங்கும் விழிகளுடன் படுத்திருந்த நண்பரைக் கண்டதும் குபுக்கென்று ஒரு அழுகை உள்ளிருந்து கிளம்பி, தொண்டையில் வந்து அடைத்துக் கொண்டு நின்றது

ராஜய்யனுக்கு.

''என்ன ஓய்...சிவஞானம்?....எப்படி அய்யா இருக்கே?'' என்று தழுதழுத்த குரலுடன் அந்த செயலற்றுப் போன கையைத் தொட்டார் ராஜய்யன்.

ஜில்லென்றிருந்தது அந்த ஸ்பரிசம்.

''ஆ...ஆ...ரூ?'' வாய் ஒரு பக்கமாய்க் கோணிக் கொண்டு போக, சிரமப்பட்டுப் பேசினார் சிவஞானம்.

ராசய்யன் வந்திருக்கேன்யாஎன்றவர் திரும்பி குணாவை அருகில் அழைத்து, ''என் கூட குணாவும் வந்திருக்கான்'' என்றார் சற்றுப் பெரிய குரலில்.

சிவஞானத்தின் கண்கள் குணாவைத் தேட, குனிந்து தன் முகத்தை அவர் அருகில் கொண்டு போனான் குணா.

செயல்பாட்டுடன் இருந்த இன்னொரு கையால் குணாவின் கன்னத்தில் தட்டி, கோணலாய்ச் சிரித்தார் சிவஞானம்.

''ஓய்...சிவஞானம்!...நம்ப குணா இப்ப டாக்டர்!...அதுவும் சாதாரண டாக்டரில்லை...அமெரிக்காவுல போய் படிச்சிட்டு வந்த டாக்டர்!...அடுத்த மாசம் டெல்லி மிலிட்டரி ஆஸ்பத்திரியில் பெரிய பதவியில் உட்காரப் போறான்!...''

சிவஞானத்தின் சோக முகத்தில் சின்னதாய் சில சந்தோஷக் கொப்புளங்கள்.

''அது மட்டுமில்லை ஓய்!....பயலுக்கு அடுத்த வாரம் கல்யாணம் வெச்சிருக்கேன்!...அதுக்கான பத்திரிக்கையையும் கையோட கொண்டு வந்திருக்கேன் ஓய்!''

அறைக்குள் வந்த சிவஞானத்தின் மனைவி ஜன்னலைத் திறந்து விட்டு, அங்கு வெளிச்சத்தைக் கூட்டினாள்.

தான் கொண்டு வந்திருந்த காபியை இருவருக்கும் கொடுத்து விட்டு, சிவஞானத்திடம் குனிந்து, ''நீங்க ஏதாச்சும் சாப்பிடறீங்களா?'' கேட்டாள்.

வேண்டாமென்று தலையாட்டிய சிவஞானம், ''அவங்களுக்கு சாப்பாடு தயார் பண்ணு'' என்று வார்த்தைகளை கடித்துக் கடித்துச் சொன்னார்.

அன்றைய பகல் உணவை சிவஞானத்தின் வீட்டில் முடித்துக் கொண்டு, கல்யாணப் பத்திரிக்கையையும் கொடுத்து விட்டு, மாலை வாக்கில்,

''அப்ப...நாங்க புறப்படறோம் சிவஞானம்!...இப்பவே

கிளம்பினால்தான் மிட் நைட்டுக்காவது போய்ச் சேர முடியும்!...நாளைக்கு உள்ளூரில் நிறைய பேருக்கு பத்திரிக்கை வைக்க வேண்டியுள்ளது'' என்றர் ராஜய்யன்.

''ம்ஹூம்...அந்த வேலையே ஆகாது!...நீங்க காலைலதான் போகணும்!...'' சிவஞானத்தின் மனைவி கண்டிப்புடன் சொன்னாள்.

''இல்லைம்மா....அது...வந்து...'' என்று ராஜய்யன் இழுக்க,

''ஏன்?...அமெரிக்க டாக்டர் எங்க வீட்டிலெல்லாம் தங்க மாட்டாரா?'' தமிழ்ச்செல்வி கேட்டாள்.

''ரா...ஜ...ய்யா...இருப்பா....'' சிவஞானமும் தன் கோணிப் போன வாயால் பரிதாபமாய்க் கெஞ்ச,

மறுக்க முடியாமல் போனது ராஜய்யனால்.

குணாவை அவர் ஓரக் கண்ணால் பார்த்தார்.

அவன், ''சரி...ஒரு நைட் தானே?...இருந்திட்டே போகலாம்'' என்று சன்னக் குரலில் சொன்னான்.

''குணாவே சொல்லிட்டான்...அப்புறமென்ன?...நாங்க இருந்திட்டு நாளைக்குக் காலையிலேயே கிளம்பறோம்... சந்தோஷமா?'' சிரித்த முகத்தோடு கேட்டார் ராஜய்யன்.

''அதானே?'' என்றாள் தமிழ்ச்செல்வி.

அப்போதுதெருவில்ஏதோசத்தம்கேட்க, தமிழ்ச்செல்வி சென்றாள். சிலநிமிடங்களிலேயேதிரும்பிவந்தவள், ''ஒண்ணு மில்லைங்கமூணாவதுவீட்டுலஒருசிறுவன்இருக்கான்!.... அவன்பேருசரவணன்!...அவனுக்குகொஞ்சம்உடம்புசரியில்லை அதான்மந்திரவாதியைக்கூட்டிட்டுபோறாங்க'' என்றாள்.

விருட்டென்றுதிரும்பிஅவளைப்பார்த்தகுணா, ''அதுக்கு டாக்டரையில்லகூட்டிட்டுப்போகணும்?...மந்திரவாதியைஎதுக் குக்கூட்டிட்டுப்போறாங்க?'' கேட்டான்.

''இங்கெல்லாம்காய்ச்சல்தலைவலின்னாவைத்தியர்கிட்டே போவாங்கஇந்தமாதிரிவியாதிக்கெல்லாம்மந்திரவாதிங்ககிட்டே தான்போய்விழுவாங்க'' என்றாள்தமிழ்ச்செல்வி.

''இந்தமாதிரிவியாதின்னாஎந்தமாதிரிவியாதி?'' விடாமல்கேட்டான்குணா.

அதுவந்துமுகத்தின்ரெண்டுபக்கமும்காதுக்குக்கீழேபயங்கர வீக்கம் கூடவேகாய்ச்சலும்

''ஓகாட்!'' என்றகுணா, பையனுக்குஎன்னவயசு? கேட்டான்.

''ரெண்டு''

''நோடவுட்!...இட்ஈஸ் மம்ப்ஸ்'' என்றுகுணாசொல்ல, ராஜய்யன்கேட்டார். ''புரியறமாதிரிசொல்லுப்பா''

''டாட் மம்ப்ஸ்ன்னாசிறுவர்களுக்கு வரும் ஒருவகைஅம்மைநோய்!... மம்ப்ஸ்வைரஸ்னு ஒருவைரஸ் இருக்கு அது பாரோமிக்ஸோவைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த வைரஸ்ரொம்படேஞ்சரானது!... சரியானடிரீட்மெண்ட் குடுக்கலேன்னாடெத்கூடஏற்படும்'' என்றான்குணா.

''அதுக்குஎன்னபண்ணனும்குணா?....என்னடிரீட்மெண்ட்?'' ராஜய்யன்கேட்டார்.

''மீசில்ஸ்மம்ப்ஸ்ரூபெல்லா.தடுப்பூசிகளைமுதலிலேயே போட்டிருந்தாஇந்தமாதிரியெல்லாம்ஏற்படாது''

''இங்கெல்லாம்அதுக்குவசதிஇருக்காதுப்பா.என்ன பண்ணமுடியும்?''

''ஒண்ணும்பிரச்சினையில்லைஅதேஊசிகளையேடிரை பண்ணலாம் என்றகுணா, அந்தச்சிறுவனைநான் போய்ப் பார்க்கலாமா?'' கேட்டான்.

''எதுக்கு?'' தலையைச்சாய்த்துக்கொண்டுகேட்டாள் தமிழ்ச்செல்வி.

இடையில்புகுந்தராஜய்யன், ''நல்லாக்கேட்டேபோஇவனும்டாக்டரும்மா அதுவும் அமெரிக்காவுல போய் மேல் படிப்பெல்லாம் படிச்சிட்டு வந்தடாக்டராக்கும்'' என்றார்.

ஒருநெடியதயக்கத்திற்குப்பின், ''சரிவாங்க!'' என்று சொல்லிஅவர்களிருவரையும்அழைத்துச்சென்றாள்தமிழ்ச்செல்வி.

## 21

அந்தஓட்டுவீட்டின்வாசல்கதவு மிகவும் உயரம்குறைவாயிருக்க, குணாவும் ராஜய்யனும் குனிந்து உள்ளே சென்றனர்.

தரையில், கிழிந்த பாயில் படுக்கவைக்கப் பட்டிருந்தான் அந்தச் சிறுவன். அவன் முகத்தின் இருபக்கங்களிலும்காதுகளுக்குஅடியில் பம்மென்று வீங்கியிருக்க,

சிறுவன்வலியால் அனத்திக் கொண்டுபடுத்திருந்தான்.

மந்திரவாதிதான்கொண்டுவந்திருந்தவிபூதியைஅந்த சிறுவனைச்சுற்றித்தூவி, ஒருவெண்ணிறவேலியைஉருவாக்கினார். பின்னர், கண்களைமூடிக்கொண்டுமந்திரங்களைஉச்சரித்தார்.

''தங்கச்சங்கிலிஎங்கேம்மா?'' திரும்பிஅங்குநின்று கொண்டிருந்தபெண்களிடம்கேட்டார்.

யாரோஒருத்திதன்கையிலிருந்ததங்கச்சங்கிலியைத்தர, வாங்கியமந்திரவாதி, ''நீதான்இவனைப்பெத்தவளா?'' கேட்க,

அவள்இன்னொருபெண்ணைக்கைகாட்டினாள்.

அடுத்த வினாடியே தன்கையிலிருந்த அந்த சங்கிலியைத் தூக்கி அவள் முகத்திலெறிந்த மந்திரவாதி, ''இது பொன்னுக்கு வீங்கி வியாதி இதுக்கு பெத்ததாயோட தங்கச் சங்கிலியைத்தான் போட்டு விடணும்னு உனக்குத் தெரியாதா?'' என்று கத்தலாய்க் கேட்டு விட்டு, சிறுவனின் தாயைப் பார்த்து, ''உன்னோட தங்கச் சங்கிலியைக் கொடும்மா'' கேட்டார்.

''அவள் ஓங்கிஅழுதாள்.

அடஉன்னோடதங்கச்சங்கிலியை நானாகொண்டு போயிடப்போறேன்?... உன்ரமவனுக்குத் தானேபோட்டு விடப்போறேன்?''

அங்குநடப்பவற்றைகுழப்பத்துடன்பார்த்தவாறேநின்றிருந் தான் குணா. மந்திரவாதிமறுபடியும்சிறுவனின்தாயிடம்தங்கச்ச ங்கிலிகேட்டுகையைநீட்ட,

''ஓமந்திரவாதிசாமிஅவகிட்டதங்கச்சங்கிலிஇருந்தால்தானே? அவகுடுப்பா?...அதைத்தான்அவபுருஷன்திருடிக்கிட்டுப் போய்வித்துக்குடிச்சிட்டானே?'' என்றாள்முதலில்தன்தங்கச்ச ங்கியைக்கொடுத்தவள்.

''என்னது?...பையனைப்பெத்தவகிட்டேதங்கச் சங்கிலி இல்லையா?... அப்பபையனை நேர்ந்து விட்டுட வேண்டியதுதான்'' என்ற மந்திரவாதி, தாயின்பக்கம் திரும்பி, ''என்னம்மா சாமிக்கு நேர்ந்திடவா?'' கேட்டார்.

அவர்அப்படிக்கேட்டதும், முகத்திலும்மாரிலும்மாறிமாறி அடித்துக் கொண்டு கதறினாள் அந்தப் பெண். அங்கு என்ன நடக்கின்றது? என்பதே புரியாமல் மெல்ல வெளியேவந்தான் குணா. அவனைத் தொடர்ந்து ராஜய்யனும் தமிழ்ச் செல்வியும் வெளியேவர, தமிழ்ச்செல்வியிடம் கேட்டான்குணா.

''என்னங்க?...என்னங்கநடக்குதுஇங்கே?''

''டாக்டர்தம்பிஇந்தவியாதிக்குப்பேர் பொன்னுக்குவீங்கிஇதுக்குமருந்தெல்லாம்கிடையாதுவைத்தியமுறைதான்இருக்குவியாதி வந்தபையனோடதாய்தன்னோடகழுத்துலஇருக்கறதங்கச்சங்கிலியைக்கழற்றிமகன்கழுத்துலபோட்டுவிடணும்!...''

''போட்டுவிட்டா?'' குணாகேட்டான்.

''போட்டுவிட்டாநாலஞ்சுநாள்லவீக்கம்குறைஞ்சுபயல் எந்திரிச்சிடுவான்''

சொன்னதமிழ்ச்செல்வியைமுறைத்துப்பார்த்தகுணா, ''இதுக்கு முன்னாடி இந்தமாதிரி யாருக்காச்சும் வந்திருக்கா?... அப்படி வந்தவங்களுக்கு தங்கச் சங்கிலி போட்டு அவங்ககுணமாயிருக்காங்களா?... நீங்க பார்த்திருக்கீங்களா?'' கோபமாய்க் கேட்டான்.

''அதுவந்துநான்... நான்பார்த்த தில்லை ஆனா பார்த்தவங்க சொல்லியிருக்காங்க!... இந்தமாதிரி தங்கச்சங்கிலி போட்டு குணமாயிருக்கு!ன்னு'' திணறினாள்.

தலையிலடித்துக் கொண்டான்குணா, அந்தப் பார்த்தவங்க கிட்டப்போய் அதட்டிக் கேளுங்க. அவங்க இதே பதிலைத்தான் சொல்லுவாங்க!... நான் பார்த்த தில்லை பார்த்த வங்க சொன்னாங்கன்னு

''என்னகுணாசொல்றே?'' ராஜய்யன்கேட்டார்.

இதெல்லாம் சரியான மூடநம்பிக்கை டாடி!... யாருமே பார்த்திருக்கமாட்டாங்க எல்லோருமே அவங்க சொன்னாங்க இவங்க பார்த்தாங்கன்னுதான் சொல்லுவாங்களே தவிர உண்மையில் பார்த்தவங்க ஒருத்தர் கூட இருக்க மாட்டாங்க!.... ஏன்னா அப்படியொண்ணு நடக்கவாய்ப் பேயில்லை!... இது வைரஸ் மூலமா பரவுற வியாதி முதல்ல காய்ச்சல் வரும் அதுக்கு பாராசிட்டமால் போட்டாபோதும்!... வீக்கத்திற்கு இப்யூப்ரூஃபன் போடணும்!...இதைவிட்டுட்டு தாயோட தங்கச்சங்கிலி போடுமா மனோட மஞ்சள் பனியனைப்போடு!ங்கற தெல்லாம் சுத்தஹம்பக்''

வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்த மந்திரவாதி குணாவையும், ராஜய்யனையும் மேலிருந்து கீழ் வரை பார்த்து விட்டு வேகவேகமாய்ச் செல்ல, குணாதன்அடுத்த சந்தேகத்தைக் கேட்டான்.

''ஆமாம் அந்தப் பெண் தங்கச் சங்கிலி இல்லேன்னு சொன்னதும் இந்த மந்திரவாதி, பையனைச்சாமிக்கு நேர்ந்து

விட்டுடலாமா?ன்னு கேட்டாரே?.. .அதுக்கு என்ன அர்த்தம்?''

''இனி இந்தப் பையன் பிழைக்கமாட்டான் அதனால் சாமிக்கு நேர்ந்து விட்டுடுவோம் அவரே எடுத்துக்கட்டும்னு அர்த்தம்!''

''ஸ்டுப்பிட்'' என்றுபற்களை நறநறவென்றுகடித்தகுணா, ''என்கிட்டஅந்தப்பையனைக்குடுங்கநான்பிழைக்கவைக்கறேன்'' என்றுசொல்லிக்கொண்டேவேகவேகமாய்வீட்டிற்குள்சென்றான்.

அழுதுகொண்டிருந்தஅந்ததாயிடம், ''ஏம்மாஏன்அழுவறே?'' கேட்டான்.

''என்பையனைஆண்டவனுக்குநேர்ந்தாச்சுஅதான்''

''அப்படின்னா?''கண்களைச்சுருக்கிக்கொண்டுகேட்டான்குணா.

''அவன்செத்திடுவான்னு அர்த்தம் சொல்லி'' விட்டுக் குலுங்கினாள் அந்ததாய்.

''சாகமாட்டான்பொழைச்சுடுவான்'' கண்களை அகலவிரித்துக் கொண்டுசொன்னான்குணா.

''மந்திரவாதியேசொல்லிட்டார்.'' இருகைகளாலும் கண்களைத்துடைத்துக்கொண்டுசொன்னாள்அந்தத்தாய்.

''மந்திரவாதியென்னகடவுளா?...மனுஷன்தானே?''

மேற்கொண்டுஅந்தப்பெண்ஏதோசொல்லவாயெடுக்க, அவளைக்கையமர்த்தியகுணா ''இங்கபாருங்கம்மாநான் ஒருடாக்டர்!...உங்களுக்குஎன்மேல்நம்பிக்கைஇருந்தால் உங்கபையனைத்தூக்கிட்டுஎன்கூடவாங்க!...நான் பொழைக்கவைக்கறேன்உங்கமகனை'' என்றான். குறுக்கேபுகுந்தராஜய்யன்., ''குணாஇந்தஊர்லநீநெனைக்கற அளவுக்குபெரியஹாஸ்பிடல்ஸ்எதுவும்இல்லை'' என்றுசொல்ல, ''பெரியஹாஸ்பிடலுக்கு எங்க போகணும்?''

''கோவில்பட்டிபோகணும்''

''போயிடுவோம்!...அம்மா உங்க பையனைத் தூக்கிக்கிட்டு கிளம்புங்க தமிழ்ச்செல்விஅந்ததாயிடம்சென்று ஏதோசொல்ல, அப்பெண் உடனே மகனைத் தூக்கிக் கொண்டுகிளம்பினாள்.''

## 22

**கோ**வில்பட்டி. மதிவாணன் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் மெயின் கேட்டிற்கு நுழைந்துபோர்ட்டிகோவில் சென்றுநின்றதுகுணாவின்கார். டாடிநீங்கஅவங்கனை ளக்கூட்டிட்டுப்போய்ரிசப்ஷன்லவெய்ட்பண்ணுங்கநான்காரைப

ார்க்பண்ணிட்டுவர்றேன்''

ராஜய்யன்முதலில்இறங்கிகாரின்பின்கதவைத்திறந்து, ''ம் இறங்குங்கம்மா'' என்றதும்தோளில்மகனைச்சுமந்துகொண்டுஅவள்இறங்கினாள். அவள்பின்னால்தமிழ்ச்செல்விஇறங்கினாள்.

காரைப்பார்க்செய்துவிட்டுவந்தகுணா, ரிசப்ஷனில் விபரங்களைச் சொல்லிக் கொண்டிருந்த போது,

''ஹல்லோமிஸ்டர்குணாஎப்படியிருக்கீங்க?'' என்றகுரல் கேட்கதிரும்பிப் பார்த்தான்குணா.

அவனோடுஅமெரிக்காவில்படித்தடாக்டர். வில்சன்புன்னகைமுகத்தோடுநின்றுகொண்டிருந்தார்.

''ஹல்லோமிஸ்டர்வில்சன்?...நீங்கஎப்படிஇங்கே?'' குணாகேட்க,

''அதுசெரி. இது எங்க ஹாஸ்பிடல் மேன்! மைபாதர் டாக்டர். ஆல்பர்ட்ஈஸ் சேர்மேன் ஆஃப்திஸ்ஹாஸ்பிடல்! அண்ட்ஐயாம்எடைரக்டர்''

''ஓவெரிகுட்ரொம்பநல்லதாப்போச்சு'' என்றகுணா தான் வந்த விபரத்தை அவரிடம் சொல்ல,

''அவ்வளவுதானே?... இட்ஸ்மம்ப்ஸ் பிராப்ளம்!...ஒண்ணும் பிரச்சினையில்லை!... என்கூடவாங்க'' என்று சொல்லி விட்டு அந்த வில்சன்முன்னே நடக்க, குணாவும் அந்தப் பெண்ணும் அவரைப்பின் தொடர்ந்தனர்.

சரியாக அரைமணி நேரத்திற்குப்பிறகு, அந்தப் பெண்மட்டும் திரும்பிவந்தாள்.

தமிழ்ச் செல்விகேட்டாள், ''என்னம்மாஎன்னாச்சு?''

மெலிதாய்ப் புன்னகைத்த அந்தப்பெண். என் மகன்கண்ணைத் திறந்து பார்த்தான் என்னைப்பார்த்து அம்மான்னு கூப்பிட்டான் சொல்லிவிட்டு குலுங்கிக்குலுங்கி அழுதாள்.

தமிழ்ச்செல்வியைப்பார்த்துபெருமிதத்துடன்புருவங்களை உயர்த்தினார்ராஜய்யன்.

அப்போதுடாக்டர்வில்சனோடுபேசியபடியேவந்தகுணாவை நோக்கிவேகமாய் ஓடினாள் அந்தத்தாய், ''அய்யா..இனி இந்தப்பையன் இந்தஉலகத்துக்கு இல்லைன்னு சொல்லி சாமிக்கு நேர்ந்து விட்டான் அந்த மந்திரவாதி ஆனா நீங்க. என்மகனை எனக்கு மீட்டுக்குடுத்திட்டீங்க!... நீங்கதெய்வம்'' என்ற வள்சட்டென்று நிறுத்தி நிதானமாய் யோசித்துவிட்டு, அந்த தெய்வத்துக்கும் மேலே

என்றவாறே குணாவின் காலில்விழுந்தாள்.

''அய்யய்யஎன்னம்மாநீ?... எந்திரிம்மா'' என்றகுணா அவள்எழுந்ததும், ''இங்கபாரும்மாஇந்தக்காலத்துலமருத்துவம் ரொம்பமுன்னேறியிருக்கு!...அதனாலஎதுக்கும்பயப்படாதீங்க''. என்றான்.

அன்றுஇரவேசிறுவன்தெளிவாய்த்தேறிவிட, அவனையும் அவன் தாயையும் தன்காரிலேயே அழைத்துச்சென்று அவள் வீட்டில் இறக்கிவிட்டான் குணா.

கையெடுத்துக்கும்பிட்டஅவளிடம், ''கவலைப்படாதேம்மாசகலமருத்துவவசதிகளும்கொண்டஒருபெரியஆஸ்பத்திரியை இந்தஊருக்குநான்தர்றேன்'' என்றுசொல்லிஅனுப்பினான்குணா.

காரில்வரும்போதுதன்தந்தைராஜய்யனிடம், ''டாடிநான்.டெல்லிபோறமுடிவைக்கொஞ்சம்மறுபரிசீலனைபண்ணணும்போலிருக்கு'' என்றான்குணா.

''ஏன்குணா?...என்னாச்சு?'' அவசரமாய்க்கேட்டார்ராஜய்யன்.

நான்சொல்றவிஷயம்உங்களுக்குக்கொஞ்சம்அதிர்ச்சியாய்த்தான்இருக்கும்பட்வேறவழியில்லைசொல்லித்தான்ஆகணும்!

''என்னப்பாபெரிசாபீடிகைபோடறே?...என்னவிஷயம்?''

''நான்டெல்லிஅப்பாயிண்ட்மெண்டைகேன்சல்பண்ணிட்டு இந்தஊர்லஒருபெரியமல்டிஸ்பெஷாலிட்டிமருத்துவமனைதுவங்கலாம்!னுஇருக்கேன்'' என்றுகுணாசொல்ல,

வைத்தகண்வாங்காமல்அவன்முகத்தையேகூர்ந்துபார்த்தார்ராஜய்யன். ''அடேய்நீபிறந்துவளர்ந்தமண்ணேஇதுதான்னுதெரியாமலேயேஉன்அக்காஅப்பன்எல்லாம்வாழ்ந்தஇந்தமண்ணுக்குநீ உபகாரம்செய்யணும்னுநினைக்கறியேஅதுதாண்டஆண்டவன்'' எனமனதிற்குள்நினைத்துக்கொண்டார்.

''ஏன்டாடி இப்படிப்பார்க்கறீங்க?'' ஒருகையால் ஸ்டீரிங்கை ஒடித்தவாறே பேசினான்குணா.

''ஒண்ணுமில்லைப்பா'' என்றுசொல்லிஅந்தப்பேச்சுக்குஅத்தோடு முற்றுப்புள்ளி வைத்தார்ராஜய்யன்.

ஒருவர்வாழ்க்கையில்முற்றுப்புள்ளிவைப்பது, தொடர்புள்ளிவைப்பது, ஆச்சரியக்குறிஇடுவது, எல்லாம் அந்த ஆண்டவன் கையில் அல்லவா உள்ளது?

வீட்டை அடைந்ததும், வேகவேகமாய் இறங்கிச் சென்ற தமிழ்ச்செல்வி, காரில்வரும்போது குணாசொன்னஅந்தவிஷயத்தை

தன் கணவர் சிவஞானத்திடம் சொல்ல,

''ஆஹாகேட்கவே சந்தோஷமாயிருக்குப்பா''. என்றார் அவர்தன் கோணிப் போனவாயால்.

பால்ய சிநேகிதர்கள் இருவரும், இரவு நீண்ட நேரம் பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருக்க, குணா மட்டும் உறங்கப் போனான்.

அப்போது அவன் மொபைல் சிணுங்க, எடுத்துப் பார்த்தான்.

சௌம்யா.

''என்ன ஊரிலிருந்து கிளம்பியாச்சா?'' கேட்டாள்.

''இல்லை சௌம்யா!....''

''ஏன்?...நைட்டே கிளம்பிடுவோம்ன்னு சொன்னீங்க?''

''அதை ஏன் கேட்கிறே?...இங்கஒருசின்னப்பிரச்சினை''

''பிரச்சினையா?...என்னபிரச்சினை உங்களுக்கு ஒண்ணும் இல்லையே?'' பதட்டமாய்க் கேட்டாள்அவள்.

''பக்கத்து விட்டுச் சிறுவனுக்கு வந்தநோய்பற்றியும், அதற்காக அவர்கள் செய்த முட்டாள் தனமான மருத்துவத்தைப்பற்றியும், அதை மீறிதான் செய்த வெற்றிகரமான காரியத்தையும் குணா சொல்லி முடிக்க,

நீங்க சொல்வதைக்கேட்கசந்தோஷமாய்த்தான்இருக்கு!...ப்ச்.. ஆனாலும்நீங்க ..என்னைய ஏமாத்திட்டீங்க என்றாள் சௌம்யா சோகமாய்.

'' ஏன் சௌம்யா?''

''நாளைக்கு நாங்க ஜுவல்ஸ் வாங்க நகைக்கடைக்குப் போறோம்!...உங்களையும் கூட கூட்டிட்டுப் போகலாம்!னு நெனச்சேன்''

''நான் எதுக்கு சௌம்யா?...எனக்கு நகைகளைப் பத்தி என்ன தெரியும்?'' என்றான் குணா.

''உங்களுக்கு ஒரு செயினும்...மோதிரமும் வாங்கப் போறோம்... அதான் உங்களையும் கூட்டிட்டுப் போயி...உங்க டேஸ்ட்டுக்கு செல்க்ட் பண்ணலாம்!னு நெனச்சேன்''

''இங்க பாரு?...நீ உன்னோட டேஸ்ட்டுக்கு எதை எடுத்திட்டு வந்தாலும்...அது எனக்குப் பிடிக்கும் ...போதுமா?''

''ஓ.கே..!...ஓ.கே..!'' என்ற சௌம்யா, ஆமாம்...கிராமம் எப்படியிருக்கு? கேட்டாள்.

''ரொம்ப நல்லாயிருக்கு சௌம்யா!...உண்மையில் எனக்கு

இந்த ஊரை விட்டுப் போகவே மனசு வர மாட்டேங்குது சௌம்யா!..இங்கியே இருந்திடலாம்!னு கூடத் தோணுது'' சிரித்துக் கொண்டே சொன்னான் குணா.

''அய்யய்யோ...அப்ப நான்?''

''நீயும் வந்துடு...ரெண்டு பேருமே இங்க செட்டில் ஆயிடுவோம்'' என்று குணா சொல்ல,

''க்கும்...இப்படிப் பட்டிக்காட்டுல போயி செட்டிலாகத்தான் அமெரிக்கா போயி படிச்சிட்டு வந்தீங்களா?...''

''என்னமோ தெரியலை சௌம்யா?...இந்தக் கிராமம் என்னை ரொம்ப ஈர்க்குது!...ஏதோ இங்க ரொம்ப நாள் வாழ்ந்த மாதிரி... இந்த மண் மேல் எனக்கே ஒரு பாசம் பொங்குது'' சௌம்யா கரகரத்த குரலில் சொன்னான் குணா.

''ஹலோ...அமெரிக்க டாக்டர்...அடுத்த மாசம் டெல்லி போய் டியூட்டில ஜாய்ன் பண்ணனும்!...அதை மறந்திட்டு அங்க போயி உட்கார்ந்திடாதீங்க!'' என்றாள் சௌம்யா பலமாய்ச் சிரித்தபடி.

''அது விஷயமா நான் உன்கிட்ட நிறைய பேசணும்.அப்புறம்பேசறேன்!...''

நீண்ட நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்து விட்டு, மனமில்லாமல் இணைப்பைத் துண்டித்துக் கொண்டனர்.

இணைப்பைத்துண்டிக்கும்முன்பைபை என்றுகுணா சன்னக்குரலில்சொன்னதுசௌம்யாவின்காதுகளில்ஓங்கிஒலிக்க,

'எதுக்குஇவ்வளவுசத்தமா ''பைபை'' சொல்றாரோ?' என்றுமுனகியபடியேஇணைப்பிலிருந்துவெளியேறினாள்.

## 23

அதிகாலை,கண்விழித்தவுடன்தன்னிச்சையாய் தலை மாட்டிலிருந்த வாட்சை எடுத்து நேரம் பார்த்தான் குணா.

5.35.அறைக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்க, எழுந்து சென்று பார்த்தான்.

கூடத்தில் சிவஞானம் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்க, ராஜய்யன் அவருக்கு அருகே நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்.

அடப்பாவமே...ரெண்டு பேரும் நேத்திக்கு ''ராத்திரி பேசிட்டிருந்த அதே பழைய கதையைக் கண்டினியூ பண்ணிட்டிருக்காங்களோ?

அவர்களை நெருங்கி வந்த குணா, ராத்திரி முழுவதும் பேசியும்... இன்னும் தீரலையா உங்க ரெண்டு பேரோட மலரும் நினைவுகள்?'' என்று தமாஷாய்க் கேட்டான்.

குணா....எங்க காலத்துல நாங்க ரெண்டு பேரும் அனுபவிச்ச இன்பத்தை உங்களாலெல்லாம் அனுபவிக்க முடியாதுப்பா... அதுக்கெல்லாம் ஒரு குடுப்பினை வேணும்ப்பா'' என்றார் ராஜய்யன்.

கையை ஆட்டி குணாவைத் தன் அருகில் அழைத்த சிவஞானம், குணா...உங்கப்பா இந்த ஊருக்கு எப்ப வந்தாலும் பாத்ரூம் குளியலை மறந்திட்டு ஆத்துக் குளியலுக்குத்தான் போவார்!... இன்னிக்கும் அதே மாதிரி போறேன்னான்...நான்தான்... குணாவையும் கூட்டிட்டுப் போன்னு சொன்னேன் என்றார் ஒரு மாதிரியாய் வாயை இழுத்துக் கொண்டு.

அதைக் கேட்டதும் பௌர்ணமி நிலவாய் முகம் மலர்ந்த குணா, ''என்னது?....ஆத்துக்கா?...ஓ காட்!...இந்த ஊர்ல ஒரு ஆறு ஓடுதுன்னு டாடி என்கிட்ட சொல்லவேயில்லையே?...கண்டிப்பா நானும் வர்றேன் டாட்!'' குழந்தையைப் போல் அடம் பிடித்தான் அமெரிக்க டாக்டர்.

முக்கியமான விஷயம்!....அந்தப் பழைய சங்கதிகளைக் கிளறுகிற மாதிரி எந்த விஷயத்தையும் அவன் கிட்டப் பேச வேண்டாம்!...அவன் மனசிலிருந்து அந்தப் பழைய நினைவுகள் மொத்தமாய்க் கரைந்து போய் இப்பத்தான் அவன் மனசு ஓரளவுக்குத் தெளிவாகியிருக்கு!...ஸோ...அதையெல்லாம் அவாய்ட் பண்ணிடுங்க!...மனிதனுடையஆழ்மனம்ஒருகருத்தை ஏற்றுக்கொண்டவுடன்துரிதமாகஅதைச்செயல்படுத்ததுவங்கிவி டும்அந்தக்கருத்தைநடைமுறைப்படுத்துவதற்குஅதுதன்னோடவ லிமைமிக்கஅனைத்துபலங்களையும்ஒன்றுதிரட்டிபயன்படுத்து ம்நாம்ஆழ்மனத்தைஎதிர்மறையாகப்பயன்படுத்தினால்அதுபிரச்சி னையைத்தான்கொண்டுவரும்

சிறுவயதில்குணாவுக்குடிரீட்மெண்ட்பார்த்தமனநலமருத்து வர்அவன்குணமாகிவீடுதிரும்பும்முன்கடைசியாய்தன்னிடம் சொன்னவாசகங்கள்ராஜய்யன்காதுகளில்அப்படியேஎதிரொலிக்க, யோசனையில்ஆழ்ந்தார்.

''என்னடாடியோசிக்கறீங்க?...கமான்கிளம்புங்க தந்தையைஉசுப்பினான்குணா.

ராஜய்யனின்மனதிற்குள் பெரும்போராட்டம். 'இன்னும்அந்

தபால்யகாலநினைவுகள்குணாவின்ஆழ்மனத்தில்இருக்குமா?... அவன்என்னசராசரிமனிதனா?...டாக்டர்அதுவும்வெளிநாடு சென்றுபடித்துவிட்டுவந்திருக்கும்பெரியடாக்டர்அவனைஅந்தப் பால்யகாலநினைவுகள்பாதித்துவிடுமா?'

ராஜய்யன், ம்ம்ம்...சரி!...வா...நாம ரெண்டு பேருமே போயிட்டு சீக்கிரம் வந்திடலாம் கிளம்பினார்.

''குணா....இந்த கிராமத்தோட ஹை லைட்டே அந்த ஆத்தங்கரைதான் தெரியுமா?....அந்தக் காலத்துல உங்கப்பன் ஆத்துக்குள்ளார இறங்கினான்னா....அவ்வளவு சீக்கிரத்துல வெளிய வர மாட்டான்!...நாந்தான் வற்புறுத்தித்...திருப்பிக் கூட்டிட்டு வருவேன்'' என்றார் சிவஞானம் பெருமையுடன்.

''இஸிட்?....அப்ப அந்த ஆத்தங்கரையை நான் பார்த்தே ஆகணும்'' ராஜய்யனுடன் சந்தோஷமாய்க் கிளம்பினான் குணா.

விதி மௌனமாய்ச் சிரித்தது. அந்தச் சிரிப்பொலி யாருக்குமே கேட்கவில்லை.

''வாவ்....?...வாட் அ பியூட்டிஃபுல் ரிவர்?....'' கண்களை அகல விரித்தபடி சொன்னான் குணா.

கிழக்கு வானில் படர்ந்திருந்த அந்த ஆரஞ்சு வர்ணம் ஆற்று நீரில் பிரதிபலிக்க மொத்த ஆறும் ஆரஞ்சு நிற வெல்வெட் படுக்கையாய் மிதந்து கொண்டிருந்தது.

கண் கொட்டாமல் ஆற்றையே பார்த்தபடி, மெய் மறந்து நின்றிருந்த குணாவை ராஜய்யன் உசுப்பினார்.

''குணா....இதுக்கே மெய் மறந்து நின்னுட்டா எப்படி?... இன்னும் தண்ணிக்குள்ளார இறங்கிப் பாரு...அந்த சுகம் நீ கோடி டாலர் கொட்டிக் கொடுத்தாலும் உங்க அமெரிக்காவுல கிடைக்காது''

''டாட்....எனக்கும் தண்ணீல இறங்கணும்...அந்தச் சுகத்தை அனுபவிக்கணும்!ன்னு ஆசையாய்த்தான் இருக்கு!...பட்... எனக்குத்தான் நீச்சல் தெரியாதே?...அதான் பயமாயிருக்கு'' என்றான் குணா.

''என்னது?...உனக்கு நீச்சல் தெரியாதா?'' கேட்டு விட்டு வாய் விட்டுச் சிரித்த ராஜய்யன், ''என்னப்பா நீ?...ஃபாரீன்ல போய் என்னென்னமோ படிச்சிட்டு வந்திருக்கே?...நம்மூரு நீச்சல் தெரியாதுங்கறியே?'' என்று குணாவை கிண்டலடித்தார்.

''அதென்னமோ தெரியல டாட்!...ஆரம்பத்திலிருந்தே எனக்கு தண்ணீரைக் கண்டால் ஒரு மாதிரி பய உணர்ச்சிதான் வருது

டாட்'' என்றான் குணா. சொல்லும் போது அவன் முகபாவம் மிகவும் வித்தியாசமாய் மாற, ராஜய்யனின் மூளைக்குள் ஒரு பிளாஷ் அடித்தது. ஒருவேளை சின்ன வயசுல பார்த்த அக்காவின் மரண சம்பவத்தோட பாதிப்பாய் இருக்குமோ?...இல்லையே... அதையெல்லாம் குணா சுத்தமாய் மறந்திட்டானே?

''சரி குணா...நீ வெளியிலேயே நின்று வேடிக்கை பார்த்திட்டிரு....நான் மட்டும் தண்ணீர்ல இறங்கி...ஒரு பத்தே நிமிஷம் குளிச்சிட்டு வந்திடறேன்'' என்ற ராஜய்யன், நிதானமாய்த் தண்ணீரில் இறங்கி, சிறு பிள்ளை போல் துள்ளலாய் நீந்த ஆரம்பித்தார்.

தந்தையின் சாகஸ நீச்சலை கைதட்டி ரசித்தான் குணா.

அப்போதுதான்....அவன் கண்களில்....அது....பட்டது.

அந்தப் பெரிய மரமும்,

அதன் பருத்த வேர்த் திண்டும்,

அந்த கணத்தில், அவன் மூளைப் பிரதேசத்திற்குள் ஙொய்ய்.... ஙொய்ய் என்று தேனீக்கள் பறந்தன.

கண்கள் சுருங்கின...தலை பின்னோக்கிச் சாய்ந்தது. கை,கால்கள் எல்லாம் மெல்ல மெல்ல உள் நோக்கிப் போவது போன்ற பிரமை ஏற்பட, வெறித்தனமாய்த் தலையை உதறினான் குணா.

முகம் விகாரமானது.

நீருக்குள் முங்கியெழுந்த ராஜய்யன், எதேச்சையாய்த் திரும்பி குணாவைப் பார்த்து அதிர்ந்தார். 'கடவுளே!...என்னாச்சு இவனுக்கு?' பதட்டத்துடன் தண்ணீரிலிருந்து வெளியே பாய்ந்து வந்தார்.

## 24

குணாவின் அருகில் வந்து, அவன் கன்னத்தைத் தட்டி, ''குணா...குணா...என்னப்பா?...என்னாச்சு உனக்கு?..ஏன் இப்படி கை காலெல்லாம் உதறுது?'' பீதியடித்த முகத்தோடு கேட்டார் ராஜய்யன்.

அவனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

ஆனால், அவன் பார்வை மட்டும் அந்த பெரிய மரத்தின் பருத்த வேர்த் திண்டின் மீதே நிலைக்குத்தியிருந்தது.

அந்தப் பார்வையின் இலக்கைத் திரும்பிப் பார்த்த ராஜய்யன் மேலும் பீதியானார். 'அய்யோ...அது சின்ன வயசுல அவன் உட்கார்ந்திருந்த அதே வேர்த் திண்டாச்சே?...

கடவுளே!... அவனுக்கு பழைய சம்பவங்கள் ஞாபகத்துக்கு வர ஆரம்பிச்சிடுச்சு போலிருக்கே?'

இதற்கு மேலும் குணாவை அங்கே நிற்க அனுமதித்தால் ஏதாவது விபரீதம் ஏற்பட்டு விடுமென்பதை தெளிவாகப் புரிந்து கொண்ட ராஜய்யன், ''குணா...வாப்பா வீட்டுக்குப் போகலாம்!....போதும் ஆற்றங்கரையை ரசிச்சது'' என்று சொல்லியபடி அவன் தோளைப் பிடித்துத் தள்ளினார்.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சுதா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு''

இருபத்தியொன்பது வயதான குணா, ஆறு வயதுச் சிறுவனின் குரலில் அதைச் சொல்ல,

உறைந்து போய்ச் சிலையாய் நின்றார் ராஜய்யன்.

ஆனால், சில வினாடிகளிலேயே சுதாரித்துக் கொண்டு, ''குணா... வாப்பா போகலாம்'' என்று மறுபடியும் அவன் கைகளைப் பிடித்து இழுத்தார் ராஜய்யன்.

அவர் பிடியிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்ட குணா, நேரே அந்த வேர்த் திண்டின் அருகே சென்று, அதன் மீது அமர்ந்தான்.

''கொலுசு கெடைச்சுதா?...அக்கா கொலுசு கெடைச்சுதா?...மேல வந்துடு!...அக்கா மேல வந்துடு''

அவன் கண்கள் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருக்க, அவன் உதடுகள் அந்த வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டேயிருந்தன.

தன் கண்களைத் தேய்த்துக் கொண்டு உற்றுப் பார்த்தார் ராஜய்யன், அங்கே ஆறு வயது குணா உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''அய்யய்யோ...நான் தப்புப் பண்ணிட்டேனே?....குணாவை இங்கே கூட்டிட்டு வந்து...அவன் மனதின் ஆழத்தில் புதைந்து போயிருந்த பழைய நினைவுகளைக் கிளறி விட்டு அவனை ஆறு வயது குணா ஆக்கிட்டேனே?'' தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அவனருகே ஓடினார்.

ஆனால்....

அவர் அவனை நெருங்கும் முன், அவன் சரேலென்று நீருக்குள் பாய்ந்தான்.

சுழித்துக் கொண்டு ஓடிய நீரில், அவன் சிறிது தூரம் மிதந்து விட்டு, ஆழத்தில் அமிழ்ந்தான்.

விழிகளைப் பெரிதாக்கி, அப்படியே அதிர்ச்சியில் செய்வதறியாது

நின்றார் ராஜய்யன்.

சில நிமிடங்களுக்குப் பிறகு சுய நினைவிற்கு வந்த ராஜய்யன், ஓ......வென்று வாய் விட்டுக் கதறினார். ''அய்யோ...என் குணா ஆத்தோட போறானே?.....என் உயிருக்கு உயிரா வளர்த்த என் குணா என்னை விட்டுட்டு ஆத்தோட போறானே?''

கூவிக் கொண்டே கரையோரமாய் ஓடினார்.

முதுகில் அழுக்கு மூட்டையைச் சுமந்தபடி துணி துவைக்க வந்து கொண்டிருந்த கூட்டம் இவரை வினோதமாய்ப் பார்த்தது.

''ஏலே....யாரோ ஆத்துக்குள்ளார விழுந்திட்டாங்க போலிருக்குலே....பெருசு கரையோரமாய்க் கூவிட்டே ஓடுது'' என்றான் ஒருவன்.

ஒரு கட்டத்தில் தன் நிலை மறந்த ராஜய்யன், தான் என்ன செய்கிறோம்? என்பதே புரியாமல், குணாவைக் காப்பாற்றியே தீர வேண்டும், என்கிற ஆவேசத்தில், ஓடும் நீரில் தானும் குதித்தார்.

''அடக் கெரகமே.....பெரிசும் உள்ளார குதிச்சிட்டுதுலே....'' இன்னொருத்தன் உரத்த குரலில் சொல்ல,

''ஏலேய்...நாலஞ்சு பேரா குதிங்கலே....'' யாரோ ஒருவன் இட்ட கட்டளைக்கு முதுகில் மூட்டையைச் சுமந்து கொண்டிருந்த அந்த ஏழு பேரும் மூட்டையைக் கீழே சாய்த்து விட்டு, தொபீர்ரென்று தண்ணீருக்குள் பாய்ந்தனர்.

உள்ளே போன இரண்டாவது நிமிடம் ராஜய்யனை மட்டும் தூக்கி வந்து வெளியில் போட்டனர் இருவர், அவர் கன்னங்களைத் தட்டி, அவரை சுய நினைவுக்கு வரச் செய்தவர்கள், ''என்ன பெருசு?... என்ன பிரச்சினை உனக்கு?'' கத்தலாய்க் கேட்டனர்.

''என் மகன்...குணா...குணா...ஆத்துல...போயிட்டான்.... அவனுக்கு நீச்சல் தெரியாது..காப்பத்துங்க...காப்பாத்துங்க'' அழுதபடியே சொன்னார்.

''கவலைப்படாத பெருசு....உள்ளார நம்ம ஆளுங்க அஞ்சு பேர் இருக்காங்க...உன் மகனைக் காப்பாத்திடுவாங்க'' என்றான் ஒருத்தன்.

தலையில் கையை வைத்துக் கொண்டு, கரையில் அமர்ந்து, உச்ச ஸ்தாயில் அழ ஆரம்பித்தார் ராஜய்யன்.

''அய்யோ...என் ராசா...நானே உன்னைக் கொன்னுட்டேனே?....நீ வரக் கூடாத இடத்துக்கு நானே உன்னைக்

கூட்டியாந்து எமன் கைல பிடிச்சுக் குடுத்திட்டேனே?'' முகத்தில் படீர்... படீர்ரென்று அடித்துக் கொண்டார்.

ஒரு மணி நேரமாகியும், குணாவின் உடல் கிடைக்கவில்லை.

ஆற்றங்கரையில் திருவிழாக் கூட்டம் போல் மக்கள் கூடி விட்டனர்.

''யாரோ பட்டணத்து டாக்டராம்....நீச்சல் தெரியாம தண்ணீல இறங்கிட்டாராம்?''

''அடில...சுழல்ல சிக்கிட்டிருக்கும்...பொழுதோட தானா மேலே வந்து மொதக்கும் பாரு'' எவனோ ஒருவன் ஹேஸ்யம் சொன்னான்.

ராஜய்யன் கத்திக் கத்தி தொண்டை வறண்டு, கண்கள் மேலே செருகியபடி, மணலில் கிடந்தார். அவரைச் சுற்றி நாலைந்து பேர் நின்று அவரை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தனர்.

திடீரென்று, ''கெடைச்சிடுச்சு....கெடைச்சிடுச்சு'' என்று கூச்சல் எழும்ப, துள்ளியெழுந்தார் ராஜய்யன்.

தன்னைச் சுற்றியிருந்த கும்பலைத் தள்ளிக் கொண்டு ஓடினார்.

அவர்கள் வெளியே கொண்டு வந்து போட்டிருந்த குணாவின் உடல் மேல் தொப்பென்று விழுந்தார்.

''அய்யோ....குணா!...என்னை விட்டுட்டுப் போயிட்டியாப்பா?...வாழ்க்கைல உன்னை உயரமான இடத்துல உட்கார வெச்சுப் பார்க்கணும்!னு என் உயிரைக் குடுத்துப் பாடு பட்டேனே?...இப்படி யாருமே நினைக்காத உயரத்துக்குப் போயிடுவே!ன்னு நான் கனவுல கூட நினைக்கலையேப்பா!...'' என்று கதறியவர், தலையைத் தூக்கி தன்னைச் சுற்றியிருக்கும் கூட்டத்தைப் பார்த்து,

''பாருங்கய்யா...என் மகனைப் பாருங்கய்யா!....அமெரிக்காவுல போய் படிச்சிட்டு வந்த டாக்டரைப் பாருங்கய்யா!....அடுத்த வாரம் டெல்லிக்குப் போய் பெரிய ஆஸ்பத்திரில பெரிய டாக்டரா உட்காரப் போற டாக்டரைப் பாருங்கய்யா!...பொணமாய்ப் போயிட்டான்யா!'' தலையில் மடேர்...மடேர்ரென்று அடித்துக் கொண்டு கதறினார்.

தன் நிலையை மறந்து, மண்ணில் விழுந்து புரண்டார்.

கட்டிய உறவும், பெற்றெடுத்த உறவும் பாதியிலேயே பரிதவிக்க விட்டு விட்டுப் போன பின், வாழ்க்கையில் எந்தவொரு

பிடிப்புமே இல்லாமல் வாழ்ந்து வந்த அந்தப் பரிதாப மனிதன், ஒருஐந்தறிவுஜீவன்மீதுஅன்பைப்பொழிந்தார். அதன்காரணமாகவே அந்த ஐந்தறிவு ஜீவனையும் இழந்தார். இந்தா உன் அன்பைக்காட்ட இன்னொரு ஜீவன் என்று விதிகொண்டு வந்து சேர்த்த குணா என்னும் ஆத்மார்த்த உறவும்அவரைபிரிவுத்துயரின்ஆழ்த்திவிட்டுச் சென்றதும்.தவித்தார்.துடித்தார்.

அப்போது, ராஜய்யனின் பார்வை, இறுக மூடியிருந்த குணாவின் வலது கை மீது விழ, புருவங்களை நெரித்துக் கொண்டு மெல்ல எழுந்தார். கைக்குள்எதுவோஇருக்கும்போலிருக்கே?

குணாவின் அருகில் சென்றமர்ந்து, அவன் வலக்கையைத் தூக்கித் தன் மடி மேல் வைத்து, உள்ளங்கையை விரித்தார்.முடியவில்லை.

மொத்தபலத்தையும்காட்டிவிரிக்க, ஒருசிறிய சிரமத்திற்குப் பின், விரிந்த உள்ளங்கையிலிருந்து தெறித்து விழுந்தது....அது?

பச்சைப் பசேலென்று....பாசி படர்ந்த....

ஒற்றைக் கொலுசு!

குணாவின் அக்கா, காவேரியின் ஒற்றைக் கொலுசு!

கண்கள் அகல விரிய, வாயைப் பொத்திக் கொண்டு, சத்தமாய் அழுதார் ராஜய்யன்.

''அடப்பாவி மகனே!...உன் அக்காவோட கொலுசைத் தேடித்தான் இத்தனை வருஷம் கழிச்சு...இங்க வந்து....இந்த ஆத்துக்குள்ளார குதிச்சியா?''

தலையில்ஓங்கிஓங்கிஅறைந்துகொண்டார்.

''இதுதான்சாமிவிரயபாவத்தின்பலன்!...இதுவரை மட்டுமல்ல இனிமேலும்வாழ்க்கையின்கடைசிநிமிஷம் வரைக்கும் இது உங்களைப்பின்தொடரும்!...நீங்கயார்மீதெல்லாம்அன்பையும்பாசத்தையும் கொட்டறீங்களோ?... அவங்களைஇழந்துநிப்பீங்க

மரத்தடி ஜோஸியனின் வார்த்தைகள் மனதின் அடியிலிருந்து மேலே வந்து அவரைப் பிறாண்டின.

## 25

அங்கு நடப்பவைகளை கூர்ந்து கவனித்தபடி நின்றிருந்த ஒரு பெரியவர், ராஜய்யனை அடையாளம் கண்டு கொண்டு, ''அட...இவுக...நம்ம சிவஞானம்

அய்யா வீட்டுக்கு வந்திருக்கற விருந்தாளிக!...யாராச்சும் ஓடிப் போய் அவங்களுக்குத் தகவல் சொல்லிக் கூட்டியாங்கப்பா'' என்றார் தன் வெற்றுடம்பைத் துண்டால் தேய்த்துக் கொண்டே,

தலையில் முண்டாசு கட்டியிருந்த ஒருவன், ''இதோ...நானே போய்த் தகவல் சொல்லிக் கூட்டியாரேன்'' சிட்டாய்ப் பறந்தான்.

உதட்டோரம் ஒரு வித வெற்றிச் சிரிப்பு உறைந்திருக்க, சவமாய்க் கிடந்த குணாவை, வைத்த கண் வாங்காமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராஜய்யன்,

யாரும் எதிர்பார்த்திராத வினாடியில்... குபுக்கென்று எழுந்து நின்று,

''கொலுசு கெடைச்சுது...குணா கொலுசு கெடைச்சுது!...மேல வந்துடு!...குணா மேல வந்துடு''

என்று அடித் தொண்டையில் கத்திக் கொண்டு, அந்த வேர்த் திண்டை நோக்கி ஓடினார்.

கூட்டம் ஆணியடித்தாற் போல் அப்படியே உறைந்து நின்றது.

அதே நேரம், அந்த மிகப் பிரம்மாண்டமான நகைக் கடையில்,

''ஏண்டி இன்னுமா உன்னோட டேஸ்டுக்குத் தகுந்த கொலுசு கிடைக்கலை?'' மகளுடன் நகை வாங்க வந்திருந்த செளம்யாவின் தாய் அவளைக் கடிந்து கொள்ள,

ஜுவல்லரிக்காரன் பரப்பியிருந்த பல்வேறு டிசைன்களிலான கொலுசுகளுக்கு முன்னால் பெரும் குழப்பத்துடன் நின்றிருந்த செளம்யா, ''அம்மா..என்னோட டேஸ்ட் முக்கியமில்லை!... அவருக்குப் பிடித்தமான டிசைனாயிருக்கணும்!...அதனால்தான் நிதானமா தேடிட்டிருக்கேன்!'' என்றாள்.

''ம்ம்...ம்ம்...தேடு...தேடு!...அந்த அமெரிக்க டாக்டர் வித்தியாசமான டேஸ்டோடதான் இருப்பார்!...'' என்று சொல்லி விட்டு, நெக்லஸ் ஏரியா நோக்கி நகர்ந்தாள் செளம்யாவின் தாய்.

''என் அக்காவோட கொலுசு கெடைச்சிடுச்சு!...என் அக்காவோட கொலுசு கெடைச்சிடுச்சு!'' என்று அவள் காதருகில் குணாவின் ஆன்மா சத்தமில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது...

பாவம், அவளுக்குக் கேட்கவில்லை.

**(முற்றும்)**



மினி தொடர்

# பாமியான் மலை புத்தர் சிலைகள்!

ஆப்கானிஸ்தானின் வரலாறு மிகவும் தொன்மையானது. சரித்திரம் பதிவு செய்யப்படாத பன்னெடுங்காலத்திற்கு முன்பே ஆப்கானிஸ்தானில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். முதலில் விலங்குகளை வேட்டையாடி வந்த மக்கள் கால ஓட்டத்தில் வேளாண்மையிலும் ஈடுபட்டனர்.



## ஆப்கான் தலிபான்-3



பாமியான் சிலைகள்

சிந்துவெளி நாகரிகம் என்பது வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் உருவான மிகச் சிக்கலான அமைப்புகளை உடைய நாகரிகங்களில் ஒன்று. தற்போதைய பாகிஸ்தான், வடமேற்கு இந்தியா, மேற்கு இந்தியா, ஆப்கானிஸ்தான் பகுதிகளில் இந்த நாகரிகம் பரவியிருந்தது.

என்பதற்கான சான்றிதழ் கிடைத்துள்ளன.

சிந்து சமவெளி நாகரிகம் சிறப்பு வாய்ந்தது என்பதை ஆப்கானிஸ் தானில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி வாயிலாக கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் திடமாக நிலை நாட்டியுள்ளன.


கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் அகழ்வாராய்ச்சித் துறையில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்ட அக்ஷயேதா சூர்யநாராயண், சிந்து சமவெளி மக்களின் உணவுப்

## தலைப்பாகை வர்த்தகம்

**மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பங்குரா மாவட்டம், பல்வேறு துறைகளில் பிரசித்திபெற்றது. இங்குள்ள சோனாமுகி கிராமத்தைச்சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஆப்கானிஸ் தானில் நிகழ்ந்து வரும் மாற்றங்களை கவலை தோய்ந்த முகத்துடன் கவனித்து வருகின்றனர்.**

**இவர்களின் பிரதான தொழிலே டர்பன் (வேலைப்பாடு மிக்க தலைப்பாகை )**

**தயாரிப்பது தான். இங்கிருந்து தான் பெருமளவு தலைப்பாகைகள் ஆப்கானிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. தற்போது இவர்களது தலைப்பாகை வர்த்தகம் கேள்விக்குறியாகி விட்டது.**



பழக்கம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். விலங்குகளைப் பொறுத்தவரை, மாடுகள் ,எருமைகள், ஆடுகள், பன்றிகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இவற்றை உணவுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நிலப்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட உயிர்ம எச்சங்களை ஆய்வுக்குட்படுத்தி, அகழாய்வில் கிடைத்த பிற உயிர்மப் பொருட்களையும் வைத்து, பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய தெற்காசிய உணவுப் பழக்க வழக்கத்தின் பன்மைத்துவத்தை நாம் புரிந்துகொள்ள முடியும்.

பண்டமாற்றுக்கான மிகப் பரந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. மிக மதிப்பு வாய்ந்த பொருட்கள்கூட கிராமப்புறங்களில் கிடைக்கும் அளவுக்கு இது நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

சிந்து சமவெளி நாகரிக காலத்தில், நகர்ப்புற பகுதிகள் கிராமப்புறங்களின் மீது ஆதிக்கம் செலுத்தின என்று



யுவான் சுவாங்

சொல்லமுடியாது. இவற்றுக்கு இடையிலான உறவு பெரிதும் பொருளாதாரம் சார்ந்தே இருந்தது.

தழைத்தோங்கி இருந்த சிந்து சமவெளி நலிவுற்று சீர்குலைந்ததற்கு வறட்சியே காரணம் என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். சில நூற்றாண்டுகளாக வறட்சி நீடித்ததால், சிந்து நதிக்கரை பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் நீர்வளமும் பசுமைச் செறிவும் கொண்ட இடங்களைத் தேடிச் சென்றுவிட்டனர்.

ஆப்கானிஸ்தானில் வெவ்வேறு காலங்களில் விதவிதமான கலாச்சாரங்கள் மேலோங்கி இருந்தன. சிந்து சமவெளி நாகரீகம் அஸ்தமித்த பிறகு அப்பகுதியில் இருண்ட காலம் ஏற்பட்டது. அப்பகுதியை விட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறி விட்டனர். காலவோட்டத்தில் ஏற்றமும் இறக்கமும் மாறி மாறி நிகழும் என்பது தவிர்க்க முடியாத விதியாகும். இதற்கு ஆப்கானிஸ்தானும் விலக்கு அல்ல.

கௌதம புத்தர் அகிம்சை



யை பரப்பினார். துன்பத்திற்கு ஆசையே மூலகாரணம் என்று எடுத்துரைத்தார். ஆசைகளையும் தேவைகளையும் எவ்வளவு தூரம் குறைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்துக் கொள்ள வேண்டும். இதுவே மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்குமான வழி என்பதை அவர் அனுபவப்பூர்வமாக எடுத்துரைத்தார். ராஜகுமாரனாக இருந்தவர் ஆண்டியாக மாறி அலைந்து திரிந்ததற்கு அவரது மனோபாவத்தில் ஏற்பட்ட மாற்றமே அடிப்படையாக அமைந்தது. இந்த மாற்றம் தனிப்பட்ட ஒருவரின் மாற்றமாக நின்றுவிட வில்லை என்பதுதான் அவரது மகத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. புத்தரை லட்சக்கணக்கானோர் பின்பற்றினார்கள். இப்போது புத்தமதத்தினரின் எண்ணிக்கை குறைந்து விட்டாலும் கூட தத்துவ ரீதியான தாக்கம் இன்னும் தணிந்துவிட வில்லை என்று கருதப்படுகிறது. புத்தரின் சீடர்கள், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். உலகிலேயே முதல் முறையாக புத்தர் உருவ வழிபாட்டை மேற்கொண்டவர்கள் ஆப்கானிஸ்தானியர்கள்தான் என்பதற்கு வரலாற்றில் எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

ஆப்கானிஸ்தானில் புத்தருக்கு விண்ணளாவிய வகையில் நெடிதுயர்ந்த சிலைகள் செதுக்கப்பட்டன. சீனாவைச் சேர்ந்த பிரபல யாத்திரிகரான யுவான் சுவாங், இந்தியாவில் மட்டுமல்லாமல், ஆப்கானிஸ்தானிலும் விரிவாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பாமியான் மலைப்பகுதியில் எழுப்பப்பட்டிருந்த புத்தர் சார்ந்த சிற்பங்களையும் கல்லில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களையும் கண்டு யுவான் சுவாங்

மெய்சிலிர்த்தார். இவற்றையெல்லாம் அவர் தனது பயணக்குறிப்பில் துல்லியமாக பதிவு செய்துள்ளார். புத்தரின் நெருங்கிய சீடர்கள் ஆப்கானிஸ்தானை புத்தபூமியாக மாற்றியது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் இது நெடுங்காலம் நிலைக்கவில்லை.

புத்தமதத்தில் நம்பிக்கையும் பற்றும் அறவே அற்ற ஆட்சியாளர்கள் தலைதூக்கியதை அடுத்து புத்தர் சார்ந்த நினைவு சின்னங்கள் கவனிப்பாரற்று பாழடையத் தொடங்கின. பாமியான் மலைப்பகுதியில் பரவலாக இருந்த புத்தர்--

**( தொடரும் )**

**காதவம் புல்லுநர்**




## அகதிகள் போராட்டம்

**கடந்த அரை நூற்றாண்டாகவே ஆப்கானிஸ்தானில் அரசியல் ஸ்திரத்தன்மை கானல் நீராகிவிட்டது. இதனால் லட்சக்கணக்கானோர் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.பாகிஸ்தானில் ஏறத்தாழ 15 லட்சம் அகதிகளும், ஈரானில் 8 லட்சம் அகதிகளும்,ஜெர்மனியில் 2 லட்சம் அகதிகளும் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவிலும் சுமார் 20 ஆயிரம் ஆப்கானிஸ்தான் அகதிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. டெல்லியில் உள்ள ஐ.நா சபையின் கிளை அலுவலகத்தில் ஆப்கானிஸ்தான் அகதிகள் நடத்திய போராட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.**



'சினிமாவில் என்னுடைய என்டரி அவ்வளவு சுலபமானதாக இல்லை. பல விதமான அவமானங்களை தாங்கிக் கொண்டுதான் சினிமாவில் நுழைந்தேன். இன்று வரையில் எனது சினிமா கேரியர் ஒரு போராட்டம்தான்' என்று சொல்லும் ஐஸ்வர்யா ராஜேஷ்... திட்டம்இரண்டு, பூமிகா என தனி கதாநாயகி படங்களில் தொடர்ந்து பயணிக்க தொடங்கி விட்டார். அவருடன் ஒரு பேட்டி.

# சினிமாவில் நான் உருவாக்கிய முக்கியத்துவம்!

–ஐஸ்வர்யா ராஜேஷ்.

**சினிமாவில் உங்கள் என்ட்ரி சுலபமாக இருந்ததா?**

சினிமாவில் எனக்கென்று எந்த பின்னணியும் கிடையாது. என்னுடைய குடும்பம் மிகவும் சாதாரணமானது. இந்த இடத்திற்கு வருவதற்கு நான் மிகவும் கஷ்டப்பட்டேன்.

எனக்கென்று எந்த ஒரு பெரிய கனவும் இல்லை. நான் சினிமாவில் நடிக்க முயற்சித்தபோது எல்லா விதமான தடைகளும் என்னை நோக்கி வந்தன. அவை எல்லாவற்றையும் சந்தித்தேன்.

என்னை செக்ஸுவல் ரீதியாக பலர் கேலி செய்தனர். என்னுடைய உருவம், தோற்றம், முகம் தோல் நிறத்தை பார்த்து கேவலமாக கிண்டல் செய்தார்கள். நான் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டேன்.

நான் நடித்த முதல் படம் நன்றாக போகவில்லை. இதன் பின்னர் எனது கேரக்டர் கொஞ்சம் சுமாராக இருப்பதுபோல் உருவாக்கப்பட்டது. இன்று வரையில் எனது சினிமா கேரியர், ஒரு போராட்டமாகவே இருப்பது வருத்தம் தான்.

**உங்கள் கேரியர் பற்றி?**

எந்த ஒரு இயக்குனருடன் என்னை எந்த காபி ஷாப்பிலும் பார்த்திருக்க முடியாது. சினிமாவில் நடிக்க வாய்ப்பு கொடுங்கள் என்று நானும் யாரிடமும் வாய்ப்பு கேட்டு போனதில்லை.நான் நடித்த படம் நன்றாக ஓடி இருந்தாலும் அல்லது மிகப் பெரிய ஹீரோவுடன் நான் நடித்து இருந்தாலும் எனக்கென்று பெரிய சம்பளம் எதுவும் கிடைக்கவில்லை.

தமிழ் சினிமாவில் எனக்கென்ற ஒரு முக்கியத்துவத்தை நானாகத் தான் உருவாக்கிக் கொண்டேன். இதற்குப் பிறகுதான் டோலிவுட்டில் நுழைந்தேன்.

இன்றைக்கு தமிழ் தெலுங்கு ஆகிய இருமொழிப் படங்களிலும் பரபரப்பான நடிகைகளில் நானும் ஒருத்தி.



**சினிமாவில் புரிந்து கொண்டது?**

எனக்கு இருபத்தி மூன்று வயதாக இருக்கும்போது 'காக்கா முட்டை' படத்தில் இரண்டு சிறுவர்களுக்கு அம்மாவாக நடித்தேன். இருபத்தி ஏழு வயதில் 'கனா' படத்தில் பள்ளி மாணவியாக நடித்தேன். இரண்டு படங்களும் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றன.

ஆகவே எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்கிரிப்ட் தான் முக்கியம். இன்றைக்கு எனக்காக இயக்குனர்கள் கதையை உருவாக்குகிறார்கள். போஸ்டர்களில் என் முகம் மட்டுமே தெரிவதை நான் பார்க்கிறேன். உண்மையிலேயே இது எனக்கு கிடைத்த முன்னேற்றம் தான்.

**நடிப்பில் உங்கள் வழி?**

தெலுங்கு திரையுலகம் போன்ற கிளாமர் நிறைந்த துறையில் நல்ல வாய்ப்புக்காக காத்திருந்தேன்.

ரியலிஸ்டிக் படங்களை தயாரிப்பில் தமிழ்திரையுலகில் இப்போது அதிக கவனம் செலுத்துகிறது என்பது என்னுடைய கருத்து.

இருந்தாலும் தமிழ் தெலுங்கு ஆகிய இரண்டு துறைகளிலும் பணியாற்றியவே ஆசைப்படுகிறேன்.

**திருமகன்.**



# பீதியை கிளப்பும்...

# போதை கலாச்சாரம்!

மக்கள் மையம் கட்சி தலைவர் கமல்ஹாசன் வெளியிட்ட டுவீட் ஒன்றில், ' சமீபத்திய சாலை விபத்துகளில் இளைஞர்கள் பலியாகும் கோர சம்பவங்கள் பதற வைக்கின்றன. போதையே இதற்கு காரணம் என்கிறார்கள். தமிழகத்தில் தலைதூக்கி இருக்கும் இந்த போதை கலாச்சாரத்தை கட்டுக்குள் கொண்டுவர முதல்வர் உடனடி செயல்பாட்டில் இறங்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.







கருணா சாகர்.

உண்மையிலேயே மிதமிஞ்சிய போதையில் தமிழக இளைஞர் சமூகம் தள்ளாடுகிறது. விழாக்களில் குடி, கூத்து என்றிருந்தவர்கள், இப்போது தினசரி நடவடிக்கையாக்கிவிட்டனர். இதனால் வாகன விபத்துகள் சர்வ சாதாரணமாக நடக்கின்றன, விலை மதிக்க முடியாத பல உயிர்கள் குறைந்த மது விலையில் பறிக்கப்படுகின்றன.

சமீபத்தில் ஒசூர் திமுக எம்எல்ஏ பிரகாஷ் என்பவரின் மகன் கருணா சாகர் உள்பட 7 பேர் பெங்களூரு அருகே நடந்த கார் விபத்தில் மரணமடைந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதிநவீன பாதுகாப்பு வசதி கொண்ட அந்த காரை அதிவேகமாக ஓட்டியதாலேயே பெரிய விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கருணாகரன் உறவினரும் தோழியுமான பிந்து என்பவருக்கு வேலை கிடைத்ததை அடுத்து பார்ட்டி வைப்பதற்காக 7 பேர் கிளம்பி பெங்களூருக்கு சென்றதாகவும், பார்ட்டியை முடித்து விட்டு திரும்பும் போது தான் இந்த விபத்து நடந்ததாகவும் கூறப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே சாக்கோட்டை விளாரிகாடு கிராமத்தைச் சேர்ந்த 23 வயது காத்தலிங்கம் கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் சிற்ப வேலை செய்து வந்தார். இந்நிலையில் ஊருக்கு வந்த காத்தலிங்கம், அவரது நண்பர்கள் அருண் மற்றும் கவிராஜ் ஆகியோரை அழைத்து க்கொண்டு தனது இருசக்கர வாகனத்தில் பணம்பட்டி அரசு மதுபான கடையில் மது அருந்தியுள்ளார்.

கையில் பணம் தீர்ந்ததால் அருகில் உள்ள புதுவயல் வந்து ஏடிஎம்மில் பணம் எடுக்க, மூவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் வந்துள்ளனர். அப்போது கருநாவல்குடிவளைவில் திரும்பும் பொழுது அங்கிருந்த பாலத்தில் மோதி காத்தலிங்கம் சம்பவ இடத்திலேயே

பலியானார். இதுவும் ஜூலையில் நடந்தது.

அதே ஜூலையில், சேலம் அருகே மதுப்பழக்கத்தைக் கைவிட, மந்திரித்த கயிறு கட்டி வழிபாடு நடத்தி, மது போதையுடன் காரை ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்திய நால்வரை போலீஸார் கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் அக்கரையாம்பாளையத்தைச் சேர்ந்த அருண் (22), அவரது நண்பர் சேலம் மாவட்டம் வாழப்பாடியை அடுத்த சிங்கிபுரத்தைச் சேர்ந்த அஜித்குமார் (24) ஆகியோர் இருசக்கர வாகனமொன்றில், சென்று கொண்டிருந்தனர். அப்போது காளிகவுண்டம்பாளையம் என்ற இடத்தில், அதிவேகமாக, தாறுமாறாக வந்த கார், இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றது. விபத்தில், இருசக்கர வாகனத்தில் சென்ற இருவரும் தூக்கி வீசப்பட்டு அதிர்ஷ்டவசமாகச் சாலையோரத்தில் விழுந்தனர். இதனால், அடுத்தடுத்து வந்த வாகனங்களில் சிக்காமல் உயிர் தப்பினர்.

இதனிடையே தனிப்படை போலீஸார் நடத்திய விசாரணையில், விபத்தை ஏற்படுத்திய பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த சதீஷ்குமார் மற்றும் அவரது நண்பர்கள் 3 பேரும், மதுப் பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக, சங்ககிரி அருகே ஒரு கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்திவிட்டு, அங்குள்ள பூசாரி ஒருவரிடம் பூஜை செய்து மந்திரித்த கயிறை வாங்கிக் கட்டிக் கொண்டு, பின்னர் சொந்த ஊர் புறப்பட்டனர். மது போதையில் இருக்கும்போதுதான் மந்திரித்த கயிறைக் கையில் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் கைகளில் தாயத்துக் கயிறைக் கட்டிக் கொண்டு, உடனேயே காரில் சென்று விபத்தை ஏற்படுத்தியது தெரியவந்தது.



ரமேஷ் கொலையில் கைதானவர்கள்.

இரு மாதங்களுக்கு முன்பு கோவை மதுக்கரை அருகே போதை ஊசி தகராறு தொடர்பாக 22 வயது வாலிபரை 18 வயது சிறுவன்



விபத்துக்குள்ளான தொழிலதிபர் ராஜியின் கார்.

வெட்டி கொலை செய்த சம்பவம் போதைப்பொருள் புழக்கத்தின் தாக்கத்தை வெளிப்படுத்தியது.

திண்டுக்கல் வேடசந்தூரில் தண்ணீர்பந்தம்பட்டியில் இரவு வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த சந்திரசேகர், பழனிசாமி மீது வடமதுரை சுகாதார ஆய்வாளர் பாலகுமார் போதையில் வேகமாக ஓட்டிவந்த கார் மோதியதில் பழனிசாமி பலியானார்.

வேலூர் மாவட்டம் செதுவாலை இந்திரா நகர் பாரதிதாசன் தெருவில் வசித்த 27 வயது தொழிலதிபர் ராஜி, தன்னுடைய கார் மூலம் வேலூர் வந்துவிட்டு பின் மீண்டும் அதே காரில் மது குடித்து விட்டு செதுவாலை நோக்கி சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் அதிவேகமாக சென்றுள்ளார். அப்போது கார், தடுப்புகளின் மீது மோதியதில் தொழிலதிபர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியானார். போதையில் அதிவேக கார் ஓட்டமே இந்த விபத்துக்கு காரணம்.

இதேபோல், வார இறுதி நாட்களில் சென்னை கிழக்கு கடற்கரை சாலை, முக்கிய நெடுஞ்சாலைகளில் இரவு நேரங்களில் வாகனம் ஓட்டி செல்லும் இளைஞர்கள் போதையில் அதிவேகமாக செல்கிறார்கள். விபத்தை சந்தித்து உயிரை பறிகொடுக்கின்றனர். அதேபோல், பிற நகர்களில் புறநகர் நெடுஞ்சாலைகளில் வாரந்தோறும் போதையில் பைக் ரேஸ் நடத்தி பல இளைஞர்கள் மடிந்துள்ளனர்.

இவ்வாறு 3 மாதங்களில் இருபதுக்கு மேற்பட்ட உயிர்பறிக்கும் பெரிய போதை விபத்துகள் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளன. போதையால் விபத்து மட்டுமல்ல, கொலை, பாலியல் வன்முறை, திருட்டு, கலவரம் உள்ளிட்ட அனைத்து குற்றங்களும் எளிதில் நடக்கிறது.

கோவை மதுக்கரை,

போடிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் ரமேஷ் (23). இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாச்சிபாளையம் பகுதியில் தனது இருசக்கர வாகனத்தில் சென்றபோது, ஒரு மர்மக் கும்பல் கொடூரமாகத் தாக்கியது. இதில் ரமேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக நான்கு பேரை போலீஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட உதயகுமார், சந்தோஷ், ரகுகிருஷ்ணன், சஞ்சீவ்குமார், உயிரிழந்த ரமேஷ் அனைவருமே மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடந்த கொலைக்குப் பழி தீர்ப்பதற்காக இந்தக் கொலை நடந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

மதுக்கரைப் பகுதியில் நண்பருடன் தங்கியிருந்த ஜீவானந்தம் என்பவர் போதை ஊசிக்கு அடிமையாகியிருந்தார். அவருடன் ஒன்றாக தங்கியிருந்த மணிகண்டன்தான் அவருக்கு போதை ஊசி பார்ட்னர்.



இளைஞர்கள் போதை ஊசி போட்டுக்கொள்ளும் வீடியோ.

கடந்த ஜூன் மாதம் போதை ஊசிக்கு ஏற்பட்ட தகராறில் ஜீவானந்தத்தை மணிகண்டன் கொலை செய்துவிட்டார்.

ரமேஷின் வழிநடத்துதலில்தான் மணிகண்டன், ஜீவானந்தத்தை கொலைசெய்ததாக கூறப்பட்டுவந்தது. கைதான நான்கு பேரில் மூன்று பேர் ஜீவானந்தத்தின் உறவினர்கள் என்றும் கூறப்படுகிறது. ஜீவனாந்தம் கொலைக்கு பழிக்கு பழிவாங்க, சமயம் பார்த்து காத்திருந்தனர். அதற்கான வாய்ப்பு அமைந்ததும், ரமேஷை கொலைசெய்துவிட்டனர் என்று விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

கடந்த மாதம் 11ஆம் தேதி கோவை சொக்கம்புதூர் பகுதியில் வாழைக்காய் மண்டி நடத்தி வந்த ராமச்சந்திரனை அவரது மகன் கோவிந்தராஜ்

மது போதையில் கத்திரிக்கோலால் குத்தி கொலை செய்த கொடுமை நடந்தது. அதே காலகட்டத்தில் சென்னையில் குடிபோதை காரணமாக நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் கொலை செய்ய முயன்ற நபரின், கத்தியை பிடுங்கி அவரையே வெட்டிவிட்டு, தலையில் கல்லை போட்டு கொலை செய்ய முயன்ற 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

இம்மாத தொடக்கத்தில் சென்னையில் 18வயதிற்கு உட்பட்ட சிலர் போதை மருந்து ஊசியினை செலுத்திக்கொள்ளும் வீடியோ இணையத்தில் வைரலானது. அது தொடர்பாக பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் விசாரித்தபோது, கேரளாவை சேர்ந்த ரிதீஸ் ராஜன் (34) உள்ளிட்ட 4 பேர், வட மாநிலங்களில் இருந்து மொத்தமாக வாங்கி விற்பனை செய்தது தெரிந்தது. சமூக வலைத்தளம் மூலம் இந்த போதை விநியோகம் நடந்துள்ளது.

போதைப்பழக்கத்தால் பீதியடைய காரணம், அது இளைஞர்கள் நடுவில் இருப்பதுதான். பெரும்பாலும் போதைப்பழகத்திலும் அது தொடர்பான குற்றங்களிலும் 15 முதல் 30 வயதுக்குட்பட்ட இளந்தலைமுறையினரே அதிகம் ஈடுபடுகின்றனர்.

அதுமட்டுமின்றி, குடும்ப அமைப்பின் வலுவான கட்டுமானமான இளைஞர்கள் குடும்ப பொறுப்பும்



**சமூக ஊடகங்கள் பல்வேறு நல்ல தகவல்களை பகிர உதவுவதுபோல் போதைப்பொருள் வாங்கும், விற்கும் இடங்களை பற்றி அறிந்துகொள்ளவும் பலருக்கு உதவுகிறது. அதில் குரூப்களை தொடங்கி இந்த குதர்க்கமான வேலைகளை சிலர் செய்கின்றனர்.**

**2019ல் பொள்ளாச்சியிலும், மாமல்லபுரத்திலும் சொகுசு விடுதிகளில் இளைஞர்கள் கலந்துகொண்ட போதை பார்ட்டி நடைபெற்றது. அப்போது அந்த பார்ட்டியை சமூக வலைத்தளத்தின் மூலம் ஒருங்கிணைத்ததும், பொள்ளாச்சியில் ரஷ்யர் ஒருவரும், மாமல்லபுரத்தில் வெளிநாட்டு தொடர்புடைய ஒருவரும் போதைப்பொருட்களை கொள்முதல் செய்திருந்தது புலனானது.**

உழைக்கும் திறனும் ஆர்வமும் இன்றி போவதால் பல்லாயிரம் குடும்பம் பரிதாப நிலையில் உள்ளது. போதையின் கொடூரத்தால் நாடி நரம்பு தளர்ந்து வலுவிழ்ந்த வாலிபர்களை தெருக்கள் தோறும் காணமுடிகிறது.

போதைப்பழக்கத்தில் ஈடுபட்டால் ஒதுக்கப்படுவோம் என்று உள்ளம் புழுங்கிய காலம் போய், போதையே நாகரீகத்தின் அடையாளமாக அங்கீகரிக்கப்பட்ட அவல நிலை ஏற்பட்டுள்ளதால் இளைஞர்கள் கூச்சநாச்ச மின்றி அப்பழக்கத்தை நாடுவதற்கு காரணமாக அமைந்துவிடுகிறது.

அனைவர் வீடுகளும், அனைத்து நாடுகளும் இளைஞர்களை கொண்டே தம் முன்னேற்றத்தை கற்பனை செய்கிறது, திட்டமிடுகிறது. ஆற்றல் சார்ந்த கல்வி, விளையாட்டு, அறிவியல், தொழில்நுட்பம் என அனைத்து துறைகளிலும் இளைஞர் பங்களிப்பு தேவைப்படுகிறது. இந்நிலையில் அத்தனை நம்பிக்கைக்குரிய இளைஞர்களையும் தம்முள் மூழ்கச்செய்துள்ள போதை வஸ்துகள் உண்மையிலேயே பீதியூட்டுபவையாக இருக்கின்றன. மதுக்கடை களை நடத்தும் அரசே போதை மீட்பு மையங்கள் நடத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

**-நெல்லைபரிதி**



# திம்மருசு

(தெலுங்கு)

கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் புத்திசாலி அமைச்சராக இருந்த அப்பாஜியின் நிஜப் பெயர் தான் சலுவா திம்மருசு. புத்திக் கூர்மையால் குற்றவாளிகளை அடையாளம் காணும் ஹீரோ கேரக்டரை மையப்படுத்தி டைட்டில் வைத்திருக்கிறார்கள்.

2011-ல் இந்தியா உலகக் கோப்பை ஜெயித்த அன்றைய இரவு, போலி என்கவுண்டரில் இறந்த பிணங்களை சட்ட விரோதமாக எரிப்பது பற்றி போலீஸ் அதிகாரியிடம் பேசும் ஒருவன், அதை வீடியோ ஆதாரம் எடுத்து போலீஸ் இன்பார்மாரிடம் கொடுக்கிறான்.

டாக்ஸி டிரைவரான அந்த இன்பார்மரை மர்ம நபர் குத்திக் கொலை செய்கிறான்.

மழை பெய்யும் அந்த நேரத்தில் ஒரு ஆக்சிடெண்ட் நடக்க, பப்பில் வேலை பார்க்கும் வாசு அடிபட்டு கீழே விழுகிறான். பிறகே அங்கு நின்றிருக்கும் காரில் ஒருவர் குத்துப்பட்டு இறந்து கிடப்பதை பார்த்து அதிர்ந்து போய் போலீசுக்கு தகவல் கொடுக்கிறான். ஆனால், சாட்சி சொல்ல வந்த அவன் மீதே போலி கேஸ் போட்டு அடித்துத் துவைக்கும் இன்ஸ்பெக்டர் பூபதி ராஜூ, வாசுவுக்கு ஆயுள் தண்டனை வாங்கித் தருகிறான். வருடங்கள் உருண்டோடுகிறது.

**நே**ர்மையான வக்கீல் ராமச்சந்திராவுக்கு, தனியாக ஒரு பெரிய கேஸ் வாதாட வேண்டும் என்பது லட்சியம். ஆனால் ஒன்றுக்கும் உதவாத சில்லறை கேஸ் தன்னிடம் வர கடுப்பாகிறான். இந்த சமயத்தில் தான் அவன் மிகவும் எதிர்பார்த்த ராவ் அசோசியேட்ஸ் நிறுவனத்தில் வக்கீல் வேலைக்கு இன்டர்வியூ நடப்பதாக காதலி அனு தகவல் சொல்கிறாள்.

வசதி வாய்ப்பற்ற அடித்தட்டு மக்களுக்கு சட்ட உதவி வழங்கும் அந்த நிறுனத்தில் சேரும் ராம், கையில் எடுக்கும் முதல் வழக்கு, 10 வருடங்களுக்கு முன்பு கொலை கேஸில் கைதான வாசுவின் நஷ்ட ஈடு தொடர்பான வழக்கு தான். அவன் வேலை செய்த பப், ரூ.10 லட்சம் பணம் கட்டச் சொல்லி வாசு மீது வழக்குப் போட, வங்கிக் கடனுக்காக அவன் குடும்ப சொத்து மொத்தம் ஜப்தியாகி ஒரு வீடு மட்டுமே மிஞ்சி நிற்கிறது.



தண்டனை காலத்துக்கு முன்பே ரிலீசான வாசு, இப்போ பணப் பிரச்சனையில் சிக்கித் தவிக்கிறான். அவனுக்கு உதவ வக்கீல் ராம் தேடிச் செல்கிறான். ஆனால், ஏற்கனவே நிறைய வக்கீல்கள் தன்னை ஏமாற்றிய கடுப்பில் வாசு, ராமை அவமதிக்கிறான். அதையும் தாண்டி தனக்காக பரிந்து பேசும் ராமிடம், போலீஸ் தன்னை அடித்து துன்புறுத்தி கொலை கேஸில் சிக்க வைத்த விபரத்தை சொல்கிறான் வாசு.

உண்மையில், பப்புக்குப்



போன போலீஸ் இன்ஸ் பூபதி ராஜூ, அங்குள்ள ரீனா என்ற பெண்ணிடம் தகாத முறையில் பேச, அவளைக் காப்பற்றப் போன வாசு மீது பூபதி பகை வைத்தது தெரிய வருகிறது. அன்றிரவு ரீனாவை ரவுடி கும்பலிடம் காப்பாற்றி பத்திரமாக ஊருக்கு அனுப்பி வைக்கிறான் வாசு. பப்பில் நடந்த சம்பவத்தை மனதில் வைத்து எஸ்.ஐ. பூபதி, வாசுவை குற்றவாளி ஆக்கி விட்டான்.

ரீனாவை மீண்டும் சாட்சியாக கூட்டி வந்தால், வாசு குற்றமற்றவன் என்பது நிரூபணமாகும். அவள் ஐதராபாத்தில் இருப்பது தெரிந்து தேடிப் போகிறான் வாசு.

ஆனால் அவளோ 'என் புருஷன், குழந்தைங்களோட வாழ்க்கை சந்தோஷமா போயிட்டிருக்கு, இது உன்னால தான் கிடைச்சது, ஆனா இந்த சூழ்நிலையில் என்னால உனக்கு உதவ முடியல' என்று சொல்லி திருப்பி அனுப்பி விடுகிறாள்.

விரக்தியுடன் ஊருக்கு திரும்பும் அவனை போலீஸ் பாதி வழியில் வழிமறித்து கைது செய்கிறது. இம்முறை ரீனா மர்மமாக கொலை செய்யப்பட, அந்த பழி வாசு மீது விழுகிறது. அதே சமயம், ராமின் மீது லாரி ஏற்றிக் கொலை செய்யப் பார்க்கிறார்கள். வாசுவின் சட்டைப் பையில் ராம் பொருத்தி அனுப்பிய கேமரா அவனை காப்பாற்றி விடுகிறது. ராமும் நூழிலையில் உயிர் தப்பி விடுகிறான்.

ஆனாலும் வாசுவை எளிதில் விடுவதாக இல்லை. அம்மாவுடன் ஹாஸ்பிடல் போன இடத்தில் ஒரு ரவுடி கும்பல் அவனை சுற்றி வளைக்கிறது. வாசுவை கொலை செய்ய ஏன் முயற்சிக்கிறார்கள், 10 வருடங்களுக்கு முன்பு நடந்த கேப் டிரைவர் மரணத்தை ஒருவர் கூட பார்த்திருக்க மாட்டார்களா? என்ற கேள்வி ராமை துளைக்கிறது.

பழைய நியூஸ் பேப்பர் செய்தியை வைத்து, கொலை நடந்த தினத்தில் நடந்த மற்றொரு விபத்து செய்தியை கட்டம் கட்டி, ஆக்சிடெண்ட்டில் கால் போன ஒருவனை சந்திக்கிறான் ராம். மழை பெய்த அந்த இரவில் ஒரு கொலையை

பார்த்து விட்டு தலை தெறிக்க ஓடி வந்து லிப்ட் கேட்டு ஏறிய ஒருவனைப் பற்றி அந்த மனிதர் சொல்கிறார்.

கொலை நடந்த இடம் அருகே அன்றைய தினம் போன் டவரில் பதிவான நம்பர்கள், மறுதினம் சுவிட்ச் ஆப் செய்யப்பட்ட தடயங்களை வைத்து ஹர்ஷா என்ற நபரை கண்டுபிடிக்கிறான். ஆம், அன்றைய தினம் டாக்சி டிரைவரை ஒருவன் கொலை செய்ததை ஹர்ஷா வீடியோ எடுத்திருக்கிறான். மர்ம ஆசாமி அவனை துரத்திப் போன போது தான் வாசுவின் பைக்கில் மோதி ஆக்சிடென்ட் ஆகியிருக்கிறது. இப்போதும் அந்த வீடியோ பதிவு தன்னிடம் இருப்பதாக அவன் சொன்ன மறுநொடி, போலீஸ் ஆபீசர் பூபதி ராஜூ, திடீரென என்ட்ரி கொடுத்து ஹர்ஷாவை சீட்டிங் கேஸில் அரெஸ்ட் செய்து கூட்டிப் போகிறான்.

தன்னுடன் இருக்கும் யாரோ ஒருவர் தான் எதிர் கோஷ்டிக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள் என ராமின் சந்தேகப் பார்வை சுதாகர் மீது விழ, தன் காதலனை கொன்று விடுவேன் என மிரட்டியதால் பயந்து போய் அனு தான் ஹர்ஷா பற்றிய தகவலை சொன்னாள் என்பது திடீர் ட்விஸ்ட்.

மறுபடி ஆரம்பித்த இடத்திற்கு கேஸ் வந்து நிற்க, சில வருடங்களுக்கு முன்பு பூபதி லீவில் இருந்த நேரத்தில் மறுபடி வாசு கேஸை விசாரித்த போலீஸ் அதிகாரி பாஸ்கரை சந்திக்கிறான் ராம். யாரோ ஒருவர் தனக்கு போனில் தகவல் கொடுத்ததாக கூறும் பாஸ்கர், கிரிமினல் ஒருவன் பெயரை சொல்கிறார். அவனை துரத்திப் பிடிக்கும் போது தான் புது தகவல் கிடைக்கிறது.

எஸ்.ஐ. பூபதி சார்ஜ் எடுத்த பிறகு, செயின் ஸ்னாட்சிங், திருட்டை ஜாஸ்தியா பண்ணச் சொல்லி பிரஷர் கொடுத்தான். டாக்ஸி டிரைவர்கள் கிட்ட பணம் அடிக்குறது ஈஸி. அன்னைக்கு நைட் அந்த டிரைவர் கிட்ட பணம் பிடுங்க

**ஸ்ரீசரண் பாகலாவின் பின்னணி இசை தேவையான இடங்களில் திரில் எபெக்ட் கூட்டியிருக்கிறது. அப்பு பிரபாகரின் கேமரா கோணங்களும், பிக்கினா தம்மிராஜூவின் நேர்த்தியான படத்தொகுப்பும், வேத வியாஸின் வசனங்களும் படத்திற்கு பிளஸ். ஷரன் கோபிசெட்டியின் இயக்கத்தில் திம்மருசு சிறந்த ரீமேக் படங்களில் ஒன்றாக வந்திருக்கிறது.**



பார்த்தப்போ, திமிறினான். போதையில் இருந்த நான் அவனை குத்திட்டேன், ஆனா சாகுற அளவுக்கு நான் குத்தல, அது எனக்கு நல்லா தெரியும் என்கிறான் அந்த திருடன்.

எங்கே அவன் பிடிபட்டால், தன் திருட்டு வேலையும் வெளிப்பட்டு விடுமோ என்று பயந்து தான் வாசுவை கோர்த்து விட்டிருக்கிறான் இன்ஸ் பூபதி. தன் நண்பன் வீட்டில் தலைமறைவாக இருந்த திருடன், அவன் தங்கைக்கே பிராக்கெட் போட, கடுப்பான நண்பன் போலீசுக்கு போன் செய்து தகவல் சொல்லியிருக்கிறான். ஆனால் இன்ஸ் பூபதி ராஜுவின் குரூப் இருவரையும் பிடித்து ஸ்கெட்ச் போட்டு மெண்டல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பி விடுகிறது. இப்போது பிடிபட்ட திருடன் வந்து கோர்ட்டில் நடந்த உண்மையை சொன்னாலும் அந்த சாட்சி செல்லாது என்ற நிலை.

**ஹ**ர்ஷா எடுத்த வீடியோ அனு மூலம் ராமுக்கு கிடைக்கிறது. அந்த வீடியோவில் பார்த்த பிறகே, வேறொருவன் டாக்ஸி டிரைவரை கொலை செய்து விட்டு காரில் இருந்து வெளிப்படுவது புலனாகிறது. ராயல் என்பீல்டு பைக்கை வீடு பிடித்துப் போனால் வெங்கட்ரமணா என்ற அந்த கில்லர் இறந்து விட்டதாக சொல்கிறார்கள். ஆனால் அவன் போன் நம்பரை வைத்து கால் ஹிஸ்டரியில் தேடும் போது, ஆல்ரெடி ராம் சேர்த்து வைத்த ஒரு நம்பருடன் மேட்ச் ஆகிறது. அந்த நம்பருக்கு போன் செய்து, 'நீ செஞ்ச கொலைக்கெல்லாம் என்கிட்ட ஆதாரம் இருக்கு' என வாசுவை வைத்து பேச வைக்கிறான் ராம்.

கொலையாளிக்கு தேவைப்படுவது ஒரு மைக்ரோ சிப் என்பது அதன் பிறகே ராமுக்கு பிடிபடுகிறது. பிளான் செய்து அவனை சிக்க வைக்க ராம் ட்ரை செய்ய, அவன் மூளையை மிஞ்சும் அளவுக்கு ஒரு டிராப் செய்து எஸ்கேப் ஆகிறான் அந்த மர்மமான பார்ட்டி. ஆனால் ராம் வைத்த பைனல், டிவிஸ்டில் அவன் முகம் வெளிப்பட்டு விடுகிறது.

அரசியல்வாதிகளுக்காக தான் செய்த போலி என்கவுண்டர்

வெளியே தெரியாமல் இருக்க, அந்த சிப் ஆதாரத்தை வைத்திருந்த டாக்ஸி டிரைவரை கொலை செய்தது, நல்லவன் போல வேஷம் போட்ட இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தான். அந்த டாக்ஸி டிரைவர் மறைத்து வைத்திருந்த மைக்ரோ சிப், வக்கீல் ராம் கையில் கிடைக்க, கேஸ் முடிவுக்கு வருகிறது. வாசு குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்படுகிறான்.

**வக்கீல் ராமச்சந்திரனாக நியாயத்திற்கு போராடும் கேரக்டரில் சத்யதேவ் உயிர்ப்புடன் நடித்திருக்கிறார்.**

**நாயகி பிரியங்கா ஜவால்கர் கேரக்டர் இடைச் செறுகல் தான் என்றாலும் சில திருப்பங்களுக்கு உதவியிருக்கிறார்.**

**ராமுக்கு உதவும் சுதாகர் வேடத்தில் பிரம்மாஜி, வாசு வாக அங்கித், வில்லத்தனம் செய்யும் போலீசாக அஜய், வக்கீல் வராக மூர்த்தியாக ரவி பாபு என படத்தில் வரும் அனைத்து கதாப்பாத்திரங்களும் கதைக்கு தேவையான நடிப்பை கொடுத்திருக்கிறார்கள்.**

அது சரி, மைக்ரோசிப் எப்படி ராம் கைக்கு போச்சு? என்ற கேள்வி எழலாம். அந்த போலீஸ் இன்பார்மராக இருந்த அந்த டாக்ஸி டிரைவர் வேறு யாருமல்ல, வக்கீல் ராமின் உடன் பிறந்த சகோதரன். வாசு தன் அண்ணனை கொலை செய்யவில்லை என்று தெரிந்து கொள்ளும் ராம், நீண்ட காலம் போராடி தன் அண்ணன் சாவில் இருந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கிறான்.

**க**ன்னடத்தில் வெளியான 'பீர்பால் டிரையாலஜி 1: பைண்டிங் வஜ்ஜிரமுனி' படத்தை தெலுங்கில் முறைப்படி ரீமேக் செய்திருக்கிறார்கள்.

தொடங்கிய இடத்தில் முடிவதும், ஒரு முடிவில் இருந்து மீண்டும் தொடங்குவதுமாக திரைக்கதையை அமைத்திருப்பது ரசிக்க வைக்கிறது. சட்டத்தை காப்பாற்றும் காக்கிச் சட்டைக்குள் ஒளிந்து கொண்டு குற்றங்களை செய்யும் கருப்பு ஆடுகளை தோலுரிக்கும் காட்சியமைப்பில் விறுவிறுப்பைக் கூட்டியுள்ளனர். ஓ.டி.டி. தளத்தில் ரிலீசாகியிருக்கும் இந்த படைப்பை நிச்சயம் பார்த்து ரசிக்கலாம்.

**-தவா**

# வலையில் வசீகரித்தது

**நாகராஜசோழன். MA.MLA.@ prabhu65290**

வாழ்க்கை நம்மிடம் பேசு வதில்லை... அது வெறுமனே அங்கும் இங்கும் தள்ளி விட்டு 'விழித்தெழு, நீ கற்று கொள்ள வேண்டிய விசயம் இங்கு உள்ளது' என மெல்லியதாக சொல்லி நகர்கிறது.

**மித்ரன் @sultan_Twitz**

மக்கள் கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும்; நிச்சயம் கேஸ் விலை குறையும் ~ அண்ணாமலை # 7 வருசமா பொறுமையா தான் இருக்கோம்.. இன்னும் சிலிண்டர் விலை குறைஞ்ச பாடில்ல போவியா..?!

**mohanram.ko @mohanramko**

சாப்பிடுவதற்கு முன் உணவை காக்காவுக்கு வைக்கிற மாதிரி, வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ்ல வைக்கிறாங்க...



**amudu @amuduarattai**

மோடி அரசைப் பார்த்து தீவிரவாதிகள் பயப்படுகிறார்கள். -ராஜ்நாத் சிங்.

# பெட்ரோல் விலை எப்போ ஏத்துவாரோ, சிலிண்டர் விலையை எப்போ ஏத்துவாரோன்னு, பொதுமக்களும் ரொம்ப பயந்து போய் தான் இருக்காங்கப்பா.

**நெல்லை அண்ணாச்சி @drkvm**

தமிழில் அர்ச்சனைக்குஎதிராக வழக்கு....# வீட்டுக்காரனை விருந்தாளி அடிச்ச கதை...!!!





இதயவன் @itz_idhayavan
ரஜினி மனைவி லதாவுக்கு சொந்தமான ஆஸ்ரம் பள்ளியில், ஊதியம் வழங்காததை கண்டித்து ஆசிரியர்கள் உள்ளிருப்பு போராட்டம் ~#ஹலோ வேங்கை மவனா... சிஸ்டம் எப்ப சார் சரியாகும்?!

இதயவன் @itz_idhayavan
கண்டுகொள்ளாமல் இருப்பது கண்டுகொள்ள வைக்கும் யுக்தி என்று அறிக..!!

தர்மஅடி தர்மலிங்கம் @Vkarthik_puthur
வேளாண் சட்டங்களை எதிர்ப்பது விவசாயிகளுக்கு செய்யும் துரோகம்: அண்ணாமலை! #ஆமாமா... இப்படி நீங்க சொல்லாட்டி அது உங்க கட்சிக்கு செய்யுற துரோகமாகிடுமே.

கடைநிலை ஊழியன் @Suyanala-vaathi
'பெட்ரோல் விலை உயர தலிபான்களே காரணம்' - கர்நாடக பாரதிய ஜனதா எம்எல்ஏ அரவிந்த் பெல்லாட் #போன வருஷம் கொரோனா.. இந்த வருஷம் தலிபான்.. அடுத்தது யாரோ பாவம்!!

எமகாதகன் @Aaathithamizhan
இந்தியாவில் இந்துக்கள்பெரும்பான்மையாக இருந்தால்மட்டுமே பெண்களுக்குபாதுகாப்பு-பா.ஜ.க தேசியசெயலாளர் சி.டி.ரவி #பெண்களுக்கானஉங்கப் பாதுகாப்புத்தான் ராகவனோட பூஜை அறையிலேயே தெரிஞ்சிடுச்சே!

கடைநிலை ஊழியன் @Suyanala-vaathi
லாக்டவுன் ல புதுசா பழகுனதுல இதுவும் ஒன்னு.. watch பாக்காம, டிவி'ல ஓடுற சீரியல் சத்தத்த வச்சே டைம் என்னனு கண்டுபிடிக்கிறது !!



நாகராஜசோழன். MA.MLA.@prabhu65290
3-வது அலை தொடக்கத்துக்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன!- ஐ.சி.எம்.ஆர்.#மறுபடியும் மொதல்ல இருந்தா....!!!

செங்காந்தன் @kumarfaculty
விதையில்லாப் பழங்களை உருவாக்கி பறவைகளின் மரம் வளர்த்தல் பண்பையும் கருக்கி விட்டான் மனிதன்...!!!

**priya johnson @talksstweet**
சிலருக்கு காட்ட தெரியவில்லை, சிலருக்கு காட்டுவது தெரியவில்லை, பலருக்கு காட்டுவது புரிவதே இல்லை.'அன்பு'..

**சரவணன். @saravankavi**
தமிழ்நாட்டில் இலவசமாக மொட்டை மட்டும் தான் அடிக்கப்படுகிறது - ஜெயக்குமார். #இதுவே ஒன்றிய அரசா இருந்திருந்தா இதுக்கும் ஜிஎஸ்டி போட்டிருப்பாங்க.

**balebalu@balebalu**
ஆய கலைகள் அறுபத்தி நான்கு கற்றிருந்தாலும் உழைப்பை பணமாக்கும் வித்தை கற்கவில்லை என்றால் அது வீணே #யதார்த்தம்

**mohanram.ko@mohanramko**
பல்லிடுக்கில் எது சிக்கி கொண்டாலும், 'நாக்கு தள்ளுது'






**நாகராஜசோழன். MA.MLA.@ prabhu65290**
125 ரூபாய் சிறப்பு நாணயம்: இஸ்கான் நிறுவனரின் நினைவாக பிரதமர் வெளியீடு#திருப்பூர் கோயம்புத்தூர் ஏரியாவுல 10 ரூபா காசே எந்த கடையிலும் வாங்க மாட்டாங்க, இதுல 125 ரூபா வேரையா????

**சரவணன். @saravankavi**
மருத்துவர் இல்லை, உபகரணங்களும் இல்லை -சென்னையில் ஸ்பெஷல் மருத்துவ முகாம் நடத்திய பாஜகவினர்#அவங்களோட ஸ்பெஷாலிட்டியே அதானே...!

**ச ப் பா ணி @manipmp**
அரியவகை உயிரினங்களின் பட்டியலில்..செல் இல்லாத மனிதர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்


**Mannar & company™ @RajaAnvar_Offic**
பிபி, சுகருக்கு மருந்து மாத்திரை வாங்கிட்டு மீதி சில்லரை காசுக்கு சாக்லேட் கொடுக்கும்போது இருக்கிற பிபி இன்னும் ஏறவே செய்யுது!



உள்ளூராட்டக்காரன் @shivaas_twitz

YouTube:-உன் விளம்பரத்தை வீடியோவுக்கு நடுவுல போடணுமா..? காசு குடு

விளம்பரம் இல்லாம வீடியோ பார்க்க premium அக்கௌன்ட் வேணுமா..?காசு குடு



நெல்லை அண்ணாச்சி @drkvm

இனிமேல் ஆல்கஹால் test பண்ணிய பிறகுதான் ,விமானிகள் விமானம் ஓட்ட அனுமதி...

# என்னடா....பீதியை கிளப்புறிங்க...அப்டீன்னா.. இதுநாள் வரைக்கும்...!!!?

---

ச ப் பா ணி @manipmp

பக்கத்து வீட்டில் புதுசா நாய் வாங்கியிருக்காங்க. இனி எல்லா நாளும் 'குரை கேட்பு' நாட்களே!

---

யாழினி @THARZIKA

சுயத்தை இழந்து யாரிடமும் அன்பை நிரூபிக்காதீர்கள், நிரூபிக்கும் அளவுக்கு இருப்பது எதுவும் அன்பல்ல, தேவை மட்டுமே.

ரஹீம் கஸ்ஸாலி @RahimGazzali

இளைஞர் படை பாஜக பக்கம் திரும்பி இருக்கிறது - அண்ணாமலை.

#ஆமா... அடுத்த வீடியோ எப்ப வரும்ன்னு காத்துட்டு இருக்காங்க.

---

காளையன்.. @Giri47436512

'மூட்டை தூக்கத்தான் லாயக்கு' அப்பா சொன்னது எவ்வளவு உண்மை.என் புள்ளயோடஸ்கூல் பேக்....தூக்கிட்டு போறதத்தான் சொல்லிருக்காரு...என்னா வெயிட்டு..

---

A.P.Perumal @pachaiperumal23

பணமாக மாற்றப்படாதஎந்த திறமையும்இங்கு மதிக்கப்படுவதில்லை...




தொகுப்பு: ஊர்க்காத்தான்

# நோய் எதிர்ப்பு சக்தி தரும் லடாக் தங்கம்!



இந்தியாவில் வடபுலத்தில் இருக்கும் லடாக் பிரதேசம் வீரியம் நிறைந்த விசித்திரத் தாவரங்களின் கோட்டமாக விளங்குகிறது.

அதிலும் லடாக்கில் சீபக்தார்ன் என்ற குறும் பழம் அமோகமாக விளைகிறது. இது பார்ப்பதற்கு வேப்பம் பழம் போலவே இருக்கிறது. ஆனால் இதன் நிறம் ஆரஞ்சு ஆகும்.

செப்டம்பர் முதல் நவம்பர் வரை சரஞ்சரமாக காய்த்துத் தொங்கும் சீபக்தார்னுக்கு லடாக் தங்கம் என்ற செல்லப்பெயரும் உண்டு.

நோய் எதிர்ப்பு சக்தியை செழுமைப்படுத்துவதில் சீபக்தார்னுக்கு நிகரான பழம் வேறு எதுவும் இல்லை என்பது லடாக் மக்களின் திடமான நம்பிக்கையாகும்.

ஆரஞ்சுப் பழத்தில் உள்ளதை விட சீபக்தார்னில் வைட்டமின் சி 12 மடங்கு அதிகமாக உள்ளது என்று அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் சீபக்தார்னில் கால்சியம், வைட்டமின் ஈ, ஒமேகா ஆசிட்கள் ஆகியவையும் செறிந்துள்ளன.

இந்தியாவை 2 ஆண்டுகளாக கொரோனா உலுக்கி வருகிறது. இதனால் நோய் எதிர்ப்பு சக்திமிக்க உணவு வகைகளுக்கான தேவை பன் மடங்கு அதிகரித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களின் மலைப் பகுதிகளிலும் சீபக்தார்னை சாகுபடி செய்யலாம் என்று வேளாண் வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

-துங்கம்புலரி



கொஞ்சம் மருத்துவம்...
நிறைய மனிதம்-45



# கேளடி கண்மணி!



உங்கள் உறவிலோ நட்பிலோ காது கேட்காத ஒருவர் அல்லது காது கொஞ்சம் மந்தமாக கேட்பவர் யாராவது இருக்கிறாரா? அவரை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? எப்படி அணுகுகிறீர்கள்? அவருடைய மனநிலை குறித்து உங்கள் கருத்து என்ன?

'கேளடி கண்மணி' என்ற படத்தில் காது கேட்காத பெற்றோரிடம் சத்தமாக பேசி பேசி இயல்பிலேயே குரல் உயர்ந்து விட்டதாக ராதிகா கூறுவார்.

-டாக்டர் அகிலாண்ட பாரதி

அதைப் போன்ற அனுபவம் பலருக்கும் நிகழ்ந்திருக்கும். ஒரு விஷயத்தை சாதாரண குரலில் கூறாமல் சற்று உரத்த குரலில் கூற வேண்டியதிருக்கும். ஒருமுறை என்றால் கூறலாம், பலமுறை அப்படியே பேச வேண்டியதிருந்தால் ஒரு சலிப்பு, ஒரு அயர்வு ஏற்படுதல் நியாயமானது தான். போகப்போக இந்த சலிப்பு கோபமாகவும் மாறிவிடக் கூடும்.



டாக்டர்.அகிலாண்ட பாரதி

அதனால் மன நோயாளியைப் பராமரிப்பவரைப் போலவே வீட்டில் காது கேட்கும் திறன் குறைந்த ஒரு நபரை வைத்திருப்பதும் சவாலான விஷயம். நேரில் நன்றாகப் பேசுவது போல் காட்டிக்கொண்டு சம்பந்தப்பட்ட நபர் திரும்பிய பிறகு, 'செவிடு' 'வந்துருச்சு உயிரை வாங்க' என்பதுபோன்ற சொற்களால் நமது கோபத்தையும் வெளிப்படுத்தி விடுவோம்.

இப்படிப் பொறுக்க முடியாமல் உணர்வுகளை வெளிக்காட்டும் போக்கினால் பொதுவாக சமூகத்தில் என்ன நிகழ்கிறது? தனக்குக் காது கேட்கவில்லையோ என்ற சந்தேகம் வந்தவுடன் ஒரு மனிதர் யாருக்கும் தெரியாமல் அதைப் பரிசோதிக்க முயல்வார், ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிறது என்று தெரிந்துவிட்டபின் அதை மறைக்கவே முயல்வார். வேறு யாராவது உங்களுக்கு சரியாகக் காது கேட்கவில்லையா, பரிசோதனை செய்து பாருங்கள் என்று அறிவுரை கூறினால் அவர் மேல் எரிந்து விழுவார்.

எனக்கு அறிமுகமான இளைஞன் அவன். திருமணம் ஆகாதவன். வேலை நிமித்தமாக அவனை அடிக்கடி சந்திக்க வேண்டியதிருக்கும். சொல்லும் விஷயங்களை 'என்ன?' என்று ஒன்றுக்கு மேற்பட்ட முறை கேட்டுக் கொள்வான். பக்கவாட்டில் இருந்து அழைத்தால் திரும்பிப் பார்க்க மாட்டான். இதில் இன்னொரு பெரிய விஷயம், அவன் தினமும் நீண்ட தூரத்திற்கு இருசக்கர வாகனத்தில் பயணம்

செய்பவன். அவனது குறைபாட்டை அவன் உணரவில்லை. வீட்டிலும் எடுத்துச் செல்லும் சூழல் இல்லை போலும்.

சுற்றியுள்ளவர்கள் அனைவரும், 'அந்தச் செவிட்டுப் பயலா? நீங்க சொன்னது கேட்டிருக்காது' என்பதுபோல் கிண்டலாகப் பேச, நான் அவனை ஒரு நாள் தனியாகக் கூப்பிட்டு, உனக்கு கொஞ்சம் காது கேட்பதில் குறைபாடு இருப்பது போல் தெரிகிறது, கொஞ்சம் பரிசோதனை செய்து பார் என்று கூறினேன். உடனடியாக என்னிடம் கோபித்துக் கொண்டான்.
நீளமாக ஏதேதோ பேசினான்.
''நான் இப்படி இருக்கிறதுல உங்களுக்கு என்ன பிரச்ச னை?'' என்றான்.

''எனக்கு எதுவும் பிரச்சனை இல்லப்பா.. சுத்தி எல்லாரும் உன்னைக் கிண்டல் பண்றாங்க.. நான்தான் நேர்ல கூப்பிட்டு சொல்லியிருக்கிறேன்.. நீ பைக் ஓட்டுற.. பின்னாடில இருந்து ஏதாவது பெரிய வண்டியோட ஹார்ன் சத்தம் உனக்குக் கேக்கலைன்னா ஆபத்தாயிடும். நடந்து போகும்போது கூட பிரச்சனை வரலாம்.. அதனால் சரி பண்ணக் கூடிய பிரச்சனைன்னா சரி பண்ணிக்கலாமே.. அதனால சொன்னேன். மத்தபடி எனக்கு என்ன வந்துச்சு?'' என்று நானும் சற்று கோபமாகவே பேசி அனுப்பி வைத்தேன்.

அவனுடைய உடல் நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் நான் கூறிய விஷயங்கள் அவனை அவ்வளவாக பாதிக்கவில்லை. 'சுற்றியுள்ளவர்கள் அனைவரும் உன்னை முதுகுக்குப் பின்னால் கிண்டல் செய்கிறார்கள், நீ அதை கவனிக்கவில்லை. நான் கவனித்ததால் சொல்கிறேன்' என்று சொன்ன ஒரு வார்த்தை மட்டும் அவனை அதிகம் பாதித்திருக்கிறது.
மற்றவர்களின் நடவடிக்கையை கவனிக்க ஆரம்பித்திருக்கிறான். அனைவரும் கிண்டல் செய்வது உண்மைதான் என்று தெரிந்தபின் பரிசோதனைக்குச் சென்று வந்தான். வெகு நாட்கள் கழித்து என்னிடம் வந்து மன்னிப்புக் கோரினான்.

''நீங்க சொன்னது சரிதான் மேடம்.. மிஷின் வச்சா சரியாயிடும்னு சொன்னாங்க.. எங்க வீட்லயும் மிஷின் மாட் டத்தான் சொல்றாங்க. ஆனா எனக்குத்தான்

யோசனையா இருக்கு''
என்றான். இன்றுவரை ஹியரிங் எய்ட் வைக்காமலே தான் பொழுதை ஓட்டுகிறான். அவனுக்குப் பெண் கிடைப்பதில் சிரமம் இருப்பதாக அவனது பெற்றோர் கூறுகின்றனர். இவனுக்குக் காது கேளாமல் இருப்பதால் நன்றாக இருந்த அவனுடைய அண்ணனுக்கும் மிகவும் கஷ்டப்பட்டுத் தான் பெண் தேடினோம் என்றும் வருத்தப்பட்டார்கள்.

**கா**து கேளாமை பொதுவாக மூன்று வகைகளின் கீழ் அடங்கும்.

★உள்காது (inner ear) அல்லது நரம்பின் பாதிப்பு இதில் முக்கியமானது (sensorineural deafness). இந்த வகையில் உள்காதில் இருக்கும் செல்கள் தேய்மானம் அடைந்து விடுகின்றன. வயது முதிர்வு, சில மருந்துகள், பலத்த சத்தம் ('நானும் ரவுடி தான்' நயன்தாரா நினைவிருக்கிறதா?), பரம்பரைக் காரணங்கள், சில வகையான காயங்கள் இதற்குக் காரணமாக அமையலாம்.

பொதுவாக இந்த வகைக்

**உலகிலேயே மிகவும் சுகமானது எது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு உணவு, உறக்கம், மது போன்ற பதில்களுக்கு மத்தியில் காது குடைதல் தான் சுகமானது என்றானாம் ஒருவன். அந்த அளவுக்கு வழக்கமாகி விடக் கூடிய பழக்கம் அது. காதில் அழுக்கு எடுக்கிறேன் பேர்வழி என்று பட்ஸ், ஊக்கு, கோழி இறகு போன்ற பொருட்களால் தவறாமல் குடையும் மனிதர்கள் ஏராளம்.**

**உண்மையில் வாராவாரம் அல்லது மாதாமாதம் காதில் அழுக்கு எடுக்க வேண்டிய அவசியமே இல்லை என்கிறார்கள் நிபுணர்கள். இப்படி அழுக்கு எடுப்பது மூலமாக வெளிக் காதில் இருக்கும் சிறிய முடிகள் சேதமடைந்து விடுகின்றன. இதனால் வெளியில் இருந்து வரும் ஒலியை அவற்றால் உள்ளே கடத்துவது இயலாது.**

**அதுவுமில்லாமல் வெளி காதில் சேரும் அழுக்குகளை பிடித்து வைத்துக் கொள்வதில் இந்த முடிகளுக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. அடிக்கடி காதைக் குடைவதால் இந்தப் பணி தடைபடுகிறது.**

காது கேளாமையை மருந்து மூலமாகவோ, அறுவை சிகிச்சை மூலமாகவோ குணப்படுத்துவது கடினம். ஆனால் மெஷின் என்று அழைக்கப்படும் ஹியரிங் எய்டுகளால் இத்தகைய நோயாளிகளுக்கு ஓரளவுக்கு பலன் கிடைக்கும்.

★அடுத்த வகைக் காது கேளாமை, ஒலியைக் கடத்துவதில் ஏற்படும் குறைபாட்டால் ஏற்படுவது (Conductive deafness). வெளிப்புற சூழலில் இருக்கும் ஒலிகள், வெளிக்காது மற்றும் காதின் நடுப்பகுதியை கடந்துதான் காதின் நரம்பு துவங்கும் இடமான உள்காதுக்கு சொல்ல வேண்டும்.

இந்த இரு இடங்களிலும் ஏதாவது தடை ஏற்பட்டால் ஒலிகள் உள்ளே கடத்தப்பட மாட்டாது. வெளிக்காதை அடைத்துக்கொள்ளும் அழுக்கு (wax) அல்லது அயல் பொருட்கள் (foreign body) இதற்கு மிக முக்கியமான காரணங்கள்.

சமீபமாக 'கூப்பிட்டால் திரும்ப மாட்டேன் என்கிறான்' என்ற அறிவுரையுடன் அழைத்து வரப்பட்ட சில பதின்பருவ சிறுவர்களுக்கு காதில் அழுக்கு நிறைய அடைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

வெளிக்காது மற்றும் நடுக்காதைப் பிரிக்கும் இடத்தில் உள்ள ஜவ்வு (tympanic membrane) கிழிவதால் காது கேட்கும் திறன் குறையலாம். சீழ், ரத்தம், கட்டி போன்றவை காதின் நடுப்பகுதியில் அடைத்துக் கொண்டிருந்தால் அவையும் ஒலி கடத்தப்படுவதைத் தடுக்கும். இந்த வகைக் காது கேளாமையை அறுவை சிகிச்சை மூலம் சரி செய்வது எளிது. வெளிக் காதில் உள்ள பிரச்சனை என்றால் சிறிய டார்ச்

**புறத் தோற்றத்துக்கும், ஆடைக்கும், ஆபரணத்துக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் யாரும், உடலின் பல பகுதிகளைக் கண்டு கொள்வதே இல்லை– அதில் பெரிதாகப் பிரச்சனை வரும் வரை.**

**கண், பல், காது இவை மூன்றும் அதில் முக்கியமானவை. காது என்று எடுத்துக்கொண்டால் சுயமருத்துவம் பார்ப்பது ரொம்பவே சாதாரணம்.**

அல்லது எண்டோஸ்கோப்பி கருவி மூலம் வெளிச்சத்தைப் பாய்ச்சி அந்தத் தடங்கலை எளிதாக அகற்றி விடுவார் மருத்துவர்.

ஒரே நபருக்கு இந்த இரண்டு வகைப் பிரச்சனைகளும் சேர்ந்திருக்கலாம். நரம்புப் பிரச்சனை ஏற்கனவே இருக்கும் ஒருவருக்கு கூடுதலாக வெளிக் காது, நடுக் காது பகுதிகளில் ஏதாவது அடைத்துக் கொள்ளக் கூடும். ஏற்கனவே உள்ள பிரச்சனையால் புதிய பிரச்சனை கவனிக்கப்படாமல் போகலாம்.

★40 வயதிற்கு மேல் சிறிய எழுத்துக்களைப் படிப்பதில் சிரமம் ஏற்படுவது போல 50 வயதுக்கு மேல் வயது மூப்பின் காரணமாக பலருக்குக் காது கேட்கும் திறன் குறையும் (presbyacusis). சில குடும்பங்களில் சகோதரர்கள் அனைவருக்குமே நடுத்தர வயதில் காது கேட்காமல் போய் விடுவதைக் கவனித்திருப்பீர்கள். காதின் உட்புறம் உள்ள மெல்லிய எலும்புகள் கெட்டியாகி விடுவதே இதற்குக் காரணம் ( otosclerosis).

எத்தனையோ துரித பரிசோதனைகளும் நவீன வசதிகளும் வந்துவிட்ட காலத்திலும் சிகிச்சைக்கு செல்ல மறுப்பதன் காரணம் கிண்டல் கேலி என்ற விஷயம்தான். ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் காது கேளாதோரின் மனநிலை நமது பொறுப்பற்ற பேச்சால் இன்னும் மோசமடையும் என்பதைப் புரிந்துகொண்டு அத்தகைய செயல்களைத் தவிர்க்கலாம். நவீன வசதிகளை பயன்படுத்தி குறைபாட்டின் அளவையும் குறைக்கலாம்.

இதே கருத்தைப் பல வருடங்கள் முன்பு தோழி ஒருவரிடம் கூறியபோது, 'நல்லா இருக்கிற காதை, சினிமால காட்டுற மாதிரி காதோடு சேர்த்து ஓங்கி அடிச்சு மனைவியை நிரந்தர செவிடா ஆக்குறவங்களை என்ன செய்றது?' என்றார். 'யோசிக்க வேண்டிய விஷயம்' என்றேன், இன்றுவரை யோசிக்க மட்டுமே முடிகிறது.

**-மனிதம் காப்போம்**

தேவியின் கண்மணி
மலர்-33 vol-33 மணி-34 Issue-34
Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan


மாலை
முரசு
செய்திகள்
நமது
மாலை முரசு
தொலைக்காட்சியில்
தினந்தோறும் நடக்கும் சினிமா கிசுகிசுக்களை
வாரந்தோறும் ஆரவாரமாக தொகுத்து
வழங்கிடும் நிகழ்ச்சி
கொளுத்தி
போடுவோம்
ஞாயிறுதோறும் இரவு 8.30 மணிக்கு
காணத் தவறாதீர்கள்!

Deviyin KANMANI-Tamil Weekly 22-09-2021 Registered With Registrar of News papers for India
Under No.49510/89 published every Wednesday of every Week.

